அளவெட்டி வடக்கு

கவளக்கிரி

முத்துமாரி அம்மன்கோவில்



மகா கும்பாபிஷேக மலர்

University of Jaffna
235.305
ALA
183621(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

235.305
ALA
AK

அளவெட்டி வடக்கு

தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில்



மகா கும்பாபிஷேக மலர்

ARCHIVES

தொகுப்பு:
அம்பிகைதாசன்

University of Jaffna
183621
Library

183621

183621



பரிபாலன சபை வெளியீடு
சுக்கில, தை 18 (31-1-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பினர் கெடுவதில்லை
நான்கு மறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண் புகுந்தால்
அதிக வரம் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.

சமர்ப்பணம்

தொடுக்கும் கடவுட் பழம் பாடல்
தொடையின் பயனே,
நறை பழுத்த துறைத்தீந் தமிழின்
ஒழுகு நறுஞ்சுவையே,
அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர்
உளக்கோயிற் கேற்றும் விளக்கே,
வளர்சிமய இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே,
புவனங்கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில்
அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே,
மதுகரம் வாய்மடுக்கும் குழற்காடேந்தும்
இளவஞ்சிக் கொடியே,
உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரியம்மா
உன்பாதத்தில்,

சைவமுந்தமிழுந் தனிமணங்கமழும்
இம்மலரைச் சமர்ப்பிக்கின்றேம்;
ஏற்று அருள்புரிவாய் எந்தாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.

கீர்த்தனஞ்சலி

இராகம் — சிந்துபைரவி தாளம் — ஆதி

பல்லவி

தவளக்கிரி வளரும் தாயே — மாரி
தாமரைப் பதமலர் தந்தென்னை ஆதரி
(தவளக்கிரி)

அநுபல்லவி

புவனமஹேஸ்வரி புனந்தரி நிரந்தரி
அவனியில் நீயே கதி அம்பிகே முத்துமாரி
(தவளக்கிரி)

சரணம்

வேப்பிலைக் கரகமேந்தி விளையாடும் முத்துமாரி
காப்பணியும் கரத்தால் கருணைபுரிந் தாதரி
கூப்பி கரம் சிரமேல் குவித்துத் துதிபாடினேன்
கூப்பிட்டேன் வாதாயே குறைகளைத் தீராயோ
(தவளக்கிரி)

கவிமாமணி ந. வீரமணி ஐயர், இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.

நத்தம் செறியளவை நற்றவள மாகிரிவாழ்
முத்துமா ரித்தாயே முன்னிற்பாய் — நித்தியமும்
சேய்போ லெமைவளர்த்துச் செங்கரத்தி னுலகணைக்குந்
தாயேநின் பொற்றுள் சரண்.

அண்டமெங் கும்நிறைந் தாருயிர்க் குயிராகி
ஆண்டருள் தேவி நீயே
அன்னையாய்க் கன்னியாய் அன்புநிறை சக்தியாய்
ஆதரிப் பவளுநீயே
கண்டுதேன் பால்கனிச் சாறென்றி னித்திடக்
கருணைசெய் பவளு நீயே
கண்களோ ராயிரங் கொண்டுலகி னுயிரினங்
காக்குமெய்ப் பொருளும் நீயே
மண்டுபிணி யானசின் னம்மைமுத லம்மையாம்
மாகொடிய வெப்புநோய்கள்
மாற்றிடுந் தெய்வமாய்ப் போற்றுநல் லடியர்க்கு
வரமுதவு மாரி யணையே
திண்டிறற் பெருவாழ்வு கொண்டிடப் பாடுமிச்
சிறியனைக் காப்ப தென்றே
தேங்குபுக ழளவைசீர் தாங்குதவ ளக்கிரித்
தேவிமக மாரி யுமையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உற்சவ மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியுரைகள்

திருக்கயிலாய பரம்பரை

ஸ்ரீலஸ்ரீ. சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

குருமகா சந்நிதானம்

திருவாவடுதுறை ஆதீனம்

யாழ்ப்பாணம் அளவெட்டி அருள் மிகு தவளக்கிரி முத்துமாரியம்மன் திருக்கோவில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெறவுள்ளமை அறிய மகிழ்ச்சி.

வேண்டுவார்க்கு வேண்டுவனவெல்லாம் வழங்கி அருள் சுரக்கும் அம்மை முத்துமாரியம்மன் திருக்கோவில் திருப்பணிகள் முழுமையாக நிறைவெய்தி நிகழும் மகாகும்பாபிஷேகம் இனிது நடைபெறவும், கும்பாபிஷேக விழா நினைவு என்றும் நிலவி இன்பஞ் செய்ய மலரும் விழாமலர் அம்மை அருள் மணங் கமழ மலர்ந்து, நலிவுகள் நீங்கி உலகு இன்புறவும் நம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலை மா முனிவர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்

சுவாமிகள் அவர்கள்

அதிபர் காசிமடம்

திருப்பனந்தாள்

கடல் சூழ் இலங்கைக் கஜபாகு மன்னன் காலத்துக்கு முன்பாகவே இலங்கைத் திருநாடு பத்தினமை நெறியும், தமிழ் நூல் மேன்மையும் போற்றி வருதல் உலகறிந்த ஒன்று. அவ்வழியில் அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரியம்மன் கோயில் மகாகும்பாபிஷேகம் மாண்புற நிகழ்வதும் விழாவில் சிறப்பு மலரொன்று வெளியிடுவதும் அறிய மகிழ்ச்சி.

எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க, கங்குல் பகல் எம்கண் மற்றொன்றும் காணற்க - என்ற தொண்டுரைப்புக் கொண்ட அடியாரின் வழியில் அருட்பணிகளிலேயே எஞ்ஞான்றும் உளம் செலுத்துகின்ற தொண்டர் கூட்டத்தின் சிந்தையில் கனிந்து திருக்கோயில் பணி நற்போது செயல்படுத்தப்பட்டிருப்பது பாராட்டிற்குரியதாகும்.

புராதன வரலாற்றுப் பெருமைமிக்குடைய இலங்கைப் பதியில் தமிழ்ப் பெருங்குடி மக்கள் ஒருமித்த உணர்வு கொண்டு அமைத்துள்ள குடமுழுக்கு விழா பொலிவுற நிகழவும் ஆன்மிகம், கலை, இலக்கியம், கலாச்சாரம் ஆகியவற்றின் கூட்டு மணங்கமழும் பொன்மலராய் 'விழாமலர்', மிளிரவும் செந்திற் கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சுபம்

சிவசிவ

Digitized by Noolaham Foundation.

ஸ்ரீலஸ்ரீ. அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக

பரமாச்சாரிய சுவாமிகள்

292 வது குருமகா சந்நிதானம்

ஆதீன கர்த்தர்

மதுரை ஆதீனம்

எல்லாம் வல்ல ஏம்பெருமானது இன்னருளால் எல்லா நலன்களும் எய்துக.

தங்களின் 21-7-89ம் நாளிட்ட மடல் கிடைத்தது, நமது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருக்கண் பார்வையிட்டார்கள். ஆலயத்தில் குடமுழுக்கு விழா சிறப்புற நிகழ்ந்திடவும், கலந்து கொள்கின்ற அன்பர்கள் அனைவருக்கும் நலத்தையும், வளத்தையும் பெற்றிடவும், சமுதாயத்தில் பண்பாடு அதன்பின் பக்தி, நன்றியறிதல், விசுவாசம், மனிதாபிமானம் இவைகள் வளர்ந்திடவும் திருவருள் பாலிக்குமாறு பிரார்த்தித்து ஆசீர் வதிக்கின்றார்கள். எல்லோருக்கும் ஆசீர்வாதம்.

திருப்பெருந்திரு குருமகா சந்நிதானம்
அவர்கள் அருளாணைப்படி

.....

ஆதின மேலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமகா சந்நிதானம் - ஆதீன முதல்வர்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

சைவ அருட் பெருந்தகையீர்,

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் நிகழவுள தறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றேம். தாயின் அன்புக் கிணை இவ்வவனியில் ஏதுமில. பராசக்தியின் பாதாரவிந்தங்களை சித்த சுத்தியோடு பக்திப் பரவசமாக இறுகப்பற்றிக் கொண்டால் நினைப்பன வேண்டுவனவெல்லாம் கைகூடும். அம்பாளின் அனுக்கிரகம் பெற்ற அருளாளர்களின் உண்மைச் சரிதைகள் இதற்குச் சான்று பகரும்.

தேவி, அவளுக்கு தாமாற்றும் கைங்கரியங்களெல்லாம் அதியுயர் பெருமை, மகிமையுறு ஸ்தானம் வகிப்பன. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை எடுக்கப்படும் இக்குடமுழுக்குப் பெருவிழாத் திருக்காட்சி, தவமுடையார்க்கே வாய்ப்பதொன்றாகும். இவ்விழாவினையொட்டி ஒருசிறப்புமலர் வெளியிடுவதும் சாலப் பொருத்தமாகும் இது அம்பாளை நெஞ்சில் நினைவு கூர வைக்கும் சின்னமாகும். இவ்விழாவில் சுய நல மில்லாத்தொண்டுகள் புரிந்தும் ஆக்கமுமுக்கமு மீய்ந்து உறுதுணை நிற்கும் அன்பர்கள் அனைவரையும் வாழ்த்தி எமது உளமார்ந்த ஆசிகளை வழங்குகின்றேம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.

பட்டத் தரசு சிவஸ்ரீ. கி. உருத்திரபுரீஸ்வரக் குருக்கள்

அகில இலங்கை வீர சைவகுருமகா சந்நிதானம்.

ஸ்ரீ. ரேணுகாச்சிரமம். கீரிமலை

எமது பாட்டனார் சிவஸ்ரீ. சி. ஐயம்பிள்ளைக் குருக்கள் இக்கோவில் பிரதம குருக்களாயிருந்தபோது அவருடன் சேர்ந்தும், பின்னர் தனியாகவும் இக்கோவில் குருக்களாகத் கொண்டு செய்யும் பேறுகிடைத்தது.

தேவி முத்துமாரி செய்த அற்புதங்கள் பற்றிப் பாட்டனார் கூறிய பல செய்திகளை நினைத்துப் பார்க்கும் போது மெய்சிலிர்க்கிறது. வேண்டுவார் வேண்டுவதைத் தருகின்ற வித்தகி எம் தாய்.

நீண்ட காலத்தின் பின் இக்கோவிலில் மகாகும்பாபிஷேகம் நிசழ விருக்கிறது. அன்னையின் அருளால் இப்பெரு விழாவைக் காண்பவர் புண்ணியம் செய்தவர்கள். இவ்விழாவின் மூலம் அயலும் ஊரும் சர்வமங்களமும் பெறும்; அமைதியும் சாந்தியும் நிலவும்.

கும்பாபிஷேகம் தொடர்பாக வெளி வரும் மலருக்கு ஆசிச் செய்தியளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அன்னையின் அருளைப் பதித்து வைக்கும் ஏடாக இம்மலர் வெளிவரவேண்டுமென்று விழைகிறேன்.

சுபம்.

கி. உருத்திரபுரீஸ்வரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரித்தாயின் குட முழுக்கு வைபவம்

துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

"திருக்கோயில் உள்ளிருக்குந் தீருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே
உருக்கோலி மந்திரத்தா லெனநினைய வர்க்கும்
உளனெங்கும் இலனெங்கு முளனென் பார்க்கும்
விருப்பாய வடிவாகி இந்தனத்தி லெரிபோல்
மந்திரத்தால் வந்துதித்து மிகும் சுரபிக்கெங்கும்
உருக்காண வொண்ணுத பால்முலைப்பால் விம்மி
ஒழுகுவதுபோல் வெளிப்பட்டருளுவனன்பர்க்கே."

— சிவஞானசித்தியார்

ஆலயங்கள் என்பவை பக்திநெறிக்கு எம்மை வழிநடத்தும் ஆன்மீக நிலையங்கள் ஆகும். இங்கே கருவறையில் காட்சி தரும் திருவுருவங்களை கடவுட் சிலைகளாக கண்ணுரக் கண்டு ஆனந்தமுறுவது இன்றியமையாதது. வழிபடுவோரின் மனப்பக்குவத்தை இறைவனுணர்ந்து திருவருளை வாரி வழங்குகின்றன். பசுவினுடைய உடலெல்லாம் பால் செறிந்திருந்தாலும் அதன் மடியிலிருந்தே அப்பாலைப் பெறுவது போல எங்கும் நிறைந்த இறைவன் திருக்கோயில்களிலே வெளிப்பட்டு அருள் புரிகின்றார் என்பது ஆன்றோர்கள் நம்பிக்கையாகும். விறகிலே தீயாக, பாலிலே நெய்யாக, மணியிலே ஒளியாக அப்பரம்பொருள் மறைந்திருக்கிறது. ஆனால் பக்திசிரத்தையோடு வழிபடுவோர்க்கு அவரவர் தகுதிக்கேற்ப அது வெளிப்பட்டு அருள் கொடுக்கிறது.

திருக்கோயில்களில் நித்திய, நைமித்தியங்கள் முட்டின்றி நடைபெற வேண்டும். ஏதாவதொரு குறைவு இவ்விடயத்தில் நேருமானால் நாட்டுக்கே பெருந்தீமை ஏற்படுமென்று திருமூலர் திருமந்திரம் செப்புகிறது.

"முன்னவனூர் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள மாரி வளங்குன்றும்
கன்னங்களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தானே."

நாட்டிலே மழைவளம் குன்றுவதும், களவுகள் அதிகரிப்பதும், அநீதி தாண்டவமாடுவதும், அரசு வீழ்ச்சியடைவதும் இவற்றால் ஏற்படுகின்றன என்பதே முன்னோர்கள் நம்பிக்கை. இதனை உள்ளத்தில் கொண்டு மாமன்னர்களும், வள்ளல்களும், தவ

Digitized by Noolaham Foundation.

சிரேஷ்டர்களும் ஆலயப்பணியை மேலானதாகக் கருதி, அவ்வப்பொழுது கோயில்களை அமைத்தும், குடமுழுக்குச் செய்தும் நித்திய நைமித்தியங்களை முட்டின்றி நடாத்தியும் தொண்டுகள் பல புரிந்து வந்தனர். மன்னர்கள் கூடத்தமது அரண்மனைகளை விட ஆலயங்களையே அழியாக் கலைச் செல்வங்களாகக் கட்டி முடித்தனர். வானளாவும் கோபுரங்களிலும், ஸ்தூபிகளிலும், கற்றூண்களிலும் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளை இடம் பெறச் செய்தனர். இன்றும் எம்மவர் மத்தியிலே இவ்வுணர்வு குன்றிவிடவில்லை. ஆனால் கோயில் கட்டுவதோடு நித்திய, நைமித்திய வழிபாடுகளும் குறைவின்றி விளங்குவதற்கு ஆவன செய்ய வேண்டியது சைவமக்களின் இன்றியமையாத கடனாகும். நித்திய வழிபாடு, அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், கந்தம், சுகந்தம், தீபம் ஆகிய அங்கங்களோடு முட்டின்றி நடைபெற்றால் தமது அன்றாட வாழ்க்கை செவ்வனே நடைபெறும். அதே போன்று நைமித்திய விசேடங்களில் சிறந்த அபிஷேகம், விசேட பூசை பதினாறு வகை உபசாரம், தோத்திரம், திருமுறை, திருவுலா என்பவற்றை அங்கமாகக் கொண்டு சிறப்புற நடைபெற்றால் நமக்குக் கிடைக்க வேண்டிய சிறப்பு நலன்கள் யாவும் கிடைக்கும். எல்லாவற்றிலும் மேலாக மகாகும்பாபிஷேகம் சிறப்புற நடந்தால் நாட்டுக்கும், மக்களுக்கும், திருக்கோயிலுக்கும் பெருஞ்சாந்தி ஏற்படும் இந்த நம்பிக்கையோடு பன்னெடுங் காலமாக கோயில்கள் தெரிவிடப்பட்டு காலத்துக்குக் காலம் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று வருவதை அனைவரும் அறிவர். கும்பாபிஷேகம் என்பது எல்லாவகையான குறைபாடுகளும் நீங்கி இறைவன் திருவருள் விளக்கம் மேம்பட்டுத் தோன்றுமாறு செய்யும் பெருஞ் சாந்தியாகும். இது திருக்கோயில்களில் உரிய காலங்களில் நடாத்தப்பெற வேண்டுவது இன்றியமையாதது. மகா கும்பாபிஷேகத்தை செய்விப்பவரும் தரிசித்தவரும் எல்லா வகையான குற்றங்களினின்றும் நீங்கி இறைவன் திருவருளுக்குப் பாத்திரமாவார்கள்.

மந்திரபூர்வமாக கும்பத்து நீருக்கு தெய்வீக சக்தியை ஏற்றி அந்த நீரை விம்ப தம்பங்களுக்கு அபிஷேகித்து விசேஷ முறையாக எடுக்கப்படுவதே கும்பாபிஷேகமாகும். யாக குண்டத்தில் நடைபெறும் அக்கினி காரியத்தினால் தேவர்களனைவரும் பிரீதியடைந்து மேலும் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளுக்கு ஆசி வழங்கி சிறப்படையச் செய்வார்கள். இவ் வைபவத்தில் மந்திரம், தந்திரம், யந்திரம் மூன்றும் சேர்ந்து ஏற்படுத்துகின்ற அற்புத சக்தி மகத்தானது. தெய்வத் திருவருவங்களை அப்படியே வைத்து வழிபடாமல் மந்திரமயமாக வைத்து வழிபடுவதாலேயே விசேட பலன் ஏற்படுகின்றது. அதற்குக் காரணம் மந்திரங்களிலேயே தெய்வ சான்னித்தியம் நிகழ்ந்திருப்பதேயாகும். தெய்வ வழிபாட்டில் மந்திரம் முதன்மையானதாகவும் அதனையடுத்து அதற்குரிய பாவனையும் கிரியையும் உடன் நிகழ வேண்டுவனவாகவும் சிவாகமங்கள் எடுத்துக் கூறும். இந் நியமங்களுக்கமைய நிகழ்த்தப்படும் குடமுழுக்கு வைபவத்தால் திருக்கோயில்களில் காலத்துக்குக் காலம் அருட்பிரவாகம் பொங்குகின்றது.

அளவெட்டி வடக்கு தவளகிரி முத்துமாரி அம்பாளின் அருள்மிகு திருக்கோயிலில் நடைபெறும் மகாகும்பாபிஷேகம் இப் பிறவியில் எமக்குக் கிடைத்த ஒரு அருட் பெருங்காட்சியாகும். இந் நாளில் அம்பிகை மனம், மொழி, மெய்யினால் வாழ்த்தி வணங்கி உய்தி பெறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவைநகர்த் தவளக்கிரிப்பதி

மகா முத்துமாரியம்மை பேரிற்

பாடிய

திருப்பள்ளி யெழுச்சி

காலமெலாம் உன்றன் கழலிணையைப் போற்றுவேன்
கோலமிகும் ஏகதந்தக் குஞ்சரமே ஞாலமிசை
பள்ளி யெழுச்சியொன்று பாடிமகா மாரியருள்
கொள்ள வரம் நீயேகொடு.

பாரில கண்ட முயிர்த்தொகை யாவும்
பயந்து புரந்திடும் அன்னையெம் தாயே
மாரியெனத் திருவருள் பொழிதலி னல்
மாரியெனப்பெயர் தாங்கிய மயிலே
சீர்அளி வைப்பதி திருநிறை தவத்தில்
தீகழ்தவ ளக்கிரிக் கோயிலில் அமர்ந்தாய்
சூரியன் குணதிசைக் குன்றினை அடைந்தான்
கூடர்த்தொடி யேபள்ளி யெழுந்தரு ளாயே.

மதுசொரி மலரினம் நறுமணம் பரப்பி
மலர்ந்தன வண்டிசை பரந்ததெங் கெங்கும்
கதிதரு காலையம் பொழுதணு கியது
காரிருள் அகல்வது கண்டு, நின்னடியார்
பதிதொறும் கண்விழித் தெழுந்தனர் தூய்மை
பரித்துநின் கோபுர வாயிலை அடைந்தார்
துதியுறு நற்றவ ளக்கிரி யுறைவோய்
சுந்தரி யேபள்ளி எழுந்தரு ளாயே.

Digitized by Noolaham Foundation.

குக்குடம் கூவின, இனசத்தன குருவி
கொடியினம் கரைந்தன பறந்தன, வானில்
தொக்கன மீனினம் ஒளியிழந் தனசிர்த்
தொண்டர் குழாமுனைத் தொழுதிடச் சூழ்ந்தார்
தக்கவண் கோபுர வாயிலில் வந்தார்
சார்தவ ளக்கிரி தங்கிடும் அமுதே
மைக்கிளர் கண்டரை மருவிய பரையே
மாரியம் மேபள்ளி யெழுந்தரு ளாயே. 3

தேவரும் முனிவரும் மனிதரும் விரும்பிச்
செஞ்சிலம் பொலிதரு சிறடி வணங்க
மூவுலகும் புமந் தருள்புரி தாயே
முக்கண ணுர்து ணை யாகிய முதலே
காவள ருந்தவ ளக்கிரி யமர்ந்த
காரிகையே மகமாரி யெம் துணையே
சேவடி தந்தெமை ஆண்டுகொண் டருளும்
செம்பொரு ளேபள்ளி யெழுந்தரு ளாயே. 4

ஆயிரம் கண்ணுடை யாயெனப் புலவோர்
அம்மை நின்பெருமையை அறைகுவர் அவற்றுள்
நேயமி குந்தொரு திருவிழிப் பார்வை
நீயுத வுவையெனில் எமக்கது போதும்
தீயவெவ் வினைகளின் நீங்கிநின் னரிய
திருவடிப் பேற்றினுக் கருகரு மாவோம்
தூயவர் வாழ்தவ ளக்கிரி யுறையும்
சுரிகுழலே பள்ளி யெழுந்தரு ளாயே. 5

அன்னைபன் னுலமுள் ளாணையில் உறையும்
அன்பர்வந் தேத்திட அருள்புரி தாயே
பிளவையும் பேதியை சூரியும் முதலாம்
பிணிகளைப் போக்கிடும் துணையென நின்றாய்
தளவமல் விகைகர வீரமும் கழுநீர்த்
தடமுடன் சார்தவ ளக்கிரி யமர்ந்த
இளநகை மெல்லியல் எம்பெரு மாட்டி
ஏந்திழை யேபள்ளி யெழுந்தரு ளாயே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்கரு மவுணரு மாய்வடி வெடுத்தே
அணைத்துயிர்க்கும் கொடு [illegible] வீசுவீக்கும்
இரக்கமில் வானவ [illegible]
ஈர்ந்தொடுக் கிடவரும் [illegible]
அரத்தக மெல்லடி [illegible]
அரியநின் பொற்றிரு வாயில் யடைந்தோம்
திருத்திக முந்தவ ளக்கிரி உறையும்
தெள்ளமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.

அயனரி சிவனென ஒதுமுத் தேவர்
அழித்தலும் காத்தலும் துடைத்தலும் புரிய
மயலறுத் தவர்க்கதி காரமும் வழங்கி
மாபெருங் கருணையின் உயிர்த் தொகைபுரக்கும்
இயல்புடன் வீற்றிருந் தருளுமெய்த் துணையே
ஏழிற்றவ ளக்கிரி அமர்ந்திடும் தாயே
சுயமுறு கோதியிற் துலங்குமெம் முமதே
தூயவளே பள்ளி யெழுந்தரு ளாயே

அண்டமும் புவனமும் [illegible] அணைத்தும்
அகிலமும் நிறைந்துயிர்க் குயிரென நிறைந்த
மண்டிய மலமிருட் கொடும்பிணி தீர்த்து
மாசறு நீருவடி மலரளித் தருள்வோய்
கொண்டல்வண் ணன்புகழ்த் தங்கையே அடியர்
குழாம்நிறை யும்த்வி ளக்கிரி உறைவோய்
சண்டிகையே மகமாரி யெம்மை தாயே
தற்பரை யேபள்ளி எழுந்தரு ளாயே.

இந்திரை சசியுடன் இருமருங்கு [illegible]
எழிலுற நிலைத்துவெண் சாமரை இரட்டை
சுந்தர வீணையை மீட்டினள் வாணி
தோழியரோ டருந் தோத்திர மிசைப்ப
அந்தர மாத ரரம்பையர் வாழ்த்த
அருமணிப் பீடிகை அமர்ந்துகுழ் பொழிந்து
விந்தை மிகும்தவ ளக்கிரி உறையும்
மென்கொடியே பள்ளி [illegible]

Digitized by Noolaham Foundation.

அளவெட்டி வடக்கு - தவளக்கிரி

ஸ்ரீ முத்துமாரியம்மை தோத்திரம்

அருட்கவி. சி. விநாசித்தம்பிப்புலவர்.

அன்னையே அகிலாண்ட கோடிகளெ லாம்காக்கும்
அங்கயற் கண்ணி உமையே
அடங்காத மாரனெனும் அசுரன்கொடுங் கோலாட்சி
அழித்துத் தெய்வீக ஞானம்
உன்னுமவன் மகளுட்சி ஓங்கநல் வரமுதவி
உலகெலாம் வறுமை நீக்கி
ஊனெழுகு நோய்போக்கி வானமுயர் கம்பத்தில்
ஒளிர்கர்க மீதமர்ந்து
பன்னக மணிந்தபரன் பாலித்த கலசத்தால்
படியளக்கும் செல்வியே
பாரோடு விண்மருவு தங்கரத மேறிவரும்
பரந்தாமன் மகிழ் தங்கையே
மன்னுநின் பணித் தொண்டர் எண்ணியன கைகூடி
மனங்குளிர வந்தருளுவாய்
வடஅளவைப் பதிதவளக் கிரிமேவு சிங்கார
மகாமுத்து மாரித்தாயே.

தொண்டுபுரி யடியார்கள் தொழும்மாலை வேளையில்
சொர்ணக் குழந்தைவடிவில்
சுவைமழலை மொழிபேசி மெல்லத் தவழ்ந்துவரும்
தோற்றங்கள் காட்டிநின்று
பண்டுபுரி யாகங்கள் பூசனைகள் ஏற்றுநற்
படைக்காத்த வராயன்தனைப்
பற்றுமென் மகனென்று திருவாக் குரைத்தாடல்
பலகொண் டமர்ந்தாயம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டகண் குளிரவரும் கற்பகத் தெய்வமே
கருதுமவர்க் கமுதகனியே
கலிவீசு நின்கோயிற் கும்பாபி ஷேகம்நிறை
கனகசபை யாக அருள்வாய்
வண்டுலவு சடையசையத் தண்டைச் சிலம்பசைய
வருபூத மசைய நடித்து
வடஅளவைப் பதிதவளக் கிரி மேவுசிங்கார
மகாமுத்து மாரித்தாயே. 2

எண்ணியழைப் பவர்நெஞ்சி னகலாக இறைவியே
ஏத்துமடி யார்க்கிரங்கி
இளமுறுவல் முகமலர்ந் திரத்னமணித் தோட்டுடன்
இலங்குமுடி ஒளிபரப்ப,
பண்ணிசைத் துடிசூலம் நாந்தகம் தனுபாசம்
பாதுகாப்புப் பிரம்பு
பசியவேப் பிலிநீறு ருத்ராக்க மணிமாலை
பங்கயக் கைகளேந்தி
தண்ணளிப் பொற்றுகில் தனமருவு கச்சினுறு
சங்கரன் தாலி தீகழ
சாந்தசிவ ரூபியாய்க் காந்தளப யம்வாதம்
தந்துவயச் சிங்கமேறி
வண்ணமா துளமேனி கமழவரு வாய்நின்றன்
வழித்தொண்டுப் பேறு தருவாய்
வடஅளவைப் பதிதவளக் கிரிமேவு சிங்கார
மகாமுத்து மாரித்தாயே. 3

எங்கும் பொலிந்தருள் தங்கும் படிக்கு மூச்சங்கம் வகுத்த தலைவி
பொங்கிப்படர்ந்த பேரங்கிப் பொருப்பிலே பங்குக்கு நின்றஇறைவி
கங்கைச்சலத்தில் வரு சங்கைப்பிடித்தவுடன் மங்கைக்கு நின்றஅழகி
சிங்கத்தில் ஏறியே தங்கச் சிலப்புகள் தொங்கிக் குலுங்க வருக. 4

Digitized by Noolaham Foundation.

பெருங்கருணைத் தெய்வம்

உலகனைத்தும் ஒருங்கின்ற பெருங்கருணைத் தெய்வம்
உயிரனைத்தும் உய்திபெற இரங்குகின்ற தெய்வம்
நலமனைத்தும் தானுகித் திகழ்கின்ற தெய்வம்
நமக்கென்றும் அருள் புரிந்தே காக்கின்ற தெய்வம்

கல்வி செல்வம் வீரமெல்லாம் நல்குகின்ற தெய்வம்
கருணையினுல் நமதுபிழை பொறுத்தருளும் தெய்வம்
வல்வினையை உடன்விலக்கி வரமருளும் தெய்வம்
வாழ்வனைத்தும் பிறப்பனைத்தும் உய்திதரும் தெய்வம்

தர்மநெறிச் செல்வோர்க்கு விரைந்துதவும் தெய்வம்
தளர்கின்ற நேரத்தே தளர்வகற்றும் தெய்வம்
கர்மத்தின் விளைவினின்றும் காத்தருளுந் தெய்வம்
காலமெல்லாம் நாம்வணங்க கருணைசெய்யும் தெய்வம்

புலவர் நா. பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்கெழு மந்திரத்தால் அபிஷேகம் ஆடுந்தாய்

அளவெட்டி வடக்கி லிந்துத் தவளகிரிப் பதியமர்ந்த
உளநிறை எங்கள் தாயே உத்தமி முத்துமாரி
அளவிலா அறிவு நர்மம் அளப்பிலா வளமுந் தந்து
குழவிகள் எம்மைக் காக்கும் கோதிலா வமுதே வாழி.

இருபதும் ஐந்தும் சேர்ந்த இயல்வருடம் மிக்கதாலே
அருள்கெழும் நின்றன் விக்கிரக ஆற்றல்தான் குறையும் என்ற
பொருள்கெழும் வாய்மையாலே புண்ணிய வடிவே நினக்கு
அருள்கெழு மந்திரத்தால் அபிஷேகம் செய்கின் றேமே.

பக்திசேர் மகாகும்பா பிஷேகம் பாலர் நாம் செய்யும் போது
மிக்கபல் லாண்டின் முன்னும் மகாமண்டபம் நிர்த்த மண்டபம்
தக்கதாய் அமைக்க ஆசை தாங்கியே அடியார் உதவ
இக்கணம் ஆக்கி உள்ளம் இன்புற இறைஞ்சு கின்றேம்.

இப்புவி யுள்ளார் நின்னை இருந்தியிற் காண்ப தாலே
அப்பனுந் தீக்கு ஓமம் அருளாரும் சொல்லி நின்னை
செப்பமாய் ஏற்றி நூலால் செயிரறு கும்ப நீரில்
ஒப்பறச் சேர்த்துப் பூசகர் உன்றனக் காட்டி னாரே.

இப்போது நின்றன் விக்கிரகம் ஏதமில் சக்தி சேர்ந்து
ஒப்பிலா அருளே மேவி ஒளிமயமாகி நிற்க
எப்போதும் எம்மை நோக்கி ஏதமில் அருளை யீந்து
செப்பருந் தாயன் போடு தாங்கிடும் தாயே போற்றி.

பண்டிதர் மா. மாணிக்கம்
அளவெட்டி வடக்கு.

Digitized by Noolaham Foundation.

இராகம் — அடாளு

தாளம் — ரூபகம்

பல்லவி

ஓங்காரி மஹாமாரி
மஹாபாப சங்காரி (ஓங்காரி)

அனுபல்லவி

ஹ்ரீங்காரி க்ருபாகரி
ஹ்ருதயந்தன்னில் இருந்தாதரி (ஓங்காரி)

சரணம்

உமாமஹேஸ்வரி
சங்கரானந்தன் பணியும் தயாபரி
மாயன் சகோதரி
மஹாதேவ சுந்தரி (ஓங்காரி)

வித்திரு. மு. வர்ணகுலசிங்கம்
விரிவுரையாளர்
இராமநாதன் நுண்கலைப்பகுதி
யாழ். பல்கலைக்கழகம்

மங்களமா மணித்தினுக்கும் மங்களமே சிவமே
மக்கள்விடை நாற்பொருளும் வழங்குநலத் தாயே
எங்கள்புக லேவிழிமூன் றேய்ந்தவளே கௌரி
எழில்நாரா யணியுன்னை இறைஞ்சிடுவோம் யாமே.

ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரியம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே.

Digitized by Noolaham Foundation.
nbolaham.org | aavanaham.org

இராகம் — சாரங்கா

தாளம் — கண்டச்சாப்பு

பல்லவி

அருள்மாரி பொழிகின்ற கருமாரி அம்மா
உருமாறி உலகெலாம் உயிர்காக்கும் ஓம்காரீ (அருள்)

அனுபல்லவி

திருப்பாற் கடலினிலே தீரு - மாலாய் அரவின் மேல்
அருட் பார்வை அருள்கின்ற அருமைத் திருமகளே (அருள்)

சரணம்

வெண்டா மரையிலமர்ந்து வீணுகானம் இசைப்பாய்
செந்தா மரையிலிருந்து செல்வங்கள் பல அளிப்பாய்
பைந் தமிழ் பாமாலைபாட அருள் தாராய்
வந்தென் உளம் புகுந்து வல்வினை அகற்றிடுவாய் (அருள்)

சரணம்

கொஞ்சும் சதங்கைகள் பஞ்ச கதி இசைக்க
தஞ்சம் தரும் தாள்கள் தாள விந்நியாசம் செய்ய
அஞ்சேலென அருளும் அபயகர மைசந்தாட
பஞ்ச கிருத்தியங்கள் பாங்காவே இயங்க (அருள்)

சரணம்

பக்தியாய் யான் உன்னைப் பற்றிப் பணிந்தேத்தி
சித்தி புத்தி பெற்றுச் சீராய் துதிபாடி
சக்தி நவசக்தி திரிசக்தி திருவடியை
நித்தியம் நினைந் தேத்தி முத்தியை அடைவோமே (அருள்)

மிருதங்க வித்துவான்
ப. சின்னராசு
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.

அர்ச்சுனா

கல்வி — முயற்சி — பெருவாழ்வு

விலை: ரூபா 6/-

(சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்)

சிறுவர்களின் அறிவுப் பசிக்கு,

* நல்விருந்து
* பல்சுவை விருந்து

ஆண்டுச் சந்தா ரூபா 80/- (தபாற்செலவுட்பட)

ஞானக்கதிர்

அன்பு-அறநெறி-ஆன்மீகம்

விலை: ரூபா 7/-

(இந்து சமய மாத மஞ்சரி)

* சமய ஒளிவீசி, ஆத்மீக நெறி பரப்ப எழுந்துவரும் மாத இதழ்

' ஞானக்கதிர் '

ஆண்டுச் சந்தா ரூபா: 90/- (தபாற்செலவுட்பட)

தபாலில் பெற விரும்புவோர் காசோலை அல்லது காசுக்கட்டளை பெற்று, "நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட்" என எழுதி, தபாற் பெட்டி எண் - 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ச்சிப் பொருட்கள்,
செய்தித் தாள்களுக்கு

நாடுங்கள்



சுந்தரம் அன் சன்
காங்கேசன்துறை வீதி
சுன்னுகம்.

கும்பாபிஷேகம் சிறப்புடன் நிகழப்
பிரார்த்திக்கிறோம்



க. கனகரத்தினம்
அம்பாள் ஸ்ரோர்ஸ்
கோவில் முகப்பு
அம்பாள் கோவிலடி.

குடமுழுக்கு இனிது நிறைவுற
அம்பாள் அருள்பாலிப்பாளாக!



அம்பாள் ஸ்ரோர்ஸ்
பலசரக்கு ஸ்தாபனம்
சங்கத்தானை
சாவகச்சேரி.
உரிமையாளர்: எம். சிவசாமி

அம்பாள் அருள்

பாடசாலை உபகரணங்கள்
திருமண அன்பளிப்புகள்
யாவையும் பெற்றுக்கொள்ளலாம்

அகிலன் பான்சி ஹவுஸ்
புலோலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை

அச்சு வேலைகள்
பழைய புத்தகம் கட்டுதல்
ஏனையவற்றைச் சிறந்த முறையில் செய்விப்பதற்கு

வாருங்கள்

ஜெயா பிறின்டிங் வேக்ஸ்

சீனட்டிப்பாய் ஒழுங்கை
வடக்கு அளவெட்டி.

அம்பாள் கருணையால் அகிலமும் செழிக்க!



நியூ சியாமளா ஜூவல்லறி மாட்

173 1, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி

"ஷிப்ரு"

உங்கள் நிதியத்தைப் பெருக்க
எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்

* நிலையான வைப்புத்திட்டம் / Term Deposits

குறைந்த வைப்புத் தொகை ரூபா 1,000/-

மாதாந்த வட்டிபெற குறைந்த வைப்புத்தொகை ரூபா 5.000/-

Period – Months காலம் – மாதம்	Monthly மாதாந்தம்	Maturity முதிர்ச்சியில்
03	—	15%
06	15%	17%
12	18%	20%
24	21%	23%
36	22%	24%

* வைப்புச் சான்றிதழ் / Certificate of Deposits

Period - Months காலம் - மாதம்	Cost of Certificate சான்றிதழின் பெறுமதி				Rate வட்டி வீதம்
06	4,588/-	9,175/-	45,872/-	91,744/-	18%
12	4,133/-	8,265/-	41,323/-	82,645/-	21%
24	3,379/-	6,757/-	33,784/-	67,568/-	24%
Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி	5,000/-	10,000/-	50,000/-	100,000/-	•

உங்கள் நிதியைப் பெருக்க
மேலும் பல 'புதிய வழிகள்'
'ஷிப்ரு'வின் உதவியை நாடுங்கள்.


ஷிப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிடெட்

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4


207, மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 589310, 500576

Digitized by Noolaham Foundation.



கர்ப்பக்கிரகத் தூபியும் கர்ணக்கூடும்
(பக்கப் பார்வை)



கர்ப்பக்கிரகத் தூபி
(முன்புறத் தோற்றம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிருத்த மண்டபம்
ஸ்தம்ப விநாயகர்



மடம்

Digitized by Noolaham Foundation.

ஓம் சக்தி

அளவெட்டி வடக்கு
தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் தல வரலாறு

சைவமும் தமிழுந் தழைத் தோங்கும் ஈழவளநாடு தக்ஷிண கைலாசம் என்னுஞ் சிறப்புப் பெயருங் கொண்டுள்ளது. ஊர்கள் தோறும் கோவில்கள் பக்தி மணம் பரப்பி நிற்கின்றன. இங்கும் சைவம் வளர்த்த சான்றோர்கள் பலர் வாழ்ந்திருக்கின்றனர்.

அளவெட்டி

இவ்வீழ நாட்டில் யாழ்ப்பாணக் குடா நாட்டின் வடபால் அளவெட்டி என்னும் அரிய புகழ் படைத்த ஊர் அமைந்துள்ளது. வயலும் வயல்சார்ந்த பண்ணைகளும் வளஞ் செழித்து பச்சைப் பசேலென்று காட்சியளிக்கும் இவ்வூர் ஆன்றவிந்தடங்கிய கேள்விச் சான்றோர் பலர் வாழ்ந்த பெருமை பெற்றது. இங்கு வாழ்ந்த வடமொழி தென் மொழி வல்லுநரான [1]வைத்தியநாத முனிவர் வியாக்கிரபாத புராணம், புலியூர்ப் புராணம் என்னும் நூல்களை ஆக்கி, சைவ நல்லுலகிற்குத் தந்திருக்கிறார். சங்கீதம், நாட்டியம், நாடகம், சிற்பம், ஓவியம் ஆகிய இன்கலைகளின் இருப்பிடம் இவ்வூர்.

நகுலேஸ்வரத்திற்கு நேர் தெற்கே இரண்டு கல் தொலைவில், தெல்லிப்பளை பண்டத்தரிப்பு வீதியில் அளவையூரின் அமைதி மிகு சூழலில், ஓமெனும் மந்திரத்துட் பொருளாயிருக்கும் உலகத்து நாயகி அன்னை முத்துமாரி கோயில்கொண்டு அருள் பாலிக்கும் தவளக்கிரித் திருத்தலம் அமைந்திருக்கிறது.

தவளக்கிரி

தவளக்கிரித் திருத்தலத்தின் வரலாற்றைச் சரிவரச் சொல்லக்கூடிய சரித்திர புராணச் சான்றுகளோ சாசன ஏடுகளோ எவையுமில்லை. கர்ண பரம்பரைக்

1. தமிழ் அகராதி, பதிப்பாசிரியர்: இ. மா. கோபாலகிருஷ்ணகோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளே ஒளவுக்குக் கைகொடுக்கின்றன. கோவிலின் பழமையை அன்னையின் திருவுருவ அமைப்பும் முன்பிருந்த தூண்களும் கட்டட அமைக்கப் பயன்படுத்தப்பட்ட பொருள்களும் எடுத்துச் சொல்லுகின்றன.

முணு முணுத்த அம்மன்

அன்னை முத்துமாரி அளவெட்டியில் கோயில் கொண்ட வரலாறே அதிசயமானது. நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பு வட்டுக்கோட்டை சுழிபுரம் வாழ் மக்கள் கடலிலிருந்து எடுத்த அன்னையின் திருவுருவச் சிலையை வீடொன்றில் வைத்து ஆராதித்து வந்திருக்கிறார்கள். இரவு நேரங்களில் அன்னையை வைத்திருந்த இடத்திலிருந்து முணு முணுக்கும் சப்தம் வந்துகொண்டிருந்தது. அச்சமும் அதிசயமுங் கொண்ட அவ்வூரவர் பொங்கலென்றும் பூஜையென்றும் பக்தி பரிமளிக்க எத்தனையோ சிறப்பாகச் செய்து வந்தார்கள். முணுமுணுப்பு நிற்கவேயில்லை. அன்னை பேசியது ஆருக்கும் புரியவுமில்லை. முணுமுணுத்த அம்மன் என்று பெயர் சூட்டி விட்டார்கள்.

கூடத்தம்மன்

அக்காலப் பகுதியில் அளவெட்டியிலிருந்து, ஆசார சீலர்களாய சிலர் அவ்வூர்களுக்குப் போய்வருவதுண்டு. அங்குள்ளவர்கள், இவர்களிடம் அம்பிகையைப் பற்றிப் பிரஸ்தாபித்து, தங்கள் அச்சத்தையும் கூறினார்கள். அம்பிகையை உரிய முறையில் ஆராதிக்க முடியாதென்பதை உணர்ந்த அவர்கள் எடுத்துச் சென்று ஆராதிக்குமாறும் வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோட்படி தேவியைக் கொண்டு வந்தவர்கள் அளவெட்டியில் தவளக்கிரிக் கோயிலுக்குத் தென்புறமாக பிரதான வீதியோரம் இப்போதுமுள்ள மடத்தின் பின் புறமுள்ள வீட்டின் கூடத்தில் வைத்து வழிபடலாயினர். முதன் முதலில் தேவியை ஆராதித்து வந்தவர் ஒரு சாமியார் என்று கூறப்படுகிறது. சாமியார் காலமானபின், மடத்து வளவின் பின்பக்கம் அவரை அடக்கம் செய்த இடத்தில் ஒரு சிறுசமாதி கட்டப்பட்டுள்ளது. கூடத்தில் வைத்து வணங்கியமையால் கூடத்தம்மன் என்ற பெயருங் கூடவே வழங்கலாயிற்று. இங்கு வந்த பின்பும் தேவியின் முணு முணுப்பு நீடித்ததாகவும் பின்னர் படிப்படியாகக் குறைந்து முற்றும் இல்லாமல் போய் விட்டதாகவும் கூறுகிறார்கள்.

அம்பிகை அளவெட்டிக்கு வந்து சேர்ந்தாலும் வட்டுக்கோட்டை சுழிபுரம் வாழ் மக்கள் நெல்லும் பூஜைத் திரவியங்களும் தேவி வழிபாட்டுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள் இடையிடையே வந்து வணங்கியும் சென்றார்கள். மாவிட்டபுரம், சந்நிதி கோவில்களுக்குச் செல்லும்போதும் இங்கு தங்கி, பொங்கலிட்டுப் பூஜை செய்யத் தவறுவதில்லை. அவர்களின் வசதிக்காகவே இந்த மடம் ஏற்படுத்தப்பட்டது என்பார் சிலர்; முன்பு இருந்தது விரிவு படுத்தப்பட்டது என்பார் சிலர், மடமும் காலப்போக்கில் பல மாறுதல்களைக் கண்டுள்ளது. மடத்தைக் கட்டுவித்தவர் அளவெட்டியைச் சேர்ந்த, றங்கூன் நாகலிங்கமவர்களின் முன்னோர்களாவர்.

இப்போது அம்பிகையை பிரதிஷ்டை செய்திருக்கும் தவளக்கிரிக் கோவிலுக்கும் மடத்து வளவுக்குமிடையே, கோவில் தெற்கு வீதி மட்டுந்தான் உண்டு. கூடத்தம்மன் தவளக்கிரிக் கோவிலில் எக்காலத்தில் யாரால் பிரதிஷ்டை செய்யப் பெற்றாள் என்பது அறிய முடியாதிருக்கின்றது.

காத்தவராயர் கோவில்

இத்தவளக் கிரிக் கோவில், கூடத்தம்மனைப் பிரதிஷ்டை செய்யமுன்பு காத்தவராயர் கோவில் என்றே வழங்கி வந்திருக்கின்றது. இன்றுங் கூட, தூரத்திலிருப்பவர்கள் காத்தவராயர் கோவிலென்றே கூறுகிறார்கள். மரபு வழி வந்த [1] மாவைக் கந்தன் காவடிப் பாடலொன்றில் "செங்கழனி சூழ் அளவை நடுவண் கோவில் அமர் காத்தவராயன் சந்நிதியிலிருந்து துங்கமிகு காவடியை எடுத்து ..." என்று இக் காத்தவராயர் கோவிலிலிருந்து காவடிகள் புறப்பட்டு

1. மாவை த. சண்முக சுந்தரம் அவர்கள் தொகுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிட்டபுரம் சென்றதாகப் பாடப்பட்டுள்ளது இன்னும், காத்தவராயர் உற்சவ மூர்த்தியும் கழுமரமும் இன்றுங் கோவிலில் உள்ளன. பலியிடும் வழக்கமும் நீண்ட காலமாக இருந்திருக்கிறது. எது எப்படியாயினும் இப்போது தேவி முத்துமாரி கருவறையில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள்.

அன்னையின் கருவறையமைந்த பகுதி அளவையூரைச் சேர்ந்தது. ஆயின் வடக்கு வீதி பன்னாலையூரைச் சேர்ந்தது. அன்னையை முதன் முதலில் வணங்கி வந்தவர்கள் வட்டுக்கோட்டை சுழிபுரம் வாழ் மக்கள். இந்த நான்கு ஊரவர்களும் தேவியைத் தங்கள் குலதெய்வமாகக் கொள்ளுவதில் வியப்பேதுமில்லை. அயல் ஊரவர்கள் மட்டு மன்றி, தொலைவிலிருந்தும் அன்னையின் அருள் வேண்டி வந்து கொண்டிருப்பவர்களுக்கு அளவேயில்லை.

பலியிடுதல்

நீண்ட காலமாக இக்கோவிலில் வேள்விக் கொடியேற்றி பலியிடும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது. நாமறிந்தவரையில் 1918 –ம் ஆண்டளவில் ஒரு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கிறது. இக் கும்பாபிஷேகத்தைக் கோணேசர் கோவிலைச் சேர்ந்த சிவஸ்ரீ சரவணமுத்துக் குருக்களவர்கள் நடத்தி வைத்திருக்கிறார்கள். 1924, 25 அளவில் பலியிடுதல் நிறுத்தப்பட்டு மகோற்சவம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். தொடர்ந்து பத்து ஆண்டுகள் வரையில் மகோற்சவம் நடந்திருக்கின்றது. ஆயின் திரும்பவும் பலியிடும் வழக்கத்தைக் கொண்டு வரும் முயற்சியில் சிலர் ஈடுபட்டமையால் பெரிய குழப்பநிலை தோன்றி மகோற்சவம் தடைபடலாயிற்று. பலியிடும் முயற்சியும் பலிக்கவில்லை. 1935 –ம் ஆண்டளவில் தூபியின் திருத்த வேலைகள் செய்யப் பெற்று இரண்டாவதாக மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்த சில ஆண்டுகளின் பின்னர் திரும்பவும் மகோற்சவம் நடைபெறத் தொடங்கியது. கொடியேற்றத்திலிருந்து பத்தாம் நாள் தேரும், பதினைராம் நாள் ஆனி உத்தரத்தன்று தீர்த்தமும் நடைபெறலாயிற்று. கும்பாபிஷேகத்தையும் மகோற்சவத்தையும் பண்டித, சிவஸ்ரீ மாணிக்கத்தியாகராஜக் குருக்களவர்கள் செய்து வைத்தார்கள். 1965 – ம் ஆண்டு தை மாத அத்த நட்சத்திரத்தில் மூன்றாவது மகா கும்பாபிஷேகம் கோவிலில் செய்யப் பெற்ற பல திருத்த திருப்பணி வேலைகளோடு தொடர்ந்து நடைபெற்றது. இக் கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்களவர்கள் செய்து வைத்தார்கள்.

வீர சைவக்குருக்கள் மட்டுமன்றி பிராமணக் குருமாரும் சில சந்தர்ப்பங்களில் மகோற்சவத்தில் பணி புரிந்திருக்கிறார்கள். இதுவரையில் இக்கோவிலில் குருமாராகப் பணிபுரிந்தோர்.

சிவஸ்ரீ	சரவணமுத்து குருக்கள்		வீரசைவர்
பிரம்மஸ்ரீ	சதாசிவக்குருக்கள்	மாதகல்	பிராமணர்
,,	இரத்தினம் குருக்கள்	வதிரி	,,
சிவஸ்ரீ	சி. மாணிக்கத்தியாகராஜா	குருக்கள்	வீரசைவர்
,,	ச. தற்பரானந்தம்	,,	,,
,,	ச. சொக்கலிங்கம்	,,	,,
,,	இராசையா	,,	,,
,,	கந்தையா	,,	,,
,,	ஐ. செல்வரத்தினம்	,,	,,
,,	சி. ஐயம்பிள்ளை	,,	,,
,,	செ. வைரவநாதன்	,,	,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஐந்து வீரசைவ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பரம்பரையாகப் பூசை உரிமை பெற்றிருக்கிறார்கள். சமீப காலத்தில் இங்கு பூஜை செய்பவர்கள். வீரா கமவிதிப்படி இலிங்க தாரணம் செய்த வர்களாக இருக்க வேண்டு மென்று விதிக்கப் பட்டிருக்கிறது.

இக்கோவிலுக்குரிய தலவிருட்சம் சரற்கொன்றை. இது வடக்கு வெளிவீதியில் வானுற வளர்ந்து நிற்கிறது. ஆனி மகோற்சவ காலத்தில் பொன் போலப் பூச்சொரிந்து தேவியைப் பூசித்து நிற்கிறது. வயல் நிலங்களும் தோட்டக்காணிகளும் இக்கோவிலுக்குத் தர்ம சாசனம் செய்யப்பட்டுள. இத்தகைய நிலமொன்றில் தவளக்கிரிக் கோவிலின் பின் புறமாக ஆதி வீரபத்திர சுவாமி ஆலயம் 1982 ம் ஆண்டில் எடுக்கப்பட்டிருக்கிறது.

கோவிலின் முன்புறமும் வலப்புறமும் கோவில் தொண்டு செய்யும் இசையாளர் மரபினரும் மலர்மாலை புனைவோரும், வேளாண் பெருமக்களும் ஏனையோரும் வாழ்கின்றனர். சிற்ப சித்திரநுண்கலை வல்லுநர்களும் இங்கு வசிக்கின்றனர், அன்னையின் அடித்தொண்டே வாழ்க்கையில் ஆக்கமெலாந் தருமென்று உறுதியாக நம்புகின்றனர்.

உற்சவமூர்த்தி

முன்பு விநாயகர், காத்தவராயர், அம்பிகை மூவரும் உற்சவ காலங்களில் பவனி வரும் வழக்கம் இருந்திருக்கிறது. இப்போது அம்பிகை மட்டுமே உற்சவ காலங்களில் வீதி வலம் வருகிறாள். 1935 ம் ஆண்டு நடந்த மகாகும்பாபிஷேகத்துக்குச் சிறிது காலம் முன்னதாக இப்போதிருக்கும் உற்சவ மூர்த்தி உருவாக்கப்பட்டது. இவ்வம்பிகையின் அழகும் ஒளியும் அருட்பொலிவும் மிகமிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது. இந்த வகையில் சிற்பச் சிறப்பம்சம் பொருந்திய தேவி திருவடிவம் இப்பகுதியில் இல்லையென்று சிற்ப நூல் வல்லுநர்கள் கூறுகின்றார்கள். இச்சிலையை வடித்த சிற்பி மூன்று முறை முயன்றும் ஏதோ ஒரு ஊனம் சிலையில் ஏற்பட்டு வந்தமையால் மனம் சோர்ந்து இருந்தபோது அம்பிகையே ஒரு மூதாட்டி உருவில் வந்து ஆறுதல் கூறி ஆசி வழங்கிய பின் நான்காவதாக வடித்த திருவுருவம் தான் இது என்றும் இம்மூதாட்டி நிழல் உருவில் பதிந்திருந்தாகவும் ஒரு கதை கூறப்படுகிறது.

நடராஜப் பெருமானுக்கு இங்கு தனிச் சந்நிதி இருக்கிறது. இது தெற்கு நோக்கி அமைக்கப் பெற்றிருக்கிறது. வருடத்தில் ஆறு விசேட அபிஷேக தினங்களோடு ஏனைய இருதினங்களில் மட்டும் நடராஜப் பெருமான் வீதிவலம் வருகிறார். பரிவார மூர்த்திகளான விநாயகர், முருகன், நாகேஸ்வரர், வைரவர் சந்நிதிகளும் இங்கு இருக்கின்றன.

சில வழக்கங்கள்

இக்கோவிலுக்கே சிறப்பாக அமைந்த சில வழக்கங்கள் நீண்ட காலமாக இருந்து வருகின்றன. சிவராத்திரி தினத்தன்று இரண்டாம் ஜாமப்பூசை முடிவுற்றதும் பூசகர் மூலஸ்தானத்திலிந்து கர்ப்பூரச் சட்டியொன்றை ஏந்திவருகிறார். மங்களவாத்தியங்கள் ஒலிக்க அது எதிரே சிறிது தூரத்திலிருக்கும் ஐயனார் ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்டு வீதி வலம் வந்து மூலஸ்தானத்தில் வைக்கப்பெற்ற பின்னரே அங்கு பூஜை நடைபெற்று, பிரசாதம் வழங்கப்படுகிறது. விஜயதசமியன்று தேவி கும்பிழாவளைப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்கிறாள். அங்கு வாழை வெட்டி மகாநோன்பு விழா முடிந்து திரும்பி வரும் போது ஐயனார் ஆலயத்திலும் வாழை வெட்டும் வழக்கம் இருந்திருக்கிறது.

பங்குனி மாதம் கோவில் குளிர்த்திக்கு வரும் பண்டங்களிலிருந்து சிறிய அளவில் சேர்த்து அயலிலுள்ள ஆலயங்களுக்கு முதல் நாள் மாலையிலேயே அனுப்பப்படுகிறது. குளிர்த்தி தினத்தன்று அதிகாலை நான்கு ஐந்து மணியளவில் சோறு ஆக்கும் முதல் அண்டா அடுப்பேற்றப்படுகிறது. இந்த அடுப்பேற்றும் வைபவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பரம் பரையாகச் செய்து வருகின்றார்கள். இவ் வழக்கங்கள் எப்போது ஏற்பட்டன என் பதைச்சொல்ல வல்லவர்கள் எவருமில்லை.

குளிர்த்தி

இங்கு நடைபெற்று வரும் பங்குனிக் குளிர்த்தி இரண்டாவது திங்கட்கிழமை நிகழ்கிறது. அன்னை முத்துமாரியின் அருள் கொடையை முதல் நாளும் குளிர்த்தியன் றும் அறையப்பெறும் முரசொலி வெளிப் படுத்திக் கொண்டிருந்த நிலை சமீப கால மாக இல்லாது போய்விட்டது. ஆயினும் அன்னையின் அருட்பிரசாதத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஆயிரம் ஆயிரமடியார்கள் நாலாதிசையிலிருந்தும் எந்த வேறுபாடு மின்றிக் கூடுகின்றார்கள். இங்கே நடக் கும் குளிர்த்தியைப்போல இவ்வளவு பெரிய அளவில் வேறெங்கும் நடப்ப தாகத் தெரியவில்லை. தனிப்பட்ட முறை யில் அன்னதானங்களும் இங்கு செய்யப் படுகின்றன.

விழாக்கள்

விழாக்களுக்குக் குறைவேயில்லை. தை மாசத்தில் பொங்கலும் தைப் பூசமும் இலட்சார்ச்சனையும் அபிராமிபட்டர் விழா வும் விசேட விழாக்கள். மாசியில் சிவராத் திரியும் பங்குனியில் குளிர்த்தியும் சித் திரை வருடப்பிறப்பு சித்திரா பௌர்ண மியும் ஆனி மகோற்சவமும் ஆடிப்பூரமும் புரட்டாதி நவராத்திரியும் ஐப்பசி வெள் ளியோடு தீபாவளித்திருநாளும் கார்த்திகை ஆயிரம் தீபத் திருநாளும் மார்கழித் திரு வெம்பாவையும் விசேடவிழாக்களாக நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதமும் மாதோதய பூஜை விசேடமாக நடைபெறு கின்றது. வெள்ளிக்கிழமை தேவிக்கு இக் கோவிலில் விசேடதினம். ஒவ்வொரு வெள்ளியும் மாலைப் பூஜையுடன் தேவி உள்வீதி வலம் வருகிறாள்.

கோவில் பரிபாலனம்

1935 ம் ஆண்டின் பின் கோவிலில் திருப்பணி வேலைகள்பல நடைபெற்றுள் ளன. இக்காலத்திலிருந்து கோவில் மேலா ளர்களாக அளவெட்டியை சேர்ந்த வேறு வேறு குடும்பத்தவர்கள் இருந்து வந் துள்ளனர். ஆரம்பத்தில் வைத்தியர் கதிர் காமர் குடும்பத்தவர்கள் பதவி வகித்துள் ளனர். பின்னர் அண்ணவி தம்பர் குடும் பம், சேனதி ராஜர் குடும்பம் வைத்தியர் சுணபதிப்பிள்ளை குடும்பத்தவர்கள் பொறுப் புக்களை ஏற்று கோவில் வளர்ச்சிக்காக உழைத்து வந்துள்ளனர். 28-5-55 ல் இருந்து கோவில் பரிபாலனம் அடியார் களால் தெரிவு செய்யப் பெற்ற பரிபாலன சபையாரிடம் முறையாகக் கொடுக்கப் பட்டது. பரிபாலன சபையார் கோவில் நிர்வாகத்தை சிறந்த முறையில் செய்து வருகின்றனர். பரிபாலன சபையாருக்குப் பக்கத்துணையாக 1965 ம் ஆண்டிலிருந்து தொண்டர்சபை ''தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே'' என்று ஔவையார் கூறியது போன்று பெருமைப் படத்தக்க வகையில் உழைத்து வருகின் றது.

புகழ்ப்பாமாலைகள்

அன்னையின் அருட்பெருக்கினைப் போற் றிப் புகழ்ந்து பாடப்பட்ட பாடல்கள் சில நயமிக்கவை. ஆக்கியவர் யாரென்று தெரியாத தவளக்கிரி முத்துமாரியம்மை பதிகம், வழிவழி அண்ணவிமார் போற்றிப் பரவிய துதிப்பாடல் தொகுப்பு, வைத்தி யர் அம்பலவாணர் கதிரித்தம்பியவர்கள் செய்த தவளக்கிரி முத்து மாரியம்மன் இரட்டை மணிமாலை, பன்னாலையூரைச் சேர்ந்த அறிஞர் மு. பொன்னம்பலமவர்கள் இயற்றிய முத்துமாரியம்மன் திருஊஞ்சல் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளையவர்களின் திருப்பள்ளியெழுச்சி, தவளக்கிரி முத்து மாரியம்மன் அந்தாதி என்பன குறிப்பிடத் தக்கவையாகும்.

அற்புதங்கள்

அன்னை முத்துமாரியின் அருளுக்கு எல்லையேது. அவள் அருட்பார்வை பெற்ற இவ்வூரில் விடந்தீண்டி மாய்ந்தவர்கள் எவ ரும் இல்லை. தொற்று நோய்களும் மக்க ளைத் துன்புறுத்தியதில்லை. மரத்திலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்தோ நீருள் மூழ்கியோ எவரும் இறந்ததில்லை. அம்மையைத் தஞ்சமடைந்தவர்களுக்கு அல்லல் எதுவுமில்லை. பக்தியுடன் அணுகுவார்க்கு அவள் ஒரு கற்பகம். கேட்டதெல்லாம் தருவாள். பிள்ளை வரம் வேண்டுவார்க்கு அவள் பேரருளால் கிடைத்துவிடும். நீராத பிணிகளெல்லாம் அவள் திருவடிகள் தீர்த்துவைக்கும். அம்மை செய்த அற்புதங்கள் அனேகம், அனேகம். சிவராத்திரி தினத்தன்று விரதமனுஷ்டிக்க வந்தவர்களில் சிலர், தேவி வெண்பட்டுடுத்து மின்னுமொளியுடன் சர்வாலங்கார பூஷிதையாக மூலஸ்தானத்தில் உலவியதை நேரில் கண்டிருக்கின்றனர். [1]பூசகர் மகள் மறுநாள் புதிய வெண்பட்டு எடுத்து வந்து தேவிக்கு அணிவித்த பின்னரே உணவு உட்கொண்டாராம். தேவியின் வாயிலில் வந்து பொய்ச் சத்தியம் செய்தவர் அனுபவித்த தண்டனைகள் சொல்லுந் தரமன்று. மகோற்சவத்தில் ஒரு விழாவைச் செய்பவர், விழாபற்றி ஏனோதானோ என்றிருக்க, பின்னிரவு இவர்கள் தோட்டத்துக்கு இறைத்த நீர் முழுவதையும் மாடாக வந்து பருகிய மாயமும், விழாவொன்றுக்கு அலங்கரிக்க வாழை தருபவர் ஒருதரம் மறுத்த போது அப்போதே வீசிய சிறு காற்றில் அவர் தோட்டத்தில் மட்டும் நின்ற வாழைகள் அத்தனையும் சாயச் செய்த அதிசயமும் அம்மை செய்த திருவிளையாடல்கள். சமீபகாலத்தில் குளிர்த்திக்கு இளநீர் கேட்டுச் சென்றபோது தர மறுத்த ஒருவரின் தென்னையில் இருந்த இளநீர் மட்டுமன்று குரும்பை முதலாக அத்தனையும் மறுநாள் விடிகாலை வீழ்ந்து விட்டன.

அன்னையிடம் ஆரா அன்பு பூண்ட [2]தவில் மேதைக்கு வித்வத் சபையில் வெற்றி கிடைக்க கனவில் தோன்றி அவர் கைவிரலில் புதுப்புது வித்தைகளைப் புகுத்திய வித்தையும் கோவில் 'உல்' லுக்கு ஈயம் வார்க்கும்போது கண்களில் ஈயம் தெறித்து அதனால் கண்பார்வை இழந்த [3]கரகர ஆட்ட வல்லுநர் பிடிவாதமாகத் தேவியின் தீர்த்தத்தையே மருந்தாக விட்டுக்கொள்ள அவர் கண் பார்வை பெற்ற கண்கட்டு வித்தையும், கோவிலில் பல தொண்டுகள் [4] செய்தவர் கண்பார்வை யிழந்து வைக்கிய வகையால் பயன் கிடையாது போகவே தினமும் தேவி வாயிலில் வந்து அன்னையோடு அன்போடு பேசியே கண்பார்வை பெற்றதுவும் குறிப்பிட வேண்டியவையாகும்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த [5]ஒருவர் ஈசானமூலையில் உள்ள கிணற்றை வெட்டினார். ஏதோ காரணத்தால் தண்ணீர் காணும்வரை வெட்டமுடியவில்லை. பருத்தித்துறையிலுள்ள [6]ஒருவரிடம் தேவி கனவில் தோன்றி, தாகத்துக்குத் தண்ணீர் கிணற்றிலிருந்து மொண்டு தருமாறு கேட்க, அவர் கிணற்றைப் பார்த்தபோது தண்ணீர் இல்லாமை கண்டு திகைத்து நிற்க 'வாளியை விடு தண்ணீர்வரும்' என்று கூறி, அவர் எடுத்துத் தந்த தண்ணீரைப் பருகி தவளக்கிரிக் குறிப்பையும் காட்டி மறைந்திருக்கின்றாள். மறுநாள் தவளக் கிரி வந்து சேர்ந்தவர் கனவில் கண்ட அதே கிணற்றைக் கண்டு அதிசயித்து, தேவியின் திருவிளையாடலை நினைந்து மெய்சிலிர்த்து கிணற்றை முழுமையாக வெட்டி வேண்டிய வசதிகளும் செய்து வைத்திருக்கிறார்.

கோவில் தேவைக்காக இலுப்பை மரமொன்றைத் தருமாறு பிறமதத்தவர் ஒருவரிடம் கேட்டபோது அவர் மறுத்து விட்டார். சில தினங்களில் அவர் குடும்பத்தவர் அத்தனை பேருக்கும் சின்னம்மை. வேதனையால் அவர்கள் வருந்த, அயலவர் தேவியின் திருவிளையாடலைச் சுட்டிக் காட்

1. பூசகர் கணபதிப்பிள்ளையவர்கள் மகள்.
2. தவில்மேதை அளவெட்டி தட்சிணா மூர்த்தி. அன்னை தந்த அந்த வாசிப்பைத் திரும்ப அவரால் வாசிக்க முடிவதில்லை என்று கூறுவார்.
3. கரகாட்டவல்லுநர் அளவெட்டி ஐயாத்துரை
4. அளவெட்டியைச் சேர்ந்த நங்கூன் நாகலிங்கம்
5. வட்டுக்கோட்டை வல்லிபுரம்
6. பருத்தித்துறை கந்தையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியபோது, தான் செய்த தவறுக்காக வருந்திய அவர் ஆளனுப்பி இலுப்பை மரத்தைத் தறிக்குமாறு கேட்டுக்கொண் டார்.

குளிர்த்திக்குத் தந்த அரிசியுடன் தவ றுதலாகச் சேர்ந்து போன குழந்தை யொன்றின் காதணிகள் ஆயிரம் ஆயிரம் மக்கள் உண்னும் சோற்றில் போகாது அக்குழந்தையின் [1]பாட்டனார் கொண்டு வந்த குளிர்த்திச் சோற்றிலேயே வெளிவ ரச் செய்ததும் அன்னை புரிந்த அற்புதங் களில் ஒன்று.

சிவஸ்ரீ சண்முகம் பூசகர் வாழ்க்கை யில் தேவி விளையாடிய சுவையான செய்தி ஒன்று. அப்போது சிறுவர் சண் முகம் சாதாரண பூசகர். ஆனால் பக்திப் பயித்தியம். தேவி பூசையில் சிறிய தவறும் செய்யமாட்டார். வழக்கம்போல ஒரு நாள் வட்டுக்கோட்டை சென்று, நெல்லோ அரி சியோ பெற்றுக்கொண்டுவர நேரமாகி விட்டது. பூஜை நேரம் போய்விட்டது. அவசர அவசரமாகக் குளித்து அமுது பொங்கி வைத்துவிட்டு கர்ப்பக்கிரக அறைக் கதவின் பூட்டை திறந்தார்; கதவைத் தள் ளினார். கதவு திறபடவில்லை. பலங் கொண்ட மட்டும் தள்ளிப்பார்த்தார்; பயன் இல்லை. கும்பிட வந்தவர்களும் முயன்றார்கள். கதவு திறபட மறுத்தது. சண்முகத்தாருக்குப் பயம்வந்துவிட்டது. கூடவே அழுகையும் வந்தது. அங்கேயே விழுந்து புலம்பினர். 'அம்மா! தாயே! உனக் காகத்தானே சென்று இந்த உச்சி வெயி லில் திரும்பி வந்திருக்கின்றேன். சற்று நேரத் தாமதத்துக்காக என்னைத் தண்டிக் கிறாயா' என்று வேண்டினர். ஆவேசம் வந்தவர் போல் எழுந்துசென்றவர் கத வைத் தொட்டதும் கதவு தானாகவே திறந்து கொண்டது. நின்றவர்களும் மெய்மறந்து நின்றார்கள். அன்று சண் முகத்தார் செய்த பூஜையைப்பற்றிச் சொல்லவேண்டுமா. தேவி விளையாடிய சின்ன விளையாட்டு இது. இச்செய்தியைச் சமீபகாலத்தில் சிவஜக்கியப் பேறுபெற்ற சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக்குருக்களவர்கள் கூறும் போது அவர் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது.

அளவெட்டியைச் சேர்ந்த தேவி பக்த ரொருவர் மன்னர், செட்டிகுளத்தில் வசிக் கின்றார். தவளக்கிரிக் கோயிலிலிருந்து ஒரு கல்லை எடுத்துச் சென்று தேவியாக வைத்து வணங்கினர். குறுகிய காலத்தில் அன்னை முத்துமாரியின் அருள் அங்குள்ளார் அனை வருக்கும் கிடைக்கவே இன்று அங்கு தவ ளக்கிரி முத்துமாரியம்மன் கோவிலே உரு வாகி விட்டது.

வெண்மையான சிகரங்களைக் கொண் டிருப்பதனால் இமயமலைக்குத் தவளக்கிரி யென்றும் பெயர் உண்டு. இமயத்தின் திருச் செல்வி பார்வதி. பார்வதி தேவியின் ஒரு அம்சமான அன்னை முத்துமாரி எங்கள் தவளக்கிரியிலிருந்து அருளாட்சி செய்து வருகிறாள்.

தவளக்கிரிவளர் தாயைப் பணிந்து சஞ்சலம் தீர்ந்திடுவோம். □

அன்னை அன்னை அன்னை அன்னை அம்பிகைக்கு மங்களம்
ஆதிசக்தி அம்பிகைக்கு அனந்தகோடி மங்களம்
என்னுள்ளே விளங்கும் ஈஸ்வரிக்கு மங்களம்
இச்சையாவும் முற்றுவிக்கும் சிற்சிவைக்கு மங்களம்.

---

1. அண்ணுவி வல்லிபுரம், அளவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகெங்கும் 'மாரி' என்ற சக்தியின் நாமம் துலங்குகின்றது

மகாகவி பாரதியின் ஆய்வுரை

கடவுளை ஆணென்றும் பெண்ணென்றும் இரண்டு கலைகளாக வழங்குதல் புராதன தேசங்கள் யாவற்றிலுமே உண்டு. சில விடயங்களில் சக்தியே பிரதானமென்ற கொள்கையிருந்தது.

உதாரணமாக கிறிஸ்து நாதரின் மாதாவுக்கு மாரியென்று பெயர். (இதனை ஆங்கிலேயர் மேரியென்று பிழையாக உச்சரிக்கிறார்கள்.) இந்த மாரி யென்னும் பெயர் பலஸ்தீன தேசத்தில் கிறிஸ்து பிறப்பதற்கு முன் எத்தனையோ நூற்றாண்டுகளாக வழங்கி வந்தது.

அங்கு மாத்திரமன்று; அங்கிருந்து வடக்கே நெடுந்தூரம் கருங்கடல் வரையுமுள்ள நிலமுழுவதிலும் மிகவும் பழமைக் காலங்களிலே மாரி என்பதோர் தெய்வப் பெயர் வழங்கிற்று. கருங்கடலுக்கும் தர்தானெல் (இங்கிலிஷ் - டார்டானெல்ஸ்) ஜலசந்திக்குமிடையே (ஸங்கரியுஸ் என்று கிரேக்க பாஷையில் சொல்லப்படும் சங்கரி நதிக்கரையில் முற்காலத்தில் பிஸ்கேனு (Piscenus) என்றதோர் பெரிய நகரமிருந்தது. அங்கு பெருங் கோயிலொன்று கட்டி மாரியம்மா என்ற தெய்வத்தை வணங்கினர்கள்.

அதற்கருகே 'மாரியாந்தினி' என்றோர் நகரமிருந்தது. இந்த மாரியை உலகத்தின் தாயென்றும் எல்லாத் தேவர்களுக்கும் ஆதாரமான மகாசக்தி யென்றும் அந்த நாட்டிலும் அதன் சுற்று வட்டங்களிலுமுள்ளோர் கொண்டாடினர்கள். இயற்கைத் தெய்வமே மகாசக்தி என்று சொல்லப்படுகிறது. அதனையே பூர்வகாலத்தில் பல்வேறு தேசத்தார் பல பெயர் கூறி ஈசிஸ் (ஈசி) என்றும் மாரி யென்றும் துர்க்கை யென்றும் வணங்கி வந்தார்கள்.

அதனை அரசர் வீரதேவதையாகவும் சில இடங்களில் ஸங்ஹார தேவதையாகவும் கொண்டாடினர், பொது ஜனங்கள் அரசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியை அனுசரித்தனர். யோகிகளும் ஞானிகளும் கவிகளும் அதனைப் படைத்தல் காத்தல் அழித்தல் என்ற முத்தொழிலுக்கும் ஆதியான மோன வெளியென்று போற்றினர். எல்லாம் ஒன்று தான்.

வாக்கையும் மனத்தையுங் கடந்த பரம் பொருளே ஆணென்று சொன்னுலென்ன; பெண்ணென்று சொன்னுலென்ன? தாயென்றுலென்ன? தந்தையென்றுலென்ன? எனினும் தெய்வத்தைக் கருதும் போது வாக்கையும் மனதையுங் கடந்த பரம் பொருள் என்று மாத்திரம் நினைப்பது பிரயோசனமில்லை. அது உண்மையன்று.

'சுத்த அறிவே சிவம்' — வாஸ்தவந் தான். ஆனல் இந்த உலகம் என்ன? இதுவுஞ் சிவமே. அறிவுக் கெட்டா பெயர் சொல்ல முடியாதது. ஆதலால் அப்பொருளுக்கு வெறுமே தத் (அது) என்ற பெயர் காட்டி வேதரிஷிகள் போற்றினர். பின் அதையே அதிதி யென்றும் விஷ்ணு வென்றும் ருத்திர னென்றும் ப்ரம்மணஸ்பதி என்றும் இந்திரன் வாயு ஸூர்யன் அக்னி மித்திரன் வருணன் பூமி சிந்து என்றும் பல வகைகளிலே வணங்கினர்கள்.

தெய்வம் உண்டென்று எப்படி அறிந் தோம். உலகமிருப்பதாலே அறிந்தோம். தெய்வம் உயிர்; உலகம் அதன் வடிவம். உலகம் தெய்வந்தான். உலகத்துச் செய்கைகளெல்லாம் தெய்வத்தின் செய்கைகளே. உலகத்து நடைகளிலும் விதிகளிலும் தெய்வத்தை உணர வேண்டும்.

இந்த வழியறியாதோர் உலகத்திற்குப் பயப்படுகிறார்கள். இவ்வுலகத்தை விட்டுத் தப்பினல் இன்பமுண்டாகு மென்று நினைக்கிறார்கள். இதிலிருந்து பல்வேறு பிழைகளும் தொல்லைகளும் விளைகின்றன. இந்த உலகம் நாராயணனுடைய லீலை. அவன் தனது சக்தியுடன் விளையாடும் விளையாட்டு. சக்தி மார்க்கத்தில் இந்த உலகத்து ஞானம் அதிகப்பட வேண்டும். பராசக்தி தெய்வம். ஆத்ம ஞானத்தைக் காட்டும் நூல்கள் அவளுடைய வேதம். லௌகிக சாஸ்திரமும் அவளுடைய வேதந்தான். பௌதிக சாஸ்திரம் (சயன்ஸ்) சக்தி தர்மத்திற்கு முதலாவது வேதம்-வேதாரம்பம். ஸ்தூலத்தை அறிந்தாலொழிய ஸூக்குமத்தை நன்கு தெரிந்து கொள்ள முடியாது.

இகலோக ஞானத்தை இகழ்ச்சியாகப் பேசும் ஆத்ம சாஸ்திரம் பொய். உண்மையான ஆத்ம சாஸ்திரம் இகலோக ஞானத்தை வளர்க்கும். வான சாஸ்திரம் இல்லாத நாட்டில் ஞான வாசிட்டம் பயன் தரமாட்டாது. எந்த மதமும் ஆரம்பத்தில் லௌகிக ஞானத்தை இகழவில்லை.

எல்லாரும் கண்ணை மூடிக்கொண்டு எப்போதும் சிவனைத் தியானித்துக் கொண்டிருந்தால் சிவன் கோயில் கட்டியிருக்க முடியாது. ஒரு வேலையும் நடக்காது. கண்ணைத் திறந்து உலகக் காரியங்கள் செய்து கொண்டே சிவனையறிய முயல்வதுதான் சரியான ஞானம். எல்லா மதங்களிலும் இதுதான் உண்மை. உள்ளத்துறவுடன் இன்பங்களைத் துறந்திடுக என்று ஈசோப நிஷத்துக் கூறுகின்றது.

பராசக்தியை முதலாவது இவ்வுலகத் திலே கண்டு வணங்குதல் வேண்டும். நட்சத்திரங்கள் எல்லாம் அவள் விழிகள். தீயும் காற்றும் அவள் வேகம். மண் அவள் திருமேனி. இருப்பதெல்லாம் அவளுடைய கல்தார். அவளை இகத்திலே கண்டு போற்றி நலம் பெறவேண்டும். □

நன்றி — ஞானபூமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருஞ்சாந்தி விழா

பண்டித சிவஸ்ரீ இ. நவரத்தினக் குருக்கள்

ஊட்டுவோன் கருத்தை விசாரித்தறிப வர்கள் சமயிகள். சம்பந்தர் சமணர்களோடு வாதஞ் செய்யப் புகுமுன் திருவாலவாய் விரிசடைக்கடவுள் கோயில் சென்று "அத் தனே திருவாலவாய் அமண் சித்திரை அழிக்கத் திருவுள்ளமே" என்று கேட்டு இறைவனிடம் விடை பெற்றுச் சென்றார். சமயிகளும் இறைவன் உத்தரவின்றி எது வுஞ் செய்வதில்லை. அச்சமயிகள் சென்று வேண்டுமிடம் ஆலயம்.

ஆ+லயம் - ஆலயம், ஆக்களாகிய பசுக் கள் சென்று ஒடுங்குமிடமே ஆலயம் எனப் படும். பிரசாதம், தேவாயதனம், கோயில், நிகமம், கோட்டம் எனப்பல பெயர்களால் ஆலயம் அழைக்கப்படும். கம்பிகளில் மறைந் திருக்கும் மின் ஆற்றல் மின் குமிழ் மூலம் வெளிச்சம் தருவது போலவும் பசுவின் உடம்பெங்கும் செறிந்திருக்கும் பால் அதன் மூல மூலம் தருவது போலவும் எங்கும் நிறைந்திருக்கும் இறைசக்தி அவ்வாலயத் துள் எழுந்தருளியிருக்கும் உருவத்திருமேனி மூலம் வெளிப்படுகின்றது. அவ்வுருவத்திரு மேனி, அக்கினி மயமாயிருந்து குளிர்ந்த மலையிலிருந்து எடுக்கப்பட்ட கல்லைச் சிற்பி யானவர் செதுக்கி அங்க அமைப்புக்க ளோடு கொடுக்க ஆசாரியர் தனது ஆன்ம சக்தியினால் மந்திர வலுவேற்றி அமைக்கப் படுகின்றது. இதுவே பெருஞ்சாந்தி விழா எனப்படும். இதனைப் பெருங்குடமுழுக்கு, பிரதிஷ்டை, மகாகும்பாபிஷேகம் என்றெல் லாம் அழைப்பர். "பெருஞ்சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய்" என்று சம்பந்தர் தேவாரத்திலும் காண்க. இப்பெருஞ் சாந்தி செய்யும் முறைகளையும் உருவத்திருமேனியை எழுந்தருளச் செய்யும் ஆலய அமைப்புக் களையும் சிவாகமங்கள் விரிவாக எடுத்துக் கூறும். இக்கும்பாபிஷேக நிகழ்ச்சி ஒழுங்கு

Digitized by Noolaham Foundation.

முறைகளையும் அவற்றின் அடிப்படையான தத்துவக் கருத்துக்களையும் பின்வருமாறு காணலாம்.

முதலாவது வரித்தல்

அஃதாவது கும்பாபிஷேகத்தை நடத்தத்தக்க ஆசாரியரைத் தேர்ந்தெடுத்தல், மனித வாழ்வு பண்படைய, தக்க குரு ஒருவர் தேவை. அதுபோல இறைவனைப் பிரதிஷ்டை செய்யவும் தகுதிவாய்ந்த சிவாசாரியர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது முக்கியமாகும். நல்லொழுக்கம், ஆகம சாஸ்திர அறிவு, பக்தி, செயல் வன்மை என்பன ஆசாரியருக்கு இருக்க வேண்டும். தவ வலிமையாலும் நித்திய நைமித்திய பூஜை முறையாலும் உருவத்திருமேனியை தூய்மையாக நன்கு அலங்கரிப்பதாலும் விக்கிரகம் தெய்வசாந் நித்யம் பெறுகிறது. ''தார முங்குருவுந் தலைவிதி'' யென்பதாலும்

குருர் பிர்ம்மா குருர் விஷ்ணு குருர்
தேவோ மகேஸ்வர
குருர் சாக்ஷாத் பரப்பிர்ம்மம்
தஸ்மை ஸ்ரீகுரவே நம

என்பதாலும் சிவாசாரியாருடைய பெருமையும் அவசியமும் விளங்குகின்றது. இதுவே ஆசாரியா வரணம் எனப்படும்.

இரண்டாவது அனுமதி பெறல்

அஃதாவது ஆசாரியர் பாலாலயம் சென்று விநாயகரிடமும் மற்றுந் தேவர்களிடமும் தருணுலயத்திற் பிரதிஷ்டை செய்ய உத்தரவு பெறுதலாகும். விநாயகரிடம் பெறுதல் விநாயகர் அனுஜ்ஞை எனவும் இறைவனிடம் பெறுதல் தேவானுஜ்ஞை எனவும் படும். சிவாசாரியர்களிடமும் இவ்வனுஜ்ஞை பெறப்படும். இவர்கள் ஒழுக்கம் சீலம் மந்திரோச்சாடனம் கிரியைப் பயிற்சியுடைய பெரியோராதலின் இவர்களிடமும் இவ்வனுஜ்ஞை பெறப்பட வேண்டும். குழந்தை பிறந்தவுடன் தந்தையார் தங்கத்தைத் தேனிற்கலந்து அதன் நாவில் மந்திர வாழ்த்துக் கூறித் தடவுகின்றார். 'எல்லாத் தெய்வங்களும் உனக்கு நல்லறிவைக் கொடுக்கட்டும்' என்பதே அவ்வாழ்த்து. பின் பிரணவத்தைக் கூறி 'வேதாகமங்கள் மந்திரங்கள் கற்கத் தகுதியுள்ளவனவாய்' என வாழ்த்தித் தயிரை மைந்தனின் நாவில் தடவுகிறார். மேலும் இவை போன்ற கிரிகைகளால் தந்தையின் இந்திரியதோஷம் தாயின் கர்ப்ப வாச தோஷங்கள் நீங்கப் பெற்றுப் பரிசுத்தனாகின்றான். ஏழாம் வயதில் சமய தீட்சை பெற்றுப் பஞ்சாட்சர உபதேசம் பெற்று மந்திரங்கள் கற்கத் தொடங்குகிறான். அதனாலும் பரிசுத்தனாகிறான். பகவத் கீதையில் கண்ணன், 'உருவத்திருமேனியில் என்னை ஆவாகிக்கும் மந்திர உச்சாடன சிவாசாரியரிடத்தும் நானுறைகின்றேன்' என்கிறார். ஆதலின் சிவாசாரிய அனுஜ்ஞை பிரதானம் பெற்றது.

மூன்றாவது பிரார்த்தனை

எக்காரியத்தையும் நிறைவேற்ற – இடையூறு வராதிருக்க – விநாயகப் பெருமான் திருவருள் வேண்டுமாதலின் கணபதி ஹோமமும் இயற்கை உற்பாதங்கள் ஏற்படாது மங்களகரமாக நிறைவேற நவக்கிரக ஹோமமும் செய்யப்படும்.

நான்காவது சுத்திகரித்தல்

இது திரவியசுத்தி ஸ்தானசுத்தி ஆன்மசுத்தி பூதசுத்தி லிங்கசுத்தி எனப் பலவகைப்படும். மானிடர் தருமத்தின் வழி நின்று வாய்மையினில் ஊனமில் சீர்ப்பெரு வழியில் தேடிய பொருளைக் கொண்டே சிவதர்மஞ் செய்யவேண்டும். மணிவாசகனார் பாண்டியன் தேடி. குதிரை கொள்ளும் பொருட்டுக் கொடுத்த ஈனமில் ஏழெழு கோடிப் பொன்னையே திருப்பெருந்துறையில் சிவகர்மமாக்கினார் பிரதிஷ்டையாகிய சிவதர்மத்திற்கும் அவ்வாறு தேடிய பொருள் பல வழியாலும் வந்திருக்கும். அதை சிவாஸ்திர மந்திர ஜெபம் ஹோமம் முதலியன செய்து கும்ப நீரால் சுத்தமாக்கி பதினொரு பாகமாகப் பிரித்து. எஜமானிடம் கொடுப்பதே திரவிய சுத்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய் தேன் பழம் இவற்றில் ஆன்ம, வித்யா, சிவ தத்துவங்களைப் பூசித்து அவற்றை ஆசாரியார் புசித்தல் என்னும் மதுபாகக் கிரியையைச் செய்கிறார். அதனால் முற்பிறவியில் புத்தி பூர்வமாகவோ சிவநிந்தை, சிவசாஸ்திர நிந்தை, சிவனடியார் நிந்தைகள் செய்திருந்தால் அக்குற்றங்கள் நீங்கி ஆன்மா சுத்தியடையச் செய்வது ஆன்ம சுத்தியாகும். அத்துடன் பத்துவகையாக நீராடிப் புறச்சுத்தியையும் பெறுவதால் உடற்சுகம் பாவ நீக்கம் மன ஒருமை திரிகரண சுத்தியாகியவற்றையும் பெறுகிறார்.

நல்ல காரியங்களைச் செய்யப் புகும் போது தீயவர் தீயசக்திகளால் இடையூறு செய்ய முனையாதிருக்கும் பொருட்டு இரட்சோக்னஹோம சாந்தியைச் செய்கிறார். அக்கிராம வாசிகள் நோய் பிணி அகாலமரணம் வறுமை தீமையற்றவர்களாய் வாழ வேண்டுமென்று கிராம நன்மைக்காகக் கிராமசாந்தி செய்யப்படும். நான்கு திசைகளிலிருந்தும் வரும் தீய சக்திகளை அழிக்கும் ஆற்றல் மிக்க தேவர்களை வேண்டி திசாஹோமம் செய்யப்படும். அவ்வாறு தீய சக்திகளை நீக்கியபின் ஆலயத்தின் வெளி வீதியில் எட்டுத்திசைகளில் நின்றும் அமைதியைக் கெடுக்கும் இயக்கர் அரக்கர் பூதம் பிசாசுகள் பிரம்ம ராட்சசர் மகாகாளி சரளி வடுகர் ஆகிய எண்மருக்கும் பலிகொடுத்து நீங்கள் இவ்விடத்தை விட்டுநீங்கி மலையடிவாரம் காடு ஆற்றங்கரை பாலவனம் மயானம் ஆகிய இடங்களில் சென்று வசியுங்கள்; இங்கே இறைவனை எழுந்தருளச் செய்யப்போகிறோம் என்று ஆணையிடுவதாகிய பிரவேச பலி கொடுக்கப்படும்.

அதன்மேல் பிரம்மா இந்திரன் அக்கினி முதலாய அட்டதிக்குப் பாலகர் அவ்விடத்தே வந்து வசிக்கக் கூடியதாகப் பூமியைச் சுத்திகரிக்கும் பொருட்டு வாஸ்து சாந்தி செய்கிறார். அந்தகாசுரனுடைய வேர்வைத்துளி நிலத்தில் விழுந்து பெரும்பூதமாக, அவனுடன் போர் செய்த சிவபிரானின் கட்டளைப்படி அது அந்தகனுடைய இரத்தத்தைக்குடித்து இறைவனிடம் விரும்பிய வரங்களைப் பெற்று மூவுலகையும் கொடுமைப்படுத்தியது. தஞ்சம் புகுந்த தேவர்களுக்காக சிவபிரானால் உண்டாக்கப்பட்ட உருத்திரன் பாசங்களால் அப்பூதத்தைக்கட்டி பூமியில் வீழ்த்தப்பட்டதுவே வாஸ்துவாகும். இறைவன் பெருஞ்சாந்தி விழாவில் தேவர்கள் ஆலயத்தைச் சுற்றிலும் வந்திருந்து கலந்து கொள்ளவே இச்சாந்தி செய்யப்படுகிறது.

ஐந்தாவது யாகாரம்பம்

புண்ணிய பூமிக்குச் சென்று பூமி தேவியைப் பூசித்து வழிபட்டு பிரார்த்தனை முடித்து பூமிதேவியின் வயிற்றிலிருந்து மண் எடுக்கப்படுவது 'மிருத் சங்கிரகணம்' எனப்படும். இக்கிரியை படைப்புத் தத்துவத்தைக் குறிக்கும். படைப்புக்குரிய இடம் வயிறாகும். பாலிகை தெளித்து நவதானியங்களை அம்மண்ணுள் இட அவை அங்குரித்து நன்கு வளருவதால் தானிய வளர்ச்சி, படைப்புக்கள் வளர்ச்சியுண்டாகும். அப்போது பயிர் வளர்ச்சிக்குக் காரணனை சந்திரன் பூசிக்கப்படுகிறான்.

பின் சிவாசாரியர் பாலாலயம் சென்று அங்கிருந்து இறைவனை யாகசாலைக்கு அழைத்துச் செல்வதற்காகப் 'பிரசன்ன பிஷேகம்' செய்யப்படும். இறைவ! எங்கள் அழைப்பை ஏற்றுச் சகலகலா மூர்த்திகளோடும் யாகசாலைக்கு எழுந்தருள வேண்டும் எனப்பிரார்த்தனை செய்து கும்பத்தில் இறைவனை ஆவாகித்து 'கடஸ்தாபனம்' கலாகர்ஷணம் செய்து சகல வாத்தியங்களுடனும் வலமாக யாகசாலை சென்று தானிய பீடத்தில் வைக்கிறார். உருவத்திருமேனியிலிருந்து அருவுருவத்திருமேனியாகிய கலசத்தில் எழுந்தருளிய இறைவனை ஆறு தாரங்களையும் கடந்தவன் என்பதன் கருத்தாக - கூர்மாசனம் (நெல்), 2 அநந்தாசனம் (அரிசி), 3 சிங்காசனம் (கடலை), 4 யோகாசனம் (பயறு), 5 பத்மாசனம் (உழுந்து) 6 விமலாசனம் (எள்ளு) என்னும் ஆறுதாரங்களின்மேல் அமர்த்துகிறார். நிஷ்கள ரூபத்தில் உள்ளவரைச் சகளமாகப் பூசிக்கவேண்

Digitized by Noolaham Foundation.

டும். நிஷ்களத்தில் முறையே சாந்தியதீத கலை – சிரசு, சாந்திகலை – முகம், வித்தியா கலை – மார்பு, பிரதிஷ்டாகலை – குஹ்யம், நிவிர்த்திகலை – முழங்கால் பாதம், புவனத் துவா – தசை, தத்துவாத்துவா – என்பு இந் திரியங்களாகப் பாவிக்கப்படும். சகள மாகிய கும்பத்திலும் அப்படியே வஸ் திரம் – தோல், நூல் – நரம்பு, கடம் – தசை என்பு, நீர் – இரத்தம், உள்ளீடாகிய லோகம் – உயிர், மாவிலை தேங்காய் கூர்ச் சம் இவை முறையே தலையும் முடியுமாகப் பாவிக்கப்படும்.

ஆருவது பிம்பஸ்தாபனம்

பாலாலயத்திலுள்ள உருவத்திரு மேனியை எடுத்துச் சுத்தம் செய்து அலங் கரித்து வீதி, கிராமப் பிரதட்சணம் செய்து வந்து யாகசாலையில் சயனரோக ணத்தில் விடுவர். புதிதாகத் தாபிக்கப்பட வதாயின் சிற்பியைக்கொண்டு கண்திறத்த லாகிய (நயனோன் மீலனம்) கிரியை செய் விக்கப்படும். சிற்பி குருவின் கையிலிருந்து ஆயுதத்தைப் பெற்று உருவத்திருமேனி யைச் சுற்றித் திரையிட்டு முறையே நெற் றிக்கண் சூரிய சந்திர நேத்திரங்கள் வாய் மூக்கு காது கொப்பூழ் நகக்கண் ஆகிய வற்றை இறை சிந்தையோடு திறக்கிறார். திரை நீக்கும் போது அவ்வுருவத்திரு மேனிக்கு முன் பால் நெய் தேன் நெல் கண்ணுடி யானை குரு கன்னிப்பெண் தீபம் பசு எஜமான் பாஞ்சராத்திரிகம் என்ப வற்றை வைத்துத் தரிசிக்கச் செய்கிறார். அதனால் பசுச் செல்வம், தானிய வளர்ச்சி, இன்பவாழ்வு, வீர்யம், மனோபலம், வேதா கம நெறி, கற்பு, அறிவுச் சுடர், சிவதர் மம், பஞ்சகிருத்தியம் யாவும் நாட்டில் சிறப்பாக நிலவும் என்பதாம்

பின் பிம்பத்தைச் சலத்தில் மார்பள வுக்கு சக்தி வடிவமாயின் காதளவுக்கு– வைத்து விசேடபூஜை அபிஷேகம் ஆதி யன செய்வதை 'ஜலா திவாசம்' என்பர். ஒரு முகூர்த்தம் வரை விட்டு, பின் எடுத்து சுத்தமான தானியத்தைப் புண்ணியாக நீரினால் தெளித்து முன்கூறிய அளவு உரு வத்திருமேனியை அதனுள் வைத்து எட்டு விதமலரால் அதனை அர்ச்சித்து அதே அளவு காலம் விட்டு எடுத்து பிம்பசுத்தி செய்து வீதி கிராமப் பிரதட்சணம் செய் யப்படும். வலம்வந்த பெருமானுக்குக் கண் ஜோடு நீங்க ஆலர்த்தி செய்யப்படும். சயன ரோகணத்திலும் வைக்கப்படும். கண் திறத் தல் ஜலாதிவாசம் தானியவாசம் வீதிவலம் சயனரோகணம் இவ்வைந்தும் முறையே ஒவி உணவு நீர் காற்று வெளி ஆக இருக் கும் இறைவன் உயிர்களைக் காக்கிறான் என் பதற்காகச் செய்யப்படும். அருவமாகப் பஞ்ச பூதங்களில் வியாபித்துள்ள இறை வனை உருவத்திருமேனியில் வந்து சேரும்படி செய்யப்படும்.

சுபவேளையில் தூபிஸ்தாபனம் தீபஸ்தா பனம் யந்திரஸ்தாபனம் பிம்பஸ்தாபனம் முறையே செய்யப்படும். எட்டு வகைச் சரக் குகளைச் சேர்த்து இடித்துக் குழைவாக்கி அத னால் பீடத்துக்கும் பிம்பத்துக்கும் இணைப்பை உண்டாக்குவதே அஷ்டபந்தனம் எனப்படு கிறது. பீடபந்தம் இல்லாத மூர்த்திக்குச் செய்யப்படும் பூஜையாவும் பயனற்றனவாம். தர்ப்பையடிமண் புற்றுமண் நாவலடிமண் ஆலடிமண் வில்வத்தடிமண் துளசியடிமண் இவற்றைக் கலசத்திலிட்டு நீரால் நிறைத் தும் அரசு ஆல் அத்தி நாவல் மா இவற் றின் தளிரையும் பட்டையையும் இடித்து வேறோரு மண் கலசத்தில் இட்டு நீர் நிறைத்துப் பூசித்து ஆன்மவித்தியா சிவத் துவ வடிவங்களாக பிம்பத்துக்கு அபிஷே கிக்க வேண்டும்.

சிவாசாரியார் தமக்கும் எஜமானுக்கும் மூர்த்திக்கும் ரட்சாபந்தனம் செய்து கொண்டு யாக பூசையை ஆரம்பிப்பார். கும்பமாகிய அருவுருவத் திருமேனிக்கும் தருணாலயத்தில் வீற்றிருக்கும் உருவத்திரு மேனிக்கும் பஞ்சவர்ணநூல் அல்லது தருப்பைக் கயிற்றால் தொடர்புபடுத்தி விதி முறைப்படி ஹோமகுண்டத்தில் அக்கினியை உண்டாக்கி அக்குண்டத்தையும் கும்பத் தோடு தொடர்புறுத்துவர். ஆங்கு ஆகுதி செய்தபின் சுருக் சுருவத்துடன் நூலைத் தொட்டபடி தருணாலயஞ் சென்று பிம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தை பிரம்ம விஷ்ணு உருத்திர பாகங் களாகப் பிரித்துப் பூசித்து சுருக்சுருவத் தில் எஞ்சியிருந்த நெய்யை அவ்வப் பாகத்தில் விட்டு பரிசாகுதி எனப்படும் கிரியை மூன்று முறை செய்யப்படும். அரு வமான சிவாக்கினியில் ஹோமம் செய்து பரஞ்சோதியாகிய உருவத்திருமேனியில் எஞ் சிய நெய்யை விடுதல் யாகசாலையில் நிகழ்த்திய ஹோமப் பலன் முழுவதும் அருவமாயிருந்து உருவமான பிம்பத்தில் நின்று அருள் புரியட்டும் என்பதாகும்.

ஏழாவது கும்பாபிஷேகம்

யாகபூசை மூன்று ஐந்து ஆறு கால மாக நடைபெற்று இறுதியாக பூசை யிலே விசேட பூர்ணகுதி முடித்து தீபா ராதனைகள் செய்து யாத்திரா தானங் கொடுத்து வாத்திய கோஷங்களுடன் தூலலிங்க கும்பத்தை எடுத்துச்சென்று தூபி அபிஷேகம் நடைபெறும். அதன் பின் தருணலயத்தில் எழுந்தருளியுள்ள உருவத்திரு மேனிக்கு அருளமுதமாகிய கலசநீரினால் பெருங்குடமுழுக்காகிய மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

பாதாளத்திலிருந்து ஆகாயமளாவி அவனியெங்கும் வியாபித்து நிற்கும் மகாலிங்கத்தின் சிரசில் தேய்ந்து வளராத சந்திரன் விளங்குகிறான். அச்சந்திரனிலிருந்து அமுதநீர் இறைவன் சடாமகுடத்தின் மேல் பெருகிக் கொண்டேயிருக்கும் காட் சியே மகாகும்பாபிஷேகக் காட்சியாகும். ஐந்தெழுத்து மந்திரத்தை நடுநாயகமாக வுடைய ஸ்ரீமகாருத்திரத்தை ஓதிக் கொண்டு சிவாச்சாரியார் பெருங்குட முழுக்காட்டுவார். இயற்கையாகவே இறை வன் திருமுடியிலிருந்து இடைவிடாது அருளமுதம் பொழிய பூசை ஹோமங்க ளால் அருளமுதமாக மாறிய கலச நீரை அத்துடன் சேர்த்துச் செய்வதால் மகாகும்பாபிஷேகம் எனப்படும். சிவாசாரி யார் நிறைகுடம் தீபம் ஸ்வஸ்திகம் சங்கு இரட்டைச் சாமரை இடபம் கண்ணுடி சுமங்கலி கன்னிப்பெண் ஆகிய தசதர்ச னங்களை இறைவனுக்குக் காட்டித் தானும் தர்சிக்கிறார். இதன் மூலம் திருஷ்டிதோ ஷம் நீங்குகிறது.

எட்டாவது மகாபிஷேகம்

கும்பாபிஷேகத் துக் குப் பின் எள், நெய், கோசலம், கோமயம், பால், தயிர், நெய், இளநீர், பஞ்சாமிர்தம், தேன், கரும்பு பழவகை இவற்றால் இறை வனுக்கு அபிஷேகம் செய்யப்படும். இதுவே மகாபிஷேகம் ஆகும். இறைவன் அக்கினிக் கண்ணும் அக்கினிமயமுக முடையவர். அக்கினி தேவனுக்கு ஏழு நாக்கள் உள. அச்சிவாக்கினியில் மேற் கூறியவற்றை விசேட ஹோமமாகச் செய்து அமுத மயமாகிய கலச நீரால் அபிஷேகம் ஆகும். உருவத்திருமேனியிலே மறைந்திருக்கும் பரஞ்சோதியாகிய அக்கி னிக்கு ஆயிரம் நாக்களும் மகாபிஷேகத் தால் நிறைவுறுகிறது. 'அபிஷேகப் பிரியா சிவா; அலங்காரப் பிரியா விஷ்ணு' என் னும் மகாவாக்கியத்தின்படி மகாபிஷேகத் தால் சாந்தியுண்டாகிறது.

ஒன்பதாவது மண்டலாபிஷேகம்

நாற்பத்தைந்து நாட்கள் திரைபகுகிகம்– அஃதாவது மூன்றுபட்சம் தொடர்ந்து அபி ஷேகஆராதனைகள் நடைபெறும். பொருள் வசதிக் குறைவாலோ வேறு காரணங்க ளாலோ 20 நாள் அல்லது 10 நாள் தொடர் அபிஷேகம் நடைபெறலாம். நாற்பத்தைந் தாவதுநாள் சங்காபிஷேகமாக நடை பெறும். முற்கூறியபடி அபிஷேகப் பிரியன் சிவன் எத்தனை நாட்கள் அபிஷேகம் செய்யினும் அவருக்குப் பிரியமே. கும்பாபிஷேகத்தின் பின் மகாபிஷேகம் மண்டலாபிஷேகம் ஆகிய கிரியைகள் இறைவனின் திருவ ருள் நிறைவை உண்டுபண்ணுவனவாய் அமைந்தவையாகும். □

Digitized by Noolaham Foundation.

- பூமாலை
- சாத்துப்படி
- சப்பறம்
- மணவறை

வண்ண மலரில்
கை வண்ணம்
காண —

தேவாலங்காரக் கலையரசு
சி. பஞ்சாட்சரம்
இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்திற்கேற்ப

அழகிய கலைநயமிக்க

22 கறற் 21 கறற் 20 கறற்

தங்க நகைகளை

ஆடர் செய்து பெற்றுக்கொள்ள

அன்புடன் அழைக்கின்றோம்

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

வரையறுக்கப்பட்ட (தனியார்) நிறுவனம்

111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.

லலிதா பஞ்சரத்தினம்

பேராசிரியர் வி. சிவசாமி
தலைவர், சமஸ்கிருதத் துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,

இறைவனை உருவமாகவும், அருவமாகவும், அருவுருவமாகவும் வழிபடும் முறை இந்து சமயத்திலே நெடுங்காலமாக நிலவி வருகின்றது. குணம் குறியற்ற பரம் பொருளை ஆணாகவும், பெண்ணாகவும் வழிபடும் தன்மை குறிப்பிடற்பாலது. அருவமாக இலங்கும் பரம்பொருளுக்கு உருவமும், குணவியல்புகளும் பிறவும் அளித்து, அப்பரம் பொருளைச் சகுணமாக வழிபடலாம்; உருவமோ, குணம் குறி இன்றி இலங்கும் பரம்பொருளாக — நிர்குணமாகவும் அவரை வழிபடலாம். இவ்வாறு சகுணமாக வழிபடும் பரம்பொருள் சிவன், சக்தி, விநாயகர், முருகன் முதலிய பல்வேறு நாமங்களைப் பெறும். இப்பரம் பொருளை அன்னையாக, இறைவியாக வணங்கும் போது, அவருக்குப் பல நாமங்கள் உள்ளன. இந்நாமங்களில் ஒன்றே லலிதா என்பதாகும். இச் சொல் அழகு, மென்மை, இனிமை முதலிய பொருட்படும், அம்பிகை லலிதாவாக, லலிதா மஹாதிரிபுரசுந்தரி எனவும் வழங்கப்படுகிறாள். உலகமாதாவாகிய அம்பிகை தாய்க்குரிய அன்புருவமாக மட்டுமன்றி மூவுலகிலுமே மிகச் சிறந்த அழகியாகவும் திகழ்கின்றாள். பரம் பொருளை ஆணாகவோ பெண்ணாகவோ குறிப்பிடும்போது, மிகச் சிறந்த பண்புகள் நிறைந்தவராகவும் அவரைக் குறிப்பிடுதல் வழக்கமாகும். 'பார்க்குமிடந்தோறும் நீக்கமற' விளங்கும் பரம்பொருளை அன்னையாக வழிபடும் முறை மிகத் தொன்மையானது, எகிப்து, மெசொப்பொத்தேமியா, இந்தியா, கிரீற் முதலிய நாடுகளிலே நிலவிய புராதன நாகரிகங்களிலே தாய்த் தெய்வவழிபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு நிலவிற்று; இந்தியாவிலே தொடர்ந்து இன்றும் நன்கு நிலவுகின்றது.

தாய்த் தெய்வ வாழிபாடு மக்களை எளிதிற் கவரும். தாயின் இயல்பான அன்பும், தன்னலமற்ற தன்மையும் குறிப்பிடற் பாலன இதே உயர்ந்த பண்புகளும், பிறவும் தாய்த் தெய்வத்திடம் உள்ளதை உணர்ந்து உயிர்கள் அவ்வன்னையிடம் அயராத அன்புகொள்ளுவன. இதன் விளைவாக அம்பிகைபற்றிய பெருந்தொகையான தோத்திரங்களும் புகழ்மாலைகளும் தோன்றியுள்ளன.

இன்று நடைமுறையிலுள்ள கலியுகத்திலே பக்திமூலம் பரம்பொருளைப் பரவுதலே மிகச் சிறந்த உபாசனை எனக் கூறப்படுகின்றது. எனவே பக்திபூர்வமான தோத்திரங்கள்-தெய்வீகப் பாமாலைகள் பல, காலம் தோறும் எழுந்துள்ளன. இப் பாமாலைகள் உள்ளடக்கியிருக்கும் செய்யுட்களின் எண் அடிப்படையிலே பஞ்சரத்தினம், அஷ்டகம், சதகம் எனப்பலவாறு அழைக்கப்படும். இத்தகைய தோத்திரங்களில் ஒன்று தான் **லலிதா பஞ்சரத்தினம்** ஆகும். இதனை ஆதிசங்கரரே அம்பாள் மீது பாடியுள்ளார் எனக் கூறப்படுகின்றது. பாரத தேசத்திலே வேதாந்ததத்துவத்தை மீண்டும் நிலைநாட்டிய சங்கராச்சாரியர், இந்து சமயத்தின் உட்பிரிவுகளாகிய ஷண்மதங்களையும் நிலைநாட்டிய மேதையாவர். தத்துவஞானி சமயஞானியாக விளங்குவது இந்து மரபிற்கு ஏற்புடைத்தே.

பரப்பிரம்மமாக மிளிரும் அன்னையாகிய லலிதா மகாதிரிபுரசுந்தரி இரக்கமுடையவள். 'அன்பே சிவம்' என ஆன்றோர் கூறுவர். சிவனின் திருவருள் சக்தியாகிய அம்பிகை மூலமாகவே ஆன்மாக்களை வந்தடைகின்றது; காக்கின்றது; அழியா நிலைக்குக் கொண்டு செல்கின்றது. அம்பிகைக்கு லலிதா எனும் பெயர் வரக் காரணம் கூறப்படுகின்றது. அதாவது, ''லக்ஷ்யத்துவாத் ஸர்வித்யானும் லிங்கஹீனதயாஸ்திதே! தாரகத்துவாத் பவாம்போதே லலிதேதிப் ரகீர்த்யதே'' (அறிவியல் அனைத்துக்கும் லட்சியமாகவும், ஆண், பெண், அலி எனும் லிங்கவேறு அற்றதாயும், பிறவிப் பெருங் கடலில் உழல்பவர்களுக்குத் தாரகமாயும் (அதாவது படகு போன்று காப்பாற்றுவதாயும்) இருப்பதால், பரம்பொருள் லலிதா எனும் பெயரால் அழைக்கப்படுகிறது) என்பதாம். மேலும், லலனம் செய்வதால் லலிதா என்ற பெயர் உண்டாயிற்று எனவும் கூறப்படுகின்றது. 'லலனம்' எனில் செல்லமாக விளையாடுதலாம். அம்பிகை பிரபஞ்சமனைத்தையும் கடந்தவளாக விளையாடுகிறாள். எனவேதான், சதாசிவ பிரமேந்திரர் எனும் ஞானி ''கேலதி பிரஹ்மாண்டே. கேலதி பிண்டாண்டே'' எனப்பாடியுள்ளார்.

அம்பிகையின் பேரழகுச் சிறப்பு லலிதா சஹஸ்ரநாமாவளி, லலிதா திரிசதி, லலிதா அஷ்டோத்தர சதநாமாவளி முதலியனவற்றிலே நன்கு பரவலாகக் கூறப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, சாருரூபா, மஹாலாவண்ய சேவதி, சர்வாபரண பூஷிதா, கோமளாகாரா, காந்திமதி, சோபனா, சர்வவர்ணோபசோபிதா, திவ்யவிக்ரஹிகா, கோமளாங்கி முதலியன குறிப்பிடற்பாலன.

இத்தகைய அருட்பேரழகியினைச் சிறப்பித்துக் கூறும் லலிதா பஞ்சரத்தினம் பற்றிக் கூறுமுன், பஞ்சரத்தினம் பற்றிச் சிறிது குறிப்பிடலாம். பஞ்சரத்தினம் பொதுவாக ஐந்து பாடல்களிலே, கூறும் தெய்வத்தின் சிறப்பியல் புகளையும், ஆறுவது செய்யுளிலே பல சுருதியையும் (இதைப் படிப்பதன் பலனையும்) கூறும். ஐந்து மணிகளினாலான மாலை போன்று, ஐந்து செய்யுட்களினாலான பாமாலையாக இது இலங்குகின்றது. மேலும், ஐந்து என்ற எண் நன்கு குறிப்பிடற்பாலது. சிவனுக்குரிய பஞ்சாக்ஷரம் ''நமச் சிவாய'' சக்திக்குரிய ''நமப்பார்வத்யை'' ஆகியன ஐந்து எழுத்துக்களைக் கொண்டவை. சிவபெருமானின் ஐந்து திருமுகங்கள், பிள்ளையாரின் ஐந்து திருமுகங்கள் முதலியன சுவனிந்தற்பாலன. கர்நாடக இசையின் பெரிய மேதையாகிய தியாகராஜ சுவாமிகள் பஞ்சரத்தினக்கீர்த்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை இயற்றியுள்ளார்; கோபலகிருஷ்ண பாரதியார் தமிழிலே பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் பாடியுள்ளார். மேலும், அம்பா பஞ்சரத்தினம், கணேச பஞ்சரத்தினம், சுப்ரஹ்மண்ய பஞ்சரத்தினம், மீனாக்ஷி பஞ்சரத்தினம் போன்ற பஞ்சரத்தின ஸ்தோத்திரங்களும் வடமொழியிலுள்ளன.

லலிதா பஞ்சரத்தினம் சிறியதாயினும், மயத்துவக் கருத்துக்களும் கவிதை நயமும், இசைநயமும் ஒருங்கே கொண்டிலங்குகின்றது. இதனை முழுமையாகப் படிக்கும்போது, அல்லது கேட்கும்போதும், ஒரு குழந்தை தாயினைப் பார்த்து மகிழ்வுறுவதும், பின் தாயின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறுவது போன்றதுமான அநுபவம் ஏற்படலாம். இங்கு பரம்பொருள் (இறைவி)-ஆன்மா தொடர்புகள் மிக நெருக்கமான, இயல்பான அன்புப்பாசத்தாலானவையாகக் காணப்படும். காலையில் அம்பாளை -லலிதாம்பிகையினைப் பக்தன் வழிபடுதல் தன்மையிலே கூறப்படுகின்றது.

முதலாவது செய்யுளிலே பக்தன் அம்பாவின் திருமுகத்தினைத் (தாயின் திருமுகத்தினைப் போன்று) காலையிலே தியானிப்பதான தன்மையிலே கூறுகின்றான். அம்பாளின் தாமரை போன்ற மலர்ச்சியான திருமுகம், கொவ்வைக் கனிபோன்ற அதரம், பெரிய முத்துப் பதித்த மூக்குத்தியணிந்த மூக்கு, காதளவோடிய கண், மணிகள் பதித்த காதணிகள், புன்னகை, கஸ்தூரி நிலகமிட்ட அழகிய திருநெற்றி முதலியன கவிநயத்துடன் வர்ணிக்கப்படுகின்றன. பேரழகியாம் அன்னையின் பேரழகுச் சிறப்புக்கள் இவ்வாறு கேசாதி பாதமாக வருணிக்கப்படுகின்றன. பொதுவாக இறைவன் அல்லது இறைவி பற்றிய வருணனை பாதாதி கேசமாக இருக்கும். ஆனால் இங்கு அது எதிர்மாறாக அமைந்துள்ளது. குழந்தை எப்பொழுதும் தாயின் முகத்தையே முதலிற் பார்க்கும். உலக அன்னையாம் லலிதாம்பிகையின் திருமுகத்தையே பிள்ளையாகிய ஆன்மா முதலில் உற்று நோக்கும். இது இயல்பான அன்பின் விளைவே. அச்சமோ பயக்கமோ இல்லை.

இரண்டாவது செய்யுள் தொடர்ந்து அம்பாளை வருணிக்கின்றது. நெற்றித் திலகத்துடன் நின்றுவிடாது திரிபுண்டரமாக அணிந்துள்ள திருநீற்றுச் சிறப்பு இச் செய்யுளிலே கூறப்படுகின்றது. அம்பாளின் திருக்கரங்களில் இலங்கும் பொருட்கள், குறிப்பாக ஆயுதங்கள், பக்தனின் கவனத்தை ஈர்க்கின்றன. கரும்பு, வில், புஷ்பம், பாணம் முதலியன குறிப்பிடற்பாலன. மேலும் திருக்கரங்களிலுள்ள தங்கக் காப்புகள், தோள்வளைகள், தளிர்போன்ற திருக்கரங்களிலுள்ள மணிகள் பதித்த மோதிரங்கள் கவனித்தற்பாலன. மேற்குறிப்பிட்ட ஆயுதங்கள் ஆன்மாக்களைப் பற்றியிருக்கும் மலங்கள், பாவங்களாகிய அசுரர்களை அழிப்பன. எனவே, எவரும் அஞ்சத்தேவையில்லை. அழகுக்கு அழகு செய்வது போல சில ஆபரணங்கள் பேரழகியாம் அம்பாளை அழகு செய்கின்றன. இவ்வாறு வருணித்து அம்பாளின் கற்பகக் கொடி போன்ற புஜங்களை ஆசிரியர் தியானிக்கிறார். அதாவது, அம்பாள் தம்மைக் காப்பாற்றி உய்விப்பாள் எனும் அசையாத நம்பிக்கை அவருக்கு உண்டாகின்றது.

மூன்றாவதாக அம்பாளின் திருவடிச் சிறப்பினை ஆசிரியர் வருணிக்கிறார். தாமரை, அங்குசம்துவஜம், (கொடி) சக்கரம் முதலிய (சாமுத்திரிகா) லக்ஷணங்கள் அம்பாளின் திருவடியில் உள்ளன. இத்தகைய சிறப்பு வாய்ந்த திருவடியினையே பிரமா முதலிய தேவர்கள் பூசித்து நன்மை பெறுகின்றனர். இத்திருவடிகளை அன்பர்கள் விரும்புவனவற்றை விரும்பியவாறு வழங்குவதில் ஈடுபாடுள்ளவை; சம்சாரச் கழற்சியெனும் பெருங்கடலுக்குத் தெப்பமாக விளங்குபவை. இப்பெயர்ப்பட்ட பெருமை வாய்ந்த அன்னையின் தாமரைபோன்ற திருவடிகளை ஆசிரியர் காலையிலே தியானிக்கிறார். அம்பாள் ஆன்மாக்களுக்குத் தமது திருப்பாதங்கள் மூலமாகவே திருவருள் பாலிக்கிறாள். எனவே, இத்திருவடிகளின் மகத்துவத்தினை வருணிக்க முடியாது. எனவே தான் "நின்னிற் சிறந்தவை நின் தாளினைகள்" என முருகப்பெருமானைப் பார்த்து ஒருபுலவர் பரிபாடலிலே கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளமை நினைவுகூரற்பாலது. மேலும் அம்பாளின் திருவடிகள் பிறவிக்கடலைத் தாண்டுதற்கான ஒரு தெப்பம் எனும் கருத்து இந்த நூற்றாண்டிலே வாழ்ந்த பாவநாசம் சிவன் எனும் இசையாசிரியரின் கீர்த்தனையிலே ''பாவசாகர நாவல்'' என வந்துள்ளமை ஒப்பிடற்பாலது. இவ்வாறு இம் மூன்றாவது செய்யுளிலே கவிநயமும் உள்ளது.

முதல் மூன்று செய்யுட்களிலும் அம்பிகையின் தோற்றச் சிறப்புகளைத் தாயின் சிறப்புக்களைக் கூறுவது போலக் கூறி வணங்குவதாகக் குறிப்பிட்ட ஆசிரியர், தொடர்ந்து வரும் நான்காம் செய்யுளிலே அப்பிராட்டியினைத் துதிக்கிறார்; மகத்துவத்தை எடுத்துரைக்கிறார். ''மேலான மங்கள சொரூபிணியாகவும் தான்தோன்றீஸ்வரியாகவும் (அல்லது சிவனுடைய பிரியபத்தினியாகவும்) மிளிரும் அம்பாள் வேதாந்தத்தால் அறியப்படும் சிறப்புடையவள்; கருணைக் களஞ்சியமாக விளங்குபவள்; பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தினதும் ஆக்கம், பாதுகாப்பு, அழிவு ஆகியனவற்றிற்குக் காரணமாவள்; சகலவித்தைகளுக்கும் தலைவி; வேதம், மனம், வாக்கு ஆகியனவற்றிற்கு அதிதூரத்திலுள்ளவள், அதாவது எட்டாதவள்'' என்றிவ்வாறு ஆசிரியர் அம்பிகையின் பெரும் சிறப்புக்களைக் குறிப்பிடுகிறார். சகல உலகிற்கும், அறிவியல்களுக்கும் மூலகாரணமாக விளங்கும் அம்பிகை ஆன்மாக்களிடத்துக் கொண்டுள்ள ஈவிரக்கம் ஒப்பற்றது. கருணைக்கடலாக விளங்கும் அம்பிகையின் சிறப்பு சாலப்பெரிதே.

தொடர்ந்து ஐந்தாவது செய்யுளிலே அம்பிகையின் சில திருநாமங்களை ஆசிரியர் கூறி, அவளை வழுத்துகிறார். இவை ''புண்ணியநாமங்கள்'' என விளி வேற்றுமையிலே லலிதே காமேஸ்வரி, கமலே, மஹேஸ்வரி, ஸ்ரீசாம்பவி, ஜகதாம் ஜனனி, பரே, வாக்தேவி, திரிபுரேஸ்வரி என்பனவாம். இவை முறையே பேரழகியே, பேரின்பத்தின் அல்லது பல்வேறு இன்பங்களின் தலைவியே, தாமரை மலர் போன்றவளே, பெரிய இறைவியே, அருள்மிகு சிவபிரானின் நாயகியே, பிரபஞ்சத்தின் தாயே, மேலானவளே, வாக்கிற்குத் தெய்வமே, மூவுலகங்களுக்கும் தலைவியே எனப் பொருள்படும். இவற்றை விட வேறு சில விளக்கங்களும் உண்டு. இவையாவும் அம்பிகையின் பல்வேறு சிறப்புகளையும், பெருமையினையும் புலப்படுத்துவன.

இறுதியாக உள்ள ஆறாவது செய்யுளிலே இப்பஞ்சரத்தினத்தினைக் காலையிலே படிப்பவர் பெறும் பலன்களை ஆசிரியர் நன்கு சுட்டிக் காட்டுகிறார். லலிதாம்பிகை பற்றிய புனித பாடல்கள் அடங்கிய பஞ்சரத்தினத்தை சௌபாக்கியதம் (மங்களத்தைத் தருவது), அதி லலிதம் (மிக இனிமையானது) என அவர் வருணிக்கின்றார். இவ்வாறு குறிப்பிட்டு. இதனைக் காலையிலே படிப்போர் முன்னிலையில் அம்பிகை திருவுருவத்துடன் உடனடியாகவே தோன்றி கல்வி, செல்வம், பரந்த நன்மை, எல்லையற்ற கீர்த்தி அனைத்தினையும் வாரி வழங்குவாள் எனக்கூறி இதனை நினைவுபடுத்துகிறார். எனவே இதனைக் காலையிலே தவறாது படிப்போர் இக, பர நன்மைகளை இனிதே பெறுவர் என்பது திண்ணம்.

ஒவ்வொரு பாடலிலும் லலிதா எனும் திருநாமம் வருகின்றது. ஆசிரியர் தாம் கூற வந்த கருத்துக்களை ஆற்றொழுக்காகக் கம்பீரமான நடையிலே கூறிக் கொண்டு செல்லுகின்றார். லலிதாம்பிகா வடிவிலான சக்தி தத்துவத்தினை ரத்தினச் சுருக்கமாக ஆசிரியர் கூறியுள்ளார். அதே வேளையில் அம்பாள் எங்கோ ஆன்மாக்களுக்கு அப்பாற்பட்ட சக்தியாகவன்றித் தாயாகவே தன்னலமின்றிச் சேய்களாகிய ஆன்மாக்களின் ஈடேற்றத்தில் என்றும் ஈடுபாடுடையவள்; எனவே ஆன்மாக்கள் எவ்வித அச்சமுமின்றி அவளை அணுகி அருள் பெற்று அழியா வாழ்வினை அடையலாம்' என்பதும் இங்கு கூறப்பட்டுள்ளது. ஆசிரியர் சொற்களை நன்கு தேர்ந்தெடுத்தே பொருத்தமாகக் கையாண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலுள்ள செய்யுட்களிலே 'வதனரவிந்தம்' (தாமரை முகம்). பிம்பாதரம் (கொவ்வைக் கனி உதடு), புஜகல்பவல்லீ (கற்பகக் கொடிபோன்ற புஜங்கள்) அங்குலி பல்லவ' (தளிர் விரல்கள்), சரணரவிந்தம் (தாமரைத் திருவடி), பவசிந்துபோதம் (பிறவிக் கடலுக்கான தெப்பம்) முதலிய உருவகங்கள் வந்துள்ளன. கற்பகக்கொடி எனும் சொற்றொடரிலே அம்பிகை அன்பர் வேண்டுவனவற்றையெல்லாம் உடனடியாகவே உவந்து அளிப்பாள் எனும் கருத்துப் புலப்படுகின்றது.

''விஸ்வஸ்ய ஸ்ருஷ்டி விலயஸ்திதி ஹேதுபூதாம்'' பரசிவா, 'பரா போன்ற சொற்கள், சொற்றொடர்கள் அம்பாள் முழுமுதற் கடவுள் என்பதை வலியுறுத்துவன. அதே வேளையில், பேரழகியாம் லலிதாம்பிகையின் பேரழகு மிகச் சுருக்கமாக அழகுற முதல் மூன்று செய்யுட்களிலும் நன்கு எடுத்துக் கூறப்படுதல் குறிப்பிடற்பாலது.

இதிலுள்ள ஓசைநயமும் கவனித்தற்பாலது. அனுப்பிராசம் அங்குமிங்கும் வந்துள்ளது. எடுத்துக்காட்டாக, ''பக்தேஷ்டதான பவசிந்து போதம்'' ''ரத்னங்குலீயலஸதங்குலிபல்லவாட்யாம்'' போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

ஏனைய பல தோத்திரங்களைப் போலவே இதுவும் இசை நயம் கொண்டிலங்குகின்றது. கர்நாடக இசையிலிது காலைக்குரிய பூபாளம், பந்துவராளி, பைரவி முதலிய ராகங்களிலும், மிச்ரசாபு தாளத்திலும் பாடப்படும். கேட்போர், படிப்போர் ஆகியோரின் கவனத்தை ஈர்க்கவல்ல நேர்த்தியான தோத்திரங்களில் இதுவும் ஒன்றாகும்.

இக்கட்டுரையினை குறிப்பிட்ட பஞ்சரத்தினம் இன்றி நன்கு புரிந்து கொள்ள முடியாது. எனவே, அது தமிழ்லிபியிலே தரப்பட்டுள்ளது:

ப்ராதஹ ஸ்மராமி லலிதா வதனரவிந்தம்
பிம்பிபாதரம் ப்ருதுல மௌக்திகசோபிநாசம்
ஆகர்ண தீர்க்க நயனம் மணிகுண்டலாட்யம்
மந்தஸ்மிதம் ம்ருகமதோஜ் ஜ்வலபாலதேசம் (1)

ப்ராதர் பஜாமி லலிதாபுஜ கல்பவல்லீம்
ரத்னங்குலீயல சதங்குலி பல்லவாட்யாம்
மாணிக்ய ஹேம வலயாங்கத சோபமானம்
புண்ட்ரேக்ஷுசாப குசுமேக்ஷுச்ருணீர்ததாணம் (2)

ப்ராதர் நமாமி லலிதா சரணரவிந்தம்
பக்தேஷ்டதான நிரதம் பவசிந்துபோதம்
பத்மாசனாதி சுரநாயக பூஜநீயம்
பத்மாங்குசத்வஜ சுதர்சன லாஞ்சனாட்யம் (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ராதஹ் ஸ்துவே பரசிவாம் லலிதாம்பவானீம்
த்ரய்யந்த வேத்யவிபவாம் கருணவத்யாம்
விஸ்வஸ்ய ஸ்ருஷ்டி விலயஸ்திதி ஹேதுபூதாம் (4)
வித்யேஸ்வரீம் நிகமவாங்மனஸாதி தூராம்

ப்ராதர் வதாமி லலிதே தவபுண்ய நாம
காமேஸ்வரீதி கமலேதி மஹேஸ்வரீதி
ஸ்ரீசாம்பவீதி ஜகதாம் ஜனனீ பரேதி
வாக்தேவதேதி வசசாத்ரி புரேஸ்வரீதி (5)

யஹ ஸ்லோக பஞ்சகமிதம் லலிதாம்பிகாயாஹ
சௌபாக்யதம் சுலலிதம் படதி ப்ரபாதே
தஸ்மை ததாதி லலிதா ஜடிதி ப்ரஸன்ன
வித்யாம் ச்ரியம் விபுலசௌக்யமனந்த கீர்த்திம் (6)

[குறிப்பு:- சமஸ்கிருத ஒலிகளை உள்ளவாறே இங்கு எழுதமுடியாதுள்ளது என் பதைக் கட்டுரையாசிரியர் குறிப்பிட விரும்புகிறார்.] □

சரணம் சரணம்

துர்க்கா சரணம் சரணம் தாயே
துர்க்கா சரணம் சரணம்
தேவி சரணம் சரணம் தாயே
தேவி சரணம் சரணம்
அம்மா சரணம் சரணம் தாயே
அம்மா சரணம் சரணம்
ஆத்தாள் சரணம் சரணம் — தாயே
ஆத்தாள் சரணம் சரணம்.

Digitized by Noolaham Foundation.

கும்பாபிஷேகம் சிறப்புறத்

தவளக்கிரி அம்பாள்

திருவருள் பாலிப்பாளாக!



பொன்மலர் ஸ்ரோர்ஸ்

அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார் அனைவர்க்கும் அம்பாள்
அருள்பாலிப்பாளாக !

சித்த வைத்தியம் செழித்தோங்க
அம்பாள் அருளுவாளாக !

ஷக்கிரு மருந்துச்சாலை
23, காங்கேசன்துறை வீதி
சுன்னாகம்.

டாக்டர் கந்தையா தவராஜா
சித்த மருத்துவப் பண்டிற் (மதுரை)
பதிவுபெற்ற ஆயுர்வேத வைத்தியர்
பிரதான வீதி
தெல்லிப்பளை.

அம்பாள் கிருபை அனைவர்க்கும் பொலிக !

அளவெட்டியில் முதல் முதல் தோன்றிய

புத்தகசாலையும் அச்சகமும்

42

வருடச் சேவை

மொழியரசி அச்சகம்

அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானபோதத்திற்கு முன் சைவசித்தாந்தம்

வை. கா. சிவப்பிரகாசம், எம். ஏ. [கல்வி] எம். ஏ. [தமிழ்]

I

1. 0 உலகப் பண்பாட்டுக் கருவூலத்திற்குத் தமிழ்ச்சிந்தனையாளர்கள் வழங்கிய பங்களிப்புக்களில் தலைசிறந்த ஒரு மணியெனச் செக்கோசிலாவியத் தமிழறிஞர் கமில் சுவலபில் விதந்து கூறுவது சைவ சித்தாந்தக் கோட்பாடு ஆகும். இச்சைவசித்தாந்தக் கோட்பாட்டை எடுத்துக் கூறும் சாத்திர நூல்கள் மிகப்பல தமிழிலுள்ளன. அவற்றுள் 'மெய்கண்ட சாத்திரம்' என்று சிறப்பித்துக் கூறப்படும் நூற்றிருகுதி சைவசித்தாந்தக் கோட்பாட்டின் அருங்கலைச் செப்பு என்று மதிக்கப்படுகின்றது. முதன் முதல் 1866 இல் சைவசித்தாந்த நூற்றிருகுதியை ஒருசேர அச்சிட்ட மதுரை நாயகம் பிள்ளை என்னும் பதிப்பாசிரியர் மெய்கண்ட சாத்திர நூல்களின் பெயர்களைச் சுருங்கக் கூறும்-

"உந்தி களிறே உயர்போதம் சித்தி
பிந்திருபா உண்மை பிரகாசம் – வந்த அருட்
பண்புவினு போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று"

என்னும் எந்த ஏட்டிலுமில்லா நினைவூட்டிப் பாடலைத் தமது பதிப்பில் அச்சிட்ட காலம் தொடக்கம் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு என்ற தொகைவரையறை தமிழிலக்கியவுலகில் நிலைபெற்று விட்டது.

1. 1 இம் மெய்கண்ட சாத்திரங்கள் என்னும் தொகுதியிலுள்ள பதினான்கு நூல்களில் பன்னிரு நூல்களைப் புறச்சந்தான குரவர் நால்வரில் மெய்கண்டார், அருணந்தி சிவம். உமாபதி சிவம் என்னும் மூவரும் மனவாசகங்கடந்த தேவரும் இயற்றியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தில் கி. பி. 13, 14 ஆம் நூற்றாண்டுகளிற் படைக்கப்பட்டன. இத்தொகுதி பதினென்கி ழுள்ள மற்றைய நூல்களில் திருவுந்தியார் என்னும் சிறப்பிலக்கிய வடிவநூல், திருவிய ழூர் உய்ய வந்த தேவநாயனராலும் திருக் களிற்றுப்படியார் என்னும் அநுபூதி விளக்கநூல் அவரின் சீடரின் சீடரான திருக் கடவூர் உய்ய வந்த தேவ நாயனராலும் கி. பி. 12ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டன, இவை யிரண்டுமே மெய்கண்ட சாத்திரங் கள் பதினங்கிற் காலத்தால் முற்பட்டன.

1. 2. மெய்கண்டார் அருளிய சிவஞான போதம் சைவசித்தாந்தக் கோட்பாட்டு உண் மைகளைத் தருக்க முறையில் சூத்திர வடிவிற் கோவைப்படுத்தி இயல் என்னும் பிரிவுக ளிற் கூறுகின்றது. ஆயின் அதற்கு முற் பட்ட காலத்தில் தோன்றிய நூல்களான திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், என்பன அவ்வுண்மைகளை மெய்யுணர்வு அநுபவவெளிப்பாட்டு முறையில் பாவகை வடிவிற் பொருள் இயற் பாகுபாடுகள் இல் லாமற் கூறுகின்றன. சிவஞான போத காலச் சைவ சித்தாந்தக் கோட்பாட்டு விளக்க முறைக்கும் அதற்கு முற்பட்டகாலச் சைவ சித்தாந்தக் கருத்து வெளிப்பாட்டு முறைக் கும் இடையே காணப்படும் வேறுபாடுகளின் தன்மைகளை இந்நூல்கள் மூலம் தெளிவாய்ப் புரிந்து கொள்ளலாம்

1. 3 உதாரணமாக திருவியலூர் உய்ய வந்த தேவநாயனர் ஞான விசாரணையின் தன்மையை உந்தி பறத்தல்' என்னும் விளை யாட்டு அநுபவ வெளிப்பாட்டு முகமாக-

"அது இது என்ன தனைத்தறிவாகும்
அது இது என்றறிந் துந்தீ பற
அவிழ்ந்த சடையாரென் றுந்தீபற" (39)

என்று 'ஓதற் கெளிதாய் உணர்தற் கரி தாய்' கூறுகிறார்.

1. 4 இதனையே அவரின் சிந்தனைப் பரம் பரையில் வந்த திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனர்-

"அதுவிது வென்றும் அவனனே என்றும்
அதுநீயே யாகின்றாய் என்றும் – அது
வானேன்
என்றும் தமையுணர்ந்தார் எல்லாம்
இரண்டாக
ஒன்றாகச் சொல்லுவரோ வுற்று" (85)

என்னும் வெண்பாவில் விளக்க முற்பட்டு-

"சிவனெனவே தேறினன்யான் என்ற
மையால் இன்றும்
சிவனவனி வந்தபடி செப்பில்-அவனிதனில்
உப்பெனவே கூர்மை யுருச் செய்யக்
கண்டமையால்
அப்படியே கண்டாய் அவன்" (91)

என்னும் வெண்பாவில் தமது விளக்கத்தை ஒருவாறு பூர்த்தி செய்கிறார்.

1. 5 ஆயின் உய்ய வந்தார் இருவருக்கும் பிற்பட்டவரான மெய்கண்டார் ஞானவிசா ரணையின் தன்மையைத் திட்ப நுட்பமாக-

"உணருகு வசத்தெனி னுணரா திண்
ணிலையி
லிருநிற னல்லது சிவசத்தாமென
விரண்டு வகையி னிசைக்குமன்னுலகே"
(ஆறுஞ்சூத்திரம்)

என்னும் சூத்திர வடிவில் ஆழந்த சிந்த னைக்குச் சமர்ப்பிக்கிறார்.

'தத்துவ மசி' என்னும் வேதாந்த மகா வாக்கியம் கூறும் ஞானவிசாரணையின் தன் மையைச் சைவசித்தாந்திகள் எவ்வாறு தமது சிந்தனைப் பாரம்பரியத்தில் விளங்கிக் கொண் டனர் என்பதற்கு மேற்கூறிய உதாரணங்கள் சான்று பகருகின்றன.

II

2. 0 சோழப் பெருமன்னர் காலத்தில் தருக்க நெறிச் சிந்தனைவளம் பொதுவள மேம்பாடு பெற்ற சைவசித்தாந்தப் பேராற் றின் ஊற்றுக்கண்களை அதற்கு முற்பட்ட பல்லவர் காலச் சித்தர்கள், யோகிகள், முனி வர்கள், பக்தர்கள் வாழ்விலும் வாக்கிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். சிவாகமங்களின் சிந்தனைப் பிழிவான காரணத்தினால் 'ஆகமாந்தம்' என்னும் சிறப்புப் பெயர்பெற்ற சைவசித்தாந்தம் கி. பி. 4 அல்லது 5ம் நூற்றாண்டில் தோன்றியது என்று கூறச்சான்றுகளுள்ளன.

2.1 'முடிந்த முடிபு' என்னும் பொருள் தரும் சித்தாந்தம் என்னும் தொகைச்சொல் இன்று சிவநெறியினரிடையே ''சைவசித்தாந்தம்'' என்னும் கோட்பாட்டைக் குறிக்கச் சுருக்கமாக வழங்கினாலும் பல்லவர் காலத்தில் பிறமதத்தினர் கோட்பாட்டைக்குறிக்கவும் அத்தொகைச் சொல் வழங்கியது. உதாரணமாக, சமணர் பார்வையில் முடிந்த முடிபான கருத்துக்களைக் கூறும் நூல் ''சித்தாந்தத்தொகை' என வழங்கியதாக யாப்பருங்கல விருத்தி மூலம் அறிகிறோம். எனவே சிவநெறியினர் தமது முடிந்த முடிபான உண்மைகளைக் கூறும் கோட்பாட்டிற்குச் 'சைவ' என்னும் அடைமொழியைச் சேர்த்து 'சைவ சித்தாந்தம்' எனப் பெயரிட்டனர்.

2-2 இவ்வாறு வழங்கத்தலைப்பட்ட சைவ சித்தாந்தம் என்னும் தொடர் தென்னாட்டுக் கல்வெட்டுக்களிலே, சிவசூடாமணி, ஆகமப்பிரியன் என்னும் சிறப்புப் பெயர்கள் பெற்ற இராசசிம்மபல்லவன் (கி. பி 680-700) காஞ்சியிற் கட்டிய இராசசிம்ம பல்லவேசுவரம் என்னும் கயிலாச நாதர் கோயிற் கல்வெட்டு ஒன்றிலேதான் முதன் முதல் ஆளப்பட்டுள்ளது.

2.3 தமிழிலக்கியச் சான்றுகளைச் சீர் தூக்கும் போது கி. பி ஆறாம் நூற்றாண்டினரான திருமூலர் பாடிய திருமந்திரம் என்னும் திருமுறையே சைவ சித்தாந்தங்களைக் கூறும் முதல் தமிழ் நூல் ஆகும். திருமந்திரத்தின் எட்டாந் தந்திரம் என்னும் பிரிவில் 'தத்துவமசி' என்னும் மகாவாக்கியச் சிந்தனைகளை வழங்கும் திருமூலர் 'சைவசித்தாந்தர்' என்னும் மெய்ஞ்ஞானியின் தகைமையை-

''கற்பன கற்றுக் கலிமண்ணு மெய்யோக
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
தொற்பத் மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித்தாந்தரே

என்று விதந்து கூறுகிறார்.

2.4 திருமூலர் காலத்திற் புகழ்பெற்ற கோட்பாடாக விளங்கிய சைவசிந்தாந்தச் சிந்தனைகளில் ஈடுபாடுள்ளவர்கள் 'ஆகமச் சைவர்கள்' என்னும் பெயரிற் குப்தர் காலத்திற் கோதாவிரி யாற்றங்கரையிலே மந்தரகலேஸ்வர் திருக்கோயிலைச் சூழவிருந்த சைவமடங்கள் நான்கில் வாழ்ந்தனர் என வரலாற்றுச் சான்றுகள் உணர்த்துகின்றன.

2.5 தென்னாட்டிற் புகழும் தனிச் சிறப்பும் பெற்றுள்ள சைவசிந்தாந்தக் கருத்துக்கள் வடநாட்டிலும் ஒரு காலத்திற் சிறப்புப் பெற்றிருந்தன. சிறப்பாக, காஷ்மீரத்திற் சைவர்கமங்களின் சாரமாகத் தோன்றிய 'பிரத்ய பிஞ்ஞான தரிசனம்' சைவ சித்தாந்தக் கோட்பாட்டினை நிகர்ப்பது அதனைச் சைவசிந்தாந்தம் காஷ்மீரத்தில் தோன்றியதெனக் கருதும் அறிஞரும் உள்ளனர். சைவ சித்தாந்தம் திருக்கயிலாய ஞான பரம்பரைச் சிந்தனைகளைக் கொண்டதென்ற கொள்கையை விளக்கும் காஷ்மீர மூலவாதிகள் திருக்கயிலாயம் காஷ்மீரத்தில் உள்ளதென்றும் அப்பரம்பரையின் வழித் தோன்றலே திருமூலர் என்றும் காஷ்மீரத்தில் வழங்கிய சைவ சித்தாந்தமான பிரத்ய பிஞ்ஞான தரிசனமே தென்னாட்டில் 'சுத்த சைவ தரிசனம்' எனப்பட்டது என்றும் கூறுவர். மேலும் கி. பி 10ம் நூற்றாண்டினரான சோமநாதரின் 'சிவதிருஷ்டி' என்னும் நூலும் அபிநவகுப்தரின் 'பரமார்த்த சாரம்' என்னும் நூலும் திருக்கயிலாய ஞானபரம்பரையைச் சேர்ந்த சைவ சித்தாந்த மெய்யுணர்வு நூல்கள் என்றும் ஆய்வாளர் கருதுகின்றனர்.

3.0 வடநாட்டில் 'பிரத்ய பிஞ்ஞான தரிசனம்' என்னும் பெயரிலும் தென்னாட்டிற் 'சுத்த சைவ தரிசனம்' 'சித்திய ஞான தரிசனம்' என்னும் பெயர்களிலும் வழங்கிய சைவ சித்தாந்தக்கருத்துக்கள் முற்காலப்பல்லவராட்சிக் காலத்தில் வாழ்ந்த திருமூலர் போற்றிய மந்திரோபாசனமுறை, யோகமுறை என்னும் சமயவழிகளில் ஊற்றம்பெற்றன. சோழர் காலத்தில் அக்கருத்துக்கள் தருக்க வாதமுறையில் நெறிப்படுத்தப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்' என வரையறுக்கப்பட்டன. இவ்விருகாலப் பிரிவுகட்கும் இடையே பிற்காலப் பல்லவ ராட்சிக் காலத்தில் வாழ்ந்த சைவசமய குரவர்கள் வளர்த்த பக்தியியக்கம் சைவ சித்தாந்தக் கருத்துக்களுக்கு துதிமுறையில் விளக்கமும் வடிவமும் அளித்துள்ளன. சைவ சித்தாந்தக் கோட்பாட்டின் பரிணும வளர்ச்சியிற் சைவசமய குரவர்களின் சிந் தனைப்பணி சிறப்புமிக்க இணைப்புப் பால மாக விளங்குகின்றது.

3.1 சைவ சித்தாந்தக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துக்களான முப்பொரு ளுண்மை பற்றிச் சைவசமய குரவர் கூறும் துதிமுறை விளக்கங்கள் சிலவற்றை நோக் குவோம். முப்பொருள்களான இறை (பதி) உயிர் (பசு) தளை (பாசம்) என்பவற்றில் முதற்பொருளான பதியின் இயல்புகள் பல வற்றிலே 'வேருகவும் உடனுகவும் விளங்கு தல்' என்னும் கருத்து தனிச்சிறப்பு வாய்ந்த உண்மையாகும். பதியின் இயல்புகள் பல வற்றை ஒருங்கே கூறித் துதிக்கும் திருஞான சம்பந்தர் இறைவன் 'வேருகவும் உடனுக வும்' விளங்கும் சைவசித்தாந்த உண்மையை

"ஈரும் முதல் ஒன்றுயிரு பெண்ஆண் குணமூன்றுய்
மாறுமறை நான்காய்வரு பூதமவை ஐந்தாய்
ஆறுசுவை ஏழோசையொ டெட்டுத் திசை தானுய்
வேறுய் உடனுனன் இடம் வீழிம்மிழ லீயே"

என்று விதந்து கூறியுள்ளார்.

3.2 உயிர்கள் எண்ணற்றன. அவை வினைப்பயன் காரணமாகப் பல்வேறு பிறவி யெடுக்கும். அவற்றை இயக்குபவன் உயிர்க்கு யிரான இறைவனே ஆவான். இச்சைவ சித்தாந்தக் கருத்தமைதியைத் திருஞான சம்பந்தர்-

"உரைசேரும் என்பத்து நான்கு நூறு யிரமாம் யோனிபேதம் நிரைசேரப் படைத் வற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின் முன்" என்று கூறுதலைச் சிந்திக்கும் ஞான நூற்பயிற்சியுடையாரின் உள்ளத்திலே சிவ ஞானசித்தியார் குறிப்பாய்க்கூறும் யோனி பேதங்கள் நினைவுக்கு வரும்.

3.3 பாசம் பற்றிய சைவசித்தாந்தக் கருத் களில் உயிர்களை அணுவாய்த் தேய்க்கும் ஆணவம் என்னும் கொடியமலம் 'மூல நோய்' என்ற கருத்து ஒரு முக்கிய உண் மையாகும். அம்மலக் கொடுமை இறை யருள் என்னும் மருந்தினுல் வலியிழக்கும் என்பது சைவசித்தாந்தக் கருத்தேயாகும். இவ்வுண்மைகளை அப்பெருமான் அருமை யாக-

'மூலநோய் தீர்த்த முதல்வன் கண் டாய்'

என்னும் துதித்தொடரில் அமைத்துள் ளார். 'பாவநாசத்தொகை' என்னும் பதி கம் முழுவதிலுமே திருநாவுக்கரசர் 'பாச நீக்கம்' பற்றிய சைவசித்தாந்தக்கருத்துக் களை எளிமையும் இனிமையும் வீரவும் சொற்களில் எடுத்துள்ள சிறப்பு இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

3.4 உயிர்கள் பாசப்பிணிப்பு நீங்கி ஈடேற்றம் பெறக்குருவடிவில் துணை நிற்கும் திருவருளின் பங்கு முக்கியத்துவம் வாய்ந் தது. இறைவன் குருவாக வந்து தன் தலைமையைப் புலப்படுத்தி உயிர்களை ஆட் கொள்ளுவான்; பிறவா வாழ்வுக்கு ஆற் றுப்படுத்துவான். இச்சைவசித்தாவுண்மை களைத்தமது பரந்த அநுபவங்கள் வாயி லாகப்புரிந்து கொண்ட நாவேந்தர்-

"என்னை யேதும் அறிந்திலன் எம்பிரான் தன்னை நானுமுன் னேதும் அறிந்திலேன் என்னைத் தன்னடி யானென் றறிதலும் தன்னை நானும் பிரானென் றறிந்தேனே"

என்று இனிமை மிளிரும் துதிவடிவில் அவற் றுக்குச் சிறப்பு விளக்கம் அளித்துள்ளார்.

3.5 சைவசித்தாந்தக்கோட்பாட்டின் அடிப் படையுண்மைகளை மெய்யடியார்களான சைவசமயகுரவர்கள் தமது பாசுரங்களில் ஆங்காங்கு துதிமுகமாக விளக்கிய திறத்தை மெய்கண்ட சாத்திரச்சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளர்கள் கவனத்திற் கொள்ளத் தவற வில்லை. சைவசமயகுரவர்களின் சிந்தனை, சொல், செயல், வாழ்க்கைநெறி ஆகிய யாவற்றினூலும் ஈர்ச்சப்பட்ட அச்சிந்தனை யாளர்கள் அவற்றைத் தமது கோட்பாட்டு விளக்கத்தில் இணைத்துக் கொண்ட அரு மைப்பாட்டை விதந்து கூறத்திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனூரின்-

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை
என்றுமையாற்
கண்ணப்பன் ஒப்பதோர் அன்பினைக்-கண்
ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறிதல் அல்லது
மற்று
யாமறியும் அன்பன் றது"
(திருக்களிற்றுப்படியார். (52)

என்னும் பாடல் ஒன்றே அமையும். □

நாமாவளிகள்

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம் சிவம்
சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம் சிவம். (சு)

சத்யஞான தர்மசத்தி சாந்தசக்தி ஓம் சிவம்
சச்சிதானந்தாத்ம சக்தி சர்வசக்தி ஓம் சிவம் (சு)

வேதசாஸ்த்ர சகலகலா வித்தியாசக்தி ஓம் சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம் சிவம் (சு)

நாதகீத கானகலா நடனசக்தி ஓம் சிவம்
மஹாமந்த்ர யந்த்ரதந்த்ர வஸ்யசக்தி ஓம் சிவம் (சு)

யோகபோக த்யாகசக்தி லோகசக்தி ஓம் சிவம்
தாகமோக சோகரகித தபோசக்தி ஓம் சிவம் (சு)

துஷ்டசத்துரு நாகசக்தி துர்க்காசக்தி ஓம் சிவம்
அஷ்டலக்ஷ்மி ஞானவாணி அமரசக்தி ஓம் சிவம் (சு)

குஞ்சிதபத அபரஹஸ்த வாஞ்சிதபல தாயகம்
குருபர சிவ ஹர ஹர நடராஜா சுத்த சக்தி ஓம். (சு)

UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தபுராணத்தில் காசிபனுபதேசமும் சுக்கிரனுபதேசமும்

கலாநிதி நா. சுப்பிரமணியன்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

கச்சியப்ப சிவாசாரியார் இயற்றிய கந்த புராணம் சைவத் தமிழ்ப் பாரம்பரியத்திலே பெருமதிப்புக்குரிய வழிபாட்டு நூலாகவும் வழிகாட்டு நூலாகவும் திகழ்வது. முருகக்கட வுளின்தெய்வீக வரலாற்றைக் கூறும் இப்பெரு நூல் அதன் ஊடகச் சைவசித்தாந்தத்துக்கு விளக்கம் தந்தமைவது. இந்நூலில் கதைப் போக்கை வளர்த்துச் செல்லும் வகையி லும் தத்துவ விளக்கம் தரும் நோக்கிலும் அமைந்த இரு உபதேசங்கள் இங்கு நோக் கப்படுகின்றன. ஒன்று, காசிபனுதேசம்; மற்றது, சுக்கிரனுபதேசம். இரண்டும் முரண் நிலையில் அமைந்தவை.

காசிப முனிவர் தமக்கும் மாயைக்கும் பிறந்த பிள்ளைகளான சூரபதுமன், சிங்க முகன், தாரகன் என்போருக்கு உறுதிப் பொருளை உணர்த்தும் வகையிற் சில அடிப்படை அம்சங்களை விளக்குகின்றார். அவை சைவ சித்தாந்த அடிப்படையான சமய தத்துவ போதனைகளாக அமைகின் றன. அசுர குருவாகிய சுக்கிராசாரியார் சூரபதுமன், சிங்கமுகன் இருவர்க்கும் காசி பரின் போதனைகளுக்கு மாறுனவகையில் தத்துவ விளக்கம் தருகிறார்; அதிகாரத்தை நிலை நிறுத்தி அதன் மூலம் புகழ் பெறு வதற்கான தந்திரோபாயங்களை உணர்த் துகிறார். இவ்வாறு முரண்நிலையில் அமைந்த இவ்வுப தேசங்களின் சாராம்சம் வருமாறு-

காசிபனுபதேசம்:

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் கள் உள. அவற்றுட் பதி எனப்படும் இறைவன் படைத்தல் முதலிய ஐந் தொழில் நிகழ்த்துபவர். பசுக்களாக

Digitized by Noolaham Foundation.

294 ALA AR

உயிர்கள் தத்தம் வினைகட்கேற்பப் பிறவி எடுப்பவை. அப்பிறவிகளில் அவை எய்தும் செல்வம் வலிமை என்பன நிலையற்றன. தருமம் என்றொரு பொருள் உளது. அது இம்மை மறுமை இருமைக்கும் துணைபுரிவது. தருமத்தைப் பேணுங்கால் அன்பு உண்டாகும். அன்பால் அருளும் அருளால் தவமும் உண்டாவன. தவம் ஒப்பற்றது. இவற்றை அறிந்துணர்ந்து எய்தப்பெற்ற உயிர்கள் சிவபரம்பொருளை எய்தவல்லன. எனவே தருமநெறி நின்று தவம் ஆற்றிச் சிவனைச் சேர்தலே செயற்பாலது.

தருமமே போற்றிடி னன்பு சார்ந்திடும்
அருளெனும் குழவியு மணையு மாங்கவை
வரும் வழித் தவமென்னும்
வைப்புண்டாகுமேல்
தெருளுறும் அவ்வுயிர் சிவனைச்சேருமால்
(13)

தவந்தனின் மிக்கதொன் றில்லை தாவில்சீர்
தவந்தனை நேர்வது தானு மில்லையால்
தவந்தனி னரியதொன் றில்லை சாற்றிடில்
தவந்தனை நேர்வது தவம தாகுமே. (23)

ஆதலின் மைந்தர்கா ளறத்தை ஆற்றுதிர்
தீவினை விலக்குதிர் சிவனை யுன்னியே
மாதவம் புரிகுதிர் மற்ற தன்றியே
யேதுள தொருசெய லியற்றத் தக்கதே
(24)

இவ்வாறு உபதேசித்த காசிபர் தவத்தினால் எய்தத்தக்க பெருநலன்களை எடுத்துக் காட்டும் வகையில் மார்க்கண்டேயரின் வரலாற்றை விரித்துரைக்கிறார். காசிபரது இவ்வுபதேசம் தன் பிள்ளைகட்கு அவசியமற்றது எனக்கருதும் மாயை அவர்கள் செல்வமும் அதிகாரமும் பெறும் வகையில் யாகங்கள் புரியவேண்டுமென அறிவுறுத்துகிறாள். அதன்படி பெருவேள்வி செய்து வரங்கள் பல பெற்று மீண்ட சூரபதுமன் முதலியோரை அசுரகுருவாகிய சுக்கிராசாரியாரிடம் சென்று அறிவுரை பெறுமாறு தந்தை காசிபர் அனுப்புகிறார். சூரபதுமன் தன் இளையதம்பி தாரகனைப் படைகளுடன் நிறுத்திவிட்டுச் சிங்கமுகனுடன் சுக்கிரனிடம் உபதேசம் பெறுகிறான்.

சுக்கிரனுபதேசம்:

பதி, பசு, பாசம் என மூப்பொருள் உள எனக் கூறுவது பொருந்தாது. இவற்றுள் பாசம் என்பது பொய். பசுவும் பதியும் ஒன்றே. நல்வினை தீவினை என்பவற்றுக்கேற்ப உயிர்கட்குப் பிறவி அநுபவங்கள் நிகழ்கின்றன என்பது உண்மையல்ல. பரம்பொருளாகிய இறைவன் திருவிளையாடல் விருப்பால் மாயையினின்று பொய்த்தோற்றங்களாகிய பூதங்களைப் படைக்கிறான். மாயையாலாகிய உடலில் குடத்தில் ஆகாயம் போல உறைகிறான். குடம் உடைய உள் ஆகாயம் புற ஆகாயத்திற் கலப்பது போல உடல் அழிய அதனுள் இயக்கி நிற்கும் நிலையினின்று அவன் நீங்குகின்றான்.

எனவே உயிர்கட்கு உரியனவாகக் கூறப்படும் வினை, தவம், முத்தி என்பன பொய். இன்ப துன்ப அனுபவங்களும் பொய்யே, தருமம், பாவம் என்ற வேறுபாடுகள் பொருளற்றன. எல்லாம் மாயையே.

உன்னையே பிரமம் என்று தெளிவாயாக. நேற்றுவரை உங்கள் குலத்துக்கு இன்னல் தந்த இந்திரனைப் பிடித்துச் சிறையிடுக. முனிவர்களையும் தேவர்களையும் ஏவல் கொள்க. கொலை முதலிய கொடுமைகளைப் புரிக. அவ்வாறு செய்தால் தான் உனக்கு யாவரும் அஞ்சி அடங்கி நடப்பர்.

பொய்ய தாகும் பொறிபுல மென்றிடின்
மெய்யதோவவை காலும் விழுப் பொருள்
மையில் புந்தியும் வாக்கும் வடிவமும்
செய்ய நின்ற செயல்களும் மன்னதே (32)

தருமம் செய்க தவறுள பாவமாம்
கருமம் செய்யற்க என்பர் கருத்திலார்.
இருமை தன்னையும் யாவர் செய்தாலுமே
வருவ தொன்றிலை மாயம்வித் தாகுமோ
(40)

183621

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றிடும் பெருமை நாடி யுன்னே நீ
பிரமமென்றே
தெற்றெனத் தெளிதி மற்றைத்
திசைமுகன் முதலோர் தம்மைப்
பற்றிலே மேலோரென்று பணியலே
யிமையோருங்கள்
செற்றவ ரவரை வல்லே செறுமதி
திருவுஞ் சிந்தி (47)

கொலை யொடு களவு காமம் குறித்திடு
வஞ்சமெல்லா
நிலையெனப் புரிதியற்றுல் நினக்குமேல்
வருந்தீ தொன்று
மிலையவை செய்திடாயேவி றைவ நீ
விரும்பிற்றெல்லா
முலசிடை யொருங்கு நண்ணுயுனக்கெவர்
வெருவுநீரார் (50)

[இவ்வாறு சுக்கிரன் உபதேசித்தவை சூரபதுமன் நெஞ்சில் பதிகின்றன. இந்நெறி சென்று அவன் தேவர்களுக்கு இன்னல் விளைவிக்கின்றுன். ஈற்றில் முருகப் பெருமானுல் அடக்கியாளப்படுகின்றுன். சிங்க முகாசுரனை இவ்வுபதேசம் பாதிக்கவில்லை. அவன் தந்தை உரைத்தவையே உண்மை எனக் கொண்ட அறிஞனுகக் காட்டப் படுகிறுன். ஈற்றில் அண்ணனுக்காக. போரிட்டு உயிர்த்தியாகம் செய்கிறுன்.

மேற்படி இரு உபதேசங்களும் முரண் நிலையின என்பது வெளிப்படை முதலாவது சைவசித்தாந்த அடிப்படையிலானது, அறம்சார்ந்தது. இரண்டாவது சைவசித் தாந்தத்துக்கு மாறுபட்டது; அறம்சாராத கூறுகளையும் கொண்டது. இவ்விரண்டாவ தன் முதற் பெரும் பகுதியில் உள்ளவை பெரும்பான்மையும் மாயாவாதம், ஏகான்ம வாதம் முதலிய பெயர்களாற் சுட்டப்படும் சங்கரவேதாந்த சார்பானவை. 'உன்னை நீ பிரமம் எனத் தெளிவாயாக' என்பது இவ் வுபதேசத்தின் இத் தத்துவம் சார்ந்த முக்கிய அம்சம். ஆயின், தருமம், பாவம் என்ற வேறுபாடுகள் இல என்பதும் 'கொலை முதலியவற்றை நீ புரிவாயாக' என்பதும் மேற்படி சங்கர வேதாந்த தத்துவ நிலை சார்ந்தன அல்ல. அவை உலகாயத சார் பானவையாகவே கொள்ளப்படவேண்டியன.

ஆயினும் கந்தபுராணத்துக்கு விளக்கம் தரும் அறிஞர்கள் சிலர் சுக்கிரனுபதேசம் முழுவதையுமே மாயாவாதமாகவே கருதி யுள்ளமை தெரிகிறது. சுக்கிரனுபதேசத்தை ஏற்றுச் சூரபதுமன் நின்றநிலை 'மாயா வாதம்' என்றே சைவப் பெரியார் சு. சிவ பாதசுந்தரனுர் கருதுவர். (கந்தபுராண விளக்கம் (1954) ப. 114, "சூரனுடைய மதமாகிய 'மிண்டிய மாயாவாதமென்னும் சண்டமாருத'த்தின் இயல்பு" என அவர் குறிப்பிடுவர்.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் சுக்கிரனுப தேசத் தில் மாயாவாதம், உலகாயதம் இரண்டும் உள்ளன எனக் கொள்வர். ஆயினும் இரண் டும் நெருங்கிய தொடர்புடையன என அவர் காட்டுவர்.

"இம்மைச் சுகத்தின் பொருட்டு எதுவும் செய்யலாமென்பது உலோகாயதம். இது மாயாவாதமாகிய ஞான காண்டத்துக்குக் கிரியாபாகம்"

"மீண்டிய மாயாவாதம் என்னும் சண்ட மாருதம், உலோகாயதன் எனும் ஒண்டி றற் பாம்பின் கலாபேதத்த கடுவிஷத்தி லேதான் சென்று முற்றும்"

சமயக் கட்டுரைகள் பக் 157 - 58

'பிரமம் என்ற ஒருபொருள் மட்டுமே உண்மை; ஏனைய யாவும் வெறும் தோற் றமே' எனக்கொள்வதால் தருமம் பாவம் என்பவற்றுக்கான அடிப்படைகள் இல்லாது போய்விடலாம் என்ற கருத்தினடியாகத் தரப்பட்ட விளக்கம் இது என்பது தெரிகி றது. எனினும் வேறுபட்ட மேற்படி இரு தத்துவங்களையும் ஒன்றுக இணைத்தோ அன்றேல் மிக நெருக்கமாகக் கொண்டோ வினக்கம் தரும் முயற்சி எந்த அளவுக்கு ஏற்புடையது என்பது அறிஞருலகின் சிந் தனைக்குரியதாகும். கந்தபுராணம் வல்லா ரும் தத்துவவியலாரும் இதனைக் கவனத் திற் கொள்வார்களாக. □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சிறந்த வீடியோ படப்பிடிப்பு

★ சிறந்த கலர், கறுப்பு வெள்ளைப் படங்கள்

★ சிறந்த பாடல் ஒலிபதிவு

வாருங்கள்



கிருபா போட்டோ

அன்

றெக்கோடிங் சென்ரர்

காங்கேசன்துறை வீதி
மல்லாகம்.

அலுக்கை
அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

"தனந்தரும் கல்விதரும். ஒருநாளும் தளர்வு அறியா
மனம்தரும் தெய்வ வடிவும்தரும். நெஞ்சில் வஞ்சமிலா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலால் அபிராமி கடைக்கண்களே."

அபிராமியந்தாதியை நித்தம் ஒதுவார்க்கெல்லாம் அஷ்ட ஐசுவரியமும் கிட்டும். ஒவ்வொருவரும் அபிராமி அந்தாதியைத் தினமும் பாராயணஞ்செய்து பயன் அடைய வேண்டும்.

மில்க்வைற் சோப் மேலுறைகளிலுள்ள திருக்குறள் 25 மட்டும் அனுப்பி னால் போதுமானது. உங்கள் கையில் இந்த நூல் வந்து சேரும்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77

525/2 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தந்தி: "மில்க்வைற்" தொலைபேசி: 23233

கும்பாபிஷேகம் சிறப்புடன் நிறைவேறப்

பிரார்த்திக்கிறேம்

மயூரா வைத்தியசாலை

வாரிசீமா வீதி
அளவெட்டி கிழக்கு
அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.

குடமுழுக்கு சிறப்புடன் நிறைவேற
அம்பாள் அருள்பாலிப்பாளாக!

நியூ தாஷா மில்

தெல்லிப்பளை — பண்டத்தரிப்பு வீதி,
அளவெட்டி.

புகைப்படப் படப்பிடிப்புத் துறையில்
நவீனமயக் கையாளல்களுடன்
கருத்தைக் கவரும் பலவண்ணப்
பிரதிகளைப் பெற்றிட

இன்றே நாடுங்கள்!

நியூ கொலின் ஸ்ருடியோ
பிரதான வீதி பண்டத்தரிப்பு.

பயிர்களைப் பேணவும்
விளைச்சலைப் பெருக்கவும்

— உரமான உரமும்
— திறமான கிருமிநாசினிகளும்

முருகன் கமக்களஞ்சியம்
அம்பலை
தெல்லிப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகம்
சிறப்புடன் நடைபெற
வாழ்த்துகிறோம்.

வி. எம். சண்முகம் & புரோ

(உரிமையாளர்)

ஜெனரல் மேர்ச்சன்ற்ஸ், கமிஷன் ஏஜன்ற்ஸ்
ட்ரான்ஸ்போட் ஏஜன்ற்

74, பழைய சோனகதெரு
கொழும்பு - 12.
தொலைபேசி: 31160

85, ஆசுப்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22657

Digitized by Noolaham Foundation.

கும்பாபிஷேகம் சிறப்புற

வாழ்த்துகிறேம்



V

கந்தையா பொன்னம்பலம்

நிர். 361, காங்கேசன்துறை வீதி

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மணிப்புரி
- நைலெக்ஸ்
- வூலி

சேலை வகைகளும்

- பட்டு வேட்டி
- சேட்டிங்
- சூட்டிங்

தரமான ஜவுளிகளின் தனிப்பெரும் நிறுவனம்

ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ

79, காங்கேசன்துறை வீதி

யாழ்ப்பாணம்.

அம்பாள் தேவி கருணை பொழிவாளாக!


க. கணபதிப்பிள்ளை

விநாயகர் களஞ்சியம்


கூட்டுறவாளர் வீதி

அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.



விக்கினந் தீர்க்கும்
விநாயகர் சந்நிதி



குன்றுதோருடல்புரியும்
குமரவேள் சந்நிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவகாமி சமேத நடராஜப் பெருமான்



நடராஜப் பெருமான் கோவில்

Digitized by Noolaham Foundation.

அன்னையின் அருளும் வடிவும்

கலாநிதி அ. சண்முகதாஸ்
பேராசிரியர். தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

நாம் வாழும் நடைமுறை உலகிலே அன்புக்கு உதாரணமாக அமைபவள் தாய். சில புறநடைகளாகவுள்ள தாய்மாரை விடுத்து நோக்கும்போது எல்லாத் தாய்மாருமே அன்புடையவர்கள்; அருட்கொழுந் தோடிய உணர்வுடையவர்கள். இவர்களுடைய அன்புநிலை இப்படியிருக்குமாலல், இவர்கள் யாவர்க்கும் மேலான இறைவியாகிய எம் அன்னையின் அன்பும் அருளும் எத்தகையனவாயிருக்கும்? பேரன்னையின் அன்பையும் அருளையும் அனுபவித்தவர்கள் கூறுவதைக் கேட்பதன்மூலம் அவற்றை நாம் உணர்ந்து, அவர் கூறிய வழி சென்று நாமும் அவற்றை அனுபவித்து உணரலாம்.

புது நஞ்சை உண்டு கறுக்கும் திருமிடற்றையுடையவன் இறைவன். தேவர்கள் உட்பட்ட எல்லா உயிர்களையும் அவ்வாலகால விடத்திலிருந்து காப்பாற்றுவதற்காக அதனைத் தானே உண்ண விரும்பிய பெருங் கருணை உடையவன் அவன். அவ்விடத்தினை வாரி உண்டான். இக் கருணைச் செயலுக்கு மேலான கருணைச் செயலைச் செய்கிறாள் அம்பிகை. அவள் இறைவன் உண்ட அப்புது நஞ்சினையே அமுதமாக்கி விடுகிறாள். குழந்தைக்கு உண்டபால் 'செமியாத'போது 'அமுதமாக' என்று தாய் கூறுவாள். தாயாகிய அபிராமி இறைவன் உண்ட நஞ்சை அமுதமாக்கியது ஆச்சரியமான விடயமல்ல. அபிராமிப்பட்டர் அன்னையின் இப் பெருங் கருணைச் செயலை, அருட்செயலைப் பின்வருமாறு பாடுகிறார்:

"பொருந்திய முப்புரை செப்புரை
செய்யும் புனர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல்
மணிவண்ணன் வார்சடையோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்திய நஞ்சமு தாக்கிய
அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி
பாதமென் சென்னியதே.''

(இதன் பொருள்): அபிராமி அன்னையே! உயிர்களிடத்திலே படைத்தல், காத்தல், அழித்தல். ஆகிய மூவகை நிலைகளிலும் நிறைந்து இருப்பவளே! மாணிக்கப் பூண் அணிந்த நெருக்கமான, அடர்ந்த தனங்களின் சுமையால் வருந்துகின்ற வஞ்சிக் கொடி போன்ற இடையை உடையவளே! மனோன்மணியானவளே! (அன்பர்களை ஞான நிலைக்குக் கொண்டு செல்கின்றவன்) நீண்ட சடையை உடைய சிவபெருமான் அன்றொரு நாள் அருந்திய விஷத்தை அமுதமாக்கிய அழகிய தேவி! நீ வீற்றிருக்கும் தாமரையைக் காட்டிலும் மென்மையான நின் திருவடிகளையே என் தலைமேல் கொண்டேன்.

அடியாரை நோக்கிவரும் கொடிய துன்பங்களையெல்லாம் போக்குபவள் அன்னை அபிராமி என்பதை இப்பாடல்மூலம் புலப்படுத்துகிறார்.

அடியார்க்கு நல்கும் அருளுக்கு ஏற்ற வடிவினை உடையவளாக அன்னை திகழ்கிறாள். அவளை வழிபடுபவர்க்கு ஞானமும் முத்தியும் கைகூடிவிடுகின்றன. சொல்லையும், அது உணர்த்தும் பொருளையும் நன்கு உணர்ந்துகொண்டவர்கள் கற்றோர் ஆவர். ஆனால், கற்றவர்கள் எல்லோரும் ஞானிகளாகமாட்டார். அதற்கு அவர்கள் ஞானமொழியினை நன்கு பயின்றவர்களாயிருக்கவேண்டும். ஞானத்தமிழ் பயின்ற பூதத்தாழ்வார் திருமாலுக்கு ஞானவிளக்கு ஏற்றக்கூடியவராகிறார்.

''அன்பே தகழியாய் ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியாய் — நன்புருக
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்பயின்ற நான்''

என்று ஆழ்வாரே அதனைக் குறிப்பிடுகின்றார். இத்தகைய ஞானத்தமிழை அறிந்துணர்வதற்குச் சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவராகிய சிவபிரானுடன் பொருந்தி நிற்கும் அம்பிகையைக் காணவேண்டும்: அவள் பாதங்களை வணங்கவேண்டும்; என்று அபிராமிப்பட்டர் கூறுகின்றார். அவ்வாறு எங்கள் பெருமானுடன் இணைந்து நிற்கும் எம்பெருமாட்டியின் புது மலர்கள் போன்ற மென்மையான, அழகான, நறுமணம் வீசுகின்ற, புது மலர்ச்சியையுடைய, நீர்மையை உடைய பாதங்களை இரவும் பகலும் தொழுதால் அழியாத அரசபோகமும் முத்தி நெறியும் கைகூடும்.

''சொல்லும் பொருளும் என
நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே
நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க்கே
அழியா அரசும்
செல்லும் தவ நெறியும்
சிவலோகமும் சித்திக்குமே.''

சொல்லும் பொருளுமாய் நிற்கும் இறைவனுடன் இணைந்து நிற்கும் அம்மையின் வடிவைக் கண்டு தொழுதால், அழியாத அரசபோகமும் கிடைக்கும்; அவ்வரசபோக அனுபவத்தாலே ஏற்படும் தவநெறி உண்டாகும், அத் தவநெறியின் விளைவாக முத்தியும் சித்தித்துவிடும் என்கிறார் அபிராமிப்பட்டர்.

அன்னையைத் தொழும் மண்ணவர்கள் விசேட சலுகைகள் பெற்றவர்களாவர். அன்னையை வந்திக்கலாம் (அதாவது, வணங்கலாம், கும்பிடலாம், ஏத்தலாம், வாழ்த்தலாம், பரவலாம்); சிந்திக்கலாம்; மனத்துள்ளே கட்டுப்படுத்தலாம். தேவர்கள், அசுரர்கள் முதலானவர்கள் வந்திக்கிறார்கள். பிரம்மாவும் விஷ்ணுவும் அவளைச் சிந்திக்கிறார்கள். அழியாத பரமானந்தராகிய சிவபிரான் அம்பிகையை மனத்துள்ளே கட்டுப்படுத்திவிடுகிறார். ஆனால், உலகிலுள்ள அடியார்களோ இம் மூன்றினையும் செய்யக்கூடிய அருளினை எளிதிலே வழங்கிவிடுகிறாள் அன்னை.

Digitized by Noolaham Foundation.

''வந்திப்பவ ருன்னே வானவர் தானவர்
ஆனவர்கள்
சிந்திப்பவர் நல்தி சைமுகர் நாரணர்
சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில்
உன்னைச்
சந்திப்பவர்க் கெளிதாம் எம்பிராட் டிநின்
தண்ணளியே''

என்பது அபிராமிப்பட்டர் வாக்கு.

அன்னையின் வடிவம் பேரழகுடையது. அதனைக் கண் களிக்கும்படியாகத் தான் கண்டுகொண்டதாகப் பட்டர் கூறுகின்றார். ''அபிராமித் தாயே! உன்னை என் கண்கள் களிக்குமாறு கண்டுகொண்டேன். கடம்பவ னம் என்னும் பதியிலே வீற்றிருக்கும் அன் னையே! உன்னுடைய் பேரழகைக் கண்டு கொண்டேன். இனிமையான பண்ணே உன் குரலே விரும்புகிறது; உன்னுடைய கரங்கள் வீணையைத் தாங்கியுள்ளன; அழகிய திரு மார்பு திருமுலைகளைத் தாங்கியுள்ளன. பச்சை வண்ணத்துடன் நீ திகழ்கின்றாய். மண்மகளும், மண்ணிலே உள்ளவர்களும் அக்கோல வண்ணத்தினாலே மகிழ்ச்சியடை கிறார்கள். மதங்கர் குலத்திலே தோன்றும் பெண்களினுடைய அழகினையும்விடப் பேரழ கினையுடைய அன்னையே நீ இத்தகைய தன் மைகளெல்லாம் கொண்டு விளங்குகின்றாய். உன்னை நான் கண்டுகொண்டேன்'' என்று பட்டர் கூறுகிறார்

''கண்களிக் கும்படி கண்டுகொண்
டேன்கடம் பாடவியில்
பண்களிக் குங்குரல் வீணையும்
கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ண
முமாகி மதங்கர்குலப்
பெண்களிற் றேன்றிய எம்பெரு
மாட்டிதன் பேரழகே''

இவ்வாறு அபிராமி அந்தாதியிலே அன் னையினுடைய அருளையும் வடிவையும் புனைந் துரைக்கும் அபிராமிப்பட்டர் தன்னுடைய அபிராமிப்பதிகத்திலே, அவளை உண்மையு டன் மனத்திலே துதிக்கும் அடியவர்க ளுக்கு: 1) நோயின்மை, 2) கல்வி, 3) தனம். 4) தானியம், 5) அழகு, 6) புகழ், 7) பெருமை, 8) இளமை, 9) அறிவு, 10) சந்தானம்; 11) வலி, 12) துணிவு, 13) வாழ்நாள், 14) வெற்றி, 15) நல்லூழ் 16) நுகர்ச்சி எனப்பட்ட பதினாறு பேறுகளை யும் அவள் கொடுத்து அருள்புரிவாள் எனக் கூறுகிறார். திருக்கடவூரிலே அமுதகடேஸ்வ ரருடன் வீற்றிருக்கும் அபிராமியினைத் துதித்து அவர் பாடிய பதிகப் பாடல் பின் வருமாறு:

''சகலசெல் வங்களும் தரும் இமயகிரிராச
தனயை! மாதேவி நின்னைச்
சத்யமாய் நித்தியமுள் ளத்தில் துதிக்கும்
உத்தமருக் கிரங்கி மிகவும்
அகிலமதில் நோயின்மை கல்விதன தானியம்
அழகுபுகழ் பெருமை இளமை
அறிவுசந் தானம்வலி துணிவுவாழ்
நாள்வெற்றி
ஆகுநல் லூழ் நுகர்ச்சி
தொகைதரும் பதினாறு பேறும்தந் தருளிநீ
சுகானந்த வாழ் வளிப்பாய்!
சுகிர்தகுண சாலி! பரிபாலி! அனுகூலி!
திரிசூலி! மங்கள விசாலி!
மகவுநான், நீதாய் அளிக்கொணுதோ?
மகிமை வளர் திருக்கட வூரில்வாழ்
வாமி! சுபநேமி! புகழ்நாமி! சிவகாமி
மகிழ்வாமி! அபிராமி! உமையே!''

அபிராமி அன்னையினுடைய பேரழகிய வடிவினைக் கண்டு தொழுது அவள் கருணை பொருந்திய பேரருளை நாமும் பெறுவோ மாக! □

மாதா பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய்!
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே!
ஏதாயினும் வழிநீ சொல்வாயி எமதுயிரே!
வேதாவின் தாயே! மிகப்பணிந்து வாழ்வோமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவர்க்கும் யாவர்க்கும் முதல்வி

க. சி. குலரத்தினம்
ஆசிரியர், இந்துநாகரிகம்,

நால் வேதங்களுள் முதல் வேதமாய இருக்கு வேதத்தில் தேவியின் வியாபகம் பற்றிப் பாடிய முனிவர் அண்டமெங்கும் நீக்கமற வியாபித்து நிற்கும் தேவி அகண்ட விடமன்றி ஆழமாயும், மேலே உயரமாயும், எங்கும் ஒளிவீசி, இருட்டைப் போக்கியுள்ளாள். இன்று அவள் எமக்கு இன்னருள் சுரந்த பலத்தால், நாங்கள் பறவைகள் தத்தம் கூடுகளையடைந்தாற் போல எங்கள் இல்லங்கள் தோறும் சென்றடைந்துள்ளோம் என்பர்.

இனி நான்காம் வேதமாகிய அதர்வணம் பூமாதேவியைப் பற்றிப் புகழ்ந்து வணங்கிப் பாடும்போது, பூமியிலேதான் மக்கள் யாகப்பலி செய்திருர்கள். பூமியிலேதான் மக்கள் நிவேதனம் அளிக்கிருர்கள். பூமியிலேதான் உணவு கிடைக்கிறது. பூமியிலேதான் அழியாதவர்களும் வாழ்கிருர்கள். பூமாதேவி எமக்கு வலிமையும் ஆயுளும் தருவாளாக. அவள் என்னை முற்றி முதிரும்வரை வாழவைப்பாளாக.

இனி இங்கும் அங்கும் எங்கும் ஒன்ருய் அரும்பி பலவாய் விரிந்து உலகெங்குமாய் நிற்கும் பராசத்தியின் ஆற்றல் பரத்துவமாயுள்ளது. அதுவே அளப்பரிய ஆற்றல் வாய்ந்தது என்பதை அறிந்தவர்கள், ஆற்றலை அருள் எனவும் கண்டனர். அந்த அருள் திருவருள். திருவருள் மயமான பரதேவதையிடமிருந்தே பார்ிட மனத்தும் அண்டசராசரமனைத்தும் தோன்றின. தேவரும் மூவரும் அவளின் குழந்தைகள் என்று தேவி பாகவதம் கூறுகிறது. மும்மூர்த்திகளுக்கும் மூத்தவளாய அவளைத் திரிபுரா என வழங்கி வணங்குவர்.

நீயோரை அழித்துத் தூயோரைக் காக்கும் அன்னையை ஏழு மாதர்களாகவும்,

Digitized by Noolaham Foundation.

அவர்கள் முறையே பிராம்மி, மகேஸ்வரி, வராகி, வைஷ்ணவி, மகேந்திரி, கௌமாரி, சாமுண்டி என நிலவுவதாகவும் கூறுவர். அவள் பக்தர்களின் பக்குவம் கண்டு காட்சி கொடுத்தருளி வாழ்வளிப்பாள்.

மும்மூர்த்திகளின் ஆற்றல்களாக அவள் நின்று நிலவும் வகை நினைக்கில் ஒரு புதுமை. பிராம்மி என்பவள் பிரம்மாவுக்குரிய நான்கு முகங்கள், அன்ன வாகனம், அட்சமாலை, கமண்டலம் முதலியன உடையவள். வைஷ்ணவி என்பவள் சங்கு, சக்கரம் தரித்தவளாய்க் கருடவாகனமுடையவளாயிருப்பள். மகேஸ்வரி என்பாள் மான் மழு ஏந்தியவளாய் இடப வாகனமுடையவளாயிருப்பள்.

விந்துவாக இருந்து ஏழுலகமாகவும், நாதமாக இருந்து ஏழிசையாகவும் பரிணமித்தவள் அவள். எல்லாம் வல்ல இறைவனிடம் ஆண்மையையோ பெண்மையையோ காணுது தாய்மையைக் கண்டவர்கள் பழந் தமிழர். இறைவன் தாயாய் முலையைத்தந் தருளுபவர், தாயுமானவர்.

தாயாய் முலையைத் தருவானே என்றும் தாயவன் காண் உலகிற்குத் தன்னெப்பில்லாத தத்துவன் காண் என்றும், பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்தவன் என்றும், பேசரிய உயிரையெல்லாம் பெரும் போகம் அவையளித்து ஆசுஅகலும் அடியர் உள்ளத்து அப்பனெடு இருக்கும் அன்னையவள் என்றும் பாடுவர். அம்மை அப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்பதும் பெரியவர்கள் கண்ட முடிபு.

எத்திறம் நின்றுன் ஈசன், அத்திறம் அவளும் நின்று எண்ணற்ற திருநாமங்களோடு எழில் நிறைந்த திருவுருவங்களில் திருக்கோயில்கள் தோறும் எழுந்தருளியுள்ளமை அவளின் திருவிளையாடல்களின் பாற்படுவதாகும். அவளின் அதிஅற்புத சௌந்தர்யத்தை அநேகர் அகம் குளிரக்கண்டு ஆனந்தமயமாகப் பாடியுமுள்ளார்கள். அவள் காஸ்மீரத்தில் அம்பாள், ராஜபுதனத்தில் பவானி, கூர்ஜத்தில் கல்யாணி, மிதிலையில் உமை, இன்னும் அவள் இருக்கைகொள்ளுமிடமெல்லாம் சரஸ்வதி, துர்க்கை, பகவதி.

அவளை முப்புரை எனவும் வழங்குவர், வழிபடுவர். தூலம், சூக்குமம், காரணம், என்னும் மூவகை உடம்புகளிலும் அவள் நிறைந்தவள். இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்னும் மூவகை நாடிகளையும் முறையாக இயக்குபவள். அவளே மூவுலகங்களின் உயிர் மூச்சு. அவள் மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள், மூவுலகங்களுக்கும் முதல்வி.

"மூவர்க்கும் முதற் பொருளாய்
முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத் திற்கும்
நாடறியப் பேரறிவாய்
தேவர்க்கும் முனிவர்க்கும்
சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும்
எழிற்பரையை வணங்குவாம். □

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுகத்தைப் போலே அறிவு முதுது மாலையினுள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெலாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்"

கனகசபாபதி நாகேஸ்வரன், M. A
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

தெய்வப் பாடல்களிலே 'முத்துமாரி' என்னும் மகுடத்திலேயும் 'தேசமுத்துமாரி' என்னும் தலைப்பிலேயும் மகாகவி சுப்பிர மணியபாரதியார் பாடல்களைப் பாடியுள் ளார். உலகத்து நாயகியே எங்கள் முத்து மாரியம்மா, உன்பாதம் சரண்புகுந்தோம் எங்கள் முத்துமாரி, என்று முத்துமாரியைச் சரணடையுங் கவிஞர் பாரதி "துணிவெ ளுக்க ....." என்று தொடங்கும் முத்து மாரிப் பாட்டில்,

"மணிவெளுக்கச் சாணையுண்டு
எங்கள்முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
மனம் வெளுக்க வழியில்லை –
எங்கள்முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
பேதைமைக்கு மாற்றில்லை
எங்கள்முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி
அணிகளுக்கோ ரெல்லையில்லாய்
எங்கள்முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி!
அடைக்கலமிங் குனைப் புகுந்தோம்
எங்கள்முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி!"

இப்பாடலிலே வருகின்ற 'மனம் வெளுக்க வழியில்லை எங்கள் முத்துமாரி யம்மா" "அடைக்கலமிங்குனைப் புகுந்தோம் எங்கள் முத்துமாரியம்மா" என்னும் வரி கள் இன்றைய சூழலிலும் — சமூகத் தேவையாகி வேண்டுதல்களாகவே அமைந் துள்ளமையை நோக்குதல் வேண்டும் "தேச

Digitized by Noolaham Foundation.

முத்துமாரி'' என்னும் கவிதையில் ஈற்றடிக களில், ''துன்பமே இயற்கையெனும் சொல்லே மறந்திடுவோம். இன்பமே வேண்டி நிற்போம். யாவுமவள் தருவாள். நம்பினோர் கெடுவதில்லை. நான்குமறைத் தீர்ப்பு அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்'' என்று நெஞ்சுறுதியுடன் பாடுகிறார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மகான் அரவிந்தருடன் கொண்ட தொடர் புகளால் சக்தி வழிபாட்டில் ஈடுபாடு கொண்டிருந்தார் 'சர்வம் சக்திமயம் ஜகத்' என்ற தத்துவம்தான் பாரதியாரின் கொள் கையாக அமைந்திருந்தது. ''மூன்றுகாதல்'' என்ற பாடலில் மூன்றுவதாக அன்னை பராசக்தியின் மீது காதல் கொண்டதா சக் கூறுவர். பராசக்தி ஒருநாள் இரவில் வருகின்றாள். கன்னிவடிவமாக வருகின்றாள். இவளைக் கண்டகளிப்பில் பாடுகிறார்.

''அன்னை வடிவமடா! இவள்
ஆதிபராசக்தி தேவியடா — இவள்
இன்னருள் வேண்டுமடா — பின்னர்
யாவும் உலகில் வசப்பட்டுப்
போமடா!''

என்று எக்களிப்புடன் தன் மகிழ்ச்சிப் பெருக்கை வெளியிடுகின்றார். வாணி, சீதேவி, பார்வதி இம்மூன்று தேவியரும் ஒன்றாக இலங்குபவளே 'மாதாபராசக்தி' என்பது கவிஞரின் கொள்கையாகும்.

நவராத்திரிப் பாட்டில்,

''மாதாபராசக்தி வையமெல்லாம்
நீ நிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப்
பாரினிலே''

என்றுபாடுகின்றார்

காளிப்பாட்டில்,

யாதுமாகி நின்றாய் காளி
எங்கும் நீ நிறைந்தாய்
நீது நன்மை யெல்லாம் காளி
தெய்வ லீலையன்றே''

''யாதுமாகி நின்றாய் காளி
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மையெல்லாம் — நின்றன்
செயல்களன்றியில்லை''

என்று பாடுகின்றார்.

''எல்லாம் சக்திமயம்'' என்றகருத்துப் பாரதியின் பெரும்பாலான தெய்வீகப் பாடல் களிலிருந்து தெளிவாகின்றது.

''துன்பமில்லாத நிலையே சக்தி
தூக்கமில்லாக் கண்விழிப்பே சக்தி
அன்பு கனிந்த கனிவே சக்தி
ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி
இன்பமுதிர்ந்த முதிர்வே சக்தி
எண்ணத் திருக்கும் எரியே சக்தி
மூன்பு நிற்கின்ற தொழிலே சக்தி
முத்தி நிலையின் முடிவே சக்தி''

என்ற வரிகளிலும், இதனைத் தொடர்ந் துவரும் பாடல்களிலும் சத்தியின் பரிணமம் பல்வேறு விதமாகக் காட்டப் பெறுகின் றது.

முத்தாய்ப்புக் கவியாக,

''வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
விண்ணையளக்கும் விரிவே சக்தி
வாழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி''

என்று பாடிக்களிக்கின்றார் பாரதியார்.

''பூதம் ஐந்தும் ஆனாய் — காளி
பொறிகள் ஐந்தும் ஆனாய்
போதமாகி நின்றாய் — காளி
பொறியை விஞ்சி நின்றாய்''

என்று காளிப்பாட்டுப் பாடும்போது அன் னையானவள் பஞ்சேந்திரியங்களாகவும் நிற் கின்றாள், அவற்றைக் கடந்தும் நிற்கின் றாள் என்றும் பாடுகின்றார். எல்லாத் தொழில்களும் செயல்களும் சக்தி தேவி யின் அருளால்தான் நடைபெறுகின்றன என்று நம்புபவர் பாரதியார். இதனாலே தாம் படைத்த கவிதைகளின் மூலகாரணி யும் சத்திதான் என்பதை அழுத்திக் கூறு கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுங் கவிதை பராசக்தியாலே
செய்யப்படுங்காண்'' என்று தாம்
படைக்கும் கவிதை நாளும் அன்னை பரா
சக்தியின் அருளால்தான் வெளிவருகுன்றன
என்று கூறுகின்றார்.

'பாட்டினிலே சொல்லுவதும் அவள்
சொல்லாகும்
பயனின்றி உரைப்பாளோ? பாராய்
நெஞ்சே''

என்று ''பாடுவதும் அவள் அருளே'' என்று
உணர்த்துகின்றார். ''பாட்டுத்திறத்தாலே
இவ்வையத்தைப் பாலித்திடல் வேண்டும்''
என்று தமது 'பேராசையை' வெளியிடுகின்
றார். ''ஓம்சக்தி'' என்ற பாடலில், பரா
சக்தியைத் தமிழ் வாணியாகப் பாவித்துப்
பாடுகின்றார்.

''வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொரு
ளாக விளங்கிடுவாய்
தெள்ளு கலித்தமிழ் வாணி நினக்கொரு
விண்ணப்பஞ் செய்திடுவேன்
எள்ளத்தனைப் பொழுதும் பயனின்றி
இராதென்றன் நாவினிலே
வெள்ளமெனப் பொழிவாய் சக்திவேல்சக்தி
வேல், சக்திவேல் சக்திவேல்''

என்று வேண்டுகின்றார்.

சக்திவழிபாடு பாரதியின் மூச்சாக
அமைகின்றது. அதுவே பேச்சாகவும் கவி
தையில் வழிந்தோடுகின்றது.

''உயிரெனத் தோன்றி
உணர்வு கொண்டேவளர்ந்
தோங்கிடும் சக்தியை
ஓதுகின்றோம்
பயிரினைக் காக்கும்
மழையென எங்களைப்
பாலித்து நித்தம்
வளர்க்க வென்றே''

என்று வையமுழுதும் படைத்தளிக்கின்ற
அன்னை பராசக்தியை வழுத்துகின்றார்.

பாரதியார் தன் உடல் பொருள்
ஆவியனைத்தையும் சக்திதேவிக்கே சமர்ப்
பணமாக்கி விடுகின்றார். சக்திதிருப்புகழ்
பாடலில்,

''சக்தி சக்தி வாழி என்றால்
சம்பத்தெல்லாம் நேராகும்
சக்தி சக்தி என்றால் சக்தி
தாசன் என்றே பேராகும்''

என்று சக்திதேவியை வாழ்த்தியும். தன்
னைச் 'சக்திதாசன்' என்றும் கூறிக்கொள்
ளுகின்றார். காளிப்பாட்டில் சக்தியையும்
தன்னையும் ஐக்கியப்படுத்திக்கொள்கின்றார்.

'இன்பமாகிவிட்டாய் – காளி
என்னுளே புகுந்தாய்
பின்பு நின்னையல்லால் – காளி
பிறிது நானும் உண்டோ'

என்ற பாடலில் இக்கருத்தினைக் காணலாம்.

அறிவுக்கும் அப்பால் உணர்ச்சிக்கும்
உள்ளத்திற்கும் அப்பால் 'அது இது' என்று
விளக்க முடியாத, சுட்டிக்காட்ட முடியாத
ஒரு சக்தி இருக்கிறது. அது எல்லாவற்றை
யும் நடத்தி வைக்கிறது. அது ஆதியாய் –
அநாதியாய் உள்ளது என்பதை முதன்
முதல் கண்டு கொண்டது வேத வேதாந்தி
களான இந்திய முனிவர்களின் உள்ளம்தான்.
இதனைப் பாரதியார் 'காவடிச்சிந்திலே'
'மகாகாளியின்' புகழ் பாடுகையில் வெளி
யிட்டிருக்கிறார்.

''காலமாம் வனத்தில் அண்டக்
கோலமாம் மரத்தின் மீது
காளி சக்தி என்ற பெயர்
கொண்டு - ரீங்
காரமிட்டுலவும் ஒரு
வண்டு''

என்று அதிசயமாய்த் தொடங்குகிறது
இப்பாட்டு.

இந்தக்காளி - சக்தி - ஆதியாய் அநாதி
யாய் - அகண்ட அறிவாய் இருக்கிறதாம்.
இவளுக்கு அன்பு வடிவமுண்டு, கோரவடி
வமுண்டு, இன்பவடிவமுண்டு, துன்பவடிவ
முண்டு. இவளை 'வீரசக்தி' என்று கருது
வதில் பாரதியாருக்கு ஒரு விசேட திருப்தி.
இந்த வீர மகாசக்தியின் அம்சமாகிய
'பாரதசக்தி' என்று குமரிமுதல் இமயம்
வரையுள்ள தேசத்தை வணங்கியது பாரதி
யின் உள்ளம்.

Digitized by Noolaham Foundation.

பாரதியார் ஒரு சமயம் காளியிடம் சிலவரங்கள் கேட்டார். எண்ணும் காரியங்களில் வெற்றி வேண்டும். தொழில் புரியப்பெரும் நிதியம் வேண்டும். அறிவுத் தெளிவு வேண்டும். நித்தம் வயிற்றை நிறைத்துக்கொண்டு சிறுகதைகள் பேசிச் சிறுமைகள் செய்து மாண்டுபோகும் வாழ்க்கை வேண்டாம். எல்லாவற்றிற்கும் மேலாக பல பண்களில் 'கோடிவகையின்பம்' காட்டும் பாட்டுத்திறன் வேண்டும் என்றார்.

ஒருமைப்பாட்டுணர்வு கொண்ட பாரதியார் இந்திய தேசமுழுவதையும் 'பாரத நாடு' என்ற தாயாகப் பாவித்துப் பாடியுள்ளார். ஒரு குலமாக வாழவேண்டும் என்று கருதும் பாரதியார் பாரத சக்தியைக் 'குலசக்தி' என்று குறிப்பிடுவதையும் காண்கிறோம்.

"நியமம் எல்லாம் சக்தி
நினைவன்றிப் பிறிதில்லை
நெறியுண்டு குறியுண்டு
குலசக்தி வெறியுண்டு"

என்று பாடுகின்றார். □

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையாள் இட்டிடையில்
மின்னிப் பொலிந் தெம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி யவள்நமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

—திருவெம்பாவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு பாட்டுக்கள்

இ முருகையன், M, A.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

பாரதியார் கடவுள் வணக்கப் பாட்டுகள் பலவற்றைப் பாடியுள்ளார். பராசக்தி பேரில் அவர்பாடிய பாட்டுகளே தொகையில் அதிகம். பராசக்தியை மகா காளியாகவும் கலைமகளாகவும், திருமகளாகவும் வள்ளியாகவும், மலைமகளாகவும் இன்னும் பிற மூர்த்தங்களாகவும் கண்டு அப்பாட்டுகள் இயற்றப்பட்டுள்ளன. முத்துமாரி அம்மை வடிவிலே அமைந்த சக்தியையும் பாரதியார் பாடியிருக்கிறார். 'முத்துமாரி', 'தேச முத்துமாரி' என்னும் மகுடத்தில் இரண்டு பாட்டுகள் உள்ளன.

இந்த இரண்டு பாட்டுகளையும் சற்றே உற்று நோக்குவோம்.

முத்துமாரி அம்மை பற்றிய ஐதிகங்கள் காத்தான் கூத்திலே விரிவாகப் பேசப்படுவன. அம்மையின் சரிதை கூறும் வேறு நெடும்பாட்டுகளும் உள்ளன. இவை நாட்டார் பாட்டு மரபில் அமைவன. இந்த ஐதிகங்களின் படி, சிவனுருக்கு மச்சாள் முறையில் முத்துமாரியம்மை பேசப்படுகிறாள். அவள் சிவபெருமானை 'அத்தார்' என்று விளிப்பதையும் பார்க்கிறோம்.

அத்துடன் அம்மைநோய், பொக்குளிப்பான் முதலான வியாதிகளை ஏவி விடுவதும் அவற்றை நீக்குவதும் ஆகிய ஆற்றல்களையுடைய தேவதையாக அவள் உள்ளாள். பொங்கல் பூசைகள் செய்வதன் வாயிலாக நோய் நீக்கமும் சுகவாழ்வும் ஆகிய நலன்கள் கிட்டுகின்றன.

தாய்த் தெய்வமாகிய முத்துமாரி இரக்கம் உள்ள தாய் மட்டுமல்ல; கண்டிப்பான தாயாகவும் உள்ளாள். தவறுகள் செய்யும் போது அதனைச் செய்வோர் மீது சீற்றங் கொள்வாள்; சாபமும் கொடுப்பாள். உரிய வாறு பூசனை செய்து பிரீதிப் படுத்தினால்

Digitized by Noolaham Foundation.

அதற்கு மகிழ்வாள்; வேண்டுகோள்களை நிறைவேற்றுவாள்; வரங்களையும் அருளுவாள். நாம் முன்னர் குறிப்பிட்ட நாட்டார் மரபுக் கதைகளிற் பேசப்படும் முத்துமாரி அம்மையின் பண்புகள் இவையாகும்.

பாரதி பாட்டில் வரும் முத்துமாரி எப்படிப்பட்டவள்?

உலகத்து நாயகியாகப் பாரதியார் முத்துமாரி அம்மையைப் பார்க்கிறார். 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்றார் வள்ளுவர். உலகின் முதல்வன் என்று கடவுளை அவர் வாழ்த்துகிறார். குணங்களையும் குறிகளையும் கடந்ததாகிய அந்தப் பரம்பொருள் 'முதல்வன்' என ஆண்பால் வாய்பாட்டிலே சுட்டப்படுகிறது. முதல்வன் என்பவன் நாயகனே. வள்ளுவர் கடவுளை உலகத்து நாயகனைக் கொண்டார். தாய்த் தெய்வ வழிபாட்டிற் பெரிதும் ஈடுபாடு கொண்டவர் பாரதியார்; அவர் பெரும்பாலும் கடவுளை உலகத்து நாயகியாகக் காண்கிறார். முத்துமாரிப் பாட்டுகள் இரண்டிலும் முத்துமாரி அம்மையை ஆதி பராசக்தியின் திருவடிவமாகக் கருதியே பாரதியார் அவளைப் போற்றுகிறார்.

முத்துமாரி உலகத்து நாயகி 'அவள் பாதங்களைச் சரண் அடைகிறேம்' என்று பாரதியார் கூறுகிறார். அவ்வாறு சரண் அடைந்து ஒரு பெரிய முறைப்பாட்டை முன் வைக்கிறார்.

என்ன முறைப்பாடு அது?

நம்முடைய மனங்களிலே மாசுகள் பல படிந்துள்ளன; குற்றங்கள் பல குடி கொண்டிருக்கின்றன அந்தக் குற்றங்களை நீக்குதல் வேண்டும். இது தான் பாரதியாரின் முறைப்பாடு.

துணிகள் அழுக்கடைந்தால், சோப்புப் போட்டுத் துவைக்கிறோம். பழங்காலத்திலே ஒரு வகை உவர் மண்ணைப் பயன் படுத்தினார்கள். துணி அழுக்கடைந்தால் அதை நீக்குவதற்கு உவர் மண் உண்டு. தோல்களில் உள்ள அழுக்கை நீக்குவதற்குச் சாம்பல் உண்டு; மணிக்கற்களைப் பட்டை தீட்டுவதற்கு அவற்றைச் சாணை பிடிக்கலாம். இப்படி அழுக்குகளை நீக்கும் உபாயங்கள் பல; அவற்றை நாம் அறிவோம். ஆனால், மனித மனங்களில் உள்ள அழுக்கை நீக்குவது எப்படி? அதற்குத்தான் ஓர் உபாயமும் நமக்குப் புலப்படவில்லை.

'மனம் வெளுக்க வழி இல்லை
— எங்கள் முத்து
மாரி அம்மா, எங்கள் முத்துமாரீ!'

என்று பாரதியார் முறையிடுகிறார். அவர் மேலும் பாடுகிறார்.

'பிணிகளுக்கு மாற்றுண்டு
— எங்கள் முத்து
மாரி அம்மா, எங்கள் முத்துமாரீ!
பேதைமைக்கு மாற்றில்லை
— எங்கள் முத்து
மாரி அம்மா, எங்கள் முத்துமாரீ!
அணிகளுக்கோர் எல்லை இல்லாய்
— எங்கள் முத்து
மாரி அம்மா, எங்கள் முத்துமாரீ!
அடைக்கலம் இங்குனைப் புகுந்தோம்
— எங்கள் முத்து
மாரி அம்மா, எங்கள் முத்துமாரீ!'

பேதமை என்பது அறியாமை அதுவே அஞ்ஞானம். அதுவும் மனிதர்களின் எதிரி.

மன மாசுகளும் அறியாமையும் விடுதலைக்கு எதிரிகள். விடுதலைக்குத் தடையாக உள்ள கட்டுகளை அல்லது பிணிப்புகளைப் 'பாசங்கள்' என்று குறிப்பிடுவது மரபு. கடவுள் இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியவர். உயிர்கள் பாசங்களை நீக்கி விடுதலை பெற வேண்டும். அதுவே வீடு பேறு; விடுதலை. இவ்வாறு ஆன்மிக நாட்டமுள்ள தத்துவ ஞானிகள் வற்புறுத்துகிறார்கள்.

பாரதியாரும் இந்தப் பாச நீக்கம் பற்றிப் பாடுகிறார். 'தேச முத்துமாரி' என்னும் பாட்டிலே இப்படி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாடியுனைச் சரண் அடைந்தேன்
பாசம் எல்லாம் கலைவாய்
கோடி நலம் செய்திடுவாய்
குறைகள் எல்லாம் தீர்ப்பாய்'

பாசத்தினாலே கட்டுப்பட்ட உயிர்களுக்கு மட்டுப்பாடுகள் பல உண்டு. அந்த மட்டுப்பாடுகள் மனக்கலக்கங்களை உண்டு பண்ணுகின்றன. இந்த மனக்கலக்கங்கள் தெய்விகப் பண்புகளுக்கு எதிர்மாறானவை. தெய்விகத்துக்கு விரோதமானது அரக்கத் தனம். தெய்வங்களின் பகைவர்களாக அரக்கர்களையும் அசுரர்களையும் படஞ் செய்வது மரபு. அந்த மரபின்படி, 'கலகம் செய்யும் அரக்கர்கள் பலர் நமது கருத்தின் உள்ளே புகுந்து விட்டார்கள்' என்று பாரதியார் முத்துமாரி அம்மையிடம் முறையிடுகிறார்.

உலகின் அமைதி கெடுவது கலகங்களினால். நீதி நெறி குலையும்போது கலகங்கள் தோன்றுகின்றன. இவற்றை மூட்டி விடுகிறவர்கள் அரக்கர்கள். இவர்களின் அட்டகாசங்கள் தீரவேண்டும். முத்துமாரி அம்மையிடம் பாரதியார் இப்படி முறையிடுகிறார்.

இந்த அரக்கர்கள் கருத்தின் உள்ளே புகுந்துவிட்டார்கள் என்று பாரதியார் சொல்வதனால், இவர்களும் மனத்திலே தோன்றும் மாசுகளே என்பது வெளிப்படை. பொறுமை, சினம், ஆதிக்கவெறி – இவற்றில் விளையும் கொடிய உள்நோக்கங்கள் – இவை யாவற்றையும் கருதியே பாரதியார் தம்முடைய பாட்டிலே 'அரக்கர்' என்னுஞ் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

பொறுமையும் சினமும் ஆதிக்க வெறியும் கொடூர நெறியும் எதனால் உண்டாகின்றன? தெளிந்த அறிவு இல்லாதபடியாலேதான் இந்த மனமாசுகள் தோன்றுகின்றன. அறியாமை – பேதமை – தான் இவற்றுக்கு வித்து. இந்த அறியாமை நீங்க வேண்டுமென்பதே பாரதியாரின் வேண்டுகோள். 'முத்துமாரி'ப் பாட்டில் அவர் கோரும் வரம் இதுதான்.

'தேசமுத்துமாரி' என்னும் மற்றப் பாட்டிலும், பாசநீக்கம் பேசப்படுகிறது. 'பாசம் எல்லாம் கலைவாய்' என்னும் சொற்களில் அது தெளிவாகத் தெரிகிறது. அத்துடன் கவலை, துன்பம், பயம் ஆகிய மூன்றையும் நீக்கவேண்டும் என்றும் முத்துமாரி அம்மையிடம் பாரதியார் முறையிடுகிறார்.

'எப்பொழுதும் கவலையிலே இணங்கி
நிற்பான் பாவி
ஒப்பி உனதேவல் செய்வேன்
உனதருளால் வாழ்வேன்
சக்தி என்று நேரம் எல்லாம் தமிழ்க்
கவிதை பாடி
பக்தியுடன் போற்றி நின்றால், பயம்
அனைத்தும் தீரும்'

இவை நான்கும் தேசமுத்துமாரி' என்னும் பாட்டில் வரும் வரிகள். மேலும் இரு வரிகள் பின்வருவன-

'துன்பமே இயற்கை எனும் சொல்லை
மறந்திடுவோம்
இன்பமே வேண்டி நிற்போம் யாதும்
அவள் தருவாள்'

கவலை என்பது மனத்திலே தோன்றுவது 'மனக்கவலை' என்றார் வள்ளுவரும்.

துன்பம் வருத்தம் என்பன உடல் நோயையும் உள்ளடக்கும். நோய் நீக்கத்துக்கும் முத்துமாரி அம்மை அருள் புரிதல் வேண்டும் என்பது பாரதியார் கருத்தாகும்.

பய நீக்கத்துக்கும் அம்பிகையின் அருளே உதவும் என்று பாரதியார் உறுதி கூறுகிறார். பயமும் ஒருவகை நோய்தானே!

இனி சரண்புகுதல் என்ற கருத்து நாம் எடுத்து நோக்கிய பாட்டுகள் இரண்டிலும் வருகிறது.

'நம்பினோர் கெடுவதில்லை; நான்கு
மறைத் தீர்ப்பு.
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக
வரம் பெறலாம்'

இவையே இரண்டாவது பாட்டின் இறுதி அடிகள்.

Digitized by Noolaham Foundation.

முத்துமாரியைச் சரண் அடைதல் வேண்டும். அங்ஙனம் சரண் அடைந்தால் உடல் நோயும் மனக்கவலைகளும் திரும்; பயம் அகலும்; இன்பங்கள் யாவற்றையும் எய்தலாம். கடவுள் வழிபாட்டில் ஈடுபடும் அனைவரும் பெரும்பாலும் கோரும் வரங்களே இவை. இவை ஒரளவுக்குத் தனித்தனி மனிதர்களின் குறைபாடுகளையும் தேவைகளையும் மையமாக்கி எழும் கோரிக்கைகள்.

உலகத்தின் நன்மையைப் பரந்த அளவிலே மனங்கொண்ட கவிஞராகையால், பாரதியார் அரக்கத்தனங்கள் அழிக்கப்படுதல் வேண்டும் என்னும் வேண்டுகோளையும் முதன்மைப் படுத்தியுள்ளார். கலக்கத்துக்குக் காரணமான அரக்கர்களை ஒழித்துக் கட்டவேண்டும். முத்துமாரி அம்மையிடம் நமது கவிஞர் முன்வைக்கும் கோரிக்கைகளுள் முக்கியமானது இது.

நீதியை வற்புறுத்தி வற்புறுத்திப் பழக்கப்பட்டுப் போனவர் அல்லவா பாரதியார்!

□

விண்ணவர் வணங்குத் தேவி
விந்தையின் மூலம் போற்றி
விரிமலர்க் கண்ணன் தேவன்
விரும்பிடும் நங்காய் போற்றி
எண்ணிய படியே யுன்னை
ஏத்தினேன் போற்றி போற்றி
இசைபட வாழ வைப்பாய்
இலக்குமி போற்றி போற்றி.

ஆதிசங்கரர் கனகதாரா தோத்திரம்
தமிழில் - கண்ணதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தில் நிகழும் கும்பாபிஷேகமும் நாமும்

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

இறைவன் எங்கும் நிறைந்தவன்; எல்லாம் வல்லவன். அத்தகைய பரம்பொருளாகிய இறைவன் ஆன்மாக்களுக்கு அருள் புரிவான் வேண்டித் தெய்வீக சாந்நித்தியம் கொண்டெழுந்தருளும் இடமாக விளங்குபவை ஆலயங்கள். ஏனைய இடங்களைவிட ஆலயங்களில் இறைவனை வழிபடுவதனால் எமது மனம் லயப்பட்டு பக்குவமடையவாய்ப்பேற்படுகின்றது. ஆலயங்கள் பக்தி நெறிக்கு வழிகாட்டும் புனித இடங்களாக மிளிர்ந்து எமது சமய வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்ற காரணத்தால் எமது முன்னோர்கள் ஊர்கள் தோறும் கோயில்கள் அமைத்து இறை வழிபாட்டினை மேற்கொண்டு வந்தனர்.

பண்டைய மக்கள் தம்மைச் சூழ விளங்கிய இயற்கைச் சக்திகளுக்குத் தெய்வீக முக்கியத்துவம் கொடுத்து வழிபடலாயினர். ஐம்பெரும் பூதங்கள், சூரியன், சந்திரன், நதி, மலை போன்ற இயற்கை அம்சங்கள் தெய்வீக நிலையில் வழிபாட்டுக்குரியவையாயின. திருக்கோயிலில் இத்தகைய இயற்கைச் சக்திகளுக்குரியவனுகிய இறைவனின் சின்னமாகத் திருவுருவ வழிபாடு சிறப்படைந்தது. சாதாரண நிலையில் உள்ளவர்களும் இத்தகையவழிபாட்டினால் சமயவுணர்வு மிக்கவர்களாக விளங்கினர். தெய்வ நம்பிக்கையும் வழிபாட்டு முறைகளும் வளர்ச்சியடைய கோயில்களின் தேவைகளும் அதிகரித்தன

Digitized by Noolaham Foundation.

எமது சமயத்திலே இறைவனுக்கு இரு நிலைகள் சிறப்பாகக் கூறப்படுகின்றன. அவை சொரூபம், தடத்தம் எனப்படுவன. மனம் வாக்கு, காயம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டது சொரூபம் ஆகும். தடத்த நிலையில் இறைவன் மனம், வாக்கு காயம் ஆகியவற்றுக்கு உட்பட்டவனாக அருள் புரிவான். இறைவன் தடத்தநிலையில் கோயில் கொண்டெழுந்தருளும் ஆலயத்தின் அமைப்பு எமது உடம்பின் அமைப்போடு ஒத்தது. இவ்வாலயத்தின் கண் பிரதான பகுதியாக விளங்குவது கருவறையாகும். இறைவனை இவ்வாலயத்தில் என்றென்றும் அடியவர்களுக்கு அருள்புரிவான் வேண்டி சாந்நித்தியம் கொண்டெழுந்தருளச்செய்யும் பெருஞ் சாந்தியே கும்பாபிஷேகம் ஆகும். இவ்வைபவத்தின் பின்னர் விக்கிரகங்களினூடே இறைவனுகிய மெய்ப்பொருளை நாம் பக்திப் பெருக்குடன் வழிபட வாய்ப்பேற்படுகின்றது.

'திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னை
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனு
றைவன் ஆங்கே'

என்ற சித்தியார் வரிகள் சிந்திக்கற்பாலன. இவ்வாறு இறை வழிபாட்டிற்கு முன்னோடியாக விளங்கும் நைமித்திகக் கிரியையாகிய கும்பாபிஷேகக் கிரியை உயரிய தத்துவப் பொருளைக் கொண்டு விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வைபவத்தினால் நாட்டிற்கும் மக்களுக்கும் மற்றும் சிவாச்சாரிய, அறங்காவலர் அனைவருக்கும் இறையருள் கிட்டுகின்றது. அண்மைக காலங்களில் எமது பிரதேசத்தின் ஆலயங்கள் தோறும் கும்பாபிஷேக வைபவம் மிகச்சிறப்பாக நடந்தேறி வருகின்றன. இச் சந்தர்ப்பத்தில் கும்பாபிஷேகத்தின் முன்னும் பின்னும் நாம் பின் பற்றவேண்டிய ஒழுங்குகள் பற்றி சிந்திப்பதும் சாலப் பொருத்தமாகும்.

கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் காரணத்தால் அது திருக்கோயில் வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றது. இக்காலப் பகுதிகளிலே பல் வேறு இயற்கைக் காரணங்களால் கோயிலின் பகுதிகள் பழுதடைகின்றன. நித்தியக் கிரியைகளில் தெரிந்தோ தெரியாமலோ குறைகள் ஏற்பட்டுவிடுகின்றன. சில சந்தர்ப்பங்களில் மூர்த்திக்கோ அல்லது பீடத்திற்கோ பழுது ஏற்படுவது உண்டு. மூர்த்தியை எழுந்தருளச் செய்யப்பட்டுள்ள கர்ப்பக்கிரகம், பரிவாரக்கோயில், விமானம், மண்டபம், கோபுரம் ஆகியவையும் பழுதடைந்துவிடுகின்றன. இத்தகைய குறைகளை நீக்கி திருப்பணி செய்து கோயிலை புதுப்பொலிவுடன் விளங்கச்செய்யும் வகையில் கும்பாபிஷேகம் செய்யப்படுகின்றது. கும்பாபிஷேகத்திற்கு முன் நிகழ்வது பாலஸ்தாபன கும்பாபிஷேகமாகும். இறைவன் எழுந்தருளியுள்ள இடங்களை திருப்பணி செய்து புனர்நிர்மாணம் செய்வதற்கு ஏற்றதாக மூர்த்தியை பாலாலயத்தில் எழுந்தருளச் செய்வது இக் கிரியையின் நோக்கமாகும்.

திருப்பணி செய்வதில் கோயில் அறங்காவலரின் அல்லது சபையின் பங்கு அளப்பரியதாகும் சில ஆலயங்களில் அறங்காவலரின் திறமையினாலும் சேவை மனப்பான்மையினாலும் பக்திச் சிறப்பினாலும் திருப்பணிகள் செவ்வனே நிறைவேறுகின்றது. சில இடங்களில் திருப்பணிச் சபை நிறுவி காரியங்கள் மேற்பார்வை செய்யப்படுகின்றன. எவ்வகையிலும் கும்பாபிஷேகத்தின் முன் இருந்த நிலைமாறி கோயில் புதுப் பொலிவு பெற திருப்பணி வேலைகள் முட்டின்றி நிகழ்தல் அவசியமாகும். சிவசிந்தையுடனும், தன்னலங் கருதாதும் இப்பணியில் ஈடுபடுவோர் சிவபுண்ணியப் பலனைப் பெறுவர். தேவையற்ற விதத்தில் கோயிலுக்குரிய பொருளை விரயம் செய்வது சிவநிந்தைக்குச் சமனாகும். சில ஆலயங்களில் முழு வேலைகளும் நிறைவேறுத நிலையிலும் கும்பாபிஷேகம் நிறைவேறிவிடுகின்றது. பின்னர் அத்தகைய வேலைகள் நிரந்தரக் குறையாகவே இருந்துவிடுகின்றன. ஆலயத்தின் சகல நிலையிலும் பூரணப் பொலிவு பெற்று விளங்கச் செய்வது அவசியமாகும். எனவே ஆலயப் பரிபாலகர் சிக்கனம், கண் காணிப்பு ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் இப்பூரண நிலையை அடையச்செய்ப லாம்.

ஆலயங்கள் சிவாகமவிதிப்படி நிர்மா ணிக்கப்பட்டவை. எனவே புனருத்தார ணம் செய்யும் காலங்களில் இம்மரபு வழு வாது திருப்பணிகள் நிறைவேறுவது அவசி யமாகும். முறையாக நிர்மாணிக்கப்பட்ட கோயில்களினுல் நாடு சிரும் சிறப்பும் வள மும் பெற்றுத் திசழும். கும்பாபிஷேகம் நிகழ்த்துவதன் முக்கிய நோக்கங்களில் ஒன்று நித்திய நைமித்திகங்களில் ஏற்படும் குறை களை நிவர்த்தி செய்வதாகும். எனவே கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஆலயத் தில் நித்திய நைமித்தியக் கிரியைகள் ஒழுங் குடன் நடைபெற ஏற்ற ஒழுங்குகள் மேற் கொள்ளுதல் இன்றியமையாதது. சில ஆல யங்களில் கும்பாபிஷேகங்கள் அதி விமரி சையாக நிறைவேறியபின் நித்திய நைமித் திகங்கள் பற்றிய ஒழுங்குகள் கவனிக்கப் படாமல் போய்விடுகின்றன. இதனுல் கும் பாபிஷேகத்தின் முழுப்பலனும் நாட்டுக்குக் கிடைப்பதில்லை என்பதை நாம் உணர்தல் வேண்டும். கும்பாபிஷேகத்தை நிகழ்த்துவதில் உள்ள ஊக்கமும் உற்சாக மும் நித்திய நைமித்தியங்கள் நடைபெறச் செய்வதிலும் அதற்கேற்ற பொருள் வசதி செய்வதிலும் இருத்தல் அவசியமாகும். பண்டைய மன்னர்கள் இத்தகைய கோயில் களை நிர்மாணித்து அவற்றின் நித்திய நைமித்திகங்கள் நடைபெறுவதற்கு ஏற்படுத் திய ஒழுங்குகள் பற்றி நாம் அறிய முடி கின்றது. எனவே கோயில் பரிபாலனத்தில் இந்த அம்சமும் முக்கியமாகக் கவனிக்கப் படவேண்டியதொன்றுகும். கும்பாபிஷேகம் மண்டலாபிஷேகம் ஆகியவை நிறைவேறிய மையால் பெறப்பட்ட பூரணப் பொலிவும் நித்தியபூசைக் குறைவினுல் குறைவுபட இட முண்டு. எனவே பூரணப்பொலிவு பெற்ற எம்பெருமான் ஆலயத்தை குறை ஏற்படா வண்ணம் முறையாகப் பேணுவதில் சிவாச் சாரியர், அறங்காவலர், ஊர்மக்கள் கூடிய கவனம் எடுத்தல்வேண்டும்.

மகாகும்பாபிஷேகத்தின் போது தெய் வத்திற்கு அடுத்தநிலையில் சிறப்பிடம் பெறு பவர் சிவாச்சாரியர் ஆவர். சிவாச்சாரிய ரது லட்சணத்தைப்பற்றி சிவாகமங்கள் விரிவாக எடுத்துக்கூறுகின்றன. ஆத்மார்த்த நிலையிலும், பரார்த்த நிலையிலும் பூசை நிகழ்த்தி திருக்கோயிலில் அருட்பிரவாகம் பெருகச் செய்யும் வகையில் இவரது பணி சிறந்து விளங்குதல் வேண்டும். ஆச்சாரி யரது கிரியா விசேடத்தினுல் மக்கள் உள் ளத்திலே பக்தி பெருக வழி ஏற்படுகின்றது. எனவே சிவாச்சாரியர் சிவாகம கிரியா நுட்பங்களை நன்கு அறிந்தவராகவும், வேத விற்பன்னராகவும் திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் ஆகியவற்றிலே உரிய பயிற்சி பெற்றவராகவும் திகழுதல் மிக அவசிய மாகும், சிவபூசை, ஜபம், ஆகிய சமய அநுட்டானங்களை முறைப்படி ஒழுங்காக செய்பவராக திகழ்தல் வேண்டும். கும்பா பிஷேக வைபவம் சிவாச்சாரியர் பலரது கைங்கரியத்தினுல் நிறைவேற்றப்பட வேண் டியதொன்றுகும். எனவே இது ஒரு கூட்டு முயற்சியாகும். இவ்வைபவத்திலே அனை வரும் தத்தமக்கு வழங்கிய கடமைகளை ஏற்று மனங்கோணுது பங்குகொள்ளுகின்றபக்குவம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். சக குருமாரிடத்தில் அன்புடனும் பண்புடனும் பழகுவதிலும், புதிய விடயங்களை அறிந்து கொள்வதிலும் ஈடுபாடு உடையவராய் இருத்தல் வேண்டும். பிரதிஷ்டா பிரதம குரு, சர்வபோதகாச்சாரியர். ஆகியோர் கும்பாபிஷேகத்தின் நடை முறை ஒழுங்குகளுக்குப் பொறுப்பானவர் கள் ஆவர். இவர்களது வழிகாட்டலில் ஏனையோர் மனமுவந்து உடனிருந்து ஒத்து ழைத்தல் அவசியமாகும். மற்றும் ஏனைய கும்பாபிஷேக குருமார், சர்வசாதகாச்சா ரியர் போன்றோர் கும்பாபிஷேகக் கிரியை களில் முக்கிய இடம் பெறுபவர்கள். கும் பாபிஷேகக் கிரியைகளில் நல்ல அநுபவ மும் தேர்ச்சியும் பயிற்சியும் மிக்கவரே பிரதிஷ்டா குருவாக திகழ உரித்துடைய வராவர். ஏனைய இளம் தலைமுறையினர் இத்தகைய அனுபவம் மிக்க பிரதிஷ்டா குருமாரின் வழிகாட்டலில் பயிற்சி பெற்ற பின்னரே தாம் அப்பொறுப்பினை வகிக்க முயல்தல் வேண்டும். குரு பக்தி குருமாரி டையே சிறப்பாக இருத்தல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.

தம்மில் முதிர்ந்தோர் இடத்தும், அநுபவம் மிக்கோர் இடத்தும், கல்வி கேள்விகளில் சிறந்தோர் இடத்தும் குரு பக்தியும் மரியாதையும் உடையோராய் திகழ்தல் குருத்துவ நிலையில் பெரிதும் வேண்டற்பாலது. கும்பாபிஷேகக் கிரியையின்போது யுக்தி, அனுபவம் மிகவும் தேவைப்படும். மந்திரம் கிரியை, பாவனை ஆகியவற்றிலே நல்ல தேர்ச்சி வேண்டும் பத்ததிவழி கிரியைகளை விளங்கி நடைமுறைப்படுத்துவதில் நல்ல பயிற்சி அவசியமாகும். கும்பாபிஷேகம் மட்டுமன்றி திருக்கோயில்களில் நடைபெறும் ஏனைய நைமித்தியங்களுக்கும் இவை பொருந்தும். ஆச்சாரியர் ஒழுக்கம், பக்தி, தெய்வ நம்பிக்கை உள்ளவர்களாகத் திகழ்தல்வேண்டும். அமைதி, நிதானம், பொறுமை, கோபமின்மை, ஏனையோரிடத்தில் அன்புடன் பழகுதல் போன்ற நற்குணங்கள் சிவாச்சாரியரது தகைமையினை மேலோங்கச்செய்வன. இவை யாவற்றிற்கும் மேலாக காலத்தின் பெறுமதியினை உணர்ந்து கிரியைகளை உரிய கால அவகாசத்துள் நிகழ்த்தும் திறமை பெற்றிருத்தல் அவசியம். நேர ஒழுங்கில் நடைபெறும் கிரியைகள் தெய்வ சாந்நித்தியத்தை மேலும் பொலியச்செய்ய துணைசெய்யும்.

அறங்காவலர்கள், சிவாசாரியரின் வாழ்க்கை நலம்பெற அவர்களை நன்கு உபசரித்து போஷித்து கௌரவித்தல் அவசியமாகும். சிவாச்சாரியர் திருக்கோயில் கைங்கரியங்களை இடையூறின்றி நிகழ்ந்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்தல் அவர்களது பிரதான கடமையாகும். இவ்வாறு சிறப்புடன் திகழும் சிவாச்சாரியர் நிகழ்த்தும் கும்பாபிஷேகக் கிரியை மற்றும் நித்திய நைமித்திகக் கிரியைகள் மக்களது உள்ளத்திலே உயர்ந்த பக்தி அனுபவத்தை ஏற்படுத்த வல்லன.

திருக்கோயிலில் வழிபடும் அடியவர்களும் கும்பாபிஷேகம் மற்றும் நித்திய நைமித்திகங்கள் நடைபெறும் போதும் உரிய ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டவர்களாவர். திருக்கோயிலுக்கேற்ற சேவைகளைச் செய்வதிலும் அதன் தூய்மை பேணுவதிலும் துணைபுரிதல் வேண்டும். ஆலய சேவை மனப்பக்குவத்திற்குப் பெரிதும் வழிவகுப்பதாகும்.

நாவலர் பெருமான் தனது காலத்தில் சிவாகம மரபின்படி திருக்கோயிற் பணிகள் சிறந்தோங்க வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டவர். அதற்கென முன்னின்று உழைத்தவர். சிவாச்சாரியர், அறங்காவலர், அடியார்கள் ஆகியோரிடத்தே காணப்பட்ட குறைகளை அஞ்சாமல் எடுத்துக்கூறி தக்கமுறையில் அவை களையப்படவேண்டும் என்று வற்புறுத்தியவர். ஊர்தோறும் திகழுகின்ற திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் நிகழ்ந்து வரும் இவ்வேளையில் அதன் தாற்பரியத்தை உணர்ந்து திருக்கோயில் வளர்ச்சியில் பங்குகொண்டு எமது சமய மரபினைப் பேணிப் பாதுகாப்பது எம்மவர் கடனுமாகும். தன்னலம் கருதாது சிவசிந்தையுடன் கருமமாற்றும் எவரும் இறையருளுக்கு உரித்துடையவராவர். இத்தகைய உயர்ந்த நிலைக்கு ஆலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேகங்கள் எம்மை இட்டுச்செல்லுமாயின் அதுவே எமக்குக் கிட்டும் திருவருளாகும் எனில் மிகையில்லை. சிவாச்சாரியர், அறங்காவலர், ஸ்தபதிகள், பணியாட்கள், மற்றும் மக்கள் அனைவரையும் அன்பினால் இணைத்துச் செயற்படும் தலங்களே ஆலயங்கள் என்ற உண்மையை கும்பாபிஷேகத்தின் மூலம் நாம் உணர வழியேற்படுகின்றது. குப்பாபிஷேகத்திற்கு முன்னும் பின்னும் பணியாற்றும் அனைவரும் இறைவனது அருளை மனதிற்கொண்டு செயலாற்றுதல் மிகவும் அவசியமாகும் என்பதை நாம் அனைவரும் உணர்தல் வேண்டும். □

183621

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரி அம்மன் வழிபாடு

கலாநிதி இ. பாலசுந்தரம்
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மாரி என்பது மழையையும் வளப் பத்தை குறிக்கும் சொல்லாகும். உலகத் தோற்றத்திற்கு மூலகாரணமானது கருவளம் ஆகும். அக்கருவளத்தைத் தருபவளாகவும், அதனைப் பேணிப்பாதுகாப்பவளாகவும் மாரி அம்மன் கருதப்படுகிறாள். கருவளப்பம் அன்னையிடமே காணப்பட்டது. எனவே கரு வள வழிபாட்டுடன் அன்னை வழிபாடு இணைந்து கொண்டது. அன்னை வழிபாடு வரலாற்றுக் காலத்திற்கும் முந்தியதாகக் கருதப்படுகின்றது. கி. மு. 5000 ஆண்டுக ளுக்கு முற்பட்ட நாகரிகத் தளங்களான மொகஞ்சதாரா ஹரப்பா வெளிகளிலும் அன்னை வழிபாடு நிலவியதற்கான சான்று கள் கிடைத்துள்ளன.

உலகத் தோற்றத்திற்கும், அதன் பெருக் கத்திற்கும் சத்தியே முதற் காரணமென ஆசிய ஆபிரிக்க நாடுகளிற் கருதப்பட்டு வந்திருக்கிறது. அன்னைத் தெய்வம் எகிப் தில் இசிஸ் எனவும், சின்ஞசியாவில் சிபில் எனவும், சிரியாவில் அஸ்தாத் எனவும் அழைக்கப்பட்டிருக்கிறாள். பாரதநாட்டுச் சமயவரலாற்றில் சக்திக்கு முதன்மை அளிக் கப்பட்டிருக்கறது. திராவிடரின் முதல்தெய்வம் அன்னையாகும். இந்துசமய வழிபாட்டில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு பெண் தெய்வம் சத்தியாகக் கூறப்பட்டுள் ளது. பெண்தெய்வ வழிபாட்டின் தத்து வ வளர்ச்சி சாக்த சமயம் தோன்றக் காரண மாயிற்று.

சாக்த சமயத்தின்படி உலகமாதாவே முதல் தெய்வம், சக்திக்குப் பல பெயர்க ளும் பெயர்களோடு தொடர்புடைய கதை களுமுள. மாரி. பார்வதி, உமை, துர்க்கை,

Digitized by Noolaham Foundation.

காளி, சாமுண்டி என 70க்கு மேற்பட்ட பெயர்கள் வழக்கிலுள்ளன. சாத்தசமயம் வங்காளத்தின் பெரும் சமயமாகும். வங்க மொழியில் தேவி வழிபாட்டுப் பாடல்கள் அனேகமுள. அவ்வழிபாட்டில் உயர்ந்த பெரியோராக நாம் இராமகிருஷ்ணரையும் அவர் சீடர் விவேகானந்தரையும் அறி வோம். சாக்த வழிபாடு பாரத நாட்டில் பல்வேறு வடிவங்களில் பின்பற்றப்பட்டு வருகின்றது.

தமிழநாட்டில் பண்டைநாள் முதலாக அம்மை, ஐயை (அன்னை) கொற்றவை (வீரத்தாய்) என்ற யெர்களில் அன்னை வழிபாடு இருந்திருக்கிறது என்பதைச் சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை முதலிய இலக்கியங்கள் சான்றுபடுத்துகின்றன. ஈழத்திலும் தமி ழகத்திலும் மாரி, காளி, துர்க்கை முத லான பெயர்களில் அன்னை வழிபாடு மிகவும் பிரபல்யமான முறையில் பெரும்பாலான மக்களால் வழிபடப்பட்டுவருகிறது.

திராவிடரது சமூக ஒழுங்கும் தாய் வழிச் சமூக அமைப்பைக் (Matriachal Society) கொண்டது. ஆரிய சமூகம் தந்தை வழி அமைப்புடையது. ஆதலால் அவர்க ளிடையே ஆண்தெய்வ வழிபாடே மேலோங்கிற்று எனினும் ஆரியரிடம் வாக்கு, உஷா, ராத்திரி, சரஸ்வதி, சந்தியா, பிருதுவி முதலான பெண்தெய்வ தேவதை வழி பாடும் இருந்திருக்கிறது. வேதகாலத்திற் குப் பின்வந்த உபநிடத காலத்தில் பெண் தெய்வம் முதன்மை பெறுவதாயிற்று. கேனே உபநிடதம், சுவேதாச்வதரா உபநி டதம் ஆகியனவற்றில் அன்னை வழிபாடுபற் றிக் கூறப்படுகிறது.

மகாபாரதத்திலும் அன்னை வழிபாடு பற்றிக் கூறப்படுகிறது. அஞ்ஞாதவாசம் புகும் தருமர் துர்க்கையை வழிபடுதலும், யுத்தகாலத்தில் அருச்சுனன் துர்க்கையை வழிபடுதலும் ஈண்டு சுட்டிக்காட்டத்தக்கன. அன்னை வளப்பம் தருபவளாகவும், வெற் றியைத் தருபவளாகவும் போற்றப்பட்ட தோடு, கற்புடைத் தெய்வமாகவும் வழி படப்பட்டமை புலனாகின்றது. சிலப்பதிகார காலத்திலே பத்தினித் தெய்வமாக கண் ணகி அறிமுகப்படுத்தப்படுகிறாள். துர்க்கை வழிபாடுபற்றியும் சிலம்பு கூறுகிறது. துர்க்கை சிங்கவாகனமேறி வருபவள் எனவும் அவளுக்கு கலைமானும் வாகனம் என்றும் சிலம்பிலே குறிப்பிடப்பட்டுள்ளது. குப்தர் காலத்திற் செதுக்கப்பட்ட துர்க்கை சிலைகள் சிங்க வாகனத்தில் ஏறிய கோலத் துடன் காணப்படுகின்றன. இருகரங்கள், நான்கு கரங்கள், எட்டுக் கரங்கள், பத்துக் கரங்கள் கொண்ட துர்க்கை அம்மனைப் பற்றிச் சிலம்பில் வருணனை வருகிறது.

தமிழகத்திலே கிராமங்கள் தோறும் அன்னை வழிபாட்டுத் தலங்களுள்ளன. இவ் வழிபாடு தமிழகத்தில் 14 - 16 ஆம் நூற் றாண்டுகளுக்கிடைப்பட்ட காலகட்டத்தில் உச்சக்கட்டம் அடைந்திருக்கிறது. நவராத் திரி விழாக்களும் இக்காலத்திலேயே பிரபல் யம் பெற்றமையை அறியக்கூடியதாக இருக்கி றது. சகலகலாவல்லிமாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், அபிராமி அந்தாதி என்ற நூல்களும் இக்காலத்திலேயே தோற்றம் பெற்றன. மகாகவி பாரதியார் பல தெய் வங்களை குறித்துப் பாடியிருப்பினும், பரா சக்திக்கே முன்னுரிமை கொடுத்துப் பாடு கிறார். காளியின் ரவுத்திர தாண்டவத்தைத் திருப்புகழ்ச்சந்தக் கவியிலே வருமாறு பாடு கிறார்:

"வெடிபடு மண்டத்திடிபல
தாளம்போட வெறும்
வெளியி லிரத்த களியொடு
பூதம்பாடப் பாட்டின்
அடிபடு பொருளின்
அடிபடுமொலியிற் கூடக்களத்
தாடும்காளி சாமுண்டீ கங்காணி
அன்னை, அன்னை ஆடுங்கூத்தை
நாடச்செய்தாய் என்னை"

சித்தர் பாடல்களையும் நாட்டார் பாடல்களையும் நன்கறிந்த பாரதியார் அத் தப் பாடல் மெட்டுக்களில் பொதுமக்கள் விரும்பத்தக்க வகையிலும் பாடல்களைப் பாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உலகத்து நாயகியே எங்கள்
முத்துமாரியம்மா எங்கள் முத்துமாரி
உன்பாதம் சரண்புகுந்தோம்
எங்கள்முத்து மாரியம்மா எங்கள்
முத்துமாரி"

என்ற பாடலும் பாரதியார் காலத்தி லும்மாரியம்மன் வழிபாடு பிரபல்யம் பெற்றி ருந்தமை உணரப்படுகிறது.

ஈழத்தில் மாரியம்மன் வழிபாடு மிக பயபக்தியுடன் கிராமிய மக்களால் மேற் கொள்ளப்பட்டுவருகின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் மலையகத்திலும் மாரி யம்மன் கோயில்களையும், அவ்வழிபாட்டுச் சடங்கு முறைகளையும் காணக்கூடியதாக வுள்ளன. மாரியம்மன் கோயில்களில் பெரும் பாலும் வேம்பு தலவிருட்சமாக இடம் பெற்றுள்ளது. பச்சைப்பசேல் எனக் காட்சி தரும் வேம்பு கருவளத்துடன் தொடர்பு டைய குறியீட்டு மரமாதலால் (Symbolic-Tree) அதனை மாரியம்மனுடன் தொடர்பு படுத்திப் பாடும் மாரியம்மன் பாடல்கள் அநேகமுள்ளன. மாரியம்மன் சடங்கிலே சோடனை அலங்காரங்களுக்கும், கும்பங்க ளுக்கும் வேப்பிலையே பெரிதும் பயன்படுத் தப்பட்டிருக்கும்.

மாரியம்மன் வழிபாட்டுடன் காத்தவ ராய சுவாமி வழிபாடும் இணைந்திருக்கும். புராணக்கதைவழி காத்தவராய சுவாமி மாரியம்மனின் திருக்குழந்தை ஆகும். இத னோடு இணைந்த புராணக் கதையை காத் தவராயன் கூத்தாக ஆடித்தமது நேர்த் தியை நிறைவேற்றும் பாங்கினை யாழ்ப்பா ணக் குடாநாட்டின் பல பாகங்களிலும், வன்னிப்பிரதேசத்திலும் காணக்கூடியதாக இருக்கின்றது. காத்தவராய சுவாமி வழி பாட்டுச் சின்னமாக மாரியம்மன் கோயில் களில் கழுமரம் அல்லது கழுமரத்தைச் சுட்டும் பீடம் அமைக்கப்பட்டிருக்கும்.

நோய்களைத் தீர்த்து மக்களுக்கு வேண் டிய வளங்களைப் பெருக்கும் சக்தி வாய்ந் தவள் மாரி என்ற நம்பிக்கை மக்களிடம் காணப்படுகின்றது. இந்த நம்பிக்கையின் அடிப்படையில்பொங்கலிடுதல் கரகமாடுதல், காத்தான் கூத்து ஆடுதல், உடுக்கடித்துப் பாடுதல் முதலாம் வழிபாட்டு முறைகளை மக்கள் மேற்கொண்டு வருகின்றனர். அறிவு வளர்ச்சியும், ஆகம முறையிலான பூசனை முறைகளும் மேலோங்கிய இக்காலகட்டத் திலும் மாரியம்மனுக்கு வாமமார்க்கத்தில் பூசை நடைபெறுவதெனின் அது மக்கள் மாரியம்மனிடம் கொண்டுள்ள அதீத பக் தியுணர்வையே காட்டுவதாகும். □

பதுமநேர் முகத்தினளே
பதுமத்தில் உறையுஞ் செல்வி
பாற்கடல் மயக்கும் கண்ணே
பதியின்மேற் பாய்ந்த கண்ணே
போற்றெடுத் தென்மேல் வைத்தால்
பிழைப்பன்யான் அருள் செய்வாயே
பேரருள் ஒருங்கே கொண்ட
பிழையிலாக் கமலத்தாயே.

ஆதிசங்கரர் கனகதாரா தோத்திரம்
தமிழில் – கண்ணதாசன்

Digitized by Noolaham Foundation.

முகூர்த்தப்
பட்டுப்
புடவைகட்கு
சிறந்த
ஸ்தாபனம்



கணேசன் ஸ்ரோர்ஸ்

(201) காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை



அன்பளிப்பு —

டி. எஸ். ஐ. நுகர்வோர் சேவை நிலையம்

281 C, சி. பொன்னம்பலம் வீதி

யாழ்ப்பாணம்.

அம்பாள் கருணை

புகைப்படப் பிரதிகள் உடனுக்குடன்
சகாயமான விலையில்
செய்து கொடுக்கப்படும்.

வருக!

குகன் ஸ்ருடியோ

கண்டி ரோட்டு
சாவகச்சேரி.

அம்பாள் துணை

குடமுழுக்குக் காணும் அம்பாள்
அனைவருக்கும் அருள்புரியப்
பிரார்த்திக்கிறோம்.

கேற் — கிறில் — மின் / ஈய
ஒட்டு வேலைகளுக்கு

ஜனனி என்ஜினியேஸ்

கோவில் முகப்பு
அம்பாள் கோவிலடி.

Digitized by Noolaham Foundation.

அன்னையின் குடமுழுக்கு விமரிசையாக நிறைவேறப்
பிரார்த்திக்கிறேம்



கே. பி. எஸ். போட்டோ & f பான்சி
சிறுவிளான்
இளவாலை.

பட்டுப் புடைவைகள், சூட்டிங், சேட்டிங்
சாரி வகைகள், ஆண் பெண் குழந்தைகளுக்கான
ரெடிமேட் ஆடைகள் ஆகியனவற்றுக்கு

வாருங்கள் !

வரதாஸ் டெக்ஸ்டைல்ஸ்
புதிய சந்தைக் கட்டடம்
(பஸ் நிலையம் முன்பாக)
சுண்ணாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 கரட் தங்க நகை
நவரத்தினக் கற்கள் வகை
வைரக்கல் பரிசோதனை

அத்துடன் நம்பிக்கை

நவநாகரிகத்துக்கு !

இ. வே. கந்தசாமிப் பத்தர்

555/3, காங்கேசன்துறை வீதி
(ஐயனார் கோவிலடி)
யாழ்ப்பாணம்.

தவளக்கிரி அம்பாள் துணை

அன்பளிப்பு—

வெற்றிவேலு தம்பித்துரை (B. V. Sc.)

கால்நடை வைத்தியர்
தஞ்சிட்டிச் சந்தி
அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.

கும்பாபிஷேகம் இனிது நிறைவேறப்

பிரார்த்திக்கிறேம்



புடைவை வியாபாரம்

'நலன்விரும்பி'

புறக்கோட்டை

கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் அம்பாள் கருணை பொழிவாளாக!

தரமான புடைவை வகைகளுக்கு

வருக!




இரத்தினா ஸ்ரோர்ஸ்

180/4, கெயிசர் வீதி
புறக்கோட்டை
கொழும்பு - 11.

Digitized by Noolaham Foundation.




நவக்கிரக நாயகர் சந்நிதி




சண்டீஸ்வரி சந்நிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாகேஸ்வரர் சந்நிதி



வைரவர் சந்நிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய ஈழத்தில் சக்தி வழிபாடு – சில குறிப்புகள்

கலாநிதி சி. க. சிற்றம்பலம்,
தலைவர், வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஈழத்தின் நாகரிகமும் தென்னிந்திய நாகரிகத்தின் பரவலே என்பதை அண்மைக் காலத் தொல்லியற் சான்றுகள் எடுத்துக் காட்டியுள்ளன. இச் சான்றுகள் சிங்கள தமிழ் மொழி பேசுவோரின் மூதாதையர், ஈழத்திற்குக் கி. மு. 3ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பௌத்த மதம் பரவ முன்னர் இந்துக்களாக விளங்கியதையும் எடுத்துக் காட்டியுள்ளன. இவர்கள் இந்துக்களாக விளங்கிஞலும் தமிழ் நாட்டைப் போல் இருவித கலாசாரப் படைகள் இக் கால இந்துமதத்திற் காணப்பட்டன. இதன் அடித்தளமாக இப்பிராந்தியத்திற்கே சிறப்பாக உரிய திராவிட வழிபாட்டு முறைகள், இரண்டாவதாக இவ்வழிபாட்டு முறைகளுடன் வந்து சங்கமித்த வட இந்திய ஆரிய கலாசார அலைகள். இவ் இரண்டின் சங்கமிப்பையே இன்று நாம் காணும் கடவுளரிலும் காணலாம், சிங்கள மக்களின் மூதாதையரிற் பெரும்பாலோர் பௌத்தர்களாக மாறினாலும் நாடெங்கணும் காணப்படும் ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்கள் முன் பொருகால் இவர்கள் இந்துக்களாக விளங்கியதை எடுத்தியம்புவதாக அமைந்துள்ளன. இக் கல்வெட்டுக்கள் கி. மு. 3 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி. மு. 1ஆம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்தவை.

ஒரு கோணத்திற் பார்க்கும் போது தமிழகத்தில் சங்க இலக்கியங்கள் பல எழுந்த காலத்தை இவை சார்ந்தவை கூட. இக்கல்வெட்டுக்கள் பௌத்த மதத்துறவிகளுக்கு வசிப்பதற்கு அளிக்கப்பட்ட குகைத் தானங்களை எடுத்தியம்பினாலும் இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானங்களே வழங்கியோர் குடியிருந்த பெயர்கள், இவர்கள் பௌத்தர்களாக மாறுவதற்கு முன்னர் தழுவிய இந்துமத நம்பிக்கைகளின் எச்சங்களாகவே விளங்குகின்றன. துரதிஷ்டவசமாகப் பௌத்த மதத்தின் மொழி பாளி அல்லது பிராகிருத மொழியாக இருந்ததால் பல தமிழ் வடிவங்கள் அப்படியே இவற்றுள் இடம் பெறவில்லை. பாளி வடிவங்களே இவற்றுட் காணப்படுகின்றன. இப் பாளி மொழியே ஆதியில் பௌத்த மதத்தின் மொழியாக சிங்கள / தமிழ் மக்களின் மூதாதையர் பேசிய திராவிட மொழிகளின் மேல் அமர்ந்து கொண்டதால் தமிழகத்தைப் போன்று இலக்கியங்களைச் சுதேச மொழிகளில் நாம் காணமுடியவில்லை எனலாம். எனினும் சங்கஇலக்கியங்களையும் ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்களையும் ஒப்பிட்டு ஆராயும் போது நம் நாட்டின் ஆதிமக்களின் இந்து சமய நம்பிக்கைகள் தெளிவாகின்றன.

இப் பிராமிக் கல்வெட்டுக்கள் மட்டுமன்றி பௌத்த மத வரலாற்று நூல்களாகிய மகாவம்சம் போன்றனவற்றிலும் அங்குமிங்கும் காணப்படும் எச்சங்கள் ஆதி ஈழத்தில் நிலைத்திருந்த சக்தி வழிபாட்டின் தடயங்களாகின்றன. இவற்றுக்கு மெருகூட்டுவனவாக ஈழத்தின் பல பாகங்களிற் கண்டு பிடிக்கப்பட்டுள்ள சுடுமண் பாவைகள், சிற்பங்கள், நாணயங்களிற் காணப்படும் உருவங்கள் அமைகின்றன. இக் கட்டுரையில் கிறிஸ்தாப்த காலத்திற்கு முந்திய காலப் பகுதியில் நிலைத்திருந்த சக்தி வழிபாடு பற்றிய தடயங்கள் பற்றி மட்டுமே ஆராயப்படுகின்றது.

சக்தி வழிபாடு உலகத்திலேயே மிகப் பழமையானது. ஆதிகாலச் சமுதாய வளர்ச்சியில் வேறெச் சக்தியையும் விடத் தாய்மை வழிபாடே முக்கிய இடத்தினை வகித்தது. விவசாய அபிவிருத்தியிலீடுபட்ட மக்கட் கூட்டத்தினர் விவசாய விருத்தியை அளித்த பூமாதேவியைத் தாயாகக் கண்டனர். தாய்மையின் சிருஷ்டி போன்றே நிலத்தின் விளைவுகளும் அமைந்தன. இதனால் தாயைப் போன்று நிலமகள் உருவாக்கப்பட்டாள். இதனாற் போலும் சில சமூகவியலாளர் சமூக வளர்ச்சியில் பெண் வழிச் சமுதாய அமைப்பே உலகில் ஆதியானதென்றும் இதன் பின்னர் தான் ஆண் வழிச் சமுதாய அமைப்புத் தோன்றியதும் என்பர். அத்துடன் தாய்வழி வரும் உரிமையே பண்டைய சமுதாய வழக்காறும் என்பர்.

ஈழ – தென்னிந்திய நாகரிகங்கள் பெருங் கற்காலக் கலாச்சாரத்திலிருந்து துளிர்த்தாலும் இந் நாகரிகத்தை உருவாக்கிய திராவிட மக்கள் ஆதியில் பெண்வழிச் சமுதாய அமைப்பைப் பேணியவர்களாக இருந்ததாலும் பண்டு தொட்டு பெண்மையைத், தாய்மையைப் போற்றத் தவறவில்லை. சங்க இலக்கியங்களில் 'கொற்றவை' முக்கிய தெய்வமாகப் போற்றப்படுகிறாள். ஈழத்து இலக்கியங்களில், குறிப்பாகப் பாளி நூல்களில் 'கொற்றவை' என்ற பதம் காணப்படாவிட்டாலும் கூட யக்ஷ, நாக வழிபாடுகள் பற்றிய குறிப்புண்டு. இந்திய சமய வரலாற்றை நோக்கும்போது யக்ஷ, நாக வழிபாடுகள் அடிமட்ட மக்களால் போற்றப்பட்ட நாட்டார் வழிபாடாகக் காணப்பட்டமை புலனாகின்றது. இவ்வழிபாட்டின் மேல்தளத்திற்கு திராவிட, ஆரிய வழிபாட்டு முறைகள் கலந்தும் வெளிப்படை, இவ்வாறு கலக்கும் போது யக்ஷ, நாக வழிபாட்டம்சங்கள் பின் வந்த வழிபாட்டு முறைகளோடு சங்கமிக்கத் தவறவில்லை. உதாரணமாக மரவழிபாடு, தீர்த்தத்தலங்களுக்கு யாத்திரை செய்தல், மலைவழிபாடு, மிருகங்கள் வழிபாடு, உருவழிபாடு ஆகியன மேற்கூறிய யக்ஷ நாக வழிபாட்டு முறைகளிற் சிலவாகும். ஈழத்துப் பாளி நூலோர் விஜயன் கூட்டத்தினர் கி. மு. 6ஆம் நூற்றாண்டில் ஈழத்திற்கு வந்த போது இத்தகைய வழிபாட்டு முறைகள் நிலைத்திருந்தன எனக் கூறுகின்றனர். உண்மையிலே விஜயன் கூட்டத்தினர் ஈழத்திற்கு இக் காலத்தில் வந்தமைக்கு எதுவித தொல்லியற் சான்றுகளும் இற்றை வரை காணப்படவில்லை. மாறாக, தென்னிந்தியாவிலிருந்து வந்த பெருங்கற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலக் கலாசாரத்தைப் பேணிய திராவிடப் பண்பாடே இக் காலத்தில் இங்கு வந்த மையைத் தொல்லியற் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. இதனால் இந்நாட்டின் நாகரிக வளர்ச்சி ஏற்பட முன்னர் நிலைத்திருந்த வழிபாடாக இதனைக் கொள்ளலாம்.

யக்ஷ என்னும் பூசிக்கப்படுபவர் என்பது பொருள். இதனால் முன்பொருகால் பூசிக்கப்பட்ட நிலையில் இருந்த யக்ஷர்கள் தான் பிற்காலத்தில் கொடூரமானவர்கள் ராட்சதர்கள் என விளிக்கப்பட்டமை புலனாகின்றது. நாக வழிபாடும் நாக வணக்கத்திலீடுபட்டோரையே குறித்து நின்றது. இவ் யக்ஷ நாக வழிபாட்டில் பெண் தெய்வங்கள் யக்ஷி, நாகினி என அழைக்கப்பட்டனர். இவ் வழிபாடுகள் பற்றி கி. மு. 6ஆம் 4ஆம் நூற்றாண்டுக்குரிய கதைகளிலே குறிப்புண்டு. விஜயன் கதையில் அவன் இந்நாட்டில் வந்திறங்கிய போது எதிர்கொண்ட யக்ஷிகள் பற்றிய குறிப்புண்டு. கி. மு. 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பண்டுகாபயன் கதைகளில் அவன் எவ்வாறு இவ் யக்ஷிகளுக்கு கோவில் அமைத்து வழிபாடியற்றினன் என்பது கூறப்பட்டுள்ளது. இவ் யக்ஷிகளில் வடமாமுகி, பச்சிமாராணி, சேதி போன்றோர் முக்கியமானவர்கள். இதனால் நம் நாட்டிலும் ஆதியில் வழக்கிலிருந்த தாய்த் தெய்வ, சக்தி வழிபாடே பௌத்த நூல்களில் இவ்வாறு விளிக்கப்பட்டுள்ளது போல் தோன்றுகின்றது.

இந்திய சமயப் பின்னணியும் மேற்கூறிய கருத்தினை அரண் செய்கிறது. இந்தியாவிலும் பௌத்த மதம் செல்வாக்குற்ற போது யக்ஷ நாக வழிபாடுகளை தமது வழிபாட்டுடன் இணைத்தமை புரிகின்றது. பிரசார மதமாகிய பௌத்தம், பின் வந்த கிறிஸ்தவம் போன்று இவ் வழிபாட்டிடங்களை அழித்து அவற்றில் தமது வழிபாட்டிடங்களை அமைத்ததோடு நின்று விடாமல் இவ்வழிபாடுகளை தமது வழிபாட்டோடு இணைத்ததன் மூலம் இவ்வழிபாட்டினரைத் தம்பால் ஈர்த்தனர். இந்தியாவிலே பாரூட், சாஞ்சி, அமராவதி போன்ற பழைய பௌத்த கலைப்பீடங்களில் காணப்படும் யக்ஷி, நாகினி உருவங்கள் இதனையே எடுத்துக் காட்டுகின்றன. ஈழத்திலும் இத்தகைய நிலையைக் காணலாம். இங்குள்ள மிகப் பழைய பௌத்த கட்டடங்களாகிய அபயகிரி, சேதவனராம ஆகியவற்றில் காணப்படும் புடைப்புச் சின்னங்களான யக்ஷி, நாகினி உருவங்கள் இதனையே எடுத்துக் காட்டுகின்றன. அபயகிரியில் கையிற் தாமரையுடன் நிற்கும் பெண் தெய்வம் ஒன்றுளது. இதனை இலட்சுமியின் உருவம் எனக் கொள்ளலாம், இவ்வாறே சேதவன ராமவில் காணப்படும் யக்ஷிகளில் ஒருவள் வலக்கையிலும் இன்னொருவள் இடக்கையிலும் தாமரை மலரை ஏந்தி நிற்பது குறிப்பிடத்தக்கது.

இச் சந்தர்ப்பத்தில் பிராமிக் கல்வெட்டுக்களில் லட்சுமி (இலக்குமி) பற்றிய குறிப்பொன்று காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இக் கல்வெட்டு அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள டெமரகல என்ற இடத்திலுள்ளது. இக் கல்வெட்டில் இவள் (லசி) எனக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு குகைக் குரியவளாகவும் குறிக்கப்பட்டுள்ளாள். இச் சந்தர்ப்பத்தில் இக் கல் வெட்டுக்களில் ஒரு சில இடங்களில் காணப்படும் 'தேவி' என்ற பதமும் ஆராய்தற்குரியது 'ராணி' என்ற பதத்தை ஒத்த பதமாகவே இது விளங்குகின்றது. 'பச்சிமராணி' எனப்பட்ட பெண் தெய்வம் வழிபடப் பட்டதை மகாவம்சம் குறிப்பதால் 'தேவி' என்றபதமும் 'அம்பாள்' என்ற கருத்தைத் தந்து பெண் தெய்வத்திற்குரிய பெயராகவே அமைந்தது எனலாம். சங்க இலக்கியங்களை உற்று நோக்கும்போது இலட்சுமி (திரு) என அழைக்கப்பட்டு செல்வத்தின் தலைவியாகப் போற்றப்பட்டமை புலனாகின்றது அத்துடன் முல்லைப்பாட்டு திருவை மார்பிலே தாங்கும் மாயோன் பற்றியும் குறிக்கின்றது. ஈழத்திலும் ஆதிவழிபாடாக சங்க காலத்தில் முதன்மை பெற்றிருந்த மாயோன் வழிபாடு விளங்கியமைக்குச் சான்றுகள் உள. பாளி நூலாகிய மகாவம்சத்தில் கி. மு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 ஆம் நூற்றாண்டுக்குரிய விஜயன் கதையில் இம் 'மாயோன்தான்' 'உப்புல்வன்' என அழைக்கப்படுகின்றன். உப்புல்வன் என்றால் நீலோற்பலன்' என்பது பொருளாகும். மாயோனைத் தான் நீலோற்பலன் எனப் பாளி நூலோர் கொண்டனர் என்றால் பிழையாகாது. இதனால் பழமை வாய்ந்த மாயோன் வழிபாட்டோடு அவனின் தேவியாகிய திருவின் (இலக்குமியின்) வழிபாடும் இந் நாட்டிலே தழைத்திருந்தது எனக் கொண்டால் பிழையாகாது.

கிறிஸ்தாப்தத்திற்கு முன்னரும் பின்னரும் இலட்சுமி உருவம் பொறித்த நாணயங்களும் மேற் கூறிய கருத்தை அரண் செய்கின்றன. இந் நாணயங்களில் இலட்சுமி கஜலட்சுமியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளாள். சமகால இந்திய கட்டிடங்களிலும் இந் நிலையைக் காணலாம். இலட்சுமி இருக்கும் பாவனையில் காணப்பட இருமருங்கிலும் யானைகள் அபிஷேகம் செய்வதையே இந்நிலை எடுத்துக் காட்டுகின்றது. செம்பு நாணயங்களிலும் பெண் தெய்வம் பலவாறு சித்தரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் தலைவிரிகோலமாக நின்று சூலத்தைக் கையிலேந்தி நிற்கும் தெய்வத்தைத் துர்க்கை என்பர்.

சிவனின் மனைவியாக இக்காலத்தில் உமையும் வழிபடப்பட்டதை யாழ்ப்பாணைவைபவமாலை செய்தி ஒன்று உறுதிப்படுத்துகின்றது. விஜயன் காலத்திற்குரிய செய்தியில் வட்பால் (கிரிமலைப் பகுதியில்) அமைந்திருந்த திருத்தம்பலேஸ்வரர் திருத்தம்பலேஸ்வரி ஆலயங்கள் பற்றிய குறிப்புண்டு. இதனால் சிவனுடன் ஈஸ்வரியும் வழிபடப்பட்டமை புலனாகின்றது. 'சிவன்' பற்றி ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் பல இடங்களிற் குறிப்புக்கள் உள. இதனால் சிவனின் சக்தி பற்றி விரிவான சான்றுகள் இவற்றுள் காணப்படாவிட்டாலும் கூட, ஈஸ்வரி வணக்கமும் சிவவழிபாட்டோடு தழைத்திருந்தது எனக் கொள்ளுவதில் தவறில்லை.

கந்த வழிபாடு பற்றிய சான்றுகள் ஈழத்தின் பிராமிக் கல்வெட்டுக்களில் பல உள. இக் கல்வெட்டுக்களில் இவன் 'விசாக' 'குமார' மகாசேன, குக(ன்), வேல(ன்) 'சாமித்த' என விளிக்கப்பட்டுள்ளான். ஈழத்தில் முருக வழிபாடு ஆதியானதென்பதை புத்தள மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பு என்ற தாழிக் காட்டில் கிடைத்துள்ள 'வேல்' சின்னம் எடுத்துக் காட்டுகிறது. இத்தகைய சின்னம் தமிழ் நாட்டிலும் ஆதிச்ச நல்லூரிற் கிடைத்துள்ளது. இதனால் கி. மு. 1000 ஆண்டுக்குக் குறையாத காலப் பகுதியிலிருந்து முருக வழிபாடு ஈழத்தில் தழைத்திருந்தது என்று அறிஞர் கொள்வர். முருக வணக்கம் இருவித தாய்த் தெய்வ வழிபாட்டு முறைகளை இணைத்து நிற்கின்றது எனலாம். ஒன்று 'கொற்றவை' வழிபாடு, இரண்டாவது முருகன் மனைவியாகிய 'வள்ளி' பற்றிய வழிபாட்டு மரபு. சங்க இலக்கியங்கள் முருகைக் கொற்றவை சிறுவ என அழைப்பதாலும் தாய்மை வழிபாட்டிற்குரிய சான்றுகள் இங்கே கிடைப்பதாலும் ஈழத்திலும் இவ்விரு வழிபாடுகளும் தழைத்திருந்தமை வெளிப்படை. வள்ளி, முருகனின் முதல் மனைவி. வள்ளியை மணஞ் செய்வதற்காக முருகன் ஈழத்தில் வந்து பாசறை அமைத்தது பற்றி நீண்டதொரு ஐதீகம் நிலவுவதால் ஆகியில் முருகனும் அவனது சக்தியாகிய வள்ளியும் ஈழத்தில் வழிபடப்பட்டனர் எனலாம்.

இறுதியாக, சக்தி வழிபாட்டின் சின்னங்களாகக் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உருத்திரபுரம், வவுனியாவிலுள்ள மாமடுவு, சிகிரியாவிலுள்ள இலுக்வேவ போன்ற இடங்களிலும், பொலநறுவை, மாத்தளை அம்பாறைப்பதிகளிலும் கண்டெடுக்கப்பட்ட சுடுமண்ணிலமைந்த பாவைகள் பற்றிக் குறிப்பிடுதல் அவசியம் ஆகிறது. இவ் உருவங்களில் கல்லில் அமைந்த யக்ஷி உருவங்களிலோ, அல்லது நாணயங்களிற் காணப்படும் யக்ஷி உருவங்களிலோ கலைத்திறன் இல்லை எனலாம். மார்பு, கொடூரத்தன்மை உடையனவாக இருப்பதோடு இவற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலுறுப்புகளும் நேர்த்தியாகச் சித்தரிக்கப்படவில்லை. இவை பெரும்பாலும் ஆற்றங்கரைகளிலே தான் காணப்படுவதால் விருத்தியின் அம்சங்களாக, இப்பெண் தெய்வங்கள் வழிபடப்பட்டன எனலாம். இப்பாவைகளிற் சில முழுக் களிமண்ணால் செய்யப்பட்டவை. இன்னும் சில உருவங்களின் தலைப்பகுதி மட்டும் முழுக் களிமண்ணாற் செய்யப்பட உடற்பகுதி கோறையாகக் காட்சிதருகின்றன. தலை அலங்காரமும் சில பாவைகளுக்குண்டு; சில பாவைகளின் சொண்டுகள் விகாரமாகவும் உள; இப்பாவைகளின் கண்கள், மார்பு ஆகியன தனியாகவே மண்ணில் செய்யப்பட்டு ஒட்டப்பட்டுள்ளன எனலாம். சுதேச மக்கள் கலை என இவற்றைக் கொள்ளலாம். இதனால் மக்கள் கலையில் தாய்த் தெய்வ வழிபாடு முக்கிய இடத்தினைப் பெற்றது தெளிவாகிறது. இப்பாவைகளுடன் மிருகங்களின் உருவங்களும் காணப்படுகின்றன.

ஈழத்திலும் சக்தி வழிபாடு ஆதியானது. இது மக்கள் மத்தியில் அடிமட்டத்தில் தழைத்திருந்ததைப் பாளி நூல்களில் வரும் குறிப்புக்களும் சுடுமண் பாவைகளும் எடுத்துக் காட்டுகின்றன. பிராமிக் கல்வெட்டுகளிற் காணப்படும் குறிப்புக்கள் தவிர, நாணயங்கள், புடைப்புச் சிற்பங்கள் ஆகியனவற்றுட்காணப்படும் குறிப்புக்களும் இந்நாட்டில் இவ்வழிபாடு பழமையான பாரம்பரியத்தினைக் கொண்டிருந்ததை எடுத்தியம்புகின்றன. □

சக்தியென்று நேரமெல்லாந் தமிழ்க்கவிதை பாடி
பக்தியுடன் போற்றிநின்றால் பயமனைத்துந் தீரும்
ஆதாரஞ் சக்தியென்றே அருமறைகள் கூறும்
யாதானுந் தொழில்புரிவோம் யாதுமவள் தொழிலாம்
துன்பமே யியற்கையெனுஞ் சொல்லை மறந்திடுவோம்
இன்பமே வேண்டிநிற்போம் யாவுமவள் தருவாள்
நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறைத்தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்.

—மகாகவி பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காவோலையின் சலசலப்பு (சிறுகதை)

அ. செ. மு.

முடிஞ்சது அம்மாளாச்சியின் ஆனந்தக் களியாட்டம் – வயசாகிப்போன ஒரு கிழவனுர் விடும் பெருமூச்சுத்தான் இது. கோவிலுக்கு அணித்தாகப் பனந்தோப்பு நடுவே அவர் வீடு. நாள்பட்ட மண்வீடு. முழுக்கவும் பணம்பொருள் சம்பத்து. முடக்குவாதம் ஆளை முடக்கி ஒரு மூலையில் போட்டு விட்டதால் சில காலமாக மாம்பலகைக் கட்டிலொன்றில் தான் சீவியம். தோட்டம் துரவிலே நன்முகப் பாடுபட்ட தேகம். கைகால் முடங்கிப் போனலும் மனம் சும்மா தேங்கிக் கிடக்குமா? இல்லாதது பொல்லாதது எல்லாம் எண்ணித் தனக்குள்ளாக அலட்டிக் கொள்ளும். படுத்த படுக்கையாகவே அம்மாள் கோவில் திருவிழாக் கோலாகலம் அனைத்தும் ஒன்றும் தப்பாமல் செவிப் புலனகவே இன்புற்று மகிழ்வார். நோய்வாய்ப் பட்டது முதலாக இது பரியந்தம் எத்தனையோ திருவிழாக்கள், எத்தனையோ திருநாட்கள். கோடையும் மாரியுமாக எத்தனையோ பருவகாலங்கள் வந்து போய் விட்டன. கிழவனுருக்கு இதே படுக்கை; இதே கோலம்; இதே பாடு. நாளும் பொழுதும் கோவில் மணியோசை கேட்ட போதெல்லாம் கைதொழுது மனம் தொழுது திருவிழாபத்து நாட்களும் தெய்வத்தையே தியானித்திருக்கும்படி முடக்குவாதம் ஆளை முறித்து மூலையில் போட்டு விட்டது.

வாழ்க்கைப் படகு

வாழ்க்கைப் படகே கவிழ்ந்து போன மாதிரிக்குத்தான் கிழவனுருக்கு. வயது எழுபது மட்டிலாகிறது. சுக தேகியாக இருந்தால் வயது எண்பது தொண்ணூறு ஆலும் கையும் காலும் இப்படியா சோர்ந்து கிடக்கும். கிழவர் தாரமிழந்து பதினெறு ஆண்டுகள் மட்டில் அவர்கூடவிருந்த மூன்று பிள்ளைகளும் இன்று அவருடனில்லை. இரு பெண்கள் கல்யாணமாகிப் போய்விட்டார்கள். அவர்களில் ஒருத்தி ஒரு பெண் குழந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையைப் பெற்றளித்து விட்டு இறந்து போனுள். அந்தக் குழந்தைதான் வளர்ந்து பெரியவளாகி இன்று கிழவருக்கு உதவி யாக இருந்து வருகிறுள். ஊர்ப் பிறந்த கிழவராதலால் அண்டை அயலெல்லாம் எந்நாளும் உற்றூர் உறவினரைப் போல உதவியான ஆட்களே. மற்றெரு பெண் ணுல் கிழவருக்கு எதுவித உதவி சகாயமும் இல்லாமல் போயிருந்தது. கல்யாணமான தின் பின் எட்டாக்கையாக தூரம் தொலை வாக எங்கேயோ ஒரு ஊர்போய்ச் சேர்ந்து விட்டாள். மூன்ருவது ஆண் மக்வு கொழும்பு மைனர். தகப்பனுரை எட்டியும் பார்ப்ப தில்லே. செலவுக்கு மாதம் மாதம் பணம் அனுப்புவான். ஊர் விட்டுப்போன சில காலமாக ஊரிலே கோவில் திருவிழாச் சீசனுக்கு ஒழுங்கா வந்துபோய் இருந்தவன் பிற்பாடு பட்டணத்துப் பளபளப்பில் மனம் திரும்பி விட அதில் லயித்துப் போய் ஊர்ப் பக்கம் வராமலே நின்று விட்டான். கல் யாணம் கூடத் தன் சொந்த விருப்பத்தின் படியே செய்து கண்காணுத் தேசமாக மாண்டு விடுவான் போலக் கிழவருக்குத் தோன்றியதால் அந்தக் கவலே அவரை நாளும் பொழுதும் வாட்டி அரித்தது. பாவிப் பயல் எந்த ஊர் எந்தத் தேசத்திலே எவ ளுடைய மாய்மாலப் போதையிலே சிக்கிச் சீரழியப் போகிருனே என்று எண்ணி ஏங்கி, அதுவே நினைவாகத் தெய்வத்தின் மேல் பழி போட்டு நெடுங்காலமாய் மனத்துன் பப் பட்டிருந்த கிழவனுருக்கு இதமளிக்கக் கூடிய ஒரு நற்செய்தி காதில் எட்டியிருந் தது. எல்லாம் பக்கத்தாரிலேதானும், எங் கேயோ உங்கள் மகன் இலக்கிட்டுக் கண் வைத்திருக்கிறூர் என்று இம்மட்டுமே அரை குறையாக அவர் காதில் விழுந்திருந்தது. அது முதலாக கிழவர் வருங்காலம் பற்றிய இன்பக் கனவுகளில் ஆழ்ந்து மனேரத சஞ் சாரம் செய்யவும் தொடங்கியிருந்தது. முற் றத்திலே விழுந்துருண்டு கிடக்கும் முகிழ் நீத்த பனம் பழத்தில் வீட்டுக்கு வரப்போ கும் மருமகளின் பொன்னிற வதனத்தைக் கண்டு அதிலே சொக்கிப்போய் மாலேக் கதிரொளி அப்பொற்கொடியாள் அழகு வதனத்தில் முத்தமிட அவள் மென் முறு வல் அரும்பி நிற்பதாகக் கனவு காணும் கிழவர், 'வாடி அம்மா வா, முற்றத்தில் நிற்கிருயே; உன் வீடுதானே இது' என் றெல்லாம் அதே நினைவாகச் சில சமயங் களில் இராப்போது உறக்கத்தில் வாய்கூடப் புலம்பும்.

தவச்சாலையைச் சுற்றி

வசந்தம் கோடை மாரி எல்லாப் பருவ காலங்களும் அவரது தவச்சாலேயைச் சூழ அமைந்த பனந்தோப்பில் நிகழ்த்தும் மாறு தல்களே – இயற்கையின் ஜீவ துடிப்பை அதன் அணு அணுவான ஒவ்வோர் அசைவையும் அவதானித்து மனதார அனுபவித்துக் கொண்டு கிராமத்தின் அமைதி துயிலும் சூழலில் ஆங்கு எழும் அரவம் சலசலப்பு அத்தனேயும் இனிதாகத் தாலாட்ட கிழ வர் கண்ணுறங்கும் கிணற்றடித் தென்னே களில் குரும்பை உதிரும்; தேங்காய் விழும்; ஓலேவிழும். பனேகளில் கங்குமட்டை காவோலே, அணிற்பிள்ளேயின் உபயமாக நுங்கு, குரும்பைகள் எல்லாம் விழும். பழ முதிர் காலத்தில் தொம் தொம் தொபு கடூர் என்று பலத்த ஓசை எழ பனம்பழம் அவர்தலேயிலே விழுவது போல விழும். கழுகுகள் பாக்குச் சொரியும். அதிசய வெளவாலார் உசக்க இருந்து பாலுடன் பழம் – இலுப்பைப் பழம் சாப்பிட்டு விட்டு அடிமரத்தில் கொட்டையும் போட்டிருப் பார். எடியே! ராசம்மா இலுப்பைக் கொட்டை பொறுக்கப் போகேல்லேயோடீ என்று சில சமையம் கிழவர் அசதியுடனே நித்திரையில் வாய்புலம்புமாப்போல பேசுவ். அசந்து உறங்கும் ராசம்மாப் பெட்டை அவர் குரலுக்கு வாரிச் சுருட்டிக்கொண்டு எழுவாள். சிலசமையம், பொழுது விடியப் பொறுக்கலாமெணே' என்று சொல்லி விடு வாள். அசைந்து புரண்டு எழுந்தால் கைலாந்தரையும் தூக்கிக்கொண்டு ஒருக் கால் வெளியே போய் விளாத்தியையும் சுற்றிப்பார்த்து கிடக்கும் பழங்களேயும் பொறுக்கி வருவாள். கத்தும் மழைப் பூச் சிகள், ஊரும் வண்டு, விளக்கைச் சுற்றிப் பறக்கும் வெட்டுக்கிளி, ஈசல் - எல்லாம் கார்த்திகை நாளே நினேவூட்ட பொறுக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய 'அம்பாரம்' இலுப்பைக் கொட்டை களை விளக்கீடன்று இராமுழுக்க நின்றெரியும் வெளிமுற்றத்துத் தீபச்சிட்டிக்காக ஒரு டப்பாவிலே போட்டு அடைத்து வைப்பாள். கிழவருக்குத் தான் இராப்போது உறக்கம் கிடையாதே. அதனால் புகையிலைச் சுருட்டும் தேவார பாராயணமுகமாகத் தூங்காமல் தூங்கி மறுநாள் பொழுது விடிய இராமுழுக்கக் காதில் பதிவான தைத் தவறாமல் இராசம்மா பொடிச்சியிடம் தொகுத்துரைக்கும்.

கிழவரின் நுட்பம்

ஆந்தை கத்தும். கூகையும் கோட்டானும் குளறும். நாய் குரைக்கும், கூட்டம் சேர்ந்து ஊளையிடும். மாடு அழும், ஆடு கத்தும், கோழி கூவும், குழந்தை கூப்பாடுபோடும். கிழவர் காதுக்குத் தப்பாது. அது எந்த வீட்டு நாய், யார், வீட்டு ஆடும் மாடும் எத்தனையாவது வீட்டு வேப்ப மரத்துக் கிளையிலே கண்துஞ்சும் சேவல், யார்வீட்டில் பிரவசம் நடத்திருக்கு என்பது போன்ற அந்தக் குடியிருப்பு வட்டாரத்துச் சகல சங்கதிகளையும் கிழவர் மிக நுட்பமாகத் தெரிந்து கொள்ளும்.

நல்ல ரசிகர்

அம்மாள் கோவில் பத்துநாள் திருவிழாவும் கிழவருக்குச் சிவராத்திரிதான். திருவிழாவில் ஒவ்வொரு நாளும் யார் யார் மேளக்கச்சேரி எந்தெந்த ஊர்ச் சின்ன மேளம் என்பதையெல்லாம் கிழவர் பகலோடு பகலாக ராசம்மாப் பெட்டையிடம் தெரிந்து வைத்துக் கொண்டு இராமுழுக்க மேளக்கச்சேரி கேட்கும். கிழவருக்குத் தெரியாத தவில் வித்துவானும் நாதஸ்வர வித்துவானும் யார் இருக்கிறார்கள்? மேலும் அவர் பார்க்காத திருவிழாக்களா இன்றைக்குப் புதுசா நடக்கிறது. விடியற் காலை துயிலெழுந்து கால் முகம் கழுவி திருநீறணிந்து கடவுளைத் தொழுது அதன்பின் முதற்காரியமாக ஒரு பனம் பழத்தைத் தோலுரித்துச் சாப்பிட்டு விட்டு மண்வெட்டியுடனே தோட்டத்துக்கு நடந்த அந்தக் காலைப் பராயத்தில் இதுமாதிரி எத்தனை திருவிழா உற்சவங்களை, பொங்கல் பூசையை, டிராமா நாடகங்களை, நாட்டுக் கூத்தை வண்டிச்சவாரியை வாணவேடிக்கையைக் கண்டு களித்து கலந்து மகிழ்ந்த கட்டை! மேளக்காரர் வாசிக்கும் வழிதுறையும் வகையராவும் சரியாக அடையாளம் கண்டு தெரிந்து கொண்டு தவல் நாகசின்னங்களை இன்ன பகுதி என்று மட்டிட்டு மதிப்பிடக் கூடிய திறமையும் கிழவருக்கு உண்டு.

வாய்க்கால் வரம்புச் சாமி வயல்காட்டு பொன்னுச்சாமி — அது எப்படியடி ராசம்மா அந்தப்பாட்டு? சின்னமேளக் குமரியள் பாடுற மாதிரி நீயும் பாடுவியே — கிழவர் ராசம்மாவை கூப்பிட்டுக் கேட்கும். ராசம்மா அந்த இடத்திலும் நில்லாமல் ஓடிப்போய் விடுவாள். எங்கேயாவது போய் தனித்து நின்று வாய்க்குள் மெல்லப் பாடித் திருவிழாச் சதிராட்டத்தை எண்ணிப் பார்த்துக்களிகூருவாள். அக்கம் பக்கம் பார்த்துவிட்டுக் கைகளில் அபிநயம் பிடித்துக் கால்களை அசைத்துக் கண்களை வெட்டி ஆடிச் சிரித்து மகிழ்வாள். திருவிழாக் கலை அரங்கில் கேட்டு ஞாபகத்தில் வைத்திருக்கும் ஏதாவது பாட்டுக்களை அடிக்கடி முணு முணுக்கும் அந்தச் சின்னக் குமரியின் வாய் கிழவர் முன்னால் போனதும் அசைந்து விடும். கிழவர் அதை 'நோட்' பண்ணி வைத்துக் கொண்டு பிறகு அவளிடம் பேச்சுக் கொழுவி நோண்டி குஷி பண்ணும். 'அந்தச் சின்னமேளம் ஆடினமாதிரி ஒருக்கா ஆடடிபார்ப்பம்' — கிழவர் இப்படிக் கேட்டதும் ராசம்மா வெட்கமும் கோபமும் பிடுங்க, போணை அப்பு, நானென்ன சின்ன மேளமா, அவளுகளைப்போலக் காலிலே சலங்கை கட்டி ஆட என்று கழுத்தை ஒரு வெட்டு வெட்டி உதடுகள் துடிக்குமாப் போல மெல்ல மெதுவாகப் பேச்சுப் பொரிந்து அப்பால் போய்விடுவாள். கிழவருக்கோ அவள் போக்கும் வாக்கும் பார்த்து மனதுக்குள்ளே ஒரே சிரிப்புத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் எண்ணங்கள்

விடியற் சாமமாகத் திருவிழாக் கலை அரங்கில் சின்னமேளக் குமரிகளின் பாட்டும் பாதச் சிலம்பொலியும் கேட்கும். அது சமயம் கோழிகளும் ஒவ்வொன்றுக் கூவத்தொடங்கும். கூரை ஓட்டைகளினூடாகப் பொட்டுப் பொட்டாகத் தரையில் சிதறிக் கிடக்கும் நிலா ஒளியை எழுந்திருந்து பார்த்துக்கொண்டே நினைவுகளிலும் கனவுகளிலும் கிழவர் ஆழ்ந்து விடும். அண்மையிலும் எட்டத்திலுமாக விதமாகக் கூவி ஓயும் சேவல்களின் நொட்டோசையுடன் உச்சக்குரலெடுத்துப் பாடும் நாட்டியக் குமாரிகளின் பருவமுறுக்கேறிய பாட்டுத் தொனியை ஒப்பிட்டுப் பார்க்கும். மகன் பொடியனின் நினைவு வரும். திருவிழாப் பார்க்கப்போன ராசம்மாப் பெட்டையின் நினைவு வரும். ஆயிரம் எண்ணங்கள் உதயமாகும்.

வசந்த கீதமானது கண்ணன் வேணுகானத்தைப் போல இவ்விதமாக கிழம் கட்டைகள் அசக்தர்கள் நோய் பிணி வாயப்பட்டோரிடத்தெல்லாம் கூட அவர் நெஞ்சத்தில் புதுமை எழுச்சியூட்டி வாழ்விலே புத்துணர்ச்சியும் புதுநம்பிக்கையையும் அளித்து பருவகாலங்களிலே உயர்ந்து நிற்கிறது. □

நன்றி. ஈழநாடு வாரமலர் 19-12-71

இமையாத கண்படைத்த என்னம்மை நின்றன்
இமைப்பினிலே அழிவுடனே படைப்புமுடன் நிகழ
அமைந்திட்ட காரணத்தை அன்னைநீ யறிந்தே
அகிலத்தைக் காப்பதற்காய் இமைக்காமல் நின்றே
எமைக்காக்க அருட்பார்வை கருணையினால் கொண்டு
எக்காலும் இமைக்காமல் எழில்தபசு செய்யும்
உமையவளே மூவுலகும் விழிகளினால் காக்கும்
ஓம்சக்தி இமைமூடா உண்மையிது வாமே.

ஆதிசங்கரரின் சௌந்தர்யலகரி
தமிழில் - அ. வெ. ர. கிருஷ்ணசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கு
தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் பரிபாலனசபை அறிக்கை

கோ. இரத்தினம்,
கௌரவ செயலாளர்

"அளவை தவளக்கிரியின் அம்பிகை பொற்பாதம்
உளம் விரும்பி ஏத்தும் உரவோர் — வளமிகுத்த
வாழ்வு பெறுவார் வரம் பெறுவார் மாநிலத்தில்
ஊழ்வினையுந் தீர்வார் உயர்ந்து"

"அன்பர் என்பவர்க்கே நல்லன எல்லாம் தரும்" எம் அம்பிகை அன்னையின் பாதமலர் துணை நிற்பதாக. குண்டும் குழியும், குட்டிச் சுவரும், மட்டை வரிச்சலும், குறுகிய அமைப்பும் கொண்ட, எம் அன்னையின் பண்டைய ஆலயம் பற்றி எண்ணிப் பார்க்கின்றோம். "காத்தவராயக் கடவுளின்" பெயரால் அன்று அழைக்கப்பட்ட, சுண்ணச்சுவரும், தூணும் கொண்ட சின்னஞ்சிறு ஆலயத்தை எண்ணிப் பார்க்கின்றோம். மெல்ல மெல்ல இப் பென்னம் பெரிய ஆலயத்துக்கு அடிகோலிய கோயில் திருத்தொண்டர் குழாத்தைப்பற்றி எண்ணிப் பார்க்கிறோம்.

ஆதி நிர்வாகம்

1935-ம் ஆண்டளவில் முகாமையாளர் அல்லது மேலாளர்கள் என அழைக்கப்பட்டவர்களால் ஆலய பரிபாலனம் நடைபெற்றுள்ளது. ஆதின கர்த்தர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையில் அண்ணுவி தம்பர் குடும்பத்தினர் இடம்பெற்றுள்ளனர். தம்பரின் மக்களான கனகசபை, நாகலிங்கம், பொன்னர், செல்லமுத்தர் ஆகியோரும், கதிரித்தம்பி வைத்தியர், காசிப்பிள்ளை - கணபதிப்பிள்ளை வைத்தியர் ஆகியோரும் ஆதிநிர்வாகப் பொறுப்பாளராக இருந்து வந்தனர்.

பரிபாலனசபை

23 - 05 - 1955ல் நிர்வாகப்பொறுப்பு பற்றிய ஆலோசனைக் கூட்டமொன்று கூட்டப்பட்டது. திருவாளர்கள் வ. நடேசு, வ. ஆனந்தசபாபதி, ச. வைத்திலிங்கம், பொ. செல்லத்துரை, க சிவசம்பு ஆகியோரைக் கொண்ட உபசபை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நிர்வாகம் சீராக்கப்பட்டது.

28 - 05 - 1955ல் பரிபாலனசபை முறை ஆரம்பமானது. 09 - 06 - 55ல் உறுப்பினர் தெரியப்பட்டு முறையே பொதுச் சபை, ஆலோசனைச்சபை, நிர்வாக சபையென மூன்று சபையினரால் நிர்வாகம் நடாத்தப்பட்டது. அன்று முதல் இன்றுவரை தலைவர் செயலாளர் பொருளாளர் பதவிகள் வகித்து வந்த பெரியோர்களின் விபரம் பின் வருமாறு:

ஆண்டு	தலைவர்	செயலாளர்	பொருளாளர்
1955	திரு. த. பொன்னையா	திரு. பொ. செல்லத்துரை	திரு. ச. வைத்திலிங்கம்
1956	,, இ. அம்பலவானர்	அ. வீ. சின்னத்தம்பி	,,
1957	,, ,,	சி. சின்னத்துரை	,,
1958	,, ,,	,,	,,
1962	,, த. சுப்பையா	க. மாரிமுத்து	,, க. சிவசம்பு
1965	,, இ. அம்பலவாணர்	சி. சின்னத்துரை	,,
1966	,, ,,	,,	,,
1964	,, க. சிவசம்பு	இ. த. திருஞானம் பொ. சிவசுப்பிரமணியம்	அ. வீ. சின்னத்தம்பி
1981	,, இ. சோமசுந்தரம்	நா. பாலசுப்பிரமணியம்	க. சிவசம்பு
1982	,, ,,	,,	,,
1983	,, ,,	,,	,,
1984	,, க. சிவசம்பு	கோ. இரத்தினம்	இ. சோமசுந்தரம்
1985	,, ,,	,,	த. தர்மலிங்கம்
1986	,, ,,	,,	,,
1987	,, ,,	,,	,,
1988	,, ,,	,,	,,
1989	க. சின்னத்தம்பி	,,	,,

அமைப்பு விதிகள்

09 - 05 - 1982 ஞாயிறு காலை ஆலய மண்டபத்தில் கூடிய பொதுச் சபைக்கூட்டத்தில், ஆலய பரிபாலன சபைக்கென வகுக்கப்பட்ட அமைப்பு விதிகள் முதல் தடவையாக அங்கீகாரம் பெற்று, ஏகமன தாய் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இவ்வமைப்பு விதிகள் தயாரிப்பதில் சட்டத்தரணி திரு. செல்லையா — புண்ணியமூர்த்தியும், அன்றைய செயலாளர் திரு. நாகமணி - பாலசுப்பிரமணியமும் பெரும்பங்கு எடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்துசமயத் திணைக்களத்தில் பதிவு :

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் 12 - 08 - 1982 திகதிய 6/3/T/5/S/O/29 இலக்கக்கடிதமூலம் எங்கள் ஆலயம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நிர்வாகத்தினர் அவசியம் எனக் கண்ட அமைப்புவிதிகளுக்கான திருத்தங்கள் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08 - 10 - 1984ல் நிர்வாகசபையின் அங்கீகாரமும் 11 - 9 - 1988ல் பொதுச்சபையின் அங்கீகாரமும் பெற்று ஏற்றுக்கொள்ளப் பட்டன.

தொண்டர்சபை : -

ஆலய வளர்ச்சிக்கும், ஆலய தொண்டர் சபைகள் ஆற்றக்கூடிய சேவைகள் அளப்பரியன. ''பணிபுரி பலனை எதிர்பாராதே'' என்ற பதங்களைத் தாரகமந்திரமாகக் கொண்ட எங்கள் தொண்டர் சபையினர் ஆற்றும் பணிகள் போற்றப்பட வேண்டியன. 10 - 06 - 1968ல் ஆரம்பிக்கப்பட்ட புதிய தொண்டர் சபை சிறந்த பணிகளை ஆற்றியுள்ளது. ஆலயமுன்றலிலும், திருவீதிகளிலும் ஒளிஊட்டியும், பக்தித்தேன் சொட்டும் பாடல்களையும், சமய சொற் பொழிவுகளையும் ஒலிபரப்பியும், கட்டிட, தொழில்நுட்ப வேலைகளில் பெரும்பங்காற்றியும் வருவது பேர்ற்றப்படவேண்டிய திருப்பணிகள். 21 - 10 - 1984ல் வகுக்கப் பட்ட அமைப்பு விதிகள் மூலம் ஒழுங்கமைப்புள்ள, சீரியசேவையை எமது தொண்டர்கள் ஆற்றிவருகின்றனர்.

ஆலய அர்ச்சகர்கள்;

ஐந்து அர்ச்சகர்கள் பூசை உரிமை பெற்று வழி வழியாக வந்துள்ளனர். நல்ல தம்பி-கணபதிப்பிள்ளை வழிவந்த திரு. மாரி முத்துவும், சிவலோகம் - சுப்பிரமணியம் வழிவந்த திரு- ஐயாத்துரையும், தம்பையா சுப்பையா வழிவந்த திரு. நாகமுத்துவும், சண்முகம் - சொக்கலிங்கம் வழிவந்த திரு. பசுபதிநாதனும், நல்லதம்பி - அரியகுட்டி வழிவந்த திரு. அப்பையாவும் பூசை செய்யும் உரிமை பெற்றவர்களாவர். இவ்வண்ணமே இவர்களின் மூத்த ஆண்பரம் பரையினர் அவ்வுரிமை பெற்ற அர்ச்சகர் ஆவர். ஆனால் இவர்கள் [illegible]ங்கதாரணஞ் செய்த, வீராகம விதிப்படி இலிங்க சுவாயதம் பெற்றவர்களாக இருத்தல் அவசியம் ஆகும்.

பிரதம குரு:

எமது ஆலயத்தில் பிரதம குருமாராகச் சேவையாற்றியவர்களின் விபரங்கள் ஆலய வரலாற்றில் அடங்கியுள்ளன. இன்று எங்கள் ஆலய பிரதம குருவாகப் பணியாற்றுபவர் சிவஶ்ரீ உரித்திரபுரீஸ்வரக் குருக்கள் ஆவர். வேதாகம விதிப்படி இவர் ஆற்றி வரும் கிரியை முறைகள் அனைவராலும் போற்றப்படுகின்றன.

ஆலய மங்கள வாத்தியம்:

திரு. சோமஸ்கந்தர் - செல்லத்துரை அவர்களே எமது ஆலயத்தில் நெடுங்காலமாக மங்கள வாத்திய சேவை செய்து வந்துள்ளார். அவருக்குப் பின் அவரின் சகோதரரும், அவரின் புதல்வர்களும் சேவையாற்றினர். திரு. கிருஷ்ணசாமி சிவபாதரத்தினம் அவர்கள் அண்மைக் காலம் வரை இத் தொண்டைச் செய்து வந்தார். இன்று திரு. தி. பாலகிருஷ்ணனும் - புதல்வர்களும் மங்கள வாத்திய சேவையை ஆற்றி வருகின்றனர். இன்றைய வாத்தியக் காரரான திரு. தி. பாலகிருஷ்ணன் அவர்கள் ஒரு தரமான வித்துவான் என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஆலயத்தின் அசைவற்ற ஆதனங்கள்:

தஞ்சிட்டி, அழகொல்லை, கோணன் பங்கு ஆகிய இடங்களில் ஆலயத்துக்குச் சொந்தமான ஆதனங்கள் இருக்கின்றன. தஞ்சிட்டியில் பத்துப்பரப்பு நிலமும், கோணன் பங்கில் நாலரைப்பரப்பு நிலமும் அழகொல்லையில் பதினேழு பரப்பு வயல் நிலமும் உண்டு. வீரபத்திரர் கோவிலுக்கு 08-04-1982 இல் ஒரு ஒப்பந்தமூலம் கோணன் பங்குக்காணி குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. வயற் காணிகளில் திருவாளர்கள் அ. அப்பையா, சொ. பசுபதிநாதன், சு. ஐயாத்துரை, க. மாரிமுத்து ஆகிய நான்கு பூசகர்கள் பயிர் செய்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகோற்சவம்:

நித்திய பூஜைகளில் ஏற்படுகின்ற குறை களை நிவர்த்திக்கவே நைமித்தியமான மகோற்சவங்கள் நடைபெறுகின்றன. அந்த வகையில் பதினொரு நாட்கள் இடம்பெறும் மகோற்சவங்கள் எமக்கு மிகமுக்கியம்வாய்ந் தன. ஆனி உத்தரத்தில் நடைபெறுகின்ற அம்பாளின் தீர்த்தத் திருவிழா மிக ஆனந் தமான அற்புதமான விழாவாக அமைகின் றது. அன்றைய தினத்திலே அதிகாலையில் நடேசப்பெருமானுக்கும் விசேட அபிஷேகம் ஆராதனைகள் நடைபெறுவதும் அடியார்கள் மனதிலே அருள் கூட்டும் நிகழ்ச்சிகளாகும்.

குளிர்த்தி விழா:

ஆண்டுதோறும் பங்குனிமாத இரண்டாந் திங்களில் ஊர்ப்பொது உபயமாக நடைபெ றும் அம்பாளின் திருக்குளிர்த்தி சுமார் 124 ஆண்டுகள் பழமைவாய்ந்தது. 1865 ம் ஆண் டில் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை மிகமிகச் சிறப்பாக அமைகின்றது. முத்துமாரிக்குப் பங் குனியில் குளிர்த்தி என்றால் அடியார்கள் ஆயி ரமாயிரமாகக் கூடி அமுதுபெறும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. அன்று எங்கள் அன்னைமுத்துமாரி அன்னபூரணியாகப்பொலி வுற்று விளங்கும் தோற்றம் அடியார் மனதை விட்டகலாது. மாரியம்மன் வெப்பம் தணித்து குளிர்விக்கும் கருணை உள்ளம் கொண்டவள் தானே!

இலட்சார்ச்சனை, சங்காபிஷேகம்:

பிரபல தவில் மேதை அமரர் விஸ்வ லிங்கம் - தெட்சணமூர்த்தி அவர்கள் 1966 இல் ஆரம்பித்துவைத்த இலட்சார்ச்சனைகள் தைமாத அத்த நட்சத்திரத்தில் (முன்னைய கும்பாபிஷேக தினம்) சங்காபிஷேகத்துடன் நிறைவு பெற்றன. இவ்வாண்டு முதல் தை மாத உத்திரட்டாதி நட்சத்திரத்தில் மகா சங்காபிஷேகம் நடைபெறும். இலட்சார்ச் சனை, சங்காபிஷேகம் ஆகிய இரண்டையும் முன்னின்று செய்த திரு. கி. சிவபாதரத்தி னம் அவர்கள் சங்காபிஷேகத்தையொட்டிய செலவுகளுக்கு என ரூபா 5001/- முதலீடு செய்துள்ளார்.

அபிராமிபட்டர் விழா:

அம்பிகை தாசரான பட்டரின் பக்திப் பிரவாகத்தையும், அம்பிகையின் கருணையுள் ளத்தையும் பிரதிபலிக்கும் விழாவே இதுவா கும். தை அமாவாசையில் நடக்கும் இவ் விழாவில் அபிராமிபட்டரின் அந்தாதியில் உள்ள 101 பாடல்களும் பாடப்படுகின்றன. இவ் விழா 1987 இல் ஆரம்பிக்கப்பட்டு அதற்குரிய செலவுகளைப் பொறுப்பேற்கும் வண்ணம் திரு. கி. சிவபாதரத்தினம் அவர் கள் ரூபா. 1000/- வைப்பில் இட்டுள்ளார்.

மதிய பூஜை:

14-01-89 இல் ஆரம்பிக்கப்பட்ட இப் பூஜைகள் ஒழுங்காக, சிறப்பாக நடைபெறு கின்றன, 31 பேர் இப் பூஜைகளைப் பொறுப் பேற்றுத் தினமும் நடாத்தி வருகின்றனர்.

மாதப்பிறப்பு, உதயபூஜை:

ஏலவே ஆரம்பிக்கப்பட்ட உதய பூஜை களுக்கு 12 பேர் பொறுப்பாக இருக்கின்ற னர். அத்துடன் மாதங்கள் உதயமாகும் போது மங்களவாத்தியம் ஒலிக்க, அம்பி கைக்குப் பூஜைகள் ஆரம்பமாகின்றன. 28-12-86 இல் இம் மங்களகரமான பூஜை கள் பற்றிய முடிவை நாம் எடுத்தோம். இப் பூஜைகளின் உபயகாரருக்கு எம் அன்னை எல்லா நலங்களையும் அளிப்பாராக.

திருக்கார்த்திகை / திருவிளக்குப் பூஜை:

திருக்கார்த்திகைத் தீப நாளன்று வழமைபோல் நிகழும் சொக்கப்பானை வைப வத்துடன் எங்கள் தொண்டர் சபையினர் 1988 இல் ஆரம்பித்த திருவிளக்குப் பூஜை ஒரு தனிச் சிறப்புவாய்ந்த விழாவாகும். திருவிளக்குகளின் ஒளி. ஆலயத்தை இந்திர லோகமாக ஆக்கிவிடுகின்றது. இப்படியான சிறந்ததொரு விழாவை ஒழுங்கு செய்த தொண்டர் சபையினர் பாராட்டுக்குரியவர் ஆவர். தொண்டர்சபைத் தலைவர் திரு. தர்மலிங்கம் - ஸ்ரீகாந்தனின் பெருமுயற்சி யினால் இவ்விழா மேலும் சிறப்படைகின் றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணி வேலைகள்: 1989/1990

1. தேர்த் திருப்பணி:

இதுவரை காலமும் அம்பாள் பவனி வந்த இரதம் பழுதடைந்த நிலையில் இருக்கின்ற காரணத்தால் புதிய இரதமொன்று நிர்மாணிப்பது அவசியமாயிற்று. இதனையுணர்ந்த அடியார்கள் 21-10-1984 இல் ஒரு ஆலோசனைச் சபையைக் கூட்டினர். 28-07-1985 இல் திரு. ஆறுமுகம் - இராமசாமி தலைமையில் 33 பேர் கொண்ட தேர்த்திருப்பணிச் சபை அமைக்கப்பட்டது. 15 பேர் கொண்ட நிறைவேற்றுச் சபையும், 6 பேர் கொண்ட ஆலோசனைக் குழுவும். அமைக்கப்பட்டது. தேர் நிர்மாண வேலைகளுக்கு ஸ்தபதி ஆறுமுகம் - தம்பித்துரை அவர்கள் தெரியப்பட்டு 13-9-85 இல் வந்த சுபவேளையில் நாள் மரம் வெட்டப்பட்டது. முள்ளாணை வள்ளல் திரு. வைத்திலிங்கம் செகராசசிங்கம் அவர்கள் இதற்குரிய மரத்தை அன்பளிப்புச் செய்தார்கள். அன்றிருந்த பரிபாலன சபையினரின் நிதியுதவியுடன் வேலைகள் ஆரம்பமாயின. இத் திருப்பணிக்குத் தேவையான போதிய மரங்கள் கிடைத்திருந்தும் ஒரு அச்சுக்குரிய மரம் கிடைக்காத நிலையில் வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்தன. அதுவும் இப்பொழுது அன்னையின் திருக்கடாட்சத்தினல் கிடைத்துள்ளது. அடுத்து நிறைவேற்றப்பட வேண்டிய இத் தேர்த்திருப்பணி விரைவில் இனிது முற்றுப்பெற அம்பாள் அடியார்கள் - அன்பர்கள் அள்ளிக்கொடுத்து உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

2. ஆதிமூலம்;

தூபி புதுப்பிக்கவும், சிற்ப வேலைகள் செய்யவும் திட்டம் இட்டோம். அதன்படி இப்பகுதி வேலைக்குப் பொறுப்பாகவுள்ள மாரியிட்டி திரு. சுதிரித்தம்பி-முருகையாவும் சகோதரர்களும் மனமுவந்து நன்கொடைகள் அளித்து வேலைகள் பூர்த்தியடைய உதவினர்.

3. அர்த்த மண்டபம்:

இம் மண்டபத்தின் மேலே அழகிய சிற்ப வேலைகள் அமைந்த கர்ணகூடும் சாலை யும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. 1989-90 இல் இடம்பெற்ற திருப்பணி வேலைகளில் இது ஒரு சிறப்பம்சமாகும்.

4. மகா மண்டபம்:

ஊர்மக்கள் உவந்தளித்த அன்பளிப்புகளினல் உறுதியானதொரு மண்டபம் கொக்கட்டான் பாணியில் உருவாக்கப்பட்டுள்ளது. இம் மகாமண்டபத்துள் வடபுறமாக சின்னம்மாளுக்கும் விநாயகப் பெருமானுக்கும், காத்தவராயருக்கும், சிற்பங்கள் சேர்ந்த சபையொன்று சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இத் திருப்பணிக்கு அர்ச்சகர் திரு. சுப்பிரமணியம் - ஐயாத்துரை குடும்பத்தினர் அன்பளிப்புகள் வழங்கி உதவியுள்ளனர்.

5. அம்மன் தெற்கு வாசல்:

அளவெட்டி திரு. சபாபதி - சுதிரமலை என்பவரின் உதவியுடன் விசாலிக்கப்பட்டு, அடியார்கள் வழிபடுவதற்கு வசதியாக அமைக்கப்பட்டுள்ளது. இங்கே திரு. கந்தையர் - முருகையாக் குருக்கள் அவர்களின் கைவண்ணத்தில் அமைந்த அம்மன் சிலையொன்று வைக்கப்பட்டுள்ளது.

6. நிருத்த மண்டபம்:

இம் மண்டபமும் ஊர்மக்களிடம் திரட்டிய நிதியுதவியினல் அமைக்கப்பட்டுள்ளது. சிறந்த - திறந்த மண்டபமாக விளங்கி - நடேசப்பெருமான் ஆலயத்துக்கு பெரும் வனப்பை அளிக்கின்றது.

7. ஸ்தம்பத்தடி பிள்ளையார்:

சிறுவிளாணைச் சேர்ந்த அன்பர் திரு சின்னப்பு கனகசபை அவர்கள் இதற்கெனப் புத்தம்புது விநாயகர் விக்கிரகம் ஒன்றை கருங்கல்லினல் அமைத்துப் பிரதிஷ்டை செய்வித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சிவகாமி சமேத நடேசர்:

அளவெட்டி திரு. கந்தசாமி - சிவப்பிர காசம் அவர்களின் தனி முயற்சியால் 1982 ஆனியில் உருவான இவ்வாலயம் இம்முறை சிற்பங்கள் புனரமைக்கப்பட்டு, சிறப்புற, வனப்புற அமைந்துள்ளது. ஐந்து கலசங்கள் கூடிய தனி ஆலயமாகக் கம்பீரத்துடன் காட்சி அளிக்கின்றது. நடேசப் பெருமா னுக்கு, ஆண்டிலே ஆறு அபிஷேகங்கள் ஆனந்தமாக நடைபெறுகின்றன.

9. விநாயகர்:

வினைதீர்க்கும் விநாயகப் பெருமானுக்கு 1965 குரோதி ஆண்டு தை மாதத்தில் குடமுழுக்கு நடைபெற்றபின் 1990 தையில் மீண்டும் குடமுழுக்கு நடைபெறுகின்றது. அளவெட்டியைச சேர்ந்த லண்டன் நகர் வாசியான திரு. வைத்திலிங்கம் - வைர முத்து அவர்கள் இதற்கான பண உதவி களைச் செய்துள்ளார். இவ்வாலயமும் புதுப் பிக்கப்பட்டு புது வர்ணந் தீட்டப்பட்டு பொலிவுடன் விளங்குகிறது.

10. வள்ளி - தெய்வயானை சமேத முருகன்:

அளவெட்டியைச் சேர்ந்த திரு. அப் பையா - ரவீந்திரன் குடும்பத்தினர் வழங்கி யுள்ள நிதியுதவியுடன் 11-06-78 வைகாசி ஆயிலியம் நட்சத்திரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நிகழ்த்தப் பட்டது. இவ்வாண்டும் புது வர்ணங்கள் தீட்டப்பட்டு மிக வனப்புடன், அலங்கரிக் கப்பட்டுள்ளது. ''அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றி அடியார்களின் அல்லல் களைந்தெறியும் ஆனந்த முருகன் என்றும் அருள் பாலிப்பாராக.

11. வைரவர், நாகதம்பிரான்

அளவெட்டி சுப்பிரமணியம் - வைத்திய நாதன், காமாட்சிசுந்தரம் சகோதரர்கள் நிதியுடன் ஏலவே புனர் நிர்மாணிக்கப் பட்ட இவ்வாலயங்கள் மீண்டும் சீரமைக் கப்பட்டு வைரவ மூர்த்திக்குரிய விக்கிரகம் கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது.

12. நவக்கிரக மண்டபம்

நவக்கிரக மூர்த்திகளின் அனுக்கிரகம் அம்பாள் அடியார்கள் பெற்றுய்யும் வண் ணம் இம் மூர்த்திகளுக்கென ஒரு நவமண்ட பம் அமைக்கப்பட்டுள்ளது. இதனைக் காலஞ் சென்ற ஆசிரியர் செ. தெட்சணமூர்த்தி அவர் கள் விரும்பியவாறு அளவையூர் திரு. செல் லையா - சிவகடாட்சம் சகோதரர்கள் குடும்பத் தினர் அமைத்துள்ளனர். என்றும் நின்று அருள் பாலிக்கும் நவகோள்களுக்கென ஓர் ஆலயம் அவசியமானதே.

13. காத்தவராயர்:

காக்கும் கடவுள் காத்தவராயருக்கு அம்பாள் ஆலய அண்மைச் சூழலில் வசிப் பவராகிய திரு. வீரவாகு - கதிரமலை குடும்பத்தினர் ஒரு தனிக் கோயில் அமைத் துள்ளனர். பழமைமிக்க காத்தவராயருடன் இணைந்த, வரலாற்றுப் பெருமைமிக்க கழு மரமும் இவ்வாலய முன்புறத்தில் ஸ்தாபிக் கப்பட்டுள்ளது. ஆதி தெய்வமாகிய காத்த வராயருக்கு ஒரு தனிக்கோயில் அமைந்துள் ளமை மிகவும் பொருத்தமானதே. பெரு மான் எல்லோரையும் காப்பாராக.

14. சண்டேஸ்வரி;

ஆலய தரிசன பலனைத் தந்துதவும் சண்டேஸ்வரிக்கும் ஆகம விதிக்கமைந்த ஆலயம் ஒன்று, அம்பாள் அடியார்களான திரு. கணேசு – கோபாலசாமி குடும்பத்தின ரால் அமைக்கப்பட்டுள்ளது. முன்பு இப்பதி யில் இல்லாத ஓர் ஆலயம் சிறப்புற - அழ காக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சம்.

15. மணிக்கோபுரம்;

அமரர் திரு. தர்மலிங்கமும் - அவர் துணைவியார் அம்பிகாபதி குடும்பத்தினரும் வழங்கிய பெருநிதியில் உருவான இம்மணிக் கோபுரம் இம்முறை வர்ணந் தீட்டப்பட்டு மெருகு ஊட்டப்படவுள்ளது. திரு. கா. பொ. அருளம்பலம் அவர்கள் திருத்த வேலை களுக்கெனப பண உதவி செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பூங்கொல்லை மடம்:

மல்லாகத்தைச் சேர்ந்த ஆலய முன்னாள் அர்ச்சகர் சுப்பையா - நாகமுத்து குடும்பத்தினரால் ஏலவே புதுக்கப்பட்ட சட்டிடம், அவர்களாலேயே இம் முறையும்வர்ணம் பூசப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது.

17. அலுவலகம்:

பரிபாலன சபைக்கென ஒரு அலுவலக அறை தனியாக வகுக்கப்பட்டுள்ளது. முன்னைய களஞ்சிய அறையின் ஒருபகுதி இதற்கெனச் சிறந்த முறையில், வசதியாக அமைக்கப்பட்டுள்ளது.

18. ஈசானத்தில் வெளியறை:

பொதுத் தேவைகள் பலவற்றுக்கும் உதவும் வகையில் இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது, குறைந்த செலவில் உருவான இப் பகுதி மிகப்பரந்த வகையில் பயன்படவுள்ளது.

19. பெரிய சகடைக் கொட்டகை:

ஆலய வீதியின் தென்புறத்தே இதற்கென அமைக்கப்பட்ட கொட்டகை அகற்றப்பட்டு வடபுறத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கொட்டகைகள் அனைத்தும் வடக்கே சீரமைக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

மேலும் நிறைவேற்றப்படவேண்டிய திருப்பணிகள்:

1) மின் இயக்கி அறை அமைத்தல்
2) தீர்த்தக் கேணி ,,
3) தீர்த்த மண்டபம் ,,
4) ஆலய மண்டபம் புனரமைத்தல்
5) அன்னதான மண்டபம் அமைத்தல்

மேலே காட்டப்பட்ட திருப்பணிகள் அனைத்தும் குறுகிய காலத்தில் நிறைவேற்றப்படவுள்ளன, அம்பாள் அடியார்கள் மனமுவந்து மேலும் உதவினால் இம் மீதி வேலைகள் விரைவில் பூர்த்தியாகும். அவளருளாலே அவள் தாள் வணங்கி வரும் அடியார்கள் முயன்றால் பைந்தலை நாக நன்மணியும் பெறலாம் அன்றே!

மகா கும்பாபிஷேகம் – 1990-01-31 (தை 18)

எங்கள் ஆலயத்தில் 1965, குரோதி வருடம் தை மீன அத்த நட்சத்திரத்தில் நடந்தேறிய மகா கும்பாபிஷேகத்தின் பின் இப்போதுதான் மீண்டும் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது; நடைபெற வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளது. 26-4-89 புதன் இரவு ஆலயத்தினுள் புகுந்த திருடர்கள் மூர்த்திகளின் இயந்திரங்கள் உட்பட பல பெறுமதிமிக்க பொருட்களையும் திருடிச் சென்றனர். அதனால் மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே சுக்கில, சித்திரை 14 வியாழக்கிழமை (27-4-89) மூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டனர். 01-06-89 வியாழன் அன்று திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 08-07-89 சனியன்று கட்டிட வேலைகள் தொடங்கப்பட்டன. அராலியூர் திரு. வைடூரியம்-சொக்கலிங்கம் அவர்கள் பொறுப்பாக நின்று வேலைகளை ஆரம்பித்தார். திருவாளர்கள் சோமசுந்தரம் ஸ்தபதி அவர்களும், சிவஸ்ரீ க. சண்முகானந்தக் குருக்கள் பொறியியலாளர் சோ, அனந்தசயனன், கட்டிடத் தொழில் நுட்பவியலாளர் ஆ. லவேந்திரன் ஆகியோரும் வேண்டிய ஆலோசனைகள் வழங்கி உதவினர். திரு. கிருஷ்ணபிள்ளை - தேவராசா நிர்மாணவேலைகளில் பெரும்பங்கெடுத்துப் பணியாற்றினர்.

வேலைகளில் ஓரளவு முன்னேற்றங் கண்ட நிலையில் சுக்கில வருடம் மார்கழி 14 (29-12-89) வெள்ளி பகல் இயந்திர பூஜைகள் ஆரம்பமாகி தொடர்ந்து நாற்பத்தைந்து பூஜைகள் நடைபெற்றன. தை 14 (27-01-90) - 17 (30-01-90) வரை பூர்வாங்கக் கிரியைகள் நடைபெற்று தை 18 இல் (31-01-90) காலை 7.31 — 9.04 வரை அமைந்த சுபமுகூர்த்தத்தில் அம்பாளின் குடமுழுக்கு விழா மிகமிகச் சிறந்த முறையில், அடியார்கள் பக்திப் பரவசத்தில் மூழ்கியிருக்க இனிது நிறைவுபெற்றது. மகா கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபிஷேகக் கிரியைகளைத் திறம்பட ஆற்று வதற்கெனத் தமிழகத்திலிருந்து சிவஸ்ரீ. அ. சோமசுந்தரக்குருக்கள் அவர்களும், சிவஸ்ரீ. அ. இராமலிங்கக் குருக்கள் அவர்களும் வருகைதந்திருந்தனர். வேதாகம விதிக்க மைய, சாஸ்திர ரீதியாகவும், கிரியார்த்த மாகவும் அவர்கள் ஆற்றிய கருமங்கள் அனைத்தும் அடியார்கள் மனத்தை ஈர்த்துப் பரவசம் ஊட்டின.

நன்றி செய்தார்க்கு நன்றிகள்:

மூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப் பட்ட தினத்திலிருந்து இன்றுவரை தம் சிரமம் சற்றும் பாராது, அம்பாள் பணியே கருத்தாய்க் கொண்டு உதவி வருகின்ற எமது ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கி. உருத் திரபுரீஸ்வரர் அவர்களுக்கு முதற்கண் எங் கள் இதயம் கனிந்த நன்றிகள். திருப்பணி வேலைகளுக்கு நிதியும் – பொருளும் தந்துத வியஅடியார் பெருமக்களுக்கு அன்புகலந்த நன்றிகள். பல்வேறு வகையில் உதவிய ஊர்மக்களுக்கு நன்றிகள். ஆக்கப்பணியாற் றிய ஆச்சாரியர்கள், தொழிலாளர்கள், சிற்பிகள் அனைவருக்கும் நன்றிகள். இரவு பகலாகச் சரியை தொண்டுகள் பல ஆற்றிய தொண்டர் சபைத் தலைவர், செயலாளர், பொருளாளர், ஏனைய உறுப் பினர்கள், இதர தொண்டர்கள் அனைவர்க் கும் எமது நன்றிகள்.

மேலும் எங்கள் ஆலயத்திருப்பணி வேலை களுக்கும் பிறவற்றுக்கும் தங்கள் வாகனங்க ளைத் தந்து பெரும்பணி ஆற்றிய அம்பாள் அடியார்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகள் அனந்தம்! மின் இணைப்புக்கள் செய்து உதவிய அன்பர்கள் எல்லார்க்கும் எங்கள் உளங்கனிந்த நன்றிகள். ஆலயமூன்றிலில் அழகுற அமைந்த யாகசாலையைக் குறுகிய காலத்தில் நிர்மாணித்துத்தந்த திருத்தொண் டர் குழாத்துக்கு எமது நன்றிகள். கும்பா பிஷேக தினத்தன்று மங்கள வாத்தியம் அளித்த இசைக்கலைஞர்கள் எல்லார்க்கும் சிறப்பான நன்றிகள். நேரடியாவும். மறை முகமாகவும் பண உதவி செய்தோர்க்கும் சரியைத் தொண்டுகள் பல ஆற்றி உதவிய சினன்கலட்டி ஞானோதய வித்தியாசாலை, அதிபர், ஆசிரியர், மாணவர்க்கும் நன்றி நவில்கின்றோம்.

மகா கும்பாபிஷேகத்தை, மெய்சிலிர்க் கும் வண்ணம் மாண்புற நடத்திய தமிழ கச் சிவாச்சாரியார்கள் அ. இராமலிங்கக் குருக்கள், அ. சோமசுந்தரக் குருக்கள் அவர் களுக்கும், மற்றும் பெரும் பங்கு ஆற்றிச் சிறப்பித்த சிவாச்சாரியார் சிவஸ்ரீ. இ. நவ ரத்தினக் குருக்கள் அவர்களுக்கும் ஏனைய சிவாச்சாரியார்கள், ஆலய அர்ச்சகர்கள், மற்றும் உதவியாளர் அனைவருக்கும் எமது அன்புகலந்த நன்றிகள். எமது ஆலயத்துக்கு வருகை தந்து சரியைத் தொண்டு ஆற்றிய கும்பளாவளை அருள்மிகு விநாயகர் ஆலயத் தொண்டர்களுக்கு எமது இதயபூர் வமான நன்றிகள் உரித்தாகட்டும்,

அபயமளித்த அன்னை:

1987 ம் ஆண்டில் நமது நாட்டில் துர் அதிர்ஷ்டவசமாக நேர்ந்துவிட்ட சம்பவங் களின்போது இன்னல்பட்ட - இடர்ப்பட்ட எமக்கெல்லாம் ''அஞ்சேல்'' என்று அபய மளித்துப் புகலிடமளித்த அன்னையை மறக் கமுடியுமா? நாமெல்லாம் அவள் திருப்பா தங்களே துணையென நம்பிச் சிக்கெனப் பிடித்தோம். எங்கள் மாரித்தாய் கருணை மழைபொழிந்தாள் — அபயமளித்தாள் — பாதுகாத்தாள். ''முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு நோய்இல்லையே'' என்ற பட்டரின் வார்த்தைகளும் பலித்தன. அம் பிகை அன்னையை அனுதினமும் வணங்கி உய்திபெறுவோமாக.

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி

குறிப்பு: குடமுழுக்குத் தொடர்பான நிதி அறிக்கை பின்னர் வெளியிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா கும்பாபிஷேக விசேட குழுக்கள் – அங்கத்தவர்கள்

1. நிதி:
   திரு. த. தர்மலிங்கம்
   திரு. க. ஜெயக்குமார்
   திரு. கு. கிருபாதரன்
   திரு. இ. நாகராசா

2. திருப்பணிகள்:
   திரு. த. தர்மலிங்கம்
   திரு. கு. கிருபாதரன்
   திரு. பா. சிறீஸ்கந்தராசா

3. கிரியைகள்:
   திரு. ந. துளசிதாசன்
   திரு. செ. தம்பியையா
   திரு. சொ. பசுபதிநாதன்

4. மலர்:
   திரு. செ. தம்பியையா
   திரு. செ. குமாரசாமி
   திரு. பா. சிவகுமார்

5. பிரசாரம், நிகழ்ச்சிகள்:
   திரு. செ. குமாரசாமி
   திரு. செ. தம்பியையா


6. மங்களவாத்தியம், அலங்காரம்:
   திரு. த. சிறீகாந்தன்
   திரு. பொ. ஜெயபாலன்
   திரு. செ. சிதம்பரநாதன்
   திரு. நா. குமரகுரு
   திரு. க. ஜெயக்குமார்

7. உரியவர்களுக்கு கௌரவித்தல்:
   திரு. க. சின்னத்தம்பி
   திரு. த. தர்மலிங்கம்
   திரு. கோ. இரத்தினம்

8. மண்டலாபிஷேகக் குழு:
   திரு. வை. செகராசசிங்கம்
   திரு. த. சிறீகாந்தன்
   திரு. க. சோதிநாதன்
   திரு. ஐ. சிவபாதம்

9. ஒலி, ஒளி:
   தொண்டர்சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூடத்தம்மன் கொலுவிருந்த மேடை



கூடத்தம்மனை முதன்முதல் ஆராதனை
செய்துவந்த சாமியார் சமாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காத்தவராயர் சந்நிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் அருள்!

தங்க, வைர நகை
22 கறற்றில் தரமாகவும்

வேண்டிய டிசைனிலும்
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்!

வி. எம். கே.
தங்க மாளிகை
கண்டி வீதி
சாவகச்சேரி.

தொலைபேசி: 288

அம்பாள் துணை

விவசாய இரசாயனங்கள், பசளை,
கோழி - கால்நடை உணவு

விற்பனையாளர்

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
கண்டி வீதி
சாவகச்சேரி

அனுபளிப்பு —

எலியன்ற் மெற்றல் அன்ட்
அலுமினியம் வேக்ஸ்

அம்பலை
தெல்லிப்பளை.

அலுமினியப் பாத்திரங்கள் உற்பத்தியாளர்.

— உரிமையாளர்:
வை. சண்முகலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்பெஸ்டோஸ் கூரைத் தகடுகள்

கம்பி ஆணிகள்

முட்கம்பிச் சுருள்கள்

கட்டடப் பொருட்கள்

ஸ்ரீல் அலுமாரிகள்

உங்கள் தேவைகள் அனைத்திற்கும்

தயவு செய்து

தொடர்பு கொள்ளுங்கள்

மாஸ்கன்ஸ் லிமிட்டெட்

35, ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை

"உலகம் உவப்ப ஊழியல்புணர எழுந்தன
யலர்கதிர் ஞாயிறு வாழியரோ"



சோதிடர் அ. பொ. பொன்னுத்துரை

சின்னப்பு சோதிட நிலையம்

நகுலேஸ்வரம் வீதி

அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரி. வி. டெக், றேடியோ
திருத்துவதற்கு—

வீடியோ படம்
பிடிப்பதற்கு—

ரி. வி., றேடியோ, மின்
உபகரணங்கள்
வாங்குவதற்கு—

நாடவேண்டிய ஸ்தாபனம்!

ரெலி கோணர்

113, 114, கண்டி றோட்டு,
நவீன சந்தை (மேல்மாடி)
சாவகச்சேரி.

ஐஸ்கிறீம் வகைகள்
குளிர்பானங்கள்
உள்நாட்டு, வெளிநாட்டு
உணவு வகைகள்

உடனுக்குடன் செய்து தருபவர்கள்!

ஹோட்டல் ஜனந்த்

கண்டி றோட்டு,
சாவகச்சேரி.

விராட் விஸ்வப் பிரம்மணே நம

ச. நாகலிங்கம் ஸ்தபதி அன் சன்

சிற்பகலா நிலையம்

தாம்பிர - சிலா விக்கிரகங்கள், யந்திரங்கள்,
ஆலயத் திருப்பணி, கோவில் நிலமெடுத்தல்
முதலியன செய்பவர்கள்.

நா. சோமசுந்தர ஸ்தபதி
சோ. கெங்காதரன் ஸ்தபதி

கம்மாளர் தெரு
கோண்டாவில் மேற்கு
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் சேமமுற

அம்பாள் அருளுவாளாக!



வைத்தியர் செ. சர்வேஸ்வரன்

பிரகஸ்பதி வைத்திய நிலையம்

தெல்லிப்பளை.

பன்னாலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் தேவியின் கும்பாபிஷேகம்

சிறப்புடன் நிகழப் பிரார்த்திக்கிறேம்

வைத்தியர் நா. மகேஸ்வரன், டி. ஏ. எம்.; ஆர். ஐ. எம். பி.

ஈஸ்வரன் வைத்தியசாலை

முதலியார் கோவிலடி

அளவெட்டி.

தேவியின் திருவருள் திசை எங்கும் பரவுக!

நியூ புஷ்பா ஜுவல்லர்ஸ்

284 (106), கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர் சபை அறிக்கை

கு. கிருபாதரன்
கௌரவ செயலாளர்,
அளவெட்டி தவளக்கிரி மூத்துமாரி
அம்பாள் ஆலய தொண்டர் சபை

பண்ணும் பரதமும் பல்கலை வளமும் சிறந்து மண்வளத்தாலும் சமய வளத்தாலும் மாட்சிமை பெற்ற அளவையூரில் தவளக் கிரித்தலத்தில் கோவில் கொண்டு அருள்பாலித்துவரும் அன்னை முத்துமாரி ஆலயத்தின் வளர்ச்சிக்குப் பணி புரிவதே நோக்கமாகக் கொண்டு 1965 ம் ஆண்டு நடந்த கும்பாபிஷேகத்தை தொடர்ந்து எமது தொண்டர் சபை நிறுவப்பட்டது.

ஆலய நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்து வரும் பரிபாலன சபையுடன் இணைந்து தந்தையும் வயது வந்த மகனும் போல நின்று தொண்டர்சபை பணிபுரிந்து வருகின்றது.

* இளைஞர்களின் ஆற்றலைச் சமயப் பணிகளில் செலுத்துதல்

* ஆலயத்திற்கு வரும் அடியார்களின் வசதிகளைக் கவனித்தல்

* பரிபாலன சபையினரின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருத்தல்

ஆகிய நோக்கங்கள் கொண்டு தொண்டர் சபை இயங்கி வருகின்றது. தனக்கே உரித்தான சட்ட திட்டங்களுடன் நிதியும் கொண்டு இயங்கி வரும் தொண்டர் சபை தனக்கென ஒரு அலுவலகத்தையும் கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் தொண்டர் சபை பல சேவைகளைச் செய்திருப்பினும் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைக்கும் அடியார் வசதிக்கும் தண்ணீர் கிடைக்கத் தண்ணீர்த் தாங்கியொன்று அமைத்துள்ளதும், கோவிலுக்கு மின் வசதி தடைப்படும்போது அவசர தேவைகளுக் காக மின் ஆக்கியொன்று பெறப்பட்டுள்ள தும் ஒலி, ஒளி அமைப்புக்கள் செய்துள்ள தும் குறிப்பிடத்தக்கவையாகும்.

வீதியின் புறச்சுவர் அன்பர்களின் உதவி யுடன் பூசப்பட்டுள்ளது. தொண்டர் சபை தனது நிதியிலிருந்து கோவில் முழுவதற்கும் மின் இணைப்பை முன்பே செய்துள்ளது.

சிரமதானத்தின் மூலம் தொண்டர்கள் செய்யும் சேவைகள் பலவாயினும் ஆலயத் திருப்பணி வேலைகள் தொடங்கிய சமீப காலகட்டத்தில் செய்த பணியை எல்லோ ரும் அறிவர்.

வருங்காலத்தில் செய்ய வேண்டியவை பல உண்டாயினும் முதலில் கல்யாண மண் டபமொன்று நிறுவுவதற்கு வேண்டிய ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இம் மண்ட பம் கல்யாண மண்டபமாக அமைவதுடன் நில்லாது அன்னதானம், நாடகங்கள். மாநாடுகள் ஆகியனவும் நடைபெறக்கூடிய வகையில் வேண்டிய வசதிகளைக் கொண்ட தாக அவையமேண்டுவென்பது எங்கள் அவா. இன்னும் மடத்தின் முன்பாக பிர தான வீதியோரமாக அலங்கார வளைவுகள் கொண்ட ஆலய தோரணவாயிலும் உள் வீதி வடக்குச் சுவரில் தேவியின் திருவிளை யாடல் சித்திரங்களும் அமைக்க எண்ணி யுள்ளோம். கர்ப்ப கிரகம், பக்கச் சுவர், மகா மண்டபத் தூண்கள் ஆகியவற்றுக்குப் பித்தளை தகடு போர்த்தப்படவேண்டும். இவையெல்லாம் பரிபாலன சபையிடம் சமர்ப்பிக்க உள்ளோம். நிறைவேற அன்னை யின் அருள் வேண்டி நிற்கின்றோம்.

நடைபெறும் மகாகும்பாபிஷேகத்துடன் பிரதிஷ்டை செய்யப்படும் காத்தவராயர், நவக்கிரக நாயகர், சண்டேஸ்வரி சந்நிதிகள் நிறுவுவதற்கும் எமது தொண்டர் சபை ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துள்ளது.

தொண்டர் சபையின் நிதிவசதி ஐம்பது சத அதிர்ஷ்டலாப சீட்டுடன் தொடங்கி, இப்போது இரண்டு ரூபாவாக அதிகரித் துள்ளது. வருடா வருடம் நடைபெறும் இச் சீட்டின் மூலம் கணிசமான தொகை எங்கள் கைக்கு வந்து சேர்கின்றது, பரிசுப் பொருள்களை மனமுவந்து இலவசமாக பலர் தந்துதவுகின்றனர். இவர்களுக்கு எமது மனங்கனிந்த நன்றிகள்.

எங்கள் தொண்டர்சபை வளர்ச்சிக்குக் கடந்த காலத்தில் பதவி வகித்தவர்கள் ஆற் றிய தொண்டுகள் அளப்பரியன. அவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகள்.

எங்கள் பணிகள் சிறக்க எல்லோர் உதவியையும் நாடுகிறோம்.

அன்னையின் ஆலய வளர்ச்சிக்கு அனை வரும் சேர்ந்து உழைப்போம். □

மலையிலே தான் பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே யூதி உலகக் கனல் வளர்ப்பாள்
நிலையில் உயர்த்திடுவாள், நேரே அவள் பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் முன்நிற்ப !

குடமுழுக்கு சிறப்புடன் நிகழ
அம்பாள் அருள் பொழிவாளாக!

அம்பாள்
கல் நொருக்கு நிலையம்

நகுலேஸ்வரம் வீதி
அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைக்கும் யந்திரம்
மோட்டர்
மோட்டார் சைக்கிள்
திருத்துவதற்கு

குமார் கறுஜ்
அரசடி வைரவர் கோவிலடி
தம்பையப்புலம்
அளவெட்டி

அன்பளிப்பு

வி. ரி. ஆர். சிங்கம்ஸ்
இறக்குமதியாளர்

மின்சாரப் பொருட்கள்
பொறியியற் பொருட்கள்
பி. வி. சி. குழாய்கள்
ஏனைய ... ...

வி. ரி. ஆர். சிங்கம்ஸ்

118, 2ம் குறுக்குத் தெரு
கொழும்பு - 11.

7, ஸ்ராண்லி வீதி
யாழ்ப்பாணம்.

கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற
அம்பாளைப் பிரார்த்திக்கிறேம்

ஸ்ரீ சங்கர் கிளினிக்

பன்னாலை, தெல்லிப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

அரும்பு

கோவில் பரிபாலனசபை கும்பாபிஷேகப் பெருவிழாவைக் குறையேதுமின்றிச் சிறப்பாகச் செய்யவேண்டுமென்று தீர்மானித்தபோது,

விழாவின் ஒரு அங்கமாக மலரொன்று வெளிவரவேண்டுமென்று விரும்பியது.

வேண்டும் பொருளொன்றுண்டென்றால் அதுவும் அன்னை விருப்பன்றே.

சக்தி சக்தி என்று தாயின் அருள் பாடிய மகாகவி பாரதியாரின் "மாரியென்னும் பெயர் உலகமெங்கும் துலங்குகின்றது" என்ற ஆய்வுக் கட்டுரை யொன்று எதிர் பாராமல் கிடைத்தது.

அதனை அன்னையின் ஆசியாகக் கொண்டு ஆசியுரைகளுக்காக அருளாளர்களை அணுகினோம்.

போது

தமிழ்நாட்டு ஆதீனங்களிலிருந்து மூன்று ஆசியுரைகள் வான் அஞ்சலில் வந்து சேர்ந்தன.

இரண்டு ஈழத்தில்.

இயற்கை தரும் சிறந்த மலரொன்றுக்கு இனிய மணமும் நல்லெழிலும் இருப்பதுண்டு

அருளார்கள் தந்த ஆசிச் செய்திகள் இம் மலரில் சிவமணம் சிறக்கச் செய்கின்றன.

அவர்களுக்கு நன்றி சொல்ல நமக்குத் தகுதியில்லாவிடினும் அது நமது கடமை. மிக்க பணிவுடன் நன்றி செலுத்துகின்றோம்.

கட்டுரைகள்,

தமிழினத்தின் இதயமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் தந்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்துக்கு வெளியே அறிஞர் பெருமக்கள் தந்துள்ள கட்டுரைகளும் இடம் பெற்றிருக்கின்றன,

இவையெல்லாம் தமிழால் மலருக்கு அழகு செய்கின்றன. அரிய பெரிய பொருள் பொதிந்த கட்டுரைகளை ஆக்கித் தந்த அறிஞர்களுக்கு எங்கள் அன்பு கனிந்த நன்றிகள்.

அன்னையின் அருள் மணக்கும் அரிய கவிதைகளைச் செய்து தந்த அருட்கவிஞர்களுக்கும் எமது மேலான நன்றிகள்.

மலர்

இன்னும்,

மலரின் நிழற்படங்களைச் சிறந்தமுறையில் எடுத்துதவிய அன்பர்,

அட்டைப் படங்களை நல்ல முறையில் அழகாக, அச்சிட ஆக்கித் தந்த அன்பர்கள் திருவாளர்கள் ந. கைலாசபதி, J. W. தயிரியர்,

வர்ணப்படங்களை அச்சிட்டுத்தந்த புனித வளவனர் கத்தோலிக்க அச்சகத்தார்,

விளம்பரங்கள் எடுத்துதவிய குழுவினர்,

விளம்பரங்களைத் தந்துதவிய மேலோர்,

கட்டுரைகளைத் சேர்த்துதவிய பல்கலைக் கழக மாணவ அன்பர்,

இந்த மலரை வாடாமலராக மிளிரப் பல ஆலோசனைகளையும் உதவிய தொண்டர்கள்,

சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த செட்டியார் அச்சகத்தார்,

அனைவருக்கும் பரிபாலன சபையார் சார்பாகவும் நன்றிகள்.

நன்றி

—அம்பிகைதாசன்

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகிஎன்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங் குசமும் கருப்புலில்லும்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒருதீங்கில்லையே.

— அபிராமியந்தாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவள கிரிவாழ் முத்து மாரி

அவநெறி கெடுந்தெமை ஆண்டருள் புரிக.

அளவெட்டி - மல்லாகம் பலநோக்குக்

கூட்டுறவுச் சங்கத்தில் குறைந்த விலையில்

தரமான பொருளை நுகர்வோர் பெறுக.

★ சீமேந்து

★ புடைவை வகைகள்

★ இரும்புப் பொருட்கள்

★ விவசாயப் பசளை வகைகள்

★ பெற்ரோல், டீசல்

அனைத்தும் கிடைக்கும்.

— அ. ம. ப. நோ. கூ. சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை

கும்பாபிஷேகம் சிறப்புடன் நிறைவேறப்
பிரார்த்திக்கிறேம்

அன்பளிப்பு

துர்க்கா மில்ஸ்

புகையிரதநிலைய வீதி
தெல்லிப்பளை.

அம்பாள் துணை

"சுகந்தீஸ்"
ஆங்கில வைத்தியசாலை
இரவு — பகல் சேவை

டாக்டர் வெ. பத்மநாதன்

மாணிக்கத்தியாகராஜா பண்டிதர் வீதி
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவை நகர் — தவளக்கிரி

ஸ்ரீ மகா முத்துமாரியம்மன் திருவூஞ்சல்

காப்பு

சிரோங்கு முலகுதனில் வாம மாரும்
செல்வமலி யளவைவட பாலில் மேய
நீரோங்கு வயலிலெடு சோலை சூழும்
நிறையறிவின் பெரியர்கள் வாழ்நீர்மை சான்ற
ஊரோங்கு மருள் புரியுந் தவளக்கிரி
யுறுமாரி யம்மைதிரு வூஞ்சல் பாட
காரோங்கு கரடமத மாநேர் துண்டக்
கணபதிதன் னிருசரணங் காப்ப தாமே.

விருத்தம்

பொன்னுரும் மறைநான்குங் காலகளாக
புகலுமுப வங்கமொளிர் விட்ட மாக
தென்னுரு மிசைநான்கும் கயிற தாக
செப்பரிய பிரணவம் பொற் பலகை யாக
உன்னுருங் கலைகள் மிளிர் பதுமையாக
உம்பருற வாக்கிய பொன்னூஞ்ச வேறி
மின்னுரும் ஒண்டவளக் கிரிப் பாடி
மேயமுத்து மாரியரே யாடூ ஞ்சல்.

1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானுவொடு பைங்கதிரோன் குடைகள் தாங்க
பவனஞெளிர் சிவிறிமிளிர் கவரி வாங்க
கானமுறும் ஆலவட்ட மங்கி வீங்க
கையிலகு வேத்திரந்தென் கடவு ளோங்க
பானல்விழி யயிராணி யடைப்பை தூங்க
பங்கையமா ணடியங்கை பற்றித் தூங்க
தேனவிழ் பூஞ் சோலை வளர் தவளக்கிரி
சேருமுத்து மாரியம்மை யாடூ ரூஞ்சல். 3

செம்பவளத் தாலிலகு தூண்கள் நாட்டி
திகழுமர கதவலீகள் சேரநீட்டி
உம்பருற வயிரமணிக் கைகள் ஒட்டி
ஒளிவிடுவெண் தரளவுயர் கயிறு மாட்டி
அம்பொனினோர் தரையியற்று பலகை பூட்டி
ஆக்கிய பொன் ஊஞ்சல் மிசை அளியொடேறி
வெங்கலியோர்க் கருள்புரியத் தவளக் கிரி
வீற்றிருக்கும் மாரியம்மை யாடூ ரூஞ்சல். 3

அன்பிலெடு தொழுமடியார் அல்லல் நீக்கி
அவருள மெய்க் களிகூர வருளின் நோக்கி
இன்பமுறு போகமெலா மெண்ணி யாங்கு
ஈந்தருளுந் நலனுறுமெய்ஞ் ஞான சக்தி
மின்பொலியுஞ் சடையளகம் விளங்கு சோதி
மெய்யழகுங் கண்டடியார் வீழ்ந்து போற்ற
மன்புனல்சேர் வயல் சூழும் தவளக் கிரி
வருமினிய மாரியம்மை யாடூ ரூஞ்சல். 4

அண்டர்மட வார்களெல்லாம் நடன மாட
அயிராணி யணிபணிகள் ஆய்ந்து கூட்ட
ஒண்டவள மரைவாணி யூசல் தாங்கும்
ஒளிபெறுநல் வடம்பற்றி யளியி ஞட்ட
சண்டிகையுஞ் சூலியும் மெய்த்தகைமை சால
சாருமுதற் கடைவாயில் காவல் செய்ய
கொண்டல் படி சோலை வளர் தவளக் கிரி
கோயில் கொண்ட மாரியம்மை யாடூ ரூஞ்சல். 5

பூமகள் தன் பொறைதீர்ப்பார் யாரென் றெண்ணி
போந்துனையே வழிபட நீ புரமூன் றட்ட
சாமிதன தேவலினுல் தரையுள் ளோரில்
தருமமிலாப் பாவியரை தகுநோ யீந்து
ஏமமிலா நரகழிக்கு இறைமை பூண்டு
இறை அடியார்க் கருள் புரியும் இனிய சக்தி
தாமவட முத்தணியுந் தவளக் கிரி
தையல்முத்து மாரியம்மை யாடூ ரூஞ்சல். 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டல் நிகர் சடையளகங் குலுங்கி யாட
கூந்தல்மலர் வண்டினெடு விழி வண்டாட
தொண்டையுறு கனியதர மெழில் கொண்டாட
தொழுமடியார் வினைகளெலா மஞ்சி யோட
மூண்டகநேர் கரமுத்து மாலையாட
மூதுணர்ந்த காத்தவனுஞ் சூலமாட
இண்டை மலர் விரிபுனல்சேர் தவளக் கிரி
இனிதிருக்கு மாரியம்மை யாடீ ரூஞ்சல். 7

ஒங்குநுதற் கண்ணுடையா யாடீ ரூஞ்சல்
யுயர் சூலங் காமுடையா யாடீ ரூஞ்சல்
தாங்கு முத்து மாலையுளா யாடீ ரூஞ்சல்
தரையளந்தோன் சோதரியே யாடீ ரூஞ்சல்
பூங்கனக வணியணிவா யாடீ ரூஞ்சல்
பூமகளின் பொறை தீர்ப்பா யாடீ ரூஞ்சல்
ஏங்கடியார்க் கருள் புரியுந் தவளக் கிரி
எய்தி முத்து மாரியம்மை யாடீ ரூஞ்சல். 8

நான்மறைதே ரந்தனரா வினமும் வாழி
நவில்வீர சைவரினம் நண்ணி வாழி
மேன்மையுறு மிசையாளர் மிக்கு வாழி
வீரமுறு மன்னர்கள்செங் கோலும் வாழி
சூன்மருவு மெழிலிமழை பொழிந்து வாழி
துகளறுவே ளாளர் பைங் கூழ் துன்னி வாழி
தாங்கு புகழ் மேயவர் வாழ் தவளக் கிரி
தங்கு சக்தி மாரியம்மை வாழி வாழி. 9 □

பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி
மின்னுவநவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்,
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள், ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கு

முத்துமாரி அம்மன் கோயில்
பிரதான உபயங்கள், உபயகாரர்கள்

உபயம்	உபயகாரர்	முகவரி
மூலமூர்த்தி, ஆதிமூலம் கும்பாபிசேகப் பொறுப்பும் பராமரிப்பும்	கதிரித்தம்பி முருகையா	மாரியிட்டி, அளவெட்டி.
கர்ணகூடு சமநிலை	கதிரித்தம்பி முருகையா சகோதரர்	மாரியிட்டி அளவெட்டி
மூலமூர்த்தியின் ஆசனக்கல்	பொன்னையா சிவசுப்பிரமணியம்	அம்பாள் கோவிலடி
தம்பத்தடிப் பிள்ளையார்	சின்னையா கனகசபை	கிராயிட்டி
நடேசர் கோயில்	சந்தசாமி சிவப்பிரகாசம்	கூத்தஞ்சீமா
	பரிவார மூர்த்திகள்	
பிள்ளையார் கோயில்	வைத்திலிங்கம் வைரமுத்து தொடர்பு – செல்லையா	சீனன்கலட்டி
	கோபாலசாமி	சாத்தனூர் கலட்டி
முருகன் கோவில்	அப்பையா இரவீந்திரன் குடும்பம்	அம்பாள் கோவிலடி
வைரவர், நாகதம்பிரான்	சுப்பிரமணியம் காமாட்சிசுந்தரம்	கூத்தஞ்சீமா
கோயில்கள்	தொடர்பு: சுப்பிரமணியம் வைத்தியநாதன்	

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயம்	உபயகாரர்	முகவரி
சண்டேஸ்வரி கோயில்	கணேசு கோபாலசாமி குடும்பம்	கூத்தஞ்சீமா
சண்டேஸ்வரி எழுந்தருளி விக்கிரகம்	இராமசாமி சுப்பிரமணியம்	தஞ்சிட்டி
நவக்கிரக மண்டபம்	செல்லியா தட்சணமூர்த்தி சகோதரர்கள்	அம்பாள் கோவிலடி
சின்னம்மாள் சபை, பண்டிகை	சுப்பிரமணியம் ஐயாத்துரை	குரும்பகலட்டி சிறுவிளான்
காத்தவராயர் கோயில்	வீரவாகு கதிரமலை	அம்பாள் கோவிலடி
வசந்த மண்டபம்	நாகலிங்கம் கந்தசாமி பத்மநாதன்	கூத்தஞ்சீமா
யாகசாலை	செல்லத்துரை சிதம்பரநாதன்	அம்பாள் கோவிலடி
வெளி மண்டபம்	விஜயரத்தினம் சிவலோகநாதன்	செட்டிச்சோலை
மணிக்கோபுரம்	கர்மலிங்கம் அம்பிகாபதி	அளவெட்டி
	தொடர்பு: கா. பொ. அருணாசலம்	
உள்வீதி நிலவேலி	அப்பாக்குரை தவமலர்	அம்பாள் கோவிலடி
	பொன்னையா மயில்வாகனம்	செட்டிச்சோலை
	சின்னத்தம்பி நாகேஸ்வரி	பேரன்புலம்
வடக்கு உள்வீதிக் கூரைவேலி	வீரகத்தி இராசையா	சீனன்கலட்டி
தெற்கு உள்வீதிக் கூரைவேலி	வல்லிபரம் தம்பிப்பிள்ளை	நெடுங்கண்ணி
	சபாபதி கதிரமலை	அம்பாள் கோவிலடி
தெற்கு அம்மன்வாசல் முகப்பு கூரைவேலி	சபாபதி கதிரமலை	அம்பாள் கோவிலடி
மகாமண்டபக் கிழக்குக் கதவு	சிவப்பிரகாசம் நாகேஸ்வரி	நெல்லோடை
மடைப்பள்ளி பராமரிப்பு	முருகர் சின்னத்தம்பி	அளவெட்டி வடக்கு
	நாகமுத்து சாந்திநாதன்	மல்லாகம்
மேற்கு வெளிவீதி சுவர்ப்பூச்சு	கந்தையா விஜயரத்தினம்	நெடுங்கண்ணி
திருமஞ்சனக் கிணறு	கதிரித்தம்பி சுந்தரலிங்கம்	கும்மாலை
வாளி, கயிறு	கதிரித்தம்பி கந்தையா	கூத்தஞ்சீமா
ஈசானக் கிணறு	கதிரித்தம்பி தம்பையா	காங்கேசன்துறை
,, ,, பராமரிப்பு	நாகலிங்கம் குமரகுரு	அம்பாள் கோவிலடி
சமையற் பிரிவு	சுப்பையா நாகமுத்து குடும்பம்	மல்லாகம்
பூங்கொல்லை மடம், மதில், தொண்டர்சபை அறை	நாகமுத்து சாந்திநாதன்	மல்லாகம்
சப்பர, சகடைக் கொட்டில்	சின்னராசா பாலச்சந்திரன்	கூத்தஞ்சீமா

வாகனங்கள்

இரட்டைக் குதிரை	அருணாசலம் முத்துலிங்கம்	தெற்கு அளவெட்டி
இரட்டைச் சிங்கம்	வீரகத்தி கந்தையா	நெடுங்கண்ணி
பெரிய சிங்கம்	பொன்னையா கனகராசா	கூத்தஞ்சீமா
அன்னம்	இராமசாமி சுப்பிரமணியம்	தஞ்சிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயம்	உபயகாரர்	முகவரி
இடபம்	கந்தசாமி விநாயகமூர்த்தி	கூத்தஞ்சீமா
பெரிய சகடை	செல்லையா சரவணமுத்து	வடலியடைப்பு
சின்னச் சகடை	தம்பிப்பிள்ளை	நெடுங்கண்ணி
சப்பரச் சகடை	9 ஆந் திருவிழா உபயகாரர்	அம்பாள் கோவிலடி

குறிப்பு: 1) அங்கி, விளக்குப் போன்ற பிற காணிக்கைகள் இந்தப் பட்டியலில் அடங்கவில்லை.

2) மறைந்த உபயகாரரின் பெயர்கள் அறிவுறுத்தல் கிடைக்காமையி னல் தொடர்ந்தும் அப்படியே இடம்பெற்றுள்ளன.

நாளாந்த உதய பூஜைகள்

ஆடி	சரவணமுத்து நாகநாதர்	கொட்டடி அளவெட்டி
ஆவணி	பொன்னர் வைத்தியலிங்கம்	வெள்ளியம் பதி அளவெட்டி
புரட்டாதி	கதிரவேலு செல்லம்மா	கிளாங்குடை அளவெட்டி
ஐப்பசி	இளையதம்பி சுப்பிரமணியம்	சுண்டுக்குளி யாழ்ப்பாணம்
கார்த்திகை	டீ கந்தையா	வெள்ளியம்பதி அளவெட்டி
மார்கழி	சரவணமுத்து பொன்னுத்துரை	அலுக்கை அளவெட்டி
தை	இளையதம்பி சோமசுந்தரம்	கிளாங்குடை அளவெட்டி
மாசி	நவரத்தினம் சிவபாதம்	டச்ரோட் அளவெட்டி
பங்குனி	K. S. கந்தையா	கேணிக்கரை அளவெட்டி
சித்திரை	ஆறுமுகம் தேவராசா	மாரியிட்டி அளவெட்டி
வைகாசி	ஐயம்பிள்ளை யோகம்	வெள்ளியம்பதி அளவெட்டி
ஆனி	இரத்தினம் நாகராசா	தம்பாகலட்டி அளவெட்டி

தமிழ் மாசப்பிறப்பு உதய பூஜை

தை	செல்லையா தம்பிஜயா	தாதுவங்குடை அளவெட்டி
மாசி	வைத்திலிங்கம் நவரெத்தினம்	கும்பளாவளை தெற்கு அளவெட்டி
பங்குனி	சாந்தலிங்கம் யோகராசா	குரும்பகலட்டி சிறுவிளான்
சித்திரை	நடராசா துளசிதாசன்	கூத்தன்சீமா அளவெட்டி
வைசாசி	தம்பையா தர்மலிங்கம்	பேரன்புலம் அளவெட்டி
ஆனி	இரத்தினம் நாகராசா	சுப்பனவத்தை அளவெட்டி
ஆடி	செல்லையா புண்ணியமூர்த்தி	கூத்தஞ்சீமா அளவெட்டி
ஆவணி	நாகலிங்கம் குமரகுரு	அம்பாள் கோவிலடி அளவெட்டி
புரட்டாதி	இளையவன் ஆசை	தம்பா கலட்டி அளவெட்டி
ஐப்பசி	கந்தையா கணபதிப்பிள்ளை	தஞ்சிட்டி அளவெட்டி
கார்த்திகை	காசியர் பொன்னையா அருணாசலம்	சிறுவிளான் இளவாலை
மார்கழி	வீரவாகு கதிரமலை	அம்பாள் கோவிலடி அளவெட்டி

மார்கழி மாச நாளாந்த பூஜைகள்

முதல் 5 நாட்கள்	கதிரித்தம்பி முருகையா சகோதரர்கள்	மாரியிட்டி அளவெட்டி
2வது ,,	கந்தையா மார்க்கண்டு	மங்குனியன் வளவு அளவெட்டி
3வது ,,	அண்ணமலை செல்லமுத்து	மங்குனியன் வளவு அளவெட்டி
4வது ,,	கோசலாதேவி மயில்வாகனம்	முதலியார் கோவிலடி அளவெட்டி
கடைசி 10 ,,	சின்னத்துரை தையல் மீஞ்சி	கலப்பனவிடை அளவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாந்த மதிய பூஜை (ஆரம்பம் 14-01-1989)

ஆங்கில திகதிப்படி			
	1.	நவரத்தினம் யோகேஸ்வரன்	சீனன் கலட்டி அளவெட்டி
	2.	சொக்கலிங்கம் சிவரூபி	கிளாங்குடை அளவெட்டி
	3.	நித்தியேஸ்வரன்	சீனன் கலட்டி அளவெட்டி
	4.	இரத்தினசபாபதி சற்குணேஸ்வரன்	நெல்லோடை அளவெட்டி
	5.	நாகலிங்கம் யுவராசா	டச்ரோட் அளவெட்டி தெற்கு
	6.	செல்லையா சபாரத்தினம்	தம்பா கலட்டி அளவெட்டி
	7.	நாகையா யோகநாதன்	ஐயனார் கோவிலடி அளவெட்டி
	8.	நாகராசா ராதாகிருஷ்ணன்	பெத்தாவளை அளவெட்டி
	9.	சண்முகானந்தன் விதுரன்	பெத்தாவளை அளவெட்டி
	10.	திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி	கிளாங்குடை அளவெட்டி
	11.	சதாசிவம் திர்வியம்	கிளாங்குடை அளவெட்டி
	12.	கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்	கூத்தஞ்சீமா அளவெட்டி
	13.	மாணிக்கம் சிவராசா	சுப்பனவத்தை அளவெட்டி
	14.	நடராசா ஜெனகராசா	தம்பாகலட்டி அளவெட்டி
	15.	சரவணமுத்து கதிர்காமத்தம்பி	கூத்தஞ்சீமா அளவெட்டி
	16.	காசிப்பிள்ளை அம்பலவாணர்	பணிக்கன்தோட்டம் அளவெட்டி
	17.	நவரத்தினம் இராசம்மா	சீனன்கலட்டி அளவெட்டி
	18.	வைரமுத்து சிவகுமார்	பெத்தாவளை அளவெட்டி
	19.	தியாகராசா விக்னேஸ்வரன்	கிளாங்குடை அளவெட்டி
	20.	செல்வவிநாயகமூர்த்தி மதியழகன்	முள்ளாளை இளவாலை
	21.	பாலகிருஷ்ணன் சுதாகர்	கூத்தஞ்சீமா அளவெட்டி
	22.	தம்பையா தனபாலசிங்கம்	சீனன்கலட்டி அளவெட்டி
	23.	பொன்னையா சிவசுப்பிரமணியம்	நெல்லோடை அளவெட்டி
	24.	மார்க்கண்டு விஜயகுமார்	கிராயிட்டி கிறுவிளான்
	25.	மாரிமுத்து நவரத்தினம்	செட்டிச்சோலை அளவெட்டி
	26.	முருகையா ரவிதாஸ்	ஐயனார் கோவிலடி அளவெட்டி
	27.	கோவிந்தசாமி விக்னேஸ்வரன்	ஐயனார் கோவிலடி அளவெட்டி
	28.	பாலகிருஷ்ணன் முகுந்தன்	கிளாங்குடை அளவெட்டி
	29.	வைத்தியநாதன் பாமினி	முள்ளாளை இளவாலை
	30.	வெற்றிவேலு தம்பித்துரை	தச்சிட்டி அளவெட்டி
	31.	கிருஷ்ணசாமி சிவபாதரத்தினம்	ஐயனார் கோவிலடி அளவெட்டி

வெள்ளி பஜனைகள்: மாதத்து 1ம் 2ம் 3ம் 4ம் 5ம் குறிப்பிடப்பட்டுள்ளது.

			வெள்ளி என்ற முறைப்படி
தை	1	வேலாயுதம் குமாரசுந்தரம்	மாவிட்டபுரம்
	2	கந்தையா சுதந்திரன்	சீனன்கலட்டி அளவெட்டி
	3	குமாரசாமி நல்லம்மா	சாத்தனர்கலட்டி அளவெட்டி
	4	நாகலிங்கம் கந்தசாமி பத்மநாதன்	கூத்தஞ்சீமா அளவெட்டி
மாசி	1	ஆறுமுகம் தேவராசா	மாரியிட்டி அளவெட்டி
	2	நாகலிங்கம் குமரகுரு	அம்பாள் கோவிலடி அளவெட்டி
	3	கதிரித்தம்பி நாகலிங்கம்	முதலியார் கோவிலடி அளவெட்டி
	4	பொன்னையா சுந்தையா	செட்டிச் சோலை அளவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

			மங்குனியன் வளவு அளவெட்டி
பங்குனி	1	தம்பிமுத்து விநாயகமூர்த்தி	கேணிக்கரை அளவெட்டி
	2	ஆனந்தராசா செல்வராசா	கேணிக்கரை அளவெட்டி
	3	கதிரித்தம்பி சரவணமுத்து கந்தையா	மாலிலங்கை அளவெட்டி
	4	நமசிவாயம் வாதவூரர்	கிராயட்டி சிறுவிளான்
	5	பாலசுப்பிரமணியம் சிவகுமார் பொன்னையா	
			பேரம்பலம் அளவெட்டி
சித்திரை	1	சிவசுப்பிரமணியம்	சாத்தனூர் கலட்டி அளவெட்டி
	2	செல்லையா நடராசா	பணிக்கன் தோட்டம் அளவெட்டி
	3	கணபதிப்பிள்ளை பொன்னம்மா	பன்னாலை தெல்லிப்பளை
	4	கிருஷ்ணர் காசிப்பிள்ளை	தேரிட்டி அளவெட்டி
			கும்பளாவளை அளவெட்டி
வைகாசி	1	வீரகத்தி சீனிவாசகம்	தஞ்சிட்டி அளவெட்டி
	2	ரங்கூன் சரவணமுத்து	பிளவுதரை அளவெட்டி
	3	கந்தையா ஜெயரத்தினம்	சீனன் கலட்டி அளவெட்டி
	4	கனகசபை சட்டநாதர்	
	5	செல்லையா குமாரசாமி	அம்பாள் கோவிலடி அளவெட்டி
			அளவெட்டி தெற்கு
ஆனி	1	நாகலிங்கம் விஸ்வலிங்கம்	அலவத்தை அளவெட்டி
	2	வேலாயுதபிள்ளை கணேசையா	பேரன்புலம் அளவெட்டி
	3	கந்தையா கமலநாதன்	
	4	வீரகத்தி சின்னத்தம்பி	மாரிட்டி அளவெட்டி
			தஞ்சிட்டி அளவெட்டி
ஆடி	1	வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்	வெள்ளியம்பதி அளவெட்டி
	2	அரியகுட்டி அப்பையா	உந்துடை அளவெட்டி
	3	கணபதிப்பிள்ளை தனசேகரம்	முதலியார் கோவிலடி அளவெட்டி
	4	மாரிமுத்து மாணிக்கம்	
	5	திருமதி வைத்திலிங்கம் சிவகங்கை	
			தூதுவங்குடை அளவெட்டி
ஆவணி	1	தர்மலிங்கம் சிறீகாத்தன்	வெள்ளியம்பதி அளவெட்டி
	2	இளையதம்பி கந்தையா	கூத்தஞ்சிமா அளவெட்டி
	3	இராமசாமி சின்னத்துரை	நெடுங்கண்ணி அளவெட்டி
	4	வீரகத்தி கந்தையா	
			செட்டிச் சோலை அளவெட்டி
புரட்டாதி	1	சரவணமுத்து சிவசம்பு	
	2	இராசமுத்தையா அம்பலவாணர்	செட்டிச் சோலை அளவெட்டி
	3	பொன்னுத்துரை அருந்தவநாதன்	செட்டிச் சோலை அளவெட்டி
	4	கணபதிப்பிள்ளை மாரிமுத்து	சீனன்கலட்டி அளவெட்டி
			தஞ்சிட்டி அளவெட்டி
ஐப்பசி	1	நமசிவாயம் சுந்தரமூர்த்தி	நெடுங்கண்ணி அளவெட்டி
	2	தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்	சுண்டுக்குளி யாழ்ப்பாணம்
	3	இளையதம்பி சுப்பிரமணியம்	தம்பாகலட்டி அளவெட்டி
	4	பொன்னன் மாணிக்கம்	

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை	1	தில்லையர் வேலாயுதம்	முதலியார் கோவிலடி அளவெட்டி
	2	வைரமுத்து கந்தையா	கும்மாலை அளவெட்டி
	3	கந்தையா மார்க்கண்டு	மங்குனியர் வளவு அளவெட்டி
	4	செல்லையா சிவகடாட்சம்	தூதுவங்குடை அளவெட்டி
	5	ஐயாத்துரை திருநாவுக்கரசு	ஐயனார் கோவில் வளவு அளவெட்டி
மார்கழி	1	முருகர் கந்தையா	சாத்தனர்கலட்டி அளவெட்டி
	2	செல்லையா புண்ணியமூர்த்தி	கூத்தஞ்சீமா அளவெட்டி
	3	காசிப்பிள்ளை அம்பலவாணர்	பணிக்கன் தோட்டம் அளவெட்டி
	4	சின்னர் பொன்னையா	தடுவாங்கலட்டி அளவெட்டி
திருவெம்பாவை விழா			
	1	அ. முருகேசு	தேரிட்டி அளவெட்டி
	2	கந்தையா நாகராசா	சூத்தியன் ஒலை அளவெட்டி
	3	நவரத்தினம் சிவபாதம்	டச்ரோட் அளவெட்டி
	4	கதிரித்தம்பி சிவசம்பு	திட்டியோலை அளவெட்டி
	5	வீரகத்தி அப்புக்குட்டி	உந்துடை அளவெட்டி
	6	வெற்றிவேலு சுந்தரமூர்த்தி	தஞ்சிட்டி அளவெட்டி
	7	தம்பிப்பிள்ளை நாகலிங்கம்	முதலியார் கோவிலடி அளவெட்டி
	8	சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை	நுணச்சை அளவெட்டி
	9	கதிரித்தம்பி நாகலிங்கம்	முதலியார் கோவிலடி அளவெட்டி
நடேசர் அபிடேகம்	10	சண்முகசாமி செந்தில்நாதன் சகோதரர்கள்	சாத்தனர்கலட்டி அளவெட்டி
		செல்வத்துரை சிதம்பரநாதன்	தம்பாகலட்டி அளவெட்டி
இரவு விழா			கும்பளாவளை மேற்கு அளவெட்டி
நவராத்திரி விழா	1	தம்பிமுத்து சிவபாலன்	நெல்லோடை அளவெட்டி
	2	நடராசா செல்வத்துரை	அழகொல்லை அளவெட்டி
	3	செல்வத்துரை சரஸ்வதி	மாவிலங்கை அளவெட்டி
	4	கிருஷ்ணராசா சம்பூர்ணராணி	கிராயிட்டி இளவாலை
	5	சின்னப்பு கனகசபை	கும்பளாவளை மேற்கு அளவெட்டி
	6	கணபதிப்பிள்ளை செல்லப்பா	மூளாய் இளவாலை
	7	வி. கனகசபை	இளாங்குடை அளவெட்டி
	8	இராசரத்தினம் சிவசுப்பிரமணியம்	இளாங்குடை அளவெட்டி
	9	திருமதி சதாசிவம் இரவியம்	கூத்தஞ்சீமா அளவெட்டி
மானம்பு விழா	10	வல்லிபுரம் குமாரசாமி அருணாசலம் முத்துலிங்கம்	அளவெட்டி தெற்கு
இலட்சார்ச்சனை			
1ம் நாள்		நடராசா இரத்தினசபாபதி	நெல்லோடை அளவெட்டி
2ம் நாள்		வீரவாகு கதிரமலை	அம்பாள் கோவிலடி அளவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3ம் நாள்	இராசகோபால் இராமச்சந்திரன்	கும்பளாவளை அளவெட்டி
4ம் நாள்	செல்லையா புண்ணியமூர்த்தி	கூத்தஞ்சிமா அளவெட்டி
5ம் நாள்	சேதுராக்கர் சுப்பிரமணியம்	தம்பாகலட்டி அளவெட்டி
6ம் நாள்	சின்னையா கந்தையா	தம்பாகலட்டி அளவெட்டி
7ம் நாள்	மாரிமுத்து மாணிக்கம்	உந்துடை அளவெட்டி
8ம் நாள்	கந்தையா ஜெயக்குமார்	முள்ளாளை இளவாலை
9ம் நாள்	முத்துச்சாமி பெரியசாமி பாலகிருஷ்ணன்	கூத்தஞ்சிமா அளவெட்டி
	இரத்தினவேல் கேதீஸ்வரன்	கூத்தஞ்சிமா அளவெட்டி
10ம் நாள்	சங்காபிஷேகம் — அன்னதானம் (ஊர்ப்பொது)	
இரவு விழா	வெற்றிவேலு சுந்தரமூர்த்தி	தஞ்சிட்டி அளவெட்டி

நடேசர் அபிஷேகம்

சித்திரை 1 திருவோணம் மத்தியானம்	குமாரசாமி குகானந்தன்	சாத்தனர்கலட்டி அளவெட்டி
ஆனி 2 உத்தரம் அதிகாலை	சுப்பிரமணியம் பொன்னுத்துரை	சுப்பனுவத்தை அளவெட்டி
ஆவணி 3 பூர்வசதுர்த்தசி மத்தியானம்	சுஜீவா திருநாவுக்கரசு	தலையாட்டி அளவெட்டி
புரட்டாதி 4 பூர்வசதுர்த்தசி மத்தியானம்	நாகலிங்கம் கந்தசாமி பத்மநாதன்	கூத்தஞ்சிமா அளவெட்டி
மார்கழி 5 திருவாதிரை அதிகாலை	சண்முகநாதன் செந்தில்நாதன் சகோதரர்கள்	சாத்தனர் கலட்டி அளவெட்டி
மாசி 6 பூர்வசதுர்த்தசி மத்தியானம்	வைத்திலிங்கம் பொன்னம்பலம்	தம்பையப்புலம் அளவெட்டி
பங்குனி 7 அனுஷம் மத்தியானம்	கந்தசாமி சிவப்பிரகாசம் பிரதிஷ்டாதினம்	கூத்தஞ்சிமா அளவெட்டி

விசேட விழாக்கள்

வருடப்பிறப்பு	தர்மலிங்கம் பவளகாந்தன்	தூதுவங்குடை அளவெட்டி
சித்திரா பூரணை	இராசரத்தினம் சிவசுப்பிரமணியம்	கிளாங்குடை அளவெட்டி
ஆடிப்பூரம்	வைத்திலிங்கம் மார்க்கண்டு	குரும்பகலட்டி இளவாலை
தை அத்தம் இனிமேல் தை உத்தரட்டாதி கும் பாபிடேக தினம்	வெற்றிவேலு சுந்தரமூர்த்தி	''நளினி'' தஞ்சிட்டி அளவெட்டி
பங்குனி உத்தரம்	பொன்னையா தர்மராஜசிங்கம்	கும்பளாவளை அளவெட்டி
தீபாவளி	சிவலோகம் சின்னத்துரை	''பாலசக்தி'' அளவெட்டி வடக்கு
திருக்கார்த்திகை	முத்தையா கதிரவேலு	நாவலர் வீதி யாழ்ப்பாணம்
தைப்பூசம்	இராசரத்தினம் சிவசுப்பிரமணியம்	கிளாங்குடை அளவெட்டி
தைப்பொங்கல்	கோணமலை இரத்தினம்	'ஈஸ்வரி இல்லம்' அளவெட்டி வடக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராத்திரி

1 ம் ஜாமம்	சின்னத்தம்பி முத்தையா	கலப்பனுவிடை அளவெட்டி
2 ம் ஜாமம்	சிவப்பிரகாசம் நாகேஸ்வரி	நெல்லோடை அளவெட்டி
3 ம் ஜாமம்	கந்தசாமி விநாயகமூர்த்தி	கூத்தஞ்சீமா அளவெட்டி
4 ம் ஜாமம்	வீரவாகு பொன்னுத்துரை	அம்பாள் கோவிலடி அளவெட்டி

அபிராமிப்பட்டர்

விழா	கிருஷ்ணசாமி சிவபாதரத்தினம் குடும்பத்தினர்	ஐயனார் கோவிலடி அளவெட்டி
பங்குனி 4 ந் திங்கள் குளிர்த்தி	அண்ணமலை வெற்றிவேல் கந்தையா சின்னத்தம்பி	அளவெட்டி வடக்கு

உபயம்	உபயகாரர்	முகவரி
மகோற்சவம்	வெவ்வேறு பகுதி மக்கள் / உறவினர் சேர்ந்து செய்யும் இம் மகோற்சவ உபயங்கள் தொடர்பாக 30-5-1975 இல் கூடிய நிர்வாகசபையின் நிர்மானப்படி, தேர்த்திருவிழா தவிர்ந்த ஏனைய 10 விழாக்களுக்கு மூன்று பெயர்கள் மட்டுமே பதியப்பட்டுள்ளன.	
கொடியேற்றம்	ஆனந்தராசா சேனுதிராசா	டச்ரோட், அளவெட்டி
	ஆனந்தராசா செல்வராசா	கேணிக்கரை அளவெட்டி
	கதிரித்தம்பி சிவசம்பு	திட்டியோலை அளவெட்டி
2 ம் நாள்	சந்திரவர் சிதம்பரப்பிள்ளை	கேணிக்கரை அளவெட்டி
	நவரத்தினம் சிவபாதம்	டச்ரோட் அளவெட்டி
	வைத்தியலிங்கம் கந்தையா	வெள்ளியம்பதி அளவெட்டி
3 ம் நாள்	கிருஷ்ணர் காசிப்பிள்ளை	பன்னாலை
	சீனிவாசகம் முருகையா	பன்னாலை
	வேலுப்பிள்ளை நவரத்தினம்	பன்னாலை
4 ம் நாள்	நாகமுத்து கந்தையா	தேரிட்டி அளவெட்டி
	சின்னட்டி சீனியன்	தேரிட்டி அளவெட்டி
	சிதம்பரி கந்தையா	தேரிட்டி அளவெட்டி
5 ம் நாள்	சரவணமுத்து சிறீஸ்கந்தராசா	முள்ளாலை அளவெட்டி
	வைத்திலிங்கம் செகராசசிங்கம்	முள்ளாலை அளவெட்டி
	சிவகுரு துரைசிங்கம்	முள்ளாலை அளவெட்டி
6 ம் நாள்	கார்த்திகேசு கணேசு	சாத்தனூர் கலட்டி அளவெட்டி
	நாகலிங்கம் கந்தசாமி பத்மநாதன்	கூத்தஞ்சீமா அளவெட்டி
	செல்லத்துரை சிதம்பரநாதன்	தம்பர கலட்டி அளவெட்டி
7 ம் நாள்	வல்லிபுரம் தம்பிப்பிள்ளை	நெடுங்கண்ணி அளவெட்டி
	பொன்னையா கந்தையா	செட்டிச்சோலை அளவெட்டி
	இராமலிங்கம் வேலுப்பிள்ளை	செட்டிச்சோலை அளவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 ம் நாள்	முருகர் கந்தையா கணபதிப்பிள்ளை நாகம்மா செல்லர் [செல்லப்பா	பெத்தாவளை அளவெட்டி தம்பா கலட்டி அளவெட்டி நகுலேஸ்வர வீதி அளவெட்டி
9 ம் நாள்	வல்லிபுரம் பொன்னம்பலம் வீரவாகு பொன்னுத்துரை தர்மலிங்கம் சிறீகாந்தன்	இலகடி அளவெட்டி அம்பாள் கோவிலடி தூதுவங்குடை அளவெட்டி
தேர்த்திருவிழா	ஆறுமுகம் இராமசாமி	உந்துடை அளவெட்டி
தேர்	கதிரித்தம்பி கந்தையா வைத்தியகலாநிதி இராசமுத்தையா அம்பலவாணர் முன்னின்று உதவினர்	உந்துடை அளவெட்டி
தீர்த்தம்	இளையதம்பி சோமசுந்தரம் சரவணமுத்து பொன்னுத்துரை விஜயரத்தினம் சிவலோகநாதன்	சிளாங்குடை அளவெட்டி அலுக்கை அளவெட்டி திட்டியோலை அளவெட்டி
பூங்காவனம் அபிடேகம் விழா	செல்வி சிங்காரவேல் தையல்முத்து தொண்டர் சபையினர்	கூத்தஞ்சீமா அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில்

மாதா பராசக்தி வையமெல்லாம் நீநிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே
ஏதா யினும்வழிநீ சொல்லாய் எனதுயிரே
வேதர்வின் தாயே மிகப்பணிந்து வாழ்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் தேவியின் கும்பாபிஷேகம்

அழகுற நிகழப் பிரார்த்திக்கிறேம்!



ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்

பண்டகத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் கருணை அனைவர்க்கும் பொலிக!

— படப்பிடிப்பில் கைவண்ணம் காண!
— வண்ணப் படச்சுருள் கழுவிப் பிரதி எடுக்க!

ந. கைலாசபதி

426/1, கிளனர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

கூத்தஞ்சீமா
அளவெட்டி.

தேவியின் கருணை திசையெங்கும் ஓங்குக!

திருமணப் பட்டுப் பிடவை வியாபாரிகள்

மகாராணி டெக்ஸ்ரைல்ஸ்

இல. 50, பெரியகடை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கு தவளகிரி முத்துமாரி அம்மன் கோவில்
திருப்பணி வேலைகளும், மகா கும்பாபிஷேகமும்

அம்பாள் அடியார்களே,

எங்கள் ஆலயத்தில் 1965 குரோதி ஆண்டு தைத்திங்களில் நடந்தேறிய மகா கும்பாபிஷேகத்தின் பின், எமது பிரதேசத்தில் ஏற்பட்ட நெருக்கடி நிலைகளினால், உரியகாலத்தில் கும்பாபிஷேகங்களை நிகழ்த்தமுடியாது போயிற்று. இருந்தும் மூன்று கால நித்திய பூஜைகள், வெள்ளி பஜனைகள், பங்குனிக் குளிர்த்தி, நைமித்தியமான ஆனி மகோற்சவம், நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை என்பன கிரமமாக நடக்கின்றன. மேலும் அம்பாள் அநுக்கிரகத்துடன் பின்னர் ஆரம்பமான பத்துநாள் இலட்சார்ச்சனை, சங்காபிஷேகம், நடேசர் அபிஷேகங்கள், அபிராமிப்பட்டர் விழா, திருக்கார்த்திகை, ஆயிரம் திருவிளக்குவிழா போன்றனவும் வேறுபல விசேட உற்சவங்களும் புதுப்பொலிவுடன் நடைபெறுகின்றன.

கோயில் கட்டட பராமரிப்பு வேலைகள் காலந்தவறாது கவனிக்கப்பட்டு வந்தாலும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ வேண்டிய மகா கும்பாபிஷேகம், பன்னிரண்டு ஆண்டுகள் காலங்கடந்துவிட்டபடியால், அதன் அவசரத்தை நாம் உணர்ந்தோம். உணர்ந்து இவ்வருடத்திய பெருபெருவிழாவின் பின், மூர்த்திகளைப் பாலஸ்தாபனஞ் செய்வதற்கும் திருப்பணி வேலைகளை முடிப்பதற்கும் கும்பாபிஷேகத்துக்குரிய ஒழுங்குகளுக்கும் ஆலோசனைகள் பெற்று இருந்தோம்.

இந்தவேளையில், அதாவது (26-04-89) புதன் இரவு கோயிலுள் புகுந்த கொள்ளையர், மூல இயந்திரம் உட்பட கணபதி, முருகன் மூர்த்திகளின் இயந்திரங்களைத் திருடிச்சென்றுவிட்டனர். அம்பாளின் பெறுமதிமிக்க நகைகள், அவள் திருவருளினாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றப்பட்டுள்ளன. இவ்வாருக நடந்ததும், நடவாததும் அம்பாள் திருவுளப் படியே என்று ஏற்றுக்கொண்டு அடுத்த நாளே (27-04-89) உரிய முறைப்படி பாலஸ்தாபனம் செய்து, நித்தியபூஜைகள் தடைபடாது தொடரும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இனி, மகாகும்பாபிஷேகத்தை நிகழ்த்துவதற்கு முன்பதாக, ஆலய நிர்மாண விதிகளுக்கமையச் செய்யவேண்டிய திருத்த வேலைகளையும், மற்றும் திருப்பணி வேலைகளையும் மேற்கொள்வதே எமது திட்டம்.

எங்கள் ஆலயத் திருப்பணி பற்றி எண்ணும்போது, ஏலவே ஆரம்பிக்கப்பட்டு, கால விபரீதங்களால் நிறைவெய்தாது இருக்கும் தேர்த்திருப்பணி பற்றிக் குறிப்பிடுவது அவசியம். இதற்கென நன்கொடையாயும், விலைகொடுத்தும், பெற்ற மரங்கள் தேரமைப்பில் ஆசனம் வரை நிர்மாணிப்பதற்குப் போதுமானவை அரியப்பட்டுச் சேர்ந்துள்ளன. இருப்பினும் தேர்த் திருப்பணிச் சபையினர் விடாது முயன்றும், அச்சுக்கள் இரண்டில் ஒன்றுக்குரிய மருதமரம் இன்னமும் கைக்கெட்டாத காரணத்தால் வேலைகள் தடைப்பட்டுள்ளமை வேதனைக்குரியதே! இதன் காரணமாகவே இப்பணிக்கு உள்ளூரில் நிதி திரட்டும் முயற்சி தொடங்கவில்லை.

தேர்த் திருப்பணியை ஏலவே மேற்கொண்டதால் மற்றைய திருப்பணி வேலைகள் பின்போடப்பட்டன. எனினும் அம்பாள் தமது எண்ணத்தை மறைமுகமாக வெளிப்படுத்தி மற்றைய திருப்பணி வேலைகளையும் மகா கும்பாபிஷேகத்தையும் முன்னெடுத்துச்செல்ல அருள்பாலித்திருக்கிறார் ஆகவே அம்பாளின் திருவுள்ளக்கிடக்கையை நிறைவேற்றுவது அவர் அடியார்களின் தலையாய கடமையாகுமன்றே! மேற்கொள்ளவேண்டிய திருப்பணிகளின் பட்டியல் இத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

எனவே, உபயகாரர்கள் மற்றும் அடியார்கள் தனித்தனியாகவோ, குடும்பமாகவோ, குறிச்சி குறிச்சியாகவோ ஏற்றுச் செய்ய முன்வரும் தனித்திருப்பணிகள் சம்பந்தமாகப் பரிபாலன சபையினருடன் தொடர்புகொள்ளும்படி பணிவுடன் வேண்டுகின்றோம். பணமோ, பொருளோ பொதுத் திருப்பணி நிதிக்காகத் தரவிரும்பும் அடியார் பெருமக்கள் கூடிய விரைவில் பொருளாளரிடம் அவற்றைச் சேர்த்துப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

உரிய விதிகளின்படி அனைத்துத் திருப்பணி வேலைகளும் நிறைவேறி, மகாகும்பாபிஷேகமும் இனிதே பூர்த்தியெய்த, எங்கள் அன்னை முத்துமாரியின் அருட்கண் பார்வை கிடைப்பதாக! இவ்வண்ணமே எமது கைங்கரியங்கள் சுபமாக நிறைவுபெற்றால், இவ்வருடத்துக்குரிய மகோற்சவங்களைப் பிறிதொரு பட்சத்தில் நடத்தலாம் என்பது எங்கள் பிரார்த்தனை ஆகும். இவ்வருடத்திய மகோற்சவ காலம் சுக்கில ஆண்டு ஆனிமாதம் 15 ந் திகதி (29-06-89) ஆரம்பமாகும். அடியார்கள் விரும்பினால் இந்நாட்களில் விசேட பூஜைகள் செய்வித்துக் கொள்ளலாம்.

நடைபெறவேண்டிய திருப்பணி வேலைகளின் விபரம்:

அ. மகா கும்பாபிஷேகத்துக்கு முன் முடியவேண்டியவை:

	வேலை விபரம்	உபயகாரர்	மதிப்பீடு
1)	ஆதிமூலம்: தூபி புதுப்பித்தல், சிற்பவேலைகள்	திரு. சுதிரித்தம்பி முருகையா	5000
2)	அர்த்தமண்டபம்: கர்ணகூடசாலை அமைத்தல்		15,000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

	வேலை விபரம்	உபயகாரர்	மதிப்பீடு
3)	மகா மண்டபம்: கூரை நீக்குதல் கட்டுதல்		60,000
4)	தரிசன மண்டபம்; திருத்திக்கட்டுதல்		35,000
5)	ஸ்தம்ப மண்டபம்: திருத்த வேலைகள்		3,000
6)	பிள்ளையார் கோயில்: தூபி திருத்தவேலைகள்	திரு. வைத்திலிங்கம் வைரமுத்து திரு. செல்லையா கோபாலசாமி	8,000
7)	முருகன் கோயில் தூபி திருத்தவேலைகள்	திரு. அப்பையா ரவீந்திரன்	35,000
8)	அம்மன் தெற்கு வாசல்: பெருப்பித்தல்	திரு. வ. தம்பிம்பிள்ளை திரு. சபாபதி கதிரமலை	
9)	நடேசர் கோயில்: தெற்கு வாசல்கள் அமைத்தல் சிற்ப, கலச வேலைகள்	திரு. கந்தசாமி சிவப்பிரகாசம்	
10)	மேற்கு உள்வீதி காறை உடைத்துத் திரும்பப்போடுதல்		
11)	வாகனங்கள் புதுப்பித்தல்		
13)	நவக்கிரக மண்டபம்: புதிதாய் அமைத்தல்	திரு. செல்லையா சிவகடாட்சம் சகோதரர்கள் (விக்கிரகங்கள் நீங்கலாக)	15,000
13)	நாகதம்பிரான், வைரவர்	திரு. வைத்தியநாதன் சகோதரர்கள்	
14)	ஸ்தம்பத்தடிப்பிள்ளையார்	திரு. சி. கனகசபை	
15)	பிற வேலைகள் வர்ணம் பூசுதல் உட்பட		30,000

ஆ. மகாகும்பாபிஷேகத்துக்கு முன்பின்னாக குறுகியகால அடிப்படையிற் செய்யத்தக்கவை

	வேலை விபரம்	உபயகாரர்	மதிப்பீடு
1)	காத்தவராயர் கோயில்		15,000
2)	ஈசானமூலை வெளியறை		
3)	பெரிய சகடைக் கொட்டகை இடம் மாற்றியமைத்தல்	திரு. செ. சரவணமுத்து	
4)	மின் இயக்க அறை அமைத்தல்		

இ. பிற திருப்பணிகள் (ஏலவே திட்டமிடப்பட்டுள்ளவை)

1)	தீர்த்தக் கேணி	25,000
2)	தீர்த்த மண்டபம்	25,000
3)	ஆலய மடம் திருத்தியமைத்தல்	
4)	அன்னதான மண்டபம்	5,25,000

சகலரும் ஆண்டு ஆனந்திருங்கள்
20-06-1989

ஒப்பு ஆலய பரிபாலன சபையினர்,
தொண்டர் சபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில்
இயந்திர பூஜைகள் ஆரம்பம்

அம்பாள் அடியார்களே,

சென்ற ஆனித்திங்கள் 20-06-89 இல் வெளியிட்ட எங்கள் ஆலய விஞ்ஞாபனத்தில், திருப்பணி வேலைகள் இனிது நிறைவேறவும், மகாகும்பாபிஷேகம் பூர்த்தி எய்தவும் அன்னை முத்துமாரியின் அருட்கண் பார்வையை வேண்டிநிற்கிறோம்.

அவள் அருளாலே, அடியார்கள் மனம் உவந்து அளித்த பண நன்கொடைகளாலே பிற தொண்டுகளாலே, தொண்டர்சபையின் சேவைகளினாலே, திருப்பணிவேலைகள் அதிக முன்னேற்றங் கண்டுள்ளன.

* கர்ப்பக்கிரகத் தூபியின் எதிரே கவின்மிகு கர்ணகூடமும் சாலையும்

* சின்னம்மாளின் சிற்சபையோடு சிறந்தெழில் கொண்ட மகாமண்டபமும்,

* திறந்த அரங்காய் தரிசனம் கிட்ட நடேசர் முன்னே நடன மண்டபமும்,

* எள்நெய் எரித்து எம்பவம் அறுக்க நவமூர்த்திகட்கு நல்மண்டபமும்,

* நம் முன்னோர்கள் நாட்டிவைத்த காத்தவராயக் கடவுளுக்கு நேர்த்திக்கடனாய் நிமிரும் கோயிலும்,

* சண்டேஸ்வரிக்குச் சிறந்த சிறு கோயிலும்,

* புந்தெழில் பூக்கும் பரிவாரங்களும்,

* தென்புற வாயிலில் திகழ்சீர் முகப்பும்

பூர்த்தியாகும்படியில் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திர பூஜை நிகழ்ச்சிகள்:

சுக்கில ஆண்டு மார்கழி மாதம் 14 ந் திகதி (29-12-89) வெள்ளி பகல் 10-00 மணிக்கு வரும் சுபவேளையில் ஆரம்பமாகும். 12-36 க்கு அனைத்து இயந்திரங்களும் ஆகம விதிப்படி பூஜையில் வைக்கப்பட்டு அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்படும். தொடர்ந்து தினமும் மாலை 4-30 க்கு அபிஷேக ஆராதனைகள் மேற்கொள்ளப்படும்.

மகாகும்பாபிஷேகம்–தை 18, புதன்(31-1-90)

ஷ்டி கிரியைகள், பூஜைகள், அபிஷேகங்களைத் தொடர்ந்து மகாகும்பாபிஷேக வைபவங்கள் சிறப்பாய் நிகழவும், குறை வேலைகள் நிறைவுபெறவும் அம்பாள் அடியார்கள் அனைவரும் பணமாய், பண்டமாய் பலவாய் உதவும் வண்ணம் வேண்டுகின்றோம், இதுவரை திருப்பணிக்கு உதவியவர்களுக்கு எம் இதயம் கனிந்த நன்றிகள். மேலும், நன்கொடைகளுக்குப் பெயர்பதிந்த அன்பர்கள் தயவுசெய்து அவற்றைத் தந்து உதவி திருப்பணி வேலைகளைச் சிர்பெற முடிக்க உதவும் வண்ணம் வேண்டுகின்றோம்.

எல்லார்க்கும் எம் அன்னை அருள் பாலிப்பாராக.

தவளக்கிரி
சுக்கில ஆண்டு மார்கழி 10
25–12–1989

இங்ஙனம்
ஷ்ரீ ஆலய பரிபாலன சபையினர்

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போல அறிவுமுத்து மாலையிலுள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாம் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கு தவளகிரி முத்துமாரி அம்மன் கோவில் நவகுண்டபக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா திருக்குட திருமஞ்சன மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே,

சிவபூமியெனத் திருமூலரால் சிறப்பிக்கப்பெற்றதும் விராட் புருஷனுடைய மூல நாடியெனப் பேசப்பட்டதும் சம்பந்தர், சுந்தரர் தேவாரத் திருப்பதிகங்களைப் பெற்ற ஈஸ்வரங்களையுடையதும் வீரசைவ ஸ்ரீ ரேணுக சிவாச்சாரியாரால் ஒரே முகூர்த்தத்தில் மூன்றுகோடி சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப் பெற்றதுமாயது நம் ஈழத்திருநாடு. இந்நாட்டின் சிரமெனத் துலங்கும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் வடபால் அமைந்த நகுலாசலத்துக்குத் தெற்கேயுள்ள அளவெட்டியூரில் வீரசைவ சிவாச்சாரியரால் பூசிக்கப் பெற்றுவரும் அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோவிலில்,

நிகழும் சுக்கில ஆண்டு தை மீ 18 ம் திகதி (31-01-90) புதன்கிழமை பூர்வபக்க பஞ்சமி திதியும் உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் சந்திரகாலவோரையும் சாத்வீக குணவேளையும் கூடி காலை 7-31 – 9-04 க்கிடையில் வரும் சுப முகூர்த்தவேளையில் ஸ்தூபிகளுக்கும் அருள்மிகு அம்பாளுக்கும் சிவகாமி சமேத நடராசப்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளாகிய விநாயகர், வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியர் உற்சவமூர்த்தி. க்ஷேத்திரபாலர், நாகலிங்கேஸ்வரர், ஆதித்யாதி நவக்கிரகங்கள், காத்தவராயர், கழுமரம், ஸ்தம்பம், சண்முகஸ்வரி, மணிக்கோபுரம் ஆகியோருக்கும் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நிகழத் திருவருள் பாலித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தருணம் அடியார்கள் வேண்டிய பூசைப்பொருட்கள் கொண்டுவந்து கிரியைகள் நடைபெறும். ஐந்து தினங்களிலும் திருத்தொண்டு செய்து அன்னையின் திருவருள் பெற்றுய்வார்களாக.

கிரியாகால நிகழ்ச்சிகள்:

சுக்கில தை 14 (27-01-90) சனிக்கிழமை:

காலை 10-36 தொடக்கம் விநாயகர் வழிபாடு, சிவாச்சார்யாவர்ணம், திரவியசுத்தி, தனபூஜை, திரவிய விபாகம், ஐங்கமாணுக்ஞை, விக்னேஸ்வர அனுக்ஞை மூல மூர்த்தி அனுக்ஞை, கணபதிஹோமம், யந்திரபூஜை முதலியன.

பிற்பகல் 2-00 மணி தொடக்கம் கிராம சாந்தி, பிரவேசபலி.

தை 15 (28.01-90) ஞாயிற்றுக்கிழமை:

காலை 9-00 மணி தொடக்கம் வாஸ்து சாந்தி, நவக்கிரக ஹோமம், கோபூஜை, யந்திரபூஜை.

பிற்பகல் 2 00 மணி தொடக்கம் இரட்சோக்ன ஹோமம், திசாஹோமம்.

தை 16 (29-01-90) திங்கட்கிழமை:

காலை 8-00 மணி தொடக்கம் கங்கா பூஜை, சூர்யாக்கினி சங்கிரகணம், மிருத் சங்கிரகணம், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், பிரசன்னபிஷேகம், பிரசன்ன பூஜை, கடஸ்தாபனம், பாலாலயப் பிரவேசம், கலாகர்ஷணம், யாத்திரா ஹோமம், க்ஷண ஹோமம், மதுவர்க்க நிவேதனம், மூர்த்தி கும்பசம்யோசனம், யாகசாலாப் பிரவேசம், பேரசலனம், நூதன மூர்த்திகள் கிராமப் பிரதட்சணம். ஜலாதி வாசம், தான்னியாதி வாசம், சயனம், நயனோன்மீலனம்.

பிற்பகல் 12-30 2-06 வரை ஸ்தூபி தம்பஸ்தாபனம். நீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம், சிற்பி சம்பாவனை,

பிற்பகல் 3-00 மணி தொடக்கம் புண்ணியாகவாசனம். முதற்கால யாகபூஜை, நவகுண்ட அக்கினிபூஜை, ஹோமம்.

மாலை 6-00 மணி தொடக்கம் இரண்டாம்கால யாகபூஜை, நவகுண்ட அக்கினி பூஜை, மூலமந்திர காயத்திரி ஹோமம், விசேட நீபாராதனை, வேதபாராயணம், திருமுறை பாராயணம்.

தை 17 (30-01-90) செவ்வாய்க்கிழமை

காலை 9-00 மணி தொடக்கம் மூன்றும் கால யாகபூஜை, நவகுண்ட அக்கினிபூஜை, தைலாப்பியங்கம் (அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல்)

பிற்பகல் 2-00 மணிதொடக்கம் நாலாம் கால யாகபூஜை, நியாசார்ச்சனை, நவகுண்ட அக்கினி பூஜை, ஸ்ரீ ருத்தத்திரப் பிரஸ்தம்.

மாலை 6-00 மணி தொடக்கம் ஐந்தாம் கால யாகபூஜை, நவகுண்ட அக்கினிபூஜை பிம்பசுத்தி, இரட்சாபந்தனம், நாடிசந்தானம் தத்துவபூஜை, விசேட திரவிய ஹோமம், ஸ்பர்ஸாகுதி வேத பாராயணம். திருமுறை பாராயணம், ஆச்சார்ய சம்பாவனை

தை 18 (31-01-90) புதன்கிழமை

அதிகாலை 5-00 மணி தொடக்கம் ஆறும் கால விசேட யாகபூஜை, அக்கினி சம்யோசனம், மஹா பூர்ணாகுதி, அந்கர்பலி, பகிர்ப்பலி, யாக நீபாராதனை, வேதபாராயணம் ஸ்தோத்திர கானபாராயணம், மஹாசீர்வாதம், திருமுறை பாராயணம், முகூர்த்தானம். யாத்திராதானம். வேதகோஷ ஸ்தோத்திரகான திராவிட பாராயண சங்கநாத மங்களபேரி கீத வாத்தியங்களுடன் ஸ்தூபி, பிரதான பரிவார கும்பங்கள் வீதிப் பிரதக்ஷிணம்.

காலை 7-31 — 9-04 வரையுள்ள சுப முகூர்த்தத்தில் மகாகும்பாபிஷேகம், மஹா ஹவிர் நிவேதனம், தசதர்சனம், யாக உத்வாசனம், கர்ப்பாவரண அபிஷேகம், அங்குர விசர்ச்சனம், குருபாதபூஜை, குருமார் சம்பாவனை, ஆசீர்வாதம், ஆசியுரை, மகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஷேகம், விசேட திபாராதனை, சண்முகஸ் வரிப் பிரார்த்தனை.

பிரதம பிரதிஷ்டா குருமார்:

பண்டித. வித்துவான், சைவப்புலவர் சிவஸ்ரீ இ. நவரத்தினக் குருக்கள் (உரும்பராய் இந்துக்கல்லூரி முன்னாள் கனிஷ்ட அதிபர்)

சர்வசாதகர் வீரசைவ விற்பன்னர் சிவஸ்ரீ. அ. சோமசுந்தர சிவாசாரியார் (சிவசுப்பிர மணிய சுவாமி திருக்கோவில் மீளுட்சிப் பேட்டை, குறிஞ்சிப்பாடி. தமிழ்நாடு)

கிரியாமணி சிவஸ்ரீ இ. இராசகந்தசாமிக் குருக்கள் (சல்லியம்மன் தேவஸ்தான பிர தமகுரு, திருமலை)

ஆலயப் பிரதம குரு இலிங்கஸ்ரீ, உருத்திர புரீஸ்வரக் குருக்கள் (இலங்கை வீரசைவ குருபீடம் 109ம் பட்டத்தரசு, ரேணுகாச்சி ரமம், கீரிமலை)

கும்பாபிஷேகக் குருமார்:

சிவஸ்ரீ செ. வைரவநாதக் குருக்கள் (ஞான வைரவர் தேவஸ்தானம், உரும்பிராய்)

சிவஸ்ரீ ந. பிரபுதேவக் குருக்கள் (சர்வசாத கர், முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம், கொழும்புத்துறை)

சிவஸ்ரீ. த. காயாரோகணசிவக் குருக்கள் (ஞானவைரவர் தேவஸ்தானம், யாழ். அரச வைத்தியசாலை)

சிவஸ்ரீ சி. கதிரவேலுக் குருக்கள் (ஆசிரியர் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை)

சிவஸ்ரீ க. முருகையாக் குருக்கள் (வீரபத் திரர் தேவஸ்தானம், அளவெட்டி)

சிவஸ்ரீ சி. கதிர்காமநாதக் குருக்கள் (பழனி யாண்டவர் தேவஸ்தானம், கோண்டாவில்)

சிவஸ்ரீ சோ. சந்திரசிகாமணிக் குருக்கள் (ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், மந்துவில்)

சிவஸ்ரீ வே. பேரின்பநாதக் குருக்கள். (கீரிமலை)

சர்வசாதகர்கள்:

சர்வசாதகர் சிவஸ்ரீ அ. இராமலிங்கக் குருக்கள் (ஸ்ரீ விநாயகர் திருக்கோவில், குச் சிப்பாளையம், நெல்லிக்குப்பம், (தமிழ்நாடு)

சர்வசாதகர் வீரசைவ சிவஸ்ரீ அ. மதிவதன ஐயா (ஸ்ரீ ரேணுகாச்சிரமம், கீரிமலை)

வேதபாராயணம் சிவஸ்ரீ ராஜகந்தபத்மநாத சர்மா (சித்திவிநாயகர் தேவஸ்தானம், மஞ் சந்தொடுவாய், மட்டுநகர்)

ஆலயப் பிரதம பூசகர்:

சிவஸ்ரீ சொ. பசுபதிநாத ஐயர்

கட்டடத்துறை ஆலோசனை:

திரு. சோ. அனந்தசயனன்,
திரு. ஆ. லவேந்திரன்

ஆலயப் புனரமைப்பு, நிர்மாணம்:

திரு. வை. சொக்கலிங்கம் (அராலி)
திரு. கி. தேவராசா (புருப்பொறுக்கி)
திரு ம. கந்தையா (அளவெட்டி)
திரு. நா. செல்வராசா (அளவெட்டி)

வர்ண அலங்காரம்:

திரு. செ. சிவப்பிரகாசம் (சிற்ப, சித்திர, ஆசிரியர். அளவெட்டி)
திரு. சு. பொன்னுத்துரை (நாச்சிமார் கோவிலடி)
திரு, சு. பாலச்சந்திரன் (மயிலிட்டி தெற்கு)

ஒலி, ஒளி: தொண்டர் சபை

மஹாபிஷேகத்தைத் தொடர்ந்து மண் டலாபிஷேகம் பிற்பகல் 4.30 மணி தொடக் கம் நடைபெற்று பங்குனி 03 (16-03-90) இல் சகஸ்ர சங்காபிஷேகமும் தண்டிகைத் திருவிழாவும் நடைபெறும்.

இங்ஙனம்
பரிபாலன சபையினர்

24-01-1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள்தேவி அனைவர்க்கும்

திருவருள் பாலிப்பாளாக!



தெல்லிப்பளைப்

ப. நோ. கூ. சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடமுழுக்கு விமரிசையாக நிகழப்
பிரார்த்திக்கிறேம்

எஸ். எம். எஸ்.

சிறுவிளான்
இளவாலை.

முற்றிலும் புதிய மேல்நாட்டு முறையில்
குறைந்த செலவில்
உங்கள் கட்டிடங்களைக் கட்டி மகிழ்வுடன் வாழ்வதற்கு
ஆலோசனைகள் கூறப்படும்.

* அத்திவார வேலையில் சிக்கனம்
* கலவைமுறையில் திறமை
* கம்பி பாவிப்பதில் புதியமுறை
* கூரைவேலை முற்றிலும் நவீன அமைப்பு

இன்னும் எடுப்பான கட்டிடத் தோற்றம்

வசதிக்கும் வாழ்விற்கும் எம்முடன் தொடர்புகொள்ளவும்.
அரசாங்க உதவிப்பணம் பெறுவதற்கு கட்டிட மாதிரிப்படம் வரையப்படும்.

வேளாவை
அளவெட்டி.

வருணன்ஸ்
க. தனசேகரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா கும்பாபிஷேக சபை அங்கத்தவர்கள்: 1989 / 90

1. திரு. கந்தையா சின்னத்தம்பி, தலைவர்
2. ,, தம்பையா தர்மலிங்கம். பொருளாளர்
3. ,, கோணமலை இரத்தினம், செயலாளர்
4. ,, செல்லையா குமாரசாமி
5 ,, குமாரசாமி கிருபாதரன், செயலாளர் தொண்டர் சபை
6. ,, தர்மலிங்கம் கிறீகாந்தன், தலைவர், தொண்டர் சபை
7. ,, கதிரமலை ஜெயக்குமார், பொருளாளர், தொண்டர் சபை
8. ,, செல்லையா தம்பியையா
9. ,, செல்லத்துரை சிதம்பரநாதன்
10. ,, வைத்திலிங்கம் செகராசசிங்கம்
11. ,, நாகலிங்கம் குமரகுரு
12. ,, பொன்னம்பலம் ஜெயபாலன்
13. ,, சிவலோகம் சின்னத்துரை
14. ,, கதிரித்தம்பி முருகையா
15. ,, நடராசா துளசிதாசன்
16. ,, சிவஸ்ரீ உருத்திரபுரீஸ்வரக் குருக்கள்
17. ,, சொக்கலிங்கம் பசுபதிநாதன்
18 ,, N. K. பத்மநாதன்
19. ,, விஜயரத்தினம் சிவலோகநாதன்
20. ,, சரவணமுத்து கதிர்காமத்தம்பி
21. ,, செல்லத்துரை கணேசரத்தினம்
22, ,, அ. சிவராசா
23. ,, இரத்தினம் நாகராசா

மகா கும்பாபிஷேக செயற்குழு அங்கத்தவர்கள்

1. திரு. கந்தையா சின்னத்தம்பி
2. ,, கோணமலை இரத்தினம்
3. ,, தம்பையா தர்மலிங்கம்
4. ,, தர்மலிங்கம் கிறீகாந்தன்
5. ,, குமாரசாமி கிருபாதரன்
6. ,, செல்லையா குமாரசாமி
7. ,, நடராசா துளசிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலன சபை — 1988 / 89 அங்கத்தவர்கள்

1. திரு. க. சின்னத்தம்பி, தலைவர்
2. ,, வை. செகராச சிங்கம், உபதலைவர்
3. ,, த. தர்மலிங்கம், பொருளாளர்
4. ,, சி. சிறீதரன், உப பொருளாளர்
5. ,, கோ. இரத்தினம், செயலாளர்
6. ,, இ. நாகராசா, உபசெயலாளர்
7. ,, சொ. பசுபதிநாதன், பூசகர்
8. ,, சு ஐயாத்துரை ,,
9. ,, நா. யோகநாதன் ,,
10. ,, அ. அப்பையா ,,
11. ,, மா. தியாகேஸ்வரன் ,,
12. ,, த. சிறீகாந்தன். தலைவர், தொண்டர்சபை
13. ,, ந. துளசிதாசன்
14. ,, செ. குமாரசாமி
15. ,, வீ. பொன்னுத்துரை
16. ,, சி. செந்தில்நாதன்
17. ,, இ. சோமசுந்தரம்
18. ,, நா. குமரகுரு
19. ,, செ. செல்லப்பா
20. ,, செ. தம்பியையா
21. ,, கா. பொ. அருணசலம்
22. ,, சி. சின்னத்துரை
32. ,, ஆ. தேவராசா

நிர்வாகசபை — 1988 / 89 — அங்கத்தவர்கள்

1. திரு. க. சின்னத்தம்பி
2. ,, வை. செகராசசிங்கம்
3. ,, த. தர்மலிங்கம்
4. ,, கோ. இரத்தினம்
5. ,, இ. நாகராசா
6. ,, ந. துளசிதாசன்
7. ,, செ. பசுபதிநாதன் (பூசகர்)
8. ,, த. சிறீகாந்தன், தலைவர், தொண்டர்சபை
9. ,, செ. குமாரசாமி
10. ,, வீ. பொன்னுத்துரை
11. ,, சி. சிறீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்மான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி

"ஷப்ரு"

உங்கள் நிதியத்தைப் பெருக்க
எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்

* நிலையான வைப்புத்திட்டம் / Term Deposits

குறைந்த வைப்புத் தொகை ரூபா 1,000/-

மாதாந்த வட்டிபெற குறைந்த வைப்புத்தொகை ரூபா 5,000/-

Period – Months காலம் – மாதம்	Monthly மாதாந்தம்	Maturity முதிர்ச்சியில்
03	–	15%
06	15%	17%
12	18%	20%
24	21%	23%
36	22%	24%

* வைப்புச் சான்றிதழ் / Certificate of Deposits

Period - Months காலம் - மாதம்	Cost of Certificate சான்றிதழின் பெறுமதி				Rate வட்டி விதம்
06	4,588/-	9,175/-	45,872/-	91,744/-	18%
12	4,133/-	8,265/-	41,323/-	82,645/-	21%
24	3,379/-	6,757/-	33,784/-	67,568/-	24%
Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி	5,000/-	10,000/-	50,000/-	100,000/-	•

உங்கள் நிதியைப் பெருக்க
மேலும் பல 'புதிய வழிகள்'
'ஷப்ரு'வின் உதவியை நாடுங்கள்.

ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிடெட்

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4
தொலைபேசி: 589310, 500576

207, மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை

அச்சு வேலைகள்
பழைய புத்தகம் கட்டுதல்
ஏனையவற்றைச் சிறந்த முறையில் செய்விப்பதற்கு

வாருங்கள்

ஜெயா பிறின்டிங் வேக்ஸ்

சீனட்டிப்பாய் ஒழுங்கை
வடக்கு அளவெட்டி.

அம்பாள் கருணையால் அகிலமும் செழிக்க!

நியூ சியாமளா ஜூவல்லறி மாட்

173 1, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு இல. 6

தேர்த் திருப்பணி — நிறைவேற்றுச் சபை

1. திரு. ஆ. இராமசாமி
2. ,, ந. சிவபாதம்
3. ,, ந. துளசிதாசன்
4. ,, த. தர்மலிங்கம்
5. ,, க. சின்னத்தம்பி
6. ,, சி. சிறீதரன்
7. ,, செ. குமாரசாமி
8. ,, இ. நாகராசா
9. ,, வை. செகராசசிங்கம்
10. ,, நா. குமரகுரு
11. ,, க. ஜெயக்குமார்
12. ,, த. சிறீகாந்தன்
13. ,, கு. சிருபாதரன்
14. ,, சி. செந்தில்நாதன்
15. ,, வ. குமாரசாமி

இணைப்பு இல. 7

ஆலயத் தொண்டர்சபை — நிர்வாக சபை அங்கத்தவர்

1. திரு. த. சிறீகாந்தன், தலைவர்
2. ,, கு. சிருபாதரன், செயலாளர்
3. ,, க. ஜெயக்குமார், பொருளாளர்
4. ,, ப. மகேசன்
5. ,, கி. ஜெகன்
6. ,, இ. ரகுலன்
7. ,, க. ஜெயசாந்தி
8. ,, ந. துளசிதாசன்
9. ,, கு. ஜெயக்குமாரன்
10. ,, பொ. ஜெயபாலன்
11. ,, மு. கணேஸ்வரதாஸ்

இணைப்பு இல. 8

விளம்பரக் குழு

1. திரு. செ. குமாரசாமி
2. ,, க. ஜெயக்குமார்
3. ,, பா. சிவகுமார்
4. ,, சு. பொன்னுத்துரை (பொன்மலர்) (உதவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது அளவெட்டி

செ குமாரசாமி
பாராளுமன்ற
உரைபெயர்ப்பாளர்

அருள்வளம், கலைவளம், பொருள்வளம் செழிக்கும் பழம்பெரும் மண் எங்கள் கிராமம்.

சுமார் ஒன்பது சதுரமைல் கொண்ட இக் கிரமமத்தில், இதன் கிழக்குப் புறங்களிலிருக்கும் தாழ்ந்த பகுதிகளான அம்பனை, அழகொல்லை, பனுக்கை வயல் வெளிகள் எமது மக்களின் உணவுக்குரிய நெல்மணியை அள்ளித் தருகின்றன. மேற்குப்புறங்களிலிருக்கும் மேட்டுப் பகுதிகளான செம்மண் பரப்பிலிருந்து வரகு, குரக்கன், தினை, பயறு, உழுந்து போன்ற உப உணவுப் பொருட்கள், செழிப்பான காய்கறிவகைகள் பழவர்க்கங்கள் ஆகிய துணை உணவுப் பொருட்கள் கிடைக்கின்றன.

நிலவளத்தில் இவ்வகையில் வயல்மண்ணும் செம்மண்ணும் இணைந்நின்று வழங்கொழிக்கும் மாட்சி எமது கிராமத்தின் தனிச்சிறப்பு. இந்தத் தனிச்சிறப்பு வாய்ந்த மண்ணில் விளை மதித்தற்கரிய சில முத்துக்களும் விளைந்தன.

அருள்பொலியும் எமது கிராமத்தின் முன்னோர் அதன் நாற்றிசைகளிலும் நான்கு பிரதான கோவில்களைக் கட்டி வழிபட்டு வாழ்ந்தார்கள். *கிழக்கு எல்லையை மருவி இருப்பவர் ருருக்கள் கிணற்றடிப் பிள்ளையார், மேற்கில் பெரியதம்பிரான், தெற்கில் வெளிவயல் மாரியம்மன், வடக்கில் கொலு இருப்பவள் எங்கள் தவளக்கிரி முத்துமாரி அம்பாள்.

'' ... ...
வடபாலும் தென்பாலுமாய்
மகிமையுடன் நீ இருந்தே
இடையில் உள்ள அளவை நகர்
இன்பமுறக் காப்பவளே''

என்றும்

* வரைபடம் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தவளக்கிரி பதியும் தண்மையுறு
வெளிவயலும்
பவளநிகர் அளவைநகர் பக்குவமாய்க்
காப்பவளே''

என்றும்

கிராமத்தின் பழங்கவிஞர்கள் – அண்ணாவிமார் – பாடிவைத்துள்ளார்கள்.

எல்லைக் கோவில்களைத் தவிர, வடக்கில் ஐயனார், சின்னம்மன், ஆதி வீரபத்திரர், இராவத்தை வைரவர், முதலியவேள், கேணிக்கரை வைரவர் கோவில்களும் தெற்கில் நரசிங்க வைரவர் கோவில், கிராமத்தின் ஒரேயொரு விஷ்ணுகோவிலாகிய நாகவரத நாராயணர் கோவில், தம்பையப்புலத்து வைரவர், குருவளை வைரவர் கோவில்களும் கிராமத்துக்கு அருளபாலித்துக்கொண்டிருக்கின்றன. மேலும் சோழ இளவரசி, மாருதப்புரவீகவல்லி, தனது குதிரைமுகம் விடுபட்டது தொடர்பில் எழுப்பியதாகக் கூறப்படும் [ஏழு விநாயகர் ஆலயங்களுள் மூன்று எமது கிராமத்தில் தான் நிறுவப்பட்டன. அவை வடக்கிலுள்ள அழகொல்லைப் பிள்ளையார் கோவிலும் தெற்கிலுள்ள பெருமாக்கடவைப் பிள்ளையார் கோவிலும் கிராமத்தின் மத்தியிலுள்ள கும்பளாவளைப் பிள்ளையார் கோவிலும் ஆகும். சோழ இளவரசியின் குதிரை (= மா) முகம் விடுபட்டதைக் குறிக்கும் ''மாவிடு திட்டி'' என்ற பகுதி இன்றும் கும்பளாவளை விநாயகர் ஆலயத்துக்கு அருகில் உண்டு. இவ்வகையில் சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லி எமது கிராமத்தின் பழமைக்கு ஒரு சாட்சி! சோழர்களின் ஆட்சிக்காலம் – சுமார் பத்து நூற்றாண்டுகளுக்கு முன்பு!

16 ஆம் 17 ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத் தமிழ் இராச்சியம் அழிந்து கொடுங்கோலர்களாகிய போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆட்சி நிலவியது. இவர்களின் ஆட்சியில் நேரடியாக இவர்களால் நிர்வகிக்கப்பட்ட ஒருசில செழிப்பான கிராமங்களுள் அளவெட்டியும் ஒன்று. இதனிலும் முன்னர் யாழ்ப்பாணத்து அரசனாகிய பரராசசேகரன் சிதம்பரத்தில் ''இராசாக்கள் தம்பிரான் மடம்'' என்ற மடம் ஒன்றை நிறுவினன். இதனைப் பராமரிப்பதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள வளம்மிக்க ஒருசில கிராமங்கள் சர்வமானியமாக விடப்பட்டன. அவற்றுள் அளவெட்டியும் ஒன்று. இன்றும் எமது கிராமத்தில் சிதம்பர நடராசருக்குத் தர்ம சாதனம் செய்யப்பட்ட காணிகள் ஏராளம் உண்டு. பெருமாக்கடவைப் பிள்ளையார் கோவிலுக்கு முன்னாலுள்ள பனங்கை வயல் வெளிகளில் இவை மிக அதிகம். தவளக்கிரியிலும் இத்தகைய காணிகள் உண்டு.

எமது அம்பாளின் தீர்த்தோற்சவ தினமாகிய ஆனி உத்தரத்தில் இந்தியாவில் நிகழும் நடேசர் தரிசனத்துக்கெனவும் மார்கழி ஆருத்தரா தரிசனத்துக்கெனவும் எமது கிராமங்களிலிருந்து ஏராளமான மக்கள் நீரிணையைக் கடந்து கிரமம் தவறாது சிதம்பர யாத்திரை செய்வது ஒரு உற்சாகம் நிறைந்த சமய அனுட்டானம், விழா! பரராசசேகர மன்னன் காலத்தில் இருந்து பெரிதும் ஏற்றமுற்றிருந்த இந்த விழா அண்மைக் காலங்களில் நலிவுற்றிருப்பது எமது ஆன்மீக வாழ்க்கையில் ஒரு துன்பமான அனுபவம். பரராசசேகரனின் ஆட்சிக்காலம் – 15 ஆம் நூற்றாண்டு!

இந்தப் பழமையின் பெருமைக்குரிய எமது கிராமத்தில் சைவமும் தமிழும் பற்பல இடுக்கண்களுக்கு கூடாகவும் செழித்தோங்கி வளர்ந்து வந்துள்ளன. சைவாசார நிலம் மிகுக இக் கிராமத்தில் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்ட அளவெட்டிச் சைவ வாலிபர் சங்கம் தேவார பாராயணம், பஜனை, சமய போதனை, சமய பாடப் பரீட்சை, பேச்சுப்போட்டி, பண்ணிசைப் போட்டி, சமய நாடகப்போட்டி ஆகியவற்றை நடாத்தி, மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி ஊக்கமூட்டி வருகின்றது. முதியவர்களுக்குச் சைவசித்தாந்த வகுப்புக்களும் நடாத்துகின்றது. சமயகுரவர் நால்வருமாகிய திருநாவுக்கரசு நாயனார் சுந்தரமூர்த்தி நாயனார், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மாணிக்கவாசக சுவாமிகள் ஆகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோரது புராணபடனங்கள், குருபூசைகள் முறையே அளகொல்லை, கும்பளாவளை, பெருமாக்கடவை விநாயகர் ஆலயங்களிலும் கேணிக்கரை வைரவர் ஆலயத்திலும் கிரமமாக நிகழ்ந்துவர இச்சங்கம் ஏற்பாடுசெய்திருக்கின்றது. இதே ஒழுங்கில் தவளக்கிரி அம்பாள் ஆலயத்திலும் திருவாதவூரடிகள் புராணபடனம் கிரமமாக நிகழ்ந்து வருகின்றது. சந்தானகுரவர் நால்வரினதும் திருநாளைப் போவாரினதும் குருபூசைகள் 'திருவடி நிழலில்' நடைபெறுகின்றன. ஆலயங்களில் புராணங்கள் படித்துப் பயன் சொல்வதில் வல்லுனர்கள் நிறைந்த கிராமம் அளவெட்டி. அயற்கிராமங்களிலுள்ளவர்கள் இங்கு நாடிவந்து இத்தகையவர்களின் பணியைத் தமது கிராமங்களுக்கு ஒழுங்கு செய்வது வழக்கம்.

அன்று அளவெட்டியில் நிலவிய தீவிர சைவாசாரச் சூழலிலிருந்து ஆன்மீக தாகங் கொண்ட ஒரு அறிஞர் திருக்கூட்டம் இம் மண்ணில் வேர்விடலாயிற்று. இவர்களுள் பெரும்பாலோர் இக்கிராமத்தவர்கள், ஆசிரியர்கள். இவர்களிடையே மதிநுட்பமும் செந்தமிழ்ப் புலமையும் கவித்துவமும் ஆங்கில அறிவும் நாவன்மையும் மிக்கவராக இருந்து 'கைலைப்புராணம்' என்ற சிறந்த அருள்நெறிநூலைத் தமது 27 வது வயதில் இயற்றியவர் சுவாமி சிவசத்தா. சுமாத்திரா மலாயா, தைலாந்து போன்ற நாடுகளில் சமய நெறியைப் பரப்பியவர். இவர் கேணிக்கரை வைரவர் சூழலில் நிறுவிய 'திருவடி நிழல்' இன்று நலிவுற்றும் நீடித்திருக்கின்றது. இந்தப் பேரறிஞர் கூட்டத்தால் கவரப்பட்டு அளவெட்டி 'திருவடி நிழலை' நாடியவர்களுள் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளையும் ஒருவர். திருநெல்வேலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராக இருந்தவர். சமயப்பணியாகச் சைவசித்தாந்த வகுப்புக்கள் நடத்தியவர். அண்மையில் சிவபதமடைந்தவர்.

அறிஞர் திருக்கூட்டத்தில் இருந்த இன்னுமொருவர் அளவெட்டி சீனன்கலட்டித் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி பயின்று பின்னர் 1930 இல் விஞ்ஞானப் பட்டதாரியாய் திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் உப அதிபராயிருந்த திரு பொ. கைலாசபதி என்ற சைவசித்தாந்த மேதை. அளவெட்டி மண்ணில் உதித்த மாபெரும் தத்துவ ஞானி! இந்தத் தத்துவ ஞானியுடன் நெருங்கிப் பழகிய ஒருவர் இவரைப்பற்றிக் கூறியது இது:

> "இவ்வளாகம் சமயபீடத்தின் அங்கமாக அவரது தத்துவஞான சரித்திரத்தையும் அயிரக்கணக்கில் அவர்கண்ட உண்மைகளையும் ஏற்றவாறு அமைத்துப் பாதுகாத்துப் பேணுவது சாலவும் நன்று ... ... "

இதனைக் கூறிய இடம் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்குக் கலாநிதிப் பட்டம் கிடைத்தமை தொடர்பில், அன்றைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் நிகழ்ந்த பாராட்டுவிழா. கூறியவர் விழாநாயகன் பண்டிதமணி கணபதிப்பிள்ளை!

தமிழ்மொழிப் புலமையிலும் சைவநெறிப் பிரசங்க வன்மையிலும் கடல்கடந்த பிரபல்யம் பெற்று வாழ்ந்த அறிஞர்களுள் தவளக்கிரி அம்பாள் ஆலயக் குருக்களாக இருந்த சிவஸ்ரீ சி. மாணிக்கத்தியாகராச பண்டிதரும் ஒருவர்.

சித்தாந்த மட்டத்தில் சைவத்தை வளர்த்த மேலோரைத் தவிரப் பொதுமக்கள் மட்டத்திலும் சைவசமய நெறியின் அரணாக விளங்கியது இந்தக் கிராமம். நாவலர் பெருமான் ஏற்றிவைத்த தீபத்தில் வழிதுலங்கிய நம்முன்னோர் நியாகங்கள் பலசெய்து கிராமத்தில் சைவத் தமிழ்ப் பாடசாலைகளை நிறுவினர்கள். மொத்தத்தில் ஏழு பாடசாலைகள் அளவெட்டியில் உண்டு. இவற்றுள் ஒன்று கல்லூரி.

சமுதாயம் அனைத்தையும் தழுவி வளர்ந்த இக்கிராமத்தின் சைவநெறி பிறநாட்டினத்தவர்களின் வியப்பைச் சம்பாதித்துக்கொண்டது ஆச்சரியமல்ல. இதன் விளைவாக இங்கு வந்துசேர்ந்த அமரிக்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் ஹான்சன் என்ற தனது பெயரை யும் சுப்பிரமுனியர் எனமாற்றி இப்பெயரில் ஆச்சிரமம் ஒன்றையும் இக் கிராமத்தில் அமைத்துக்கொண்டார்.

அக்காலத்து அளவெட்டி அறிஞர் திருக் குடும்பத்துடன் நெருக்கமாயிருந்த தமிழ் ஆசிரியர் ஒருவர் தனது ஆசிரியத்தொழிலை விட்டுவிலகித் தன்னைக் கவர்ந்த சோதிடக் கலைக்குத் தன்னை அர்ப்பணித்தார். சோதிட நூல்களை எழுதினர். சோதிடத்துறையில் தனது பெயரையும் கிராமத்தின் பெயரை யும் இவ்வகையில் உயர்த்திக் கொண்டவர் அமரர் திரு மு. சின்னப்பு. இந்தத்துறையில் இவருடன் இணைந்து உழைத்துப் பிரபல்யம் பெற்ற ஒருவர் தலைமை ஆசிரியர் அமரர் திரு த. கணபதிப்பிள்ளை ஆவர்

கிராமத்தில் தமிழ் இலக்கண இலக்கி யப் புலமையிலும் வடமொழித் தேர்ச்சியி லும் மிக்காராக விளங்கியவர்களின் தரமோ தொகையோ எழுத்தில் அடங்கா. இவர்க ளுள் கடல்கடந்து புகழீட்டியவர்களும் சில ரல்ல. இத்தகைய எமது மண்ணின் மைந் தன் ஒருவனைப்பற்றி ஓரிடத்தில் பின்வரு மாறு கூறப்பட்டிருக்கின்றது:

> ''வைத்தியநாத முனிவர் —
> யாழ்ப்பணத்துள் அளவெட்டி
>
> என்னும் ஊரிலுதித்த சைவ வேளாளர். வடமொழி தென்மொழி நன்குணர்ந்த வர். தமிழில் செய்யுள்ரூபமாக வியாக் கிரபாத புராணம் பாடியவர்''

கூறப்பட்டிருக்கும் இடம் மதுரைத் தமிழ்ப் பேரகராதி!

வைத்தியத் துறையில் தனிநிபுணர்கள் பரம்பரை பரம்பரையாகத் தங்கள் கிராமத் துக்குப் புகழீட்டி வாழ்ந்தார்கள். கண் வைத் தியம், சிறுபிள்ளை வைத்தியம், முறிவுதறிவு வைத்தியம், விஷக்கடி வைத்தியம், பொது வைத்தியம் போன்ற பல்வேறு பிரிவுகளிலும் இந்தக் கிராமத்தில் திறமை செழித்தது. மாட்டுவண்டிப் பயணத்தில் வைத்திய நிபு ணர்களைத் தேடித் தூரத்துக் கிராமத்து மக் களும் தம் பிணி நீக்க அளவெட்டியை நாடி வந்தார்கள். இந்த நிபுணர்கள் சிலருடைய குடும்பத்தினர் – இளஞ்சந்ததியினர் – அவ் வத்துறையில் இன்றும் புகழுடன் பணி யாற்றி வருகின்றார்கள்.

கலைவளம் கொழிக்கும் அளவெட்டி மண் ணில் நிகழும் நாடகங்களைப் பார்த்துமகிழ மாலை வேளைகளில் இங்குவந்து கூடும் நெடுந் தூர மாட்டுவண்டிப் பயணிகள் மறுநாள் விடிய நாடகம் முடிந்து ஊர் திரும்பும் கலா போஷகர்களாகத் திகழ்ந்தார்கள். திறமை மிக்க அண்ணாவிமார் புராணநாடகங்களையும் வரலாற்று நாடகங்களையும் தயாரித்துமேடை யேற்றினார்கள். நாட்டுக்கூத்துப் பாணியில் மேடையேற்றப்பட்ட 'காத்தவராயர் கதை' மிகவும் பிரசித்திபெற்றது. சுமார் 50 ஆண்டு களுக்கு முன்னர் முதன்முதலில் மகாஜன சபை மண்டபத்தில் மேடையேற்றப்பட்டு யாழ்ப்பாணம் முழுவதையுமே ஒரு குலுக்குக் குலுக்கி வைத்தது ''கற்பகதரு'' என்ற நாடகம். இதில் பங்கேற்றுப் புகழீட்டிய நடிகர் திலகங்கள் இன்றும் நம்மத்தியிலிருக் கின்றார்கள். கரகம், காவடி ஆட்டம் ஆகிய சமயக் கலைகளில் ஈடுபாடு கொண்டிருந்த அண்ணாவிமார் எவரும் இன்று எம் மத்தி யிலில்லை. அம்பாள் வழிபாட்டில் முக்கிய இடம்பெறும் கரக ஆட்டத்தில், கும்பத்தின் மேலும் கத்தியின் நுனியிலும் உருளும் உர லின் மீதும் நின்று, உடுக்கை ஒலி அதிரத் தாளம் தவறாது தலையில் தாங்கிய கரகம் தளம்பாது, ஊர் ஊராகச் சென்று கரகம் ஆடிப் பெருமை சேர்த்த வல்லவர்களும் இங்கு வாழ்ந்தார்கள்.

மாலை, சரம், சாத்துப்படி என்றும் படித் தொங்கல், திருத்தொங்கல், ஆரம், பூசாந் திரம் என்றும் தண்டிகை, சப்பறம் என்றும் வண்ணமலர் கொண்டு தம் கைவண்ணம் காட்டும் கலைஞர்கள் வாழும் ஊர் அள வெட்டி. கோவில் விக்கிரகங்களைச் சோடிப் பதற்கும் மண்டபங்கள், வீடுகளை அலங்கரிப் பதற்கும் அது அதற்கு ஏற்ற வகையில் மாலைகள் சோடனைகளைப் புனைவதில் கை தேர்ந்த வல்லவர்கள் இங்கே வசிக்கின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். மணிச்சப்பறம், மணவறை, சிகரம் போன்ற அலங்கார வகைகளை அமைக்கும் வல்லவர்களை நாடிப் பல மைல்களுக்கப்பாலிருந்தும் மக்கள் இங்கே வந்து போகின்றார்கள்.

இந்த மண்ணில் பரம்பரை பரம்பரையாக விளைந்தோங்கிய இன்னுமொரு பயிர் இசை. இந்த இசைக்கலை இக் கிராமத்தில் நன்கு வியாபித்து இன்று சங்கீத பூஷணங்கள், இசை ஆசிரியர்கள், வாத்திய விற்பன்னர்கள், வானொலிக் கலைஞர்கள் என மிகப் பலரைத் தோற்றுவித்துள்ளது. கடல் கடந்தும் புகழ்பெற்ற அளவெட்டித் தவில் நாதஸ்வர மேதைகளின் பெயர்களையும் பட்டங்களையும் இந்த ஏட்டிலிருந்துதான் நாட்டிலுள்ளோர் அறிய வேண்டுமா? தமது தேவைகளுக்கென இக் கிராமந்தை நாடி வந்த வண்டிகள் வாகனங்களில் பெரும்பாலானவை, சில காலங்களுக்கு முன்னர், வைத்தியத் தேவைகளுக்காகவே வந்தன. இன்றுவரும் வாகனங்களிற் பொரும் பகுதி இசைக் கலைஞர்களை நாடி வருபவையே! கிராமத்தின் வடபகுதியிலுள்ள சில வீதிகள் ஒழுங்கைகளுக்கூடாக விடியற்காலை வேளைகளிற் சொந்த அலுவலில் உலவிவரும் ஒருவர் வந்த அலுவலையும் மறந்து கான கந்தர்வலோகத்தில் சஞ்சாரம் செய்து மகிழலாம்.

மேலும் சிற்பம், சித்திரம், ஓவியம் போன்ற அருங்கலைகளில் ''ஆதவன்'' போலப் ''பிரகாசம்'' மிக்க கலா''மூர்த்தி''களின் எண்ணிக்கையும் எமது கிராமத்தில் ''முருகையன்'' முகம் போலப் பலப்பல!

இத்தகைய வளம்மிக்க மண்ணில் விளைந்த தற்காலப் பேச்சாளர், எழுத்தாளர், கதாசிரியர்கள், நாடகாசிரியர்கள், மஹாகவிகள் பட்டியலோ மிகமிக நீண்டது.

நவீன உலகம் வளர்த்துவிட்ட அறிவுத் துறைகள் ஒவ்வொன்றிலும் விற்பன்னர்கள் மேதைகள் என நாடுதழுவிய பெயர் புகழ் ஈட்டிய பலப்பலரைக் கொண்டிருக்கும் கிராமம் அளவெட்டி.

எந்தத் துறையிலும் எந்தக் கிராமத்தவரிடமிருந்தும் இரவல் பெறுதும் எல்லாத் துறையிலும் எல்லாக் கிராமத்தவர்களுக்கும் உற்றதுணை வழங்கக்கூடிய வளம்பல கொண்டதுமான கிராமம் அளவெட்டி!

எங்கள் கிராமத்து அன்னையின் ஆலயத்தில், கிராமத்தின் வரலாற்றுக் கட்டமாக நிகழுகின்றது இந்தக் குடமுழுக்கு. இவ்வரலாற்றுக் கட்டத்தில் எமது மண்ணின் பழமை பெருமைகளைத் தெரிந்து பெருமிதம் கொள்ளவும் எம் முன்னோர் எமக்களித்துச்சென்ற பாரம்பரியச் சாதனைகளை அழியவிடாது பேணிக்காத்து அடுத்த தலைமுறையினர்க்குத் தவறுது கையளிக்கவும் உற்சாகமும் உத்வேகமும் பெறுவதில் இளஞ்சந்ததியினர்க்குத் இந்த விவரணம் உதவலாம என்பது எண்ணம்!


எங்கள் கிராமத்தில் இன்று எஞ்சி வாழும் இளைஞர்கள் இந்தப் பெரும் பணியில் உற்சாகங்கொண்டு உழைத்துத் தமக்கும் தமது கிராமத்துக்கும் பேரும் புகழும் தேடி, வரலாறு சமைத்து வெற்றிகாண்பதில தவளக்கிரி முத்துமாரி அன்னை அருள் பாலிக்கவேண்டும் என்பது பிரார்த்தன!!

□

பொன்னரசி நாரணனார் தேவி புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிருபொற் றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அளவெட்டிப் பேருந்துப் பாதைகளும் இலக்கங்களும்

இலக்கம்	தொடக்கம்	சேரிடம்	பாதை
740	காரைநகர்	காங்கேசன்துறை	அருணோதயாக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அளவெட்டிப் பேருந்துப் பாதைகளும் இலக்கங்களும்

இலக்கம்	தொடக்கம்	சேரிடம்	பாதை
740	காரைநகர்	காங்கேசன்துறை	அருணோதயாக் கல்லூரி, மல்லாகம் அம்பாள் கோவிலடி, தெல்லிப்பளை ஸ்கந்தவரோதயா, அருணோதயா அம்பனை
741	காரைநகர்	காங்கேசன்துறை	மாற்றுப்பாதை — அருணோதயா நகுலேஸ்வரம் வீதி, அம்பனை
768	யாழ்ப்பாணம்	கீரிமலை	தெல்லிப்பளை, பன்னாலை
768 X	யாழ்ப்பாணம்	கீரிமலை	மல்லாகம், மாகியப்பிட்டி
795	யாழ்ப்பாணம்	கீரிமலை	மல்லாகம். டச்சு ரோட்டு
772	யாழ்ப்பாணம்	சங்கானை	தெல்லிப்பளை, பண்டத்தரிப்பு
798	யாழ்ப்பாணம்	பண்டத்தரிப்பு	சுன்னாகம், மாகியப்பிட்டி
773	பருத்தித்துறை	மூளாய், பொன்னாலை	
774	பருத்தித்துறை	சங்கானை	

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழி அகராதி
இலக்கியச் சொல்லகராதி
உரைநடைச் சொல்லகராதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்

தவளக்கிரி முத்துமாரி அம்மன் 1
வெளிவயல் மாரியம்மன் 2
பெரிய தம்பிரான் 27
குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் 46
[வறுத்தலைப் பிள்ளையார்] 10
அழகொல்லைப் பிள்ளையார் 21
கும்பளாவளைப் பிள்ளையார் 33
பெருமாக் கடவைப் பிள்ளையார் 69
ஐயனார் 15
ஆதி வீரபத்திரர் 3
சின்ன அம்மன் 14
இராவத்தை வைரவர்(இராசபுரம்) 23
முதலியார் கோயில் 25
கேணிக்கரை வைரவர் 52
நரசிங்க வைரவர் 64
நாகவரத நாராயணர் 73
தம்பையப்புலம் வைரவர் (அரசடி வைரவர்) 28
குருவளை வைரவர் 82
காளி கோவில் 48
பசுபதீஸ்வரர் 49
ஞானவைரவர் 56
[கிராயிட்டி வைரவர்] 88

சைவசமய நிலையம்

திருவடி நிழல் 38
சுப்பிரமுனிய ஆச்சிரமம் 37

கேணி

அழகொல்லை 22
கும்பளாவளை 34
கேணிக்கரை 53
பெருமாக் கடவை 70

கிறிஸ்தவ தேவாலயம்

அலுக்கை 59
தெற்கு அளவெட்டி 75
மாகியப்பிட்டி 79

பாடசாலை

ஞானோதய வித்தியாசாலை (சீனன் கலட்டி) 16
சதானந்தா வித்தியாசாலை 36
கருவேப்புலம் ரோ. க. பாடசாலை 44
அருணோதயாக் கல்லூரி 66
அருணோதயா பாலர் பாடசாலை 67
அருணசலம் வித்தியாசாலை 76
அ. மி. த. க பாடசாலை 80

வாசிகசாலை, ப. நோ. கூ. சங்கம்

அளவெட்டிவடக்கு சனசமூக நிலையம் 17
மகாஜனசபை 39
சமாஜமண்டபம் 62
கலைவாணி சனசமூக நிலையம் (கேல்வத்தை) 81
முற்போக்கு வாலிபர் ச.ச நிலையம் 78
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 40

சோதிட நிலையம்

சின்னப்பு சோதிட நிலையம் 26
விஞ்சித்தம்பி சோதிட நிலையம் 74

அச்சகம்

மொழியரசி அச்சகம் (வாரிசீமா ஒழுங்கை) 43
ஜெயா அச்சகம் (சீனட்டிப்பாய் ஒழுங்கை) 41
ஸ்ரீமகள் அச்சகம் 90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமசேவகர் அலுவலகம்

கிழக்கு அளவெட்டி 47
வடக்கு அளவெட்டி 50
தெற்கு அளவெட்டி 77
(6 ஆக அதிகரிக்கப்படவுள்ளன)

தபால் நிலையம்

பெரிய தபால் நிலையம் 61
உப தபால் நிலையம் 8

சந்தை

கூத்தஞ்சிமா 9
மலிவேம்படி 68

வீதி

நகுலேஸ்வரம் வீதி
(இருல் மடம் வீதி)
டச்சு ரோட்டு
மகாத்மா வீதி
கூட்டுறவாளர் வீதி
(அம்பனை வீதி)

சந்தி

அம்பனைச் சந்தி 13
தஞ்சிட்டிச் சந்தி 18
மாரியிட்டிச் சந்தி 31
அலுக்கைச் சந்தி 60
மாகியப்பிட்டிச் சந்தி 85

மின் மாற்றி நிலையம்

அம்பாள் கோவிலடி 7
தம்பையப்புலம் 30
குருக்கள் கிணற்றடி 45
கேணிக்கரை 54
கும்பலை 55
பெருமாக்கடவை 71

பல்வகை

அம்பாள் கல்நொருக்கு நிலையம் 4
மாவிடுதிட்டி 35
இருல் மடம் 20
தச்ச கிணற்றடி 24
தம்பையப் புலம்
வழுக்கை ஆறு 83
ஸ்கந்தவரோதய கல்லூரி 84
முருங்கைப்புலம்
மகாஜனக் கல்லூரி 89

வைத்திய நிலையம்

[பிரகஸ்பதி வைத்திய நிலையம்] 11
[ஸ்ரீ சங்கர் வைத்திய நிலையம்] 12
ஈஸ்வரன் வைத்திய நிலையம் 32
மயூரா வைத்திய நிலையம் 42
மகிந்தன் வைத்திய நிலையம் 51
அரசினர் வைத்திய நிலையம் 63
அரசினர் மகப்பேற்று நிலையம் 65
கால்நடை வைத்திய நிலையம் 19

முடிவு

கேணிப்பிட்டிச் சுடுகாடு 5
கேணிப்பிட்டி இடுகாடு 6
கிறிஸ்தவ இடுகாடு 57
[மல்லாகம் சுடுகாடு] 58
வைரவர் அடைப்புச்] சுடுகாடு 72
பத்துப் பனையடிச் சுடுகாடு 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் முன்னிற்ப!

* எவர்சில்வர் பாத்திரங்கள்
* சுவர்க் கடிகாரங்கள்
* பிளாஸ்ரிக் பொருட்கள்

ஏனைய அன்பளிப்புப் பொருட்களுக்கும்

வாருங்கள்!



புவனா ட்றேடேர்ஸ்

காங்கேசன்துறை வீதி

சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சங்கு மார்க்"
எவர்சில்வர் பாத்திரங்களுக்கு!

செல்லாசன்ஸ்
சேல்ஸ் சென்ரர்

118, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

183621

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான புடைவை வகை உற்பத்திக்கு!



சிகிரி வீவிங் மில்ஸ்

216, இரண்டாம் குறுக்குத்தெரு

கொழும்பு - 11.

தொலைபேசி 29347
549331

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகம் இனிது நிறைவேறப்
பிரார்த்திக்கும்

"றட்ணம்ஸ்"
பலசரக்கு மாளிகை
பஸ் நிலையம்
பளை.

அம்பாள் துணை!

குளிர் பானங்கள்
பிஸ்கட் வகைகள்
சொக்கலேற் வகைகள்

தொகையாகப் பெற்றுக்கொள்ள
சாவகச்சேரியில் சிறந்த இடம்

நிருத் ஏஜன்சி
கண்டி றோட்டு
சாவகச்சேரி.

குடமுழுக்குச் சிறப்புடன் நிகழப்
பிரார்த்திக்கிறேம்

சுண்ணாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
காங்கேசன்துறை வீதி
சுண்ணாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் துணை

அபிஷேகப் பொருட்கள், மருந்துகள்
மருந்துச் சரக்குகள் ஒருங்கே
யாழ் நகரில் பெற—

சுந்தரம் பிறதர்ஸ்

175, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 2274

அன்பளிப்பு—

செட்டியார் அச்சகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிப்பயிற்சி:

விரைவில்—

பேச > வாசிக்க > எழுத

ஆங்கிலம்
பிரெஞ்சு
இலத்தின்

உடன் நிகழ்வு உரைபெயர்ப்பு
(Simultaneous Interpreting)
தொடர் நிகழ்வு உரைபெயர்ப்பு
(Consecutive Interpreting)

செ. குமாரசாமி
பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர்

பனை அபிவிருத்திச் சபையால்
சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

- பனம் கிரஸ்
- பனம் சிரப்
- பாணிப் பனுட்டு
- பனம் பானம்
- பனம் ஜாம்
- பாம் போஷா

மற்றும்

அழகிய கைப்பணி, அழகுசாதனப் பொருட்களுக்கு
நாட்டின் முக்கிய நகரங்களில் செயலாற்றும்

"கற்பகம்"

விற்பனை நிலையங்களை நாடுங்கள்.

பனை அபிவிருத்திச் சபை

தேசிய வீடமைப்புச் செயலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது

விளம்பரதாரர்களே

ஆதரியுங்கள்

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''விட்டிடு அந்தப் பேச்சை;
விளம்பரம் வேண்டாம்'' என்றோர்
மட்டிலா மலர்கள் பூக்க
மனமுவந் தள்ளித் தந்தார்!
எட்டினர் இவர் எம் நெஞ்சம்
என்றுமே அவர்க்கும் நன்றி!

—செ. கு.
—விளம்பரம் சேகரிப்புக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பலகற்றும் பலகேட்டும் — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
பயனென்று மில்லையடி — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
நிலையெங்கும் காணவில்லை — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
நின்பாதம் சரண்புகுந்தோம் — எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—பாரதியார்